அங்காடி
விளம்பர சிறப்பிதழ்
உள்ளே



பக்கம் 03
அனைவரையும் கவர்ந்த சிறார்களின் கண்காட்சி

நான்கு இலக்குகளால் வென்றது ஜொனியன்ஸ் பக்கம் 22


பக்கம் 23
மழையால் தப்பிய தீவுகள்



# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

■ சுடர்: 29 ■ கதிர்: 012 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | கார்த்திகை 22, ஞாயிறு 08.12.2013

யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30


56


இடியுடன் கூடிய மழை
28C 24C

## வன்முறைகளுக்கு இலங்கை முடிவு கட்டியே தீரவேண்டும்

### தொடர்ந்து வலியுறுத்துகிறது அமெரிக்கா

வொஷிங்டன், டிசெ. 08
இலங்கையின் மனித உரிமை மீறல்கள், ஊடக சுதந்திரத்துக்கு எதிரான நடவடிக்கைகள், சிறுபான்மை மதங்களுக்கு எதிரான வன்முறைகள் எல்லாமே முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்று அமெரிக்கா கூறியுள்ளது.
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதிப் பேச்சாளர் மேரி ஹாப் வொஷிங்டனில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இதனைத் தெரிவித்தார்.
செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.



21 ஆம் பக்கம் பார்க்க

## மக்களின் காணிகளை மோசடி செய்ய முயற்சி

### கைதடியில் இருவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 08
கைதடியில் பல வருடங்களாகக் குடியிருக்கும் பொது மக்களின் காணிகளைக் கட்டாயப்படுத்தி அபகரித்து அவற்றை வெளியாருக்கு விற்பனை செய்ய முயன்றுள்ளனர் இருவர். இதனால் குழப்பமடைந்த மக்கள் இது குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.
இது குறித்துப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற

21 ஆம் பக்கம் பார்க்க

# இன அழிப்பை மறைக்க அரசு நன்கு திட்டமிட்டு சதி

## அதற்காகவே இந்தப் போரழிவுக் கணக்கெடுப்பு அமெ.குழுவுக்கு யாழ்ப்பாணத்தில் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 8
இறுதிப் போரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, இங்கு இன அழிப்பே நடைபெறவில்லை என்பதைக் காண்பிப்பதற்கே தற்போது அரசு கணக்கெடுப்பை மேற்கொள்கிறது. இந்தக் கணக்கெடுப்புக்கள் எல்லாம் அடுத்த ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் சபைக்குக் கணக்குக் காட்டுவதற்கே தவிர இதனால் பயனேதும் இல்லை. இது அரசின் திட்டமிட்ட சதி.
இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் பல்வேறு தரப்பினரும் எடுத்துரைத்தனர்.
யாழ். மாவட்டத்துக்கு நேற்று மதியம் வருகை தந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் வெளிவிவகார குழுவின் செனட்டர் டேமியன் முர்பே, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் வொஷிங்ரன் பிரதிநிதி மரியா ரெரியோ மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் தலைமை அரசியல் அதிகாரி மைக்கல் ஹொங்ஸ்ரன் ஆகியோரை உள்ளடக்கிய குழுவினர் இங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.
சுன்னாகத்தில் உள்ள விடுதியொன்றில் வடக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோரை இந்தக் குழுவினர் மதிய உணவுடன் சந்தித்துக் கலந்துரையாடினர்.
இந்தச் சந்திப்பின் பின்னர் மேற்படி குழுவினர் பலாலி வீதியூடாக வசாவிளான் சந்தி வரை சென்றனர். உயர்பாதுகாப்பு வலயத்தின் எல்லையில் அமைக்கப்பட்டிருக்கும்

> “ இந்தக் கணக் கெடுப்புக்கள் எல்லாம் அடுத்த ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் சபைக்குக் கணக்குக் காட்டுவதற்கே தவிர இதனால் பயனேதும் இல்லை.

21 ஆம் பக்கம் பார்க்க

## மெக்சிகோவில் 5 இலங்கையர் நேற்றுக் கைது

கொழும்பு, டிசெ. 8
மெக்சிகோவில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்த குற்றச்சாட்டில் இலங்கையர்கள் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந் தவேளை இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் இரு சிறுவர்களும் பெண் ஒருவரும் அடங்குவர்.
குறித்த ஹோட்டலில் இவர்கள் ஐவரும் கடந்த 4 நாள்களாக தங்கியிருந்துள்ளனர்.
சந்திரிகா நிரோஷன்(வயது-34), துரந்திகன் நிரோஷன் (வயது-31), சிவபாதம் (வயது-30) மற்றும் 10, 5 வயதான சிறுவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.
குடிவரவு ஆவணங்கள் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது தம்மிடம் அவ்வாறான ஆவணங்கள் எதுவும் இல்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர். (த)

## பிரேரணையில் போர்க்குற்றத்தை மட்டுமல்ல அடக்குமுறைகள் அனைத்தையும் உள்ளடக்குக

### அமெரிக்கக் குழுவிடம் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 08
போர்க் குற்ற விசாரணை, மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றுடன் மாத்திரம் இலங்கைக்கு எதிரான பிரேரணை நின்று விடக்கூடாது. தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் இராணுவ மற்றும் சிங்கள மயமாக்கல், காணி அபகரிப்பு, வாழ்வாதாரப் பிரச்சினைகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கக் கூடிய வகையில் கடுமையான பிரேரணையே கொண்டு வரப்பட வேண்டும்.
இவ்வாறு நேற்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் யாழ்ப்பாணத்தில் வைத்து வலியுறுத்தப்பட்டது.
உண்மையைக் கண்டறியும் நோக்குடனும், ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் அடுத்த ஆண்டு இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணையில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்தனர்.
இவர்கள் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.
இந்தக் கலந்துரையாடல்களின் போதே மேற்படி விடயம் வலியுறுத்தப்பட்டது.
அமெரிக்க அரசினால் கடந்த இரு தடவைகள் இலங்கைக்கு எதிராகப் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டன. ஆனாலும் இது

21 ஆம் பக்கம் பார்க்க

## சனசமூக நிலையத்தில் ரவைகள் நேற்று மீட்பு

### சுன்னாகத்தில் சம்பவம்

வலி.வடக்கு, டிசெ. 08
சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலைய கட்டடத்துக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்து ஒரு தொகுதி துப்பாக்கி ரவைகள் நேற்று பகல் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.
சனசமூக நிலையத்தைத் துப்புரவு செய்யும்போது அங்கு வைக்கப்பட்டிருந்த அலுமாரி

21 ஆம் பக்கம் பார்க்க

## கோடரியால் வெட்டப்பட்ட இளைஞன் சாவு

யாழ்ப்பாணம், டிசெ. 08
கொள்ளையர்களின் கோடரி வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரி

21 ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் மீனவர் கடலில் மூழ்கி சாவு

மன்னார், டிசெ. 08
மன்னார் முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சவேரியார் புரம் கடற்பரப்பில் தொழிலுக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகச் சிலாவத்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.
சம்பவத்தில் சவேரியார் புரம் கிராமத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான மத்தேஸ் பிரான்சீஸ் சகாயம்

21 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் உரிமைகளுக்காக அரசுடன் பேசுவதற்கு தயார்

## சூழ்ச்சிக்கு துணைபோக மாட்டோம் என்கிறார் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன்

திருகோணமலை, டிசெ.8
13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் மாகாண சபைகள் இயங்க அரசு அனுமதி வழங்க வேண்டும். அதற்காக நாம் அரசுடன் பேசுவதற்கு தயாராகவே இருக்கிறோம். ஆனால், எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா.வில் தாம் தப்புவதற்காக அரசு எம்மைப் பேச்சுக்கு அழைத்தால் நாம் ஒரு போதும் உடன்படப்போவதில்லை. இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் பொது மக்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று சனிக்கிழமை திருகோணமலையில் தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களான மூதூர், தம்பலகாமம், குச்சவெளி போன்றவை முன்னைய காலங்களில் தமிழ் மக்களின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் இருந்தன. ஆனால், இப்போது இடப்பெயர்வு வேறு இனங்களின் துரித சனப் பெருக்கம், எமது மக்கள் வாக்களிக்க முடியாத நிலை போன்ற காரணங்களால் திருகோணமலை நகர சபை, வெருகல் பிரதேச சபை, பட்டினமும் சூழலும் பிரதேச சபை ஆகிய மூன்று சபைகள் மட்டுமே எம் வசம் உள்ளன.

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள இந்த சபைகளில் மக்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டியது எமது கடமையாகும். உள்முரண்பாடுகள் மக்கள் பிரச்சினைகளை மேலும் பெரிதாக்குவதுடன் எமது சுயநிர்ணய கோரிக்கைக்கும் விரோதமாகிவிடும்.

13ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்வதற்காக அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் காங்கிரஸ் கொண்டுவந்த தீர்மானம் கூட்டமைப்பின் ஆதரவுடன் வெற்றி பெற்றதன் மூலம் இவ்வாறான சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட்டன.

காலம் காலமாக அதிகாரப் பகிர்வு, ஆட்சி மாற்றம், சுய நிர்ணய உரிமை போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் மக்கள் போராடி வருகின்றனர். எமது மக்களுக்கான பாதுகாப்பு காணி, மொழி, கலாசாரம், சமூக பொருளாதார, விவசாய, கைத்தொழில் போன்ற பல்வேறு உரிமைகளையும் வலியுறுத்தி சட்டத்தில் உள்ளபடி எமக்கு அதை வழங்கக்கோரி நாம் போராடுகிறோம். இதில் என்ன தவறு இருக்கிறது.



இராணுவக் கெடு பிடிகளுக்கு மத்தியிலும் வட மாகாண சபையில் 30 ஆசனங்களைப் பெற்று மக்களின் விருப்பத்தை சர்வதேசத்துக்குத் தெரியப்படுத்தினோம். ஆனாலும்கூட வட மாகாண சபையைமுழுமையாக இயங்கவைக்கமுடியவில்லை. காரணம் முதலமைச்சர், அமைச்சர்களின் விருப்பத்திற்கு ஏற்ப அவர்களுக்கான அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை. மேலும் எவருடைய தயவுடனும் வட மாகாண சபையை ஆட்சி செய்ய வேண்டும் என்ற அவசியமும் எமக்கில்லை.

13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் எம்மை ஆட்சி செய்ய விட வேண்டும். அந்த ஒழுங்குகள் எமக்குக் கிடைப்பதற்காக நாம் அரசுடன் பேசத் தயாராக உள்ளோம். எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா.வில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் அரசு தம்மைப் பாதுகாப்பதற்காக எம்மைப் பேச்சுக்கு அழைத்தால் அதற்கு நாம் உடன்படத் தயாரில்லை.

எமது பிரச்சினைகள் தொடர்பில் சர்வதேச தலைவர்களுக்குத் தெரியப்படுத்தி வருகிறோம். இந்த நிலையில் நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். குறிப்பாக இந்த உண்மையை முஸ்லிம் மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். சில சமயம் நாம் மக்களை ஒன்று திரட்டி சாத்வீக போராட்டங்களில் ஈடுபட வேண்டிய நிலையும் ஏற்படலாம் - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண எதிர்க்கட்சி உறுப்பினர் சி.தண்டாயுதபாணி, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான கு.நாகேஸ்வரன், ஜெ.ஜெனார்த்தனன், திருகோணமலை நகரசபைத் தலைவர் செல்வராஜா, பட்டினமும் சூழலும் பிரதேச சபைத் தலைவர் விஜேந்திரன், வெருகல் பிரதேச சபைத் தலைவர் விஜயகாந் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (ஐ-40)

### சைக்கிள் திருடியவர் மாட்டிக்கொண்டார்

தென்மராட்சி, டிசெ.8
சாவகச்சேரி மீன் சந்தை சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் விடப்பட்ட சைக்கிளை திருடியவர் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்றது.

நேற்று சனிக்கிழமை என்பதால் பெருமளவான சைக்கிள்கள் பாதுகாப்பு நிலையத்தில் விடப்பட்டிருந்தன. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய ஒருவர் சைக்கிள் ஒன்றை எடுத்துக் கொண்டு வெளியே செல்ல முற்பட்டுள்ளார். இதனை அவதானித்த ஊழியர் அவரைத் தடுத்து நிறுத்தியுள்ளார். இச்சந்தர்ப்பத்தில் சைக்கிள் உரிமையாளரும் வரவே திருட்டு முயற்சி என்பது தெரியவந்தது. இதனையடுத்து சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. அங்கு வந்த பொலிஸார் குறித்த நபரை கைது செய்தனர். (ஐ-9)

### மாற்றுத் திறனாளிகளுக்கு செயலமர்வு

கிளிநொச்சி, டிசெ.8
கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாற்றுத் திறனாளிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் பெற்றோர்களுக்கான செயலமர்வு நாளை காலை 9 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பிரதேச செயலர் கோ.நாகேஸ் வரன் தலைமையில் சமூக சேவைகள் அமைச்சின் சிநேர் திட்டத்தின் கீழ் இந்தச் செயலமர்வு நடத்தப்படவுள்ளது. (ஐ-9)

# பொன்தீவு கண்டல் பகுதியில் மக்களிடையே மீண்டும் பதற்றம்

மன்னார், டிசெ. 08
மன்னார் நானாட்டான் பிரதேச செயலக பிரிவிலுள்ள பொன்தீவு கண்டல் கிராம அலுவலர் பிரிவில் நேற்று சனிக்கிழமை முஸ்லிம் மக்கள் வீடுகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டமையினால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

பொன்தீவுக் கண்டல்கிராமத்தில் மீள் குடியேற்றத்திற்கான காணி பகிர்ந்தளிப்பில் இரு பகுதியினருக்கு இடையில் நீண்ட நாள்களாக முரண்பாடு நிலவி வருகிறது. இதனைத் தீர்க்கும் முகமாக நானாட்டான் பிரதேச செயலர், மதத் தலைவர்கள் மற்றும் கிராம அமைப்புக்களுக்கு இடையில் ஏற்படுத்தப்பட்ட சந்திப்பின் முடிவில் இரு பகுதியினருக்கும் காணிகளை அரைவாசியாக பகிர்ந்தளிப்பதாக முடிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் முஸ்லிம் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட காணியில் அவர்கள் நேற்று சனிக்கிழமை வீடு அமைக்கும் பணிகளை தொடங்கினர். இதனை எதிர்த்து பொன்தீவுக் கண்டல் கிராம மக்கள் அந்த இடத்தில் கூடினர். இதனால் அங்கு பதற்ற நிலை தோன்றியது.



சம்பவம் தொடர்பில் நானாட்டான் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டதையடுத்து அங்கு வந்த பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்க முற்பட்டனர்.

இந்த நிலையில் மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அன்ரனி விக்டர் சோசை,தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோநோகராதலிங்கம், அளவக்கை பங்குத்தந்தை சுரேஸ் றெவல், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்று பொன்தீவு கண்டல் கிராம மக்களுடன் கலந்துரையாடி பிரச்சினைகளுக்கு தீர்வுபெற்றுத் தருவதாக உறுதியளித்தனர்.

பொலிஸாரின் பாதுகாப்புடன் முஸ்லிம் மக்கள் வீடமைக்கும் பணிகளை நேற்று மேற்கொண்டிருந்தனர். (ஐ-12)




இலங்கை வந்துள்ள அமெரிக்க வெளிவிவகாரங்களைக் கையாளும் அமெரிக்கக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த டேமியன் நேர்பி தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர். அவர்கள் உதயன் அலுவலகத்துக்கும் வருகை தந்து நிர்வாக இயக்குனரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், உதயன் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் ஆகியோரைச் சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், ஊடகங்கள் மீதான அச்சுறுத்தல்கள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து அவர்களுக்கு எடுத்து விளக்கப்பட்டது. அத்துடன் கடந்த ஏப்ரல் மாதம் உதயனில் இனந்தெரியாதோரால் எரியூட்டப்பட்ட இயந்திரப் பகுதியை அவர்கள் நேரில் பார்வையிட்டனர்.

# மண்டேலா அனைவரது உயிரிலும் வாழ்கிறார்

## இரங்கல் செய்தியில் கூட்டமைப்பு

பயங்கரவாதி என்று வர்ணிக்கப்பட்டவர்களாலேயே சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்ட தலைவன் மண்டேலா. இவரது இழப்பு பேரிழப்பாகும். மண்டேலா இல்லாத ஓர் உலகை நினைத்துப் பார்ப்பதற்கே துன்பமாக இருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தென்னாப்பிரிக்காவின் சிற்பி என்று புகழப்படும் நெல்சன் மண்டேலாவின் மரணம் குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள தனது அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அநீதிகளும் அடக்குமுறைகளும் நிறைந்த உலக வரலாற்றில் அடக்கப்படும் ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைக்காகவும் சமூக நீதியை நிலைநாட்டவும் அவ்வப்போது சில மகோன்னத மனிதர்கள் பிறப்பதுண்டு. அந்தவகையில் 20ஆம், 21ஆம் நூற்றாண்டுகளின் புரட்சிநாயகனாகத் திகழ்ந்தவர்தான் நெல்சன் மண்டேலா.

உண்மையில் நெல்சன் மண்டேலா இறக்கவில்லை. அவருக்கு இறப்பும் இல்லை. உலக மக்களின் இதயங்களில் நிரந்தரமாகக் குடியேறியிருக்கின்றார். அவரது உடலிலிருந்து [illegible] எம் அனைவரினுள்ளும் அவர் வாழ்கின்றார் - என்றுள்ளது.

# இராணுவ வாகனம் மோதியதில் இளைஞர் படுகாயம்

மணல் ஏற்றிக்கொண்டு சென்ற இராணுவத்தினரின் டிப்பர் வாகனமும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் பயணித்த இளைஞர் [illegible] படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சத்திர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை வீதி மாலு சந்தியில் நேற்று முற்பகல் இந்தவிபத்து இடம்பெற்றது. விபத்தில் வவுனியாவைச் சேர்ந்த சி.சாந்திராஜ் (வயது 23) என்ற இளைஞரே படுகாயமடைந்தார்.

விபத்தையடுத்து இராணுவ டிப்பரில் வந்தவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது. அங்கு ஒன்று கூடிய பொதுமக்களே இளைஞனை பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு சென்றனர். மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்ந்த சிறார்களின் கண்காட்சி

## இன்றும் நடைபெறும்






யாழ்ப்பாணம், டிசெ.8
வடக்கு மாகாண முன்பள்ளிகளின் கண்காட்சி நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டது. இன்று ஞாயிறும் கண்காட்சி இடம்பெறும். இந்தக் கண்காட்சியை ஒய்வு பெற்ற வலிகாமம் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் திறந்து வைத்தார்.

முன்னதாக விருந்தினர்கள் முன்பள்ளிச் சிறார்களின் பாண்ட் வாத்தியத்துடன் ஊர் வலமாக கண்காட்சி மண் டபத்துக்கு அழைத்து வரப்பட் டனர்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த எண்பதுக்கும் அதிகமான முன்பள்ளிகள் கண்காட்சியில் தமது பொருள்களைக் காட்சிக்கு வைத்திருந்தன. ஆசிரியர்கள், பெற்றோர்களின் அனுசரணையுடன் சிறுவர்களின் கைவண் ணத்தில் உருவான பொருள்கள் காட்சி அறைகளை இடம் பிடித்திருந்தன. பெருமளவான பொருள்கள் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தன.

மன்னார் உயிலங்குளம், புதுக்குடியிருப்பு, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு முன்பள்ளிக் காட்சியறைகளில் பனைமட்டை, பனை ஒலை, பனங்காய் குமிழ்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட அரசாங்க இலச்சினை, உலங்கு வானூர்தி, பானையில் தயாரிக்கப்பட்ட பூச்சாடி, மீன் செதில்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பொக்கேபோன்றவை கண்கவர் விதத்தில் உருவாக்கப்பட்டிருந்தன.

இப்போது பாவனையில் அரிதாகக் காணப்படும் மாட்டு வண்டில், கலப்பை போன்றனவும் மற்றும் மயில், நுளம்பு என்பவற்றின் மாதிரிகளும் கண்காட்சியில் இடம்பிடித்திருந்தன. (ஓ-7)



*யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற வடமாகாண முன்பள்ளிகளின் கண்காட்சியைத் திறந்து வைத்த ஒய்வு பெற்ற வலிகாமம் கல்விப் பணிப்பாளர் திருமதி ஆர். இருதயநாதன் சிறார்களின் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்படுவதையும், காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள சிறார்களின் கைவண்ணத்தில் உருவான பொருள்களை விருந்தினர்கள் பார்வையிடுவதையும் காணலாம்.* (ஓ-7)

## எழுதுமட்டுவாழ் கரம்பகத்துக்கு விரைவில் மின் வசதி

யாழ்ப்பாணம், டிசெ.8
தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் கடந்த வருடம் மீள்குடியமர்வு மேற்கொள்ளப்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு, கரம்பகம் ஆகிய கிராமங்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மிக விரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்பப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், முடிவுற்ற இந்த வேலைத் திட்டங்கள் நாளை திங்கட் கிழமை சாவகச்சேரி மின்சார சபையிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

குறித்த பிரதேசங்களைச் சார்ந்தவர்கள் மின் இணைப்புக்குத் தேவையான அனுமதியை சாவகச்சேரி மின்சார சபையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-9)



# மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டுக்கு அணுகுமுறை வசதிகளுடன் பொது இடங்கள்

## மாவட்ட ரீதியாக அடுத்த வருடம் முதல்



யாழ்ப்பாணம், டிசெ.8
அடுத்த வருடம் சமூக சேவைகள் அமைச்சினால் மாவட்ட ரீதியாக மாற்றுத் திறனாளிகள் பயன்பாட்டுக்குரிய இடங்கள் அணுகுமுறை வசதி வாய்ப்புக்களுடன் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று வடமாகாண சமூக சேவைகள் திணைக் களத்தின் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் தெரிவித்தார்.

கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையத்தின் ஏற்பாட்டில் "தடைகளைத் தகர்த்த திறந்த கதவுகளுக்கு ஊடாக அனைவருக்கும் சமுதாயம்" என்ற தொனிப் பொரு ளிலான சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-
மாற்றுத் திறனாளிகளால் நடத்தப்படுகின்ற நிகழ்வுகளில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்கள் சார்ந்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் மட்டுமே கலந்து கொள்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இத்தகைய நிகழ்வுகளில் சமூகத்தினரது பங்களிப்பும் அவசியமாகும். பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சமூகத்தினர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவே இத்தகைய நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

மாற்றுத் திறனாளிகளால் வெளிக் கொணரப்படும் திறமைகள் இத்தகைய நிகழ்வுகளிலேயே பேசப்படக் கூடியவை. எனவே சமூகத்தினர் இவற்றுக்குத்தமது பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும்.

மாற்றுத் திறனாளிகள் அணுகு முறைக்கு ஏற்ப வசதிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாற்றுத் திறனாளிகளுடன் தொடர்புபட்ட நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவ னங்கள் அமைக்கப்படும் போது அணுகுமுறை வசதி வாய்ப்புக்களுடன் கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று சட்டமும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனைத் தற்போது நடைமுறைப்படுத்தியும் வருகின்றனர்.

2014 ஆம் ஆண்டு மாவட்ட ரீதியாக சகல பொது இடங் களிலும் மாற்றுத் திறனாளிக ளுக்கான அணுகுமுறை வசதி வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது என்றார்.

கருவி மாற்றுத் திறனாளிகள் சமூக வள நிலையத்தின் தலைவர் க.தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினராக வடமராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.எம்.எஸ் வரதேவன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் 'வலு' சஞ்சிகை வெளியீடும் இடம் பெற்றது. (ஓ-14)

# நிரந்தர அதிபர்கள் இல்லாமல் இயங்கிவரும் பாடசாலைகள்

*இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அதிருப்தி*

பாடசாலைகளில் அதிபர் வெற்றிடம் ஏற்படும்போது அங்கு கல்விச் செயற்பாடுகள் பாதிப்படையக்கூடாது என்பதற்காக பாடசாலையில் கடமையாற்றும் அதிபர் இளைப்பாறும் முன்னரே அந்தப் பாடசாலைக்கான புதிய அதிபர் விண்ணப்பம் கோரி பொருத்தமானவர்களை நியமனம் செய்ய வேண்டும். ஆனால் வடமாகாணத்தில் பாடசாலையின்அதிபர் இளைப்பாறிய பின்னரும் அந்தப் பாடசாலைக்கு அதிபர் நியமிக்கப்படாமல் காலம் தாழ்த்தப்படுவது வேதனை தருவதோடு பல்வேறு சந்தேகங்களையும் உருவாக்கியுள்ளது.


-இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யாழ்ப்பாணம் செங்குந்தா இந்துக்கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, சிறுப்பிட்டி இ.த.க.பாடசாலை, கீரிமலை நகுலேஸ்வராக் கல்லூரி, அளவெட்டி அருணாசலம் மகாவித்தியாலயம், குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலயம், அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பாடசாலை, அளவெட்டி தெற்கு அ.மி.த.க.பாடசாலை, தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை, அராலி முருகமூர்த்தி அ.த.க.பாடசாலை, வட்டு திருநாவுக்கரசு மகாவித் தியாலயம் (ஆரம்பபிரிவு) நல்லூர் ஞானோதயா வித்தி யாலயம், மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம், இடைக்குறிச்சி ஸ்ரீசுப்ரமணிய வித்தியாலயம், கேவில் அ.த. க.பாடசாலை, கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம் ஆகியவற்றுக்கு இன்னமும் புதிய அதிபர்கள் நியமிக்கப்படவில்லை. சில கல்வி வலயங்களில் அவற்றுக்கான நேர் முகப் பரீட்சைகள் நடைபெற்றமையும், சில வலயங்களில் விண்ணப்பங்கள் கோரப்படாமல் இருப்பதும் கவலைக்குரிய விடயம் என்பதுடன், அது பாடசாலைகளில் உள்ள சிரேஷ்ட ஆசிரியர்களிடையே முரண்பாடுகளையும் தோற்றுவித்திருக்கின்றது.

அதிபர் தரம் கிடைத்த பலர் பாடசாலைகளில் இன்னும் ஆசிரியர்களாகக் கடமையாற்றுவதை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பல தடவைகள் சுட்டிக்காட்டி வருகின்ற நிலையில் இதனைக் கருத்தில் எடுக்காமல் இருப்பது பல தரப்புக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களைஏற்படுத்துகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. காலை 9 மணியளவில் பாடசாலை அதிபர் எஸ்.அல்பிரட் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபையின் பிரதித் தவிசாளர் ம.அன்ரனி ஜெயநாதன், மகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். விழா ஆரம்பமாவதற்கு முன்னர் விருந்தினர் வரவேற்கப்பட்டு அழைத்து வரப்படுகின்றனர். (க-433)

# பஸ் சேவை நடத்துமாறு கிராம மக்கள் கோரிக்கை

பூநகரி, டிசெ.8

பூநகரி பரமன்கிராய் சந்தியிலிருந்து மட்டுவில் நாடு, வினாசியோடை, கௌதாரிமுனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன்பெறும் வகையில் பஸ் சேவையை நடத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது பரமன்கிராய்ச் சந்தியிலிருந்து 12 கிலோமீற்றர் தூரத்திலுள்ள வினாசியோடை பாடசாலையில் கல்வி கற்பிக்கும் வெளியூர் ஆசிரியர்களும், கிராம மக்களும் கடுமையான போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இவர்கள் பிரயாணங்களுக்கு உதவாதவாகனங்களில் தொற்றிக் கொண்டு பயணிப்பதைக் காணமுடிகின்றது.

மேலும் கிராம மக்களும் கடுமையான போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக பூநகரிப் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பல தடவைகள் எடுத்துக் காட்டப்பட்ட போதிலும் இதுவரை பயன்எதுவும்கிடைக்கவில்லை.

"_"

**இது தொடர்பாக பூநகரிப் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பல தடவைகள் எடுத்துக் காட்டப்பட்ட போதிலும் இதுவரை பயன் எதுவும் கிடைக்கவில்லை.**

எனவே பரமன்கிராய் சந்தியிலிருந்து பாடசாலை நேரங்களிலாவது காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் பஸ் சேவையை நடத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இங்குள்ள இராணுவத்தினர் வினாசியோடை பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களைத் தமது வாகனங்களில் ஏற்றி இறக்குவதைத் தற்போது காண முடிகின்றது. (க-18)

# அலம்பில் மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவரை நியமிக்குக

## *வடமாகாண சபை உறுப்பினரிடம் கோரிக்கை*

முல்லைத்தீவுமாவட்டத்திலுள்ள அலம்பில் மருத்துவ மனைக்கு நிரந்தரமாக மருத்துவர் ஒருவரை நியமிக்குமாறு வடமாகாண சபை உறுப்பினரிடம் கோரிக்கைவிடப்பட்டுள்ளது.

"_"

**மருத்துவர் ஒருவர் சில தினங்களில் சிறிது நேரம் வந்து நோயாளர்களைப் பார்வையிடுவதாகவும், மொழிப் பிரச்சினை காரணமாக அவரிடம் தமது நோய்களை கூறமுடியாதுள்ள தாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் அலம்பில் மருத்துவ மனைக்கு நிரந்தர மருத்துவர் எவரும் நியமிக்கப்படாததால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும், நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அந்தப் பகுதி மக்கள் வடமாகாணசபை உறுப்பினர் மருத்துவர் சி.சிவ மோகனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தின் அலம்பில் பிரதேசத்தில் மருத்துவமனை ஒன்று இயங்கி வருகிறது. இதனையே செம்மலை, அலம்பில், நாயாறு, கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இங்கு தங்குமிடத்துடன் கூடிய நிரந்தரக் கட்டடம், அம்புலன்ஸ் மற்றும் விடுதி வசதி என்பன உள்ள போதிலும், நிரந்தர மருத்துவர் எவரும் நியமிக்கப்படவில்லை.

மருத்துவர் ஒருவர் சில தினங்களில் சிறிது நேரம் வந்து நோயாளர்களைப் பார்வையிடுவதாகவும், மொழிப் பிரச்சினை காரணமாக அவரிடம் தமது நோய்கள் குறித்து கூற முடியாதுள்ளதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக வடமாகாண சபை உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகனிடம் கேட்டபோது, அலம்பில் மருத்து வமனைக்கு நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமித்துத் தருமாறும், மின்சாரத்தைப் பெற்றுத் தருமாறும் அந்தப் பகுதி மக்கள் என்னிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு தெரியப்படுத்தியுள்ளதுடன், வடமாகாணசபை அமர்விலும் இது பற்றி கலந்துரையாடி முடிவெடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (க-421)

# மகாதேவா சிறுவர் இல்லத்தின் புதிய கட்டடம் நேற்றுத் திறப்பு



கிளிநொச்சி ஜெயந்தி நகரில் மகாதேவா ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லத்துக்கென யாழ். வணிகர் கழகத்தினரால் அமைக்கப்பட்ட புதிய கட்டடம் நேற்று பகல் 11 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். வணிகர் ஒன்றியத்தின் தலைவர் இ. ஜெயசேகரம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து கருத் துத் தெரிவித்த அவர்,

இடம்பெயர்ந்த மக்கள் நலன் புரி நிலையங்களில் தங்கியிருந்த போது யாழ். வணிகர் கழகம் சுமார் 4850 குடும்பங்களுக்கு உலர் உணவுகள் மற்றும் பண உதவிகள் வழங்கியதுடன் அரச அதிபரின் ஒத்துழைப்புடன் அவர்களை 11 முகாம்களில் வைத்து ஆதரவளித்தது.

போர் காரணமாக கணவனை இழந்த அல்லது விசேட தேவையுடைய 300 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி அவர்களை, வணிகர் கழகம் தொடர்ந்துகண்காணித்து வருகின்றது.

இதேபோலவே போரால் பாதிக்கப்பட்டு சேதமடைந்த கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்தையும் நாம் மேம்படுத்த திட்டமிட்டோம்.

இந்த வகையில் இந்தக் கட்டடத்தை அமைத்து கொடுக்க வர்த்தக பெருமக்களை அணுகினோம். அவர்கள் அதற்கான நிதியையும் பொருள்களையும் வழங்கினர். அவற்றைக் கொண்டு 16 லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடத்தை அமைத்துள்ளோம் என்றார்.

நிகழ்வில் நினைவுக் கல்வெட்டை கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் செ. சிறிநிவாசன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

நிகழ்வில் வர்த்தகர்கள் அரச மற்றும் அரச திணைக்கள அதிகாரிகள் நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-6)

# மன்னார் மாவட்டத்தில் பாலியல் வன்முறைகள்

மன்னார், டிசெ.8

மன்னார் மாவட்டத்தில் இந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் ஒக்ரோபர் மாதம் வரை பெண்கள் மீதான பாலியல் வன்முறைச் சம்பவங்களாக 46 சம்பவங்கள் பதியப்பட்டுள்ளன என்று மன்னார் மாவட்ட பெண்கள் உரிமைக்கான செயற்பாட்டுக்குழுவின் சார்பாக மன்னார் மாவட்ட மாதர் ஒன்றியத்தின் மாவட்ட இணைப்பாளர் மகாலட்சுமி குருசாந்தன் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை மன்னாரில் பெண்களுக் கெதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும் முகமாகவும், பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகளுக்கு நீதி கோரியும் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

பாலியல் துஷ்பிரயோக சம்ப வங்கள்-6, பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் -16, சிறுமிகள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் -24 என்ற வகையில் பெண்கள் மீதான பாலியல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-12)

## மரண அறிவித்தல்

### திருமதி மல்லிகா சிவனையா



எட்டியாந்தோட்டையைப் பிறப்பிடமாகவும், 23/3 மணல்த்தரை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மல்லிகா சிவனையா நேற்று (07.12.2013) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராஜரட்ணம் - தங்கம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற சிவனையாவின் அன்பு மனைவியும் செல்லத்துரையின் சகோதரியும் தனலச்சுமியின் மைத்துனியும் சசிகலாவின் அன்புத்தாயும் தனேஸ்குமாரின் அன்பு மாமியும் பிரணவன், பிருந்தன், பிதுசன், பிரிசஷ்வினி ஆகியோரின் பேர்த்தியும் நாகராசாவின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

23/3 மணல்த்தரை வீதி,
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

காணியுடன் வீடு விற்பனைக்கு
நீர்வேலி வில்லுமதவடி பருத்தித்துறை வீதியில் நான்கு பரப்புக் காணியுடன் புதுப்பிக்கப்பட்ட வீடு மூன்று அறைகளுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு:- 077 9228998, 077 4371556

## மரண அறிவித்தல்

### சண்முகானந்தன் யதுசன்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகானந்தன் யதுஷன் நேற்று (07.12.2013) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சண்முகானந்தன் - நாகேஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வனும், தனுசன் (இத்தாலி), யதுஷா (உடுவில் மகளிர் கல்லூரி, 2013 A/L), விதுசன் (கொக்குவில் இந்துக் கல்லூரி, தரம்-11) ஆகியோரின் அன்புச்சகோதரனும், செல்வாநந்தனின் (கனடா) பெறாமகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, நல்லையா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பகப் பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழி நீர் சொரிந்து அழுகின்றோம்



### ஆறுமுகசாமி பாலசுப்பிரமணியம்

(ராசா-அன்னை முத்துமாரி போக்குவரத்துச்சேவை உரிமையாளர்)

நேற்றைய பொழுதில் எம்மோடு
கதைபேசி சிரித்தவரே இன்று காற்றோடு
கலந்தது ஏனோ இம்மண்ணில் நாம் வாழ
வாழ்க்கைக்கு அர்த்தத்தையும்
வளத்திற்கு தொழிலையும் தந்து ஊக்குவித்தவரே
உங்கள் மரணம் இன்று எம்மை நிலை குலைய
வைத்துவிட்டது பூமி வாழும் வரை மறையாது உம் நாமம்
இன்று எம் கண்ணீர் கொண்டு அர்ச்சிக்கின்றோம் உமைநாம்

**கிறூலைன்ஸ் உரிமையாளரும், ஊழியர்களும்.**

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை குணநாயகம்



காரைநகர் மாப்பானவூரியைப் பிறப்பிடமாகவும் களபூமியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை குணநாயகம் (முன்னாள். ப.நோ.கூ. சங்கக் கிளை முகாமையாளர்) 06.12. 2013 அன்று காலமானார்.

அன்னார் சங்கரப்பிள்ளை -பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான தங்கம்மா. பாப்பாரீச்சர். வேலுப்பிள்ளை. இராமச்சந்திரன். நேசரத்தினம் மற்றும் சோமசேகரம்பிள்ளை (கிளிநொச்சி) ஆகியோரின் சகோதரரும். உலகேஸ்வரியின் (இளைப்பாறிய ஆசிரியை) அன் புக் கணவரும். ஆறுமுகம்-வள்ளியம்மை தம்பதிய ரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (06.12.2013) வெள்ளிக்கிழமை நடைபெற்று தகனக்கிரியைகள் தில்லை மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### மார்க்கண்டு ஞானசேகரன்

(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், இலங்கை வங்கி)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க் கண்டு ஞானசேகரன் நேற்று (07.12.2013) சனிக் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் மார்க்கண்டு புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும். கந்தசாமி -புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும். நளாயினி யின் (ஆசிரியை. யாழ்/கனகரத்தினம் - மத்திய மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும். சந்தோஸ்நாராயணன். பிரகாஸ் நாரா யணன் ஆகியோரின் அன்புத் தந்தையும். சந்திரசேகரன். ஞானரஞ்சினி. ஞான ராகினி. குணசேகரன். ரமணசேகரன் ஆகி யோரின் சகோதரனும். ரவீந்திரனின் மைத்து னரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.12.2013) திங்கட் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

96, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் கந்தசாமி



'(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர், S.I)

தம்புள்ளையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கந்தசாமி நேற்று (07.12.2013) சனிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியலிங்கம்-இரசம்மா தம்பதியரின் அன்பு மகனும். அன்ன பாலசுந்தரம் - பூரணம் தம்பதியரின் மருமகனும். புவனேஸ்வரியின் அன்புக் கணவரும். தருந்து கயாணின் அன்புத் தந்தையும். நவரட்ணராஜா (கனடா). பாலன் (கனடா). நேசன் (கனடா). பரமேஸ்வரி (தம்புள்ள). கருணா (ஹொலண்ட்). தயா (ஹொலண்ட்). சாந்தி (ஜேர்மனி) ஆகியோரின் சகோததரரும். நித்தியானந்தன் (கனடா). கருணாநந்தன் (கனடா). பவாநந்தன் (ஓய்வு பெற்ற ரெலிகொம் நிறுவன ஊழியர்). கலாநிதி (கொழும்புத்துறை. துரையப்பா வித்தியாலய ஆசிரியை) ஆகி யோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (10.12.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாமகள் லேன், கொக்குவில் கிழக்கு. தகவல்: பவான்

## கிளிநொச்சியில் மனித உரிமைகள் தின நிகழ்வுகள்

கிளிநொச்சி மாவட்ட மனித உரிமைகளுக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச மனித உரிமைகள் தினமான நாளை மறுதினம் டிசெம்பர் 10 ஆம் திகதி மனித உரிமைகள் தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபை மண்டபத்தில் கிளிநொச்சிமாவட்ட மனிதஉரிமைகளுக்கான மக்கள் அமைப்பின் பிரதிநிதி சி.ஜீவநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில்-முதன்மை விருந்தினராக ஆரோபணம் இளைஞர் இல்லத்தின் இயக்குநர் அருட் திரு மரியாம்பிள்ளை. ஹான்ஸ் போவர். சிறப்பு விருந்தினராக புனித திரேசா பெண்கள் கல்லூரி முதல்வர் ஜெயந்தி தனபாலசிங்கம் கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் இ. இராஜேந்திரம் கலந்து கொள்வர். (ஒ-6)

## வெள்ளப் பாதிப்பு குடும்பங்களுக்கு கொடுப்பனவு

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட 900 குடும்பங்களுக்கு தேசிய இடர் நிவாரண சேவை நிலையத்தினால் உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. கரைச்சி. கண்டாவளை. பூநகரி. பச்சிலைப் பள்ளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த மேற்படி குடும்பங்களுக்கு இந்த நிதி விரைவில் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

**வீடு விற்பனைக்கு**

சபாபதி வீதி, உடுவில் தெற்கில் பரப்பு 3 குழி 16 இல் அமைந்த வீடு விற்பனைக்குண்டு

(f/14311) (10,14) T.P: 077 844 5750

**விற்பனைக்கு**

பெல்ஜியம் செப்பேட், ஜேர்மன் செப்பேட் நாய்கள், குட்டிகள் விற்பனைக்குண்டு.

(46967) (10,14) தொடர்பு: 077 427 7120

**வீடு வாடகைக்குண்டு**

நல்லூரில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடியுடன் வீடு வாடகைக்கு உள்ளது. வெளிநாட்டு, உள்நாட்டு நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:
(40968) (10,14) 078 601 9945/ 077 306 0008

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

## இரண்டாம் ஆண்டு இதய அஞ்சலி



மண்ணில் 24 ★ 12 ★ 1956

மண்ணில் 08 ★ 02 ★ 1965

விண்ணில் 08★12★2011

**மார்க்கண்டு உதயகுமார்**
**திருமதி. செந்திமாலா உதயகுமார்**

மனித நேயமிக்கவர்களாவும் உற்றார் உறவினர்களுக்கு ஆதரவாகவும் வாழ்ந்து சதிகாரப்பாவிகளின் ஈனச்செயலுக்கு பலியாகி விண்ணுலகு சென்ற எமது பெற்றோரே

உங்கள் பிரிவு கண்டு ஆழ்ந்த சோகத்தில் தவிக்கின்றோம். தங்கள் ஆத்மாக்கள் இறைவனின் பாதாரவிந்தத்தை அடைந்து நித்திய சுகத்தை அனுபவிக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

4 ஆம் கட்டை இராஜா வீதி, நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

பிள்ளைகள்: செந்தூரன், குகதீபன்,சங்கீதன், கோபிகா

## மரண அறிவித்தல்



### திருமதி முருகதர்ஷினி மாதவன்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி முருகதர்ஷினி மாதவன் நேற்று (07.12.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மாதவனின் (கோபி) பாசமிகு மனைவியும் ஹரிஸ் இன் அன்புத்தாயும் சிவலிங்கம் - நிர்மலா (சுகன்யா நகைத்தொழிலகம் சுன்னாகம்) தம்பதியரின் அன்புமகளும் காலஞ் சென்றவர்களான நீலகண்டன் - புஸ்பவள்ளி தம்பதியரின் அன்புமருமகளும் முருகன் ஆச்சாரி, வள்ளி அம்பாள், இராசரெட்ணம், புஸ்பராணி ஆகியோரின் பேர்த்தியும் சிறிவள்ளி, சுகன்யா, ஹரிகரன், ரஜீவ் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (09.12.2013) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு மாதம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
அன்புச்சகோதரர்கள்
முகுந்தன்,
சிறிமுருகன், முருகன்

93 Dr.சுப்பிரமணியம் வீதி
சுன்னாகம்.

## கண்ணீர் அஞ்சலி

### ஆறுமுகசாமி பாலசுப்பிரமணியம் (ராசா)

(அண்னை முத்துமாரி போக்குவரத்துச் சேவை ஸ்தாபகர்,
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை)



வல்வையின் மாணிக்கம்
கொழும்பின் மணிமகுடம்
எங்கள் இதயத்தின் இமயம்— நீ
உபசரிப்பில் உத்தமனாய்
என்றும் எம் மனதில் நீண்ட நினைவுகளுடன்
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் துயரடையும்:**
**ஸ்ரீ. நிலாகரன் (பேரமகன் - லண்டன்)**
**தம்பி குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடம்

## இலங்கையின் உயர்நிலை பல்தேசிய நிறுவனம் ஒன்றில் நிரந்தர பதவி வெற்றிடங்கள்

01 சேவைகள் நிறைவேற்று அதிகாரிகள் - அதே துறையில் இரண்டு வருடத்துக்கு மேல் அனுபவம்.
02 சேவை தொழில்நுட்பவியலாளர்கள் - இலத்திரனியல் மற்றும் குழாய் அமைப்பு அறிவும் அனுபவமும்
03 சேவை பிரதிநிதிகள் - குழாய்கள் அமைப்பு அடிப்படை அறிவு தேவை
04 விற்பனை பிரதிநிதிகள் - ஓராண்டுக்கு மேற்பட்ட அனுபவம் (அகில இலங்கை)



### சம்பளங்களும் இதர படிகளும்

★ சகல பதவிகளுக்கும் கவர்ச்சியான சம்பளம்
★ அடிப்படை சம்பளம் ரூ. 10,000/=இல் இருந்து 30,000/= வரை (அனுபவத்தைப் பொறுத்து)
★ மதிய உணவு கொடுப்பனவுகள்
★ மோட்டார் சைக்கிள் மற்றும் எரிபொருள் கொடுப்பனவு
★ கவர்ச்சியான தரகு பணம் மாதம் ரூ. 40,000/= வரை
★ ஆயுள், மருத்துவ காப்புறுதி 3000,000/= (24 மணித்தியாலம்)
★ காலணிகள் மற்றும் சீருடைகள் இலவசம்
★ அடிப்படை கொடுப்பனவுகள் - வெவ்வேறு பகுதியின் அடிப்படையில்
★ கைபேசி இணைப்பு - கட்டணம் நிறுவனத்தால் செலுத்தப்படும்
★ முதல் நாள் தொடக்கம் EPF/ETF வழங்கப்படும்
★ போனஸ் - ஆண்டு இறுதியில் போனஸ்
★ தொடர் பயிற்சி மற்றும் மேலதிக கொடுப்பனவு

**நேர்முகத் தேர்வுக்கு பின்வருமாறு வருகை தரவும்**

➡ 10 டிசெம்பர் 2013 சுகததாச ஸ்போர்ட்ஸ் ஹொட்டல், ஜேதவனா வீதி, கொழும்பு-14 (DIMO வுக்கு அருகில்) மு.ப. 9.00 - 12.00 மதியம் வரை
➡ 12 டிசெம்பர் 2013 ஹொட்டல் நெல்லி ஸ்டார், இல.84, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா, பி.ப 1.00 - 3.00 மணிவரை
➡ 13 டிசெம்பர் 2013 ஹபரண ஓய்வு விடுதி, திருகோணமலை வீதி, ஹபரண. மு.ப. 10.00 - பி.ப 2.00 மணிவரை

மேல் குறித்த நாள்களில் சமுகமளிக்க முடியாது போனால் உங்கள் CV யை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.

Email: info@austalentnetwork.com (C/14159)(6.6)

## சமுதாய அபிவிருத்தி நிறுவனம் (CDO)- முல்லைத்தீவு

### திறன் விருத்திப் பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோருதல்

1. வீட்டு மின்னிணைப்பு
2. நீர்க்குழாய் பொருத்துதல்
3. தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி (Entrepreneurship Development)
4. ஆங்கில மொழித் தேர்ச்சித்திறன் (English Language)
5. அடிப்படைக் கணினிக்கல்வி

மேற்படி பயிற்சி நெறிகள் சமுதாய அபிவிருத்தி நிறுவனத்தின் (CDO) செம்மலை பயிற்சி நிலையத்தில் ஜனவரி 05ஆம் திகதி முதல் யூலை மாதம் 05ஆம் திகதி வரையான காலப் பகுதியில் நடைபெறவுள்ளதால் இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டு சுயதொழில் தேடிக்கொள்ள விரும்பும் அனைவரையும் இப் பயிற்சியில் கலந்து பலன் அடையுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம் பயிற்சிநெறியின் முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும்.

**அடிப்படைத் தகைமைகள்:**

- ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
- கல்வித்தகைமைகள் க.பொ.த.சாதாரண தரம் (G.C.E O/L)கற்றிருத்தல் வேண்டும்.
- தொழில் செய்வதற்கு ஆர்வமும் விருப்பமும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

- பயிற்சி பெற விரும்புவர்கள் கீழே குறிப்பிடப்படும் விண்ணப்பப்படிவத்தைப் பூரணப் படுத்தி 25.12.2013ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பின்வரும் முகவரிக்கு தபால்மூலம் அனுப்பி வைக்கலாம் அல்லது நேரடியாகவும் ஒப்படைக்கலாம்.
- **திட்டப்பணிப்பாளர்,**
  **சமுதாய அபிவிருத்தி நிறுவனம்,**
  **செம்மலை, அளம்பில், முல்லைத்தீவு.**

**திறன் விருத்திப் பயிற்சிநெறிக்கான விண்ணப்படிவம்**

1. முதலெழுத்துக்களுடன் பெயர்:-......................................
2. முழுப்பெயர் (தமிழில்):-......................................
3. முழுப்பெயர் (ஆங்கிலத்தில்):-......................................
4. பிறந்த திகதி:......................................
5. வயது:..........
6. தேசிய அடையாளஅட்டை இல:..............................
7. பிரதேச செயலாளர் பிரிவு: ..........................
8. கிராமஅலுவலர் பிரிவு:.........................
9. நிரந்தரமுகவரி:..................
10. தபால்முகவரி:....................
11. விரும்பும் தொழில் பயிற்சி: வீட்டு மின்னிணைப்புடி / நீர்க்குழாய் பொருத்துதல் / தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி. / ஆங்கில மொழித் தேர்ச்சித்திறன் / அடிப்படைக் கணினிக்கல்வி
12. கல்வித்தகைமைகள்:-

.................................... ..........................

விண்ணப்பகாரியின் கையொப்பம் (C/14299)(5.3.6) திகதி

### நாய்க்குட்டி விற்பனைக்கு

ROD BILLER இனத்தைச் சேர்ந்த 8 மாத ஆண் நாய்க்குட்டி விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு: 077 666 0407/077 138 2432 (40664)(12.3.6)

### தேவை

பார்மசியில் வேலைசெய்வதற்கு Pharmacist ஒருவர் உடனடியாகத் தேவை.
(40690)(12.3.6) தொடர்பு: 077 148 0409

### காணி விற்பனைக்கு

யாழ். மாம்பழம் சந்தியில் A9 வீதிக்கு அண்மையில் மூன்று பக்கப் பாதையைக் கொண்ட 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 162 6876 (40862)(3.6.4)

### காணி விற்பனைக்கு

அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு அருகில் 4 பரப்புக் காணி வீடு, கிணற்றுடனும் பயன் தரு மரங்களுடனும் விற்பனைக் குண்டு. முன்பக்கம் ஒரு கடையும் கட்டக்கூடியது.
(4082)(4.6.3) தொடர்பு:077 983 8785

### வீடு வாடகைக்கு

கச்சேரிக்கு அருகில் 7 அறை, 2 கோல், இணைந்த குளியலறை, A/C,மாபிள் பதிக்கப்பட்டது, 5 வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய மேல்மாடி வீடு நீண்டநாள் ஒப்பந்தத்தில் வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 028 9212

STUDY IN A WORLD RECOGNIZED MEDICAL UNIVERSITY
**SICHUAN MEDICAL UNIVERSITY**
RECOGNIZED BY: Sri lanka Medical Council — 2014 intake

## MBBS

- Largest Medical University in Asia, Ranked among the top three universities in China.
- World's largest single building hospital with over 5500 beds
- Over 25 millions patients treated annually in our hospitals/ excellent clinical training.
- 5 year degree in English medium/ Affordable fees with excellent study facilities
- Sichuan medical university is a globally recognized research and teaching university.

ABC STUDY LINKS LANKA (PVT) LTD
103, Dutugemunu Street, Kohuwela, Dehiwala, Sri Lanka
E-mail : abcstudylanka@gmail.com
0712722385
0776074317

### Soft View Computer Center

விடுமுறை வகுப்புக்கள் புதிய பிரிவு ஆரம்பம்
கணினி, ஆங்கிலம், சிங்களம்
Gr - 3...
102, பிரதான வீதி (A9)
யாழ்ப்பாணம். (சி/14304)(7.6.3)
E.C. கொலின். தொடர்பு: 077 905 3545

### விற்பனைக்கு

HUNK MOTOR CYCLE WB xxxx இலக்கமுடையதும், TVS Scooty VPxxxx இலக்கமுடையதும் Lap - Compaq (புதியது) என்பன உடன் விற்பனைக்குண்டு. (தரகர்கள் தேவையில்லை)
(40630)(12.3.6) தொடர்பு: 077 780 8693

### தேவை

கட்டட நிர்மாணத்துறையில் பல வெற்றிடம் யாழ்/உடையார்கட்டு/கொழும்பை அண்மித்த பல பிரதேசங்கள்/கண்டி/கம்பஹா/திருகோணமலை/மட்டக்களப்பு /மேசன்/தச்சர்/பெயின்டர்/செடலின்/கம்பி பாஸ் (1000/=, 1500/=) கை உதவியாளர் (800/=, 1200/=) தினமும் கை செலவு உண்டு. தங்குமிடம் இலவசம்.
தொடர்புகளுக்கு:
077 556 1883 (40587)(7.6.3)

### நல்லூரில் காணி விற்பனைக்கு

நாவலர் வீதி, குறோசற் ஒழுங்கையில் (நல்லூர் கோயில் யாழ் மாநகர சபைக்கு அருகில்) ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 803 8205 (40933)(7.6.3)

### வீடு காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், திருநெல்வேலி வடக்கு, கலாசாலை வீதி; பாற்பண்ணைக்கு மிக அருகில் இரண்டு பரப்புக் காணி, 3 அறை வீடு மற்றும் கிணறு வசதிகளுடன் விற்பனைக் குண்டு
(சி/14134)(12.3.6) தொடர்பு: 077 147 5500

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

சுன்னாகம், கே.கே.எஸ் வீதி, ஜெற் மோட்டோர்ஸ் அருகில் சுற்று மதிலுடன் கூடிய பெரிய நாற்சர் வீட்டுடன் பதின் நான்கு பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 321 2863, 0041 795 993 592 (40919)(4.6.3)

### தென்னங்காணி விற்பனைக்கு

எழுதுமட்டுவாழ் பகுதியில் தென்னங்காணி விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு: 077 492 7947 (சி/14153)(12.3.6)

### காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் ஒரு பரப்பு 15.50 குழி விஸ்தீரணம் கொண்ட 5 அறைகள் உள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 711 1400

### விற்பனைக்கு

காங்கேசன்துறை, மாவிட்டபுரம், பிரதான வீதியில் (முருகன் கோயிலுக்கு அருகில்) ஐந்து பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 327 4176

### வான் விற்பனைக்கு

Mitsubishi Mini CAB 2001 Reg 2007 Olive Green Colour Mint Condition WPPA 8 xxx CASH IN HAND 2/50 balance Lease
மேல் குறிப்பிட்ட தரமுடைய வான் விற்பனைக்கு உண்டு. (40911)(4.6.3)
தொடர்பு:077 722 7222

### வீடு வாடகைக்கு


யாழ். கொட்டடி லைடன் சந்திக்கு அண்மையில் ஐந்து அறைகள் கொண்ட சகல வசதிகளும் உடைய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 162 6876 (40863)(3.6.4)

### காணி விற்பனைக்கு

வவுனியா குட்செட் வீதியில் அமைந்துள்ள ஆலடி வீதியில் கிணறு, சிறிய வீட்டுடன் கூடிய 2 பரப்புக் காணியும், அதே வீதியில் அமைந்துள்ள மதில் கட்டிய 1½ பரப்புக் காணியும் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 024 222 5365

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### ஆறுமுகசாமி பாலசுப்பிரமணியம் (ராசா)

(உரிமையாளர் அன்னை முத்துமாரி ரவல்ஸ்)

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, ஊரிக்காட்டைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, கொட்டாஞ்சேனை, இல.173, வாசல வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகசாமி பாலசுப்பிரமணியம் 05.12.2013 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகசாமி - பங்கைய செல்வி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற விக்னேஸ்வரன், வரதராசா (சுவிஸ்), கனவதி தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், டாக்டர் முரளிதன் (வல்வெட்டி, ஊறணி வைத்தியசாலை), கஸ்தூரி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், விரார்த்தின் அன்புப் பெரியப்பாவும், விஸ்ணுசரனின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை காலை.9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரிக்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை. (40038) (12)(3.0)

தகவல்:
குடும்பத்தினர்.

### முன்பள்ளியின் ஆண்டு விழா

வவுனியா, டிசெ.8

வவுனியா வேப்பங்குளம்வாணிஅருணோதயா முன்பள்ளியின் 3ஆம்ஆண்டுநிறைவு விழாவும் கலை நிகழ்வுகளும்இன்று ஞாயிற்றுக்கிழமை முன்பள்ளியின் அதிபர் எஸ்.தயாளன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்து கொள்வார். (ஓ-402)

### அரச நூலகர் சேவை வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ.8

இலங்கை அரச நூலகர் சேவை வகுப்புIII இற்கு ஆள்சேர்ப்பதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர் வரும் மார்ச் மாதத்தில் கொழும்பில் நடத்தப் படவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 2014 ஜனவரி 6 ஆம் திகதியாகும்.

பரீட்சை குறித்த பூரண விவரங்கள் டிசெம்பர் 6 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளன. (ஞ)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி சுப்பிரமணியம்



யாழ்.கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கனடா Torontoவை வதிவிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி சுப்பிரமணியம் 05.12.2013 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஐயாத் துரை- பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு புத்திரியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு -அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், லிங்கேஸ்வரன் (சுபீர்), நிர்மாலா (மாலா), சாந்தினி, சுகந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகநந்தி, குருபரன் (குரு), தீனதயாபரன் (தீனா), முருகதாஸ் (குஞ்சன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிருஷா, கேசியா, வைஸ்நபி, நிருசன், யாஸ்மின், அபிநயா, ஆரணி, ஆரூசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், துரைசிங்கம், பாலசுப்பிரமணியம், கணேசலிங்கம், முத்தி லிங்கம், கமலதேவி, மகாதேவன், மனோன்மணி, விமலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மகாலக்சுமி, தேவி, சரோஜினிதேவி, குஞ்சு, சிவலிங்கம், ரஜனி, காசிநாதர், பாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணி முதல் 9.00 மணிவரையும் மறுநாள் திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் 11.00 மணி வரை 8911 Woodbine Ave Markham இல் அமைந்துள்ளChapel Ridge Funeral Home இல் பார்வைக்கு வைக்கப்பட்டு, தொடர்ந்து மு.ப. 11.00 மணி முதல் 1.00 மணி வரை அதே இடத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பின்னர் பி.ப. 2.00 மணியளவில் 4570 Yonge St, North York இல் அமைந்துள்ள Lawn Mausoleum & Cremation Centre இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
லிங்கேஸ்வரன்(சுபீர்-கனடா)-905 281 3773
நிர்மலா(மாலா-கனடா)-905 277 4271
சாந்தினி(இத்தாலி)-01139091682840
சுகந்தினி (கனடா)-905 554 0995 (40932)(3.6.4)

தகவல்
சகோதர, சகோதரிகள்
மதவடி லேன், ஞான வைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
078 356 6857, 021 492 5323

## மரண அறிவித்தல்



### சந்தியோ அந்தோனிப்பிள்ளை எட்வேட்ஸ் (ராசசூரி)

(அகில இலங்கை சமாதான நீதிவான், இளைப்பாறிய டிப்போ அத்தியட்சகர், வட பிராந்திய போக்குவரத்துச் சபை (NRTB) பழைய மாணவன் புனித சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.)

யாழ்ப்பாணம், மவுண்கார்மேல் வீதியைப் பிறப்பிடமாகவும், உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியோ அந்தோனிப்பிள்ளை எட்வேட்ஸ் (ராசசூரி) அவர்கள் 05.12.2013 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியோ அந்தோனிப்பிள்ளை- அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிமியோன் ஞானப்பிரகாசம்-பார்பரம்மா (குணம்) தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் (இளைப்பாறிய ஆசிரியை-றோமன் கத்தோலிக்க பாடசாலை, ஆனைக்கோட்டை) அன்புக் கணவரும், ஆன் ஜெட்றூட் (டோட்டி-லண்டன்), அன்ரன் அல்பியூஸ் (கனடா), ஆன் றெஜினா (ஜடா-ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜோகதாசன் (லண்டன்), மரீனா (கனடா), யேசுதாசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், யூலியன், யுஸ்ரீனா, ஜென்சின்னா, ஜெறிஷ், ஜெனிஸ்ரன், றொபின்சோன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ்கா, ஸ்ரீபன், அருட் சகோதரி மேரி லூயிஸ் (திருக்குடும்ப கன்னியர் சபை) மற்றும் ஸ்ரனிஸ்லோஸ், ஜெறோம் (பிரான்ஸ்), சென் ஜேம்ஸ் (பஞ்சு- கனடா), இருதயநாயகி (லில்லி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற யோசப் மற்றும் பேபி (சில்லாலை) தேவராஜேஸ்வரி (ஒலிவம்), கிளாறம்மா, பேளி, பீற்றர் குமார், செல்வராணி ராசு, றஞ்சிதம் சூசைப்பிள்ளை (நியூஸிலாந்து) சந்திரா போல் (ஆஸ்திரேலியா), கிளி செல்வநாயகம், அருமைநாயகம், பிளசி (லண்டன்), காலஞ்சென்ற சோதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, செல்வநாயகி மற்றும் மரியம்மா, புஸ்பம், பேரின்பநாயகம் (கனடா) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதி வழிபாடு இன்று (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் ஆனைக்கோட்டை புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் புனித அடைக்கல நாயகி சேமக்காலையில் (காக்கைதீவு) நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புனித அடைக்கல அன்னை வீதி,
உயரப்புலம், ஆனைக்கோட்டை.
021 221 3192 (40938) (10.3)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

52, மாட்டீன் வீதியில் அமைந்துள்ள ஒரு பரப்புக் காணியுடன் 5 அறைகள், சமையலறை, பெரிய ஹோல், 2மலசலகூடம் (கொமேட் வசதியுடன்) மற்றும் சகல வசதியும் கொண்ட வீடு விற்பனைக் குண்டு. புகையிரத நிலையத்துக்கும் யாழ். பிரதான வீதிக்கும் மத்தியில் அமைந்துள்ளது.

தொடர்பு: இ.சௌந்தரநாயகம்
021 222 6056, 0044 7956 391527(Sam)

## காணி விற்பனைக்கு

123, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரதான வீதிக்கு அருகில்

தொடர்பு: இ.சௌந்தரநாயகம் (40609)(4.6.3)
021 222 6056, 0044 7956 391527(Sam)

## அறை தேவை

Kilinochchi நகரில் அரச சார்பற்ற துறை சார்ந்தவருக்கு அமைதியான சூழலில் வெளி உட்பிரவேசத்துடன் இரவு வேளை உணவுடனும் அறை தேவை.

தொடர்பு:072 614 4552 (40918)(4.6.3)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள HONDA CD 125 BENLY விற்பனைக்குண்டு. உற்பத்தி ஆண்டு 2008 1st owner

தொடர்பு:077 113 0303 (40377)(4.6.3)

## வாடகைக்கு

இல. 275, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப் பாணத்தில் ஒவ்வொன்றும் 1800 சதுர அடி உள்ள மூன்று மாடிக் கட்டடத் தில் கீழ் மாடி மற்றும் இரண்டாம் மாடி முழுமையாக அல்லது 900 சதுர அடி பகுதிகளாக வாடகைக்கு உண்டு.

தொடர்பு:071 278 9227 (40913)(4.6.3)

## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு

## முல்லைத்தீவு பட்டண மேற்தள சந்தைக் கட்டடத்தின் கடைகளுக்கான வைப்புப்பண கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முல்லைத்தீவு உப அலுவலக எல்லைக்குட்பட்ட நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மக்களிடமிருந்து 2014 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் முதலாம் வருடம் மாதம் ரூபா 4000.00 (நான்காயிரம்) வீதம் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு ஏதுவாக கடைகளுக்கான திறப்புப் பண கேள்விகள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி | :- | 09.12.2013 தொடக்கம் 22.12.2013 வரை |
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி | :- | 23.12.2013 முற்பகல் 10.00 மணி வரை |
| கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி | :- | 24.12.2013 முற்பகல் 10.30 மணி |

கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு எனும் முகவரிக்கு அரக்கு முத்திரை இட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 23.12.2013 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 23.12.2013 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புபவர்கள் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வதியும் இடத்தின் வதிவிடச்சான்றிதழ் மற்றும் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் நேரடியாக கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்கள் கீழ்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணங்கள், மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி மேற் குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.
4. ஆகக் குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
6. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்வி கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரமுண்டு.
7. வாடகை வருடா வருடம்/ சபையால் நிர்ணயிக்கப்படும் கால ஒழுங்கில் வாடகையின் அடிப்படையில் 10% அதிகரிக்கப்படும்
8. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்படவேண்டும் பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடத்த அனுமதிக்கப்படமாட்டார். இருந்தும் அவரது வாரிசு நடத்த அனுமதிக்கப்படுவர். (உ+ம் மகன், மகள்)
9. சபையின் அனுமதியின்றி எதுவித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
10. நிராகரிக்கப்பட்ட கேள்விதாரரின் பிணைப்பண ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்
11. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்
12. வாடகைப்பணம் மாதாந்தம் இறுதி வேலை நாளுக்கு முன்னர் செலுத்தப்படவேண்டும். தவறின் 10% தண்டமும் சேர்த்து அறவிடப்படும். என்பதுடன் வாடகைப்பணம் இரு மாதங்கள் தொடர்ந்து கட்டத்தவறின் முன்னறிவித்தல் இன்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும்.
13. சபையின் செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாகச் சபைக்கெதிராகவோ/ செயலாளருக்கெதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.
14. கேள்வி சம்பந்தமாக மேலதிக விவரங்களைப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT, NBT) நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|
| 1 | கடை இலக்கம் 11 | 1500.00 | 40,000.00 | 400,000.00 |
| 2 | கடை இலக்கம் 12 | 1500.00 | 40,000.00 | 400,000.00 |
| 3 | கடை இலக்கம் 13 | 1500.00 | 40,000.00 | 400,000.00 |
| 4 | கடை இலக்கம் 14 | 1500.00 | 40,000.00 | 400,000.00 |
| 5 | கடை இலக்கம் 15 | 1500.00 | 40,000.00 | 400,000.00 |
| 6 | கடை இலக்கம் 16 | 1500.00 | 40,000.00 | 400,000.00 |
| 7 | கடை இலக்கம் 17 | 1500.00 | 40,000.00 | 400,000.00 |
| 8 | கடை இலக்கம் 18 | 1500.00 | 40,000.00 | 400,000.00 |

கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு

09.12.2013. (C/14297)(2.6.3)

க.ரவீந்திரநாதன்,
செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு

## உடனடியான வேலை வாய்ப்பு

கப்பல்/விமான நிலையத்தில் வேலை செய்ய விருப்பமா? கப்பல் புனர்நிர்மாண துறையில் சாதாரண ஊழியர்/வெல்டர்/தச்சர்/பெயின்டர் மற்றும் விமான நிலையத்தில் (தனியார்) காகோ / சுத்திகரிப்பாளர் /கேட்டரீங்/லொன்றி பிரிவு 18-45 ஆண்-பெண் தேவை. உணவு, தங்குமிடம் சகாய விலையில் சம்பளம் 18,000/=, 25,000/=, 32,000/= மேல். வருகை தரும் நாளிலே வேலை வாய்ப்பு.

தொடர்புகளுக்கு: **077 556 1883** (40586)(7.6.3)

## Vacancy for Hardware Technician

*Job description :*

*Supports and maintains computer systems and peripherals by installing, configuring, testing, troubleshooting, and repairing hardware*

*Requirements:*

*Age below 30 yrs, Male*
*With G.C.E. O/L & A/L*
*Diploma in computer hardware & network*
*Good command in English is a plus*
*Pleasant, outgoing and good team worker who can work hard under mininium supervision*
*Having riding license is an advantage*

*Apply:*

*Forward your CV (mention "Hardware Technician" on the subject column) by email with contact telephone numbers and names with contact numbers of two non related referees to*

*gatewayjfn@sltnet.lk*
(c.14300)

## கேரள ஆயுர்வேத மருத்துவம்

**நமது சிகிச்சைகள்**

- இருதயவலி
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பிரச்சினைகள்
- மூட்டுவலி
- இடுப்புவலி
- புரோட்ஸ்ரேட் பிரச்சினைகள்
- ஒற்றைத்தலைவலி
- மனஅழுத்தம்
- இருமல்
- சளி, முதுகுவலி
- படுக்கைப்புண்
- நச்சு வைரஸ் பாதிப்பு
- பாலியல்குறைபாடு

Tel : 011 551 7897
011 555 1879
011 555 8442
Fax : 011 551 7756

**சில பிரச்சினைகளைத் தீர்த்திட சிறிய வழிமுறைகள்**

**கல்லீரல் மருத்துவம்**
அதிக மதுபாவனை உடல் நலத்தை கெடுக்கும்
**உங்கள் கல்லீரலை பரிசோதனை செய்தீர்களா?**



நோய்க்கான அறிகுறிகளில் அவதானமாக இருங்கள்.
-கருமைப் படர்வு.
-கால்களில் வீக்கம்.

**Free consultation**
Daily@ Ceylinco House
monthly clinics are conducted islandwide.

தயவுசெய்து மருத்துவருடன் கலந்தாலோசியுங்கள்
**Hotline : 0777 708 310 / 0777 555 600**
**0777 708 330 / 0777 708 434**

பிறின்ஸ் பார்மசி
462/D, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

FAIR PHARMA (PVT) LTD
Kerala Ayurvedic Medicine

11th Floor. Westwing.
69. Janadipathi Mawatha
Colombo1.
E.mail:fairpharmasrilanka@yahoo.com
Website:www.ayurveda.lk. (c.14162)(6.3.45)

**Approved by Department of Ayurveda, BOI, an ISO : 2008 QMS Certified Company**

## VACANCY

my Cola — It's my THRILL

Fast growing Beverage Company spread across south Asia in Beverage sector with success looking for a dynamic candidate.

## AREA SALES MANAGERS

### NORTHERN, NORTH CENTRAL & WESTERN

The personality we require; needs to have adequate experience and expertise in the Retail FMCG segment, with strong analytical, innovative and relationship building skills. He will operate this channel as a separate cost center and should be willing to travel widely if required.

This is middle management position with options for career development, for the right candidate. Remuneration is negotiable subject to knowledge, experience and skill levels.

- Below 40 years
- Not less than 5 years hands on experience in a similar position
- Willing to be based in respective territory
- GCE A/L is a must; along with other professional qualifications.
- High Competency in English and Tamil/Sinhala languages will be a definite advantage.
- Wide area knowledge with adequate business contacts in Retail market channel.


Please send in your resume with in 10 days to: (c.14161)


Human Resource Manager
**my BEVERAGES MARKETING (PVT) LTD.**
555/5D, Gonahena Road, Kadawatha.
E-mail: mycola@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 145

# குழந்தைகளும் பிறவிக்குறைபாட்டு இருதய நோய்களும்





**இருதயமும் தொழிற்பாடும்**
இதயம் நான்கு அறைகளைக் கொண்ட உடலுக்கும் நுரையீரலுக்கும் குருதியை வழங்குகின்ற பம்பியாகும்.

- மேலே உள்ள வலது மற்றும் இடது சோணை அறைகளைப் பிரிக்கும் சுவர் சோணை அறை பிரிசுவர் எனப்படும்.
- கீழே உள்ள வலது மற்றும் இடது இதய வறைகளைப் பிரிக்கும் சுவர் இதய வறைப் பிரிசுவர் எனப்படும்.
- உடல் உறுப்புகளில் இருந்து ஒட்சிசன் ($O_2$) குறைந்த குருதி மேற்பெருநாளம், கீழ் பெருநாளங்களினூடாக வலது சோணை அறையை அடைந்து முக்கூர் வால் பினூடாக வலது இதய அறையை அடை யும். இக் குருதி வலது இதய அறையில் இருந்து பிரதான சுவாசப் பெருநாடியினூடாக நுரையீரல்களைச் சென்ற டையும்.
- நுரையீரல்களில் ($O_2$) ஏற்றப்பட்ட குருதி நான்கு சுவாசப் பெருநாளங்களினூடாக இடதுசோணை அறையை வந்தடை யும். இக் குருதி இடது சோணை அறை யிலிருந்து இரு கூர்வால்பினூடாக இடது இதயவறையை அடைந்து தொகுதிப் பெருநாடியினூடாக உடலுறுப்புகளைச் சென்றடையும்.

**இதயத்தில் ஏற்படும் பிறவிக் குறைபாட்டு நோய்கள் (Congenital Heart Disease)**

- இவை எவ்வாறு ஏற்படுகின்றன?

இக் குறைபாடுகள் கர்ப்பப்பையில் குழந்தை யின் இருதய விருத்தியில் ஏற்படுகின்ற மாற்றங்களினால் உண்டாகின்றன.
அநேகமான சந்தர்ப்பங்களில் இக் குறைபாடு கள் உருவாவதற்கான காரணங்கள் அறி யப்படவில்லை. சில வேளைகளில் கர்ப்ப காலத்தின் ஆரம்ப நிலையில் தாய்க்கு ஏற்படுகின்ற நோய்களினாலும், குழந்தைக்கு பிறப்பிலிருந்தே காணப்படுகின்ற வேறு சில நோய்களினாலும் ஏற்படலாம்.

- ஏன் எனது குழந்தைக்கு இந்நோய் ஏற்பட வேண்டும்?

பல கர்ப்பிணித் தாய்மார்களும் அவர்களது கணவன்மாரும் தமது குழந்தைக்கு ஏற்பட்ட குறைபாட்டுக்குத் தாங்கள்தான் காரணமோ என கவலைப்படுகின்றனர். ஆனால் இக் குறைபாடுகள் எவருக்கும் எந்தச் சந்தர்ப்பத் திலும் ஏற்படலாம் என அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.
உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு 1000 கர்ப்பத்திலும் 7 சிசுக்களுக்கு (0.7%) இந்தக் குறைபாடுகள் ஏற்படலாம். இவற்றில் அரை வாசிக்கு மேற்பட்ட குழந்தைகளின் குறை பாடுகள் பிரச்சினை அற்றவையாகவோ அல்லது சத்திரசிகிச்சை மூலம் முழுமையாக சரிப்படுத்தக் கூடியவையாகவோ காணப் படுகின்றன.

- எவ்வாறு குழந்தைகளின் இருதயநோய் கண்டறியப்படுகின்றது?

சில இருதயநோய்கள் கர்ப்பப்பையில் குழந்தை இருக்கும்போதே கண்டறியப்படலாம். மகப் பேற்று வைத்திய நிபுணர்களினால் வழமை யாகச் செய்யப்படும். Scan (ஸ்கான்)னில் குழந்தையின் இருதயம் தொடர்பில் சந்தே கம் ஏற்படின், குழந்தை இருதயவியல் நிபு ணரின் உதவியோடு இருதயநோய் கண் டறியப்படலாம்.
பெரும்பாலான இருதயநோய்கள் பிறந்த பிறகே கண்டுபிடிக்கப்படுகின்றன.
ஒவ்வொரு புதிதாகப் பிறக்கின்ற குழந்தைகளும் வைத்தியர்களினால் பரிசோதிக்கப்பட்ட பின்பே வீடு செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.
பின்வரும் மாற்றங்கள் அல்லது வித்தியாசங் கள் பரிசோதனையின் போது கண்டறியப்படின் குழந்தை இருதயவில் நிபுணரின் (Paediatric Cardiologist) ஆலோசனை பெறப்படும்.

1. வித்தியாசமான இருதய ஒலி(Murmur)
2. இருதயத் துடிப்பு வேகமாற்றம் (Tachycardia /Bradycardia)
3. மிகக்கூடிய சுவாச வேகம்/ மூச்சுத் திணறல் (Tachypnvea/Dyspnoea)
4. நீல நிறமாதல் (Cyanosis)
5. பால் அருந்தாமை (Poor feeding)

சில வேளைகளில் இந்த வித்தியாசங்கள் குழந்தை பிறந்தவுடன் தோன்றாமல் ஓரிரு தினங்களுக்குப் பின்பே வெளிப்படும். இவ்வா றான சந்தர்ப்பங்களில் குழந்தையை ஏற்கெனவே வீட்டுக்குக் கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட்டிருந்தால் உடனடியாக குழந்தையை வைத்திய சாலைக்குக் கொண்டு வர வேண்டும்.

**வளர்ந்த பிள்ளைகளில் எவ்வாறு இருதய நோய் கண்டறியப்படுகிறது?**
பாடசாலைகளில் நடைபெறும் வைத்தியப் பரிசோதனையின் போது இருதய நோய்க்குரிய குணங்குறிகள் கண்டறியப்பட்டால் அவர்கள் குழந்தை மருத்துவரினூடாக(Consultant Paediatrician) இருதயவியல் பிரிவுக்கு அனுப்பப்படுவர்.
சில வேளைகளில் திடீர் மயக்கம், நெஞ்சுப் படபடப்பு (Palpitation) போன்ற காரணங் களினாலும் இவர்கள் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டு பின்னர் இருதயவியல் பிரிவுக்கு அனுப்பப்படுவர்.
இவர்களுக்கு ECG (ஈ.சி.ஜீ). ECHO (இருதய நோய்கள்), (24 மணி ஈ.சி.ஜீ) போன்ற பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்ட பின் இருதய நோய் இருப்பின் அது கண்டறியப் படும். இந்தப் பரிசோதனைகளின் பின்னர் அவர்களுக்கு இருதய நோய் சம்பந்தமாக பூரணமான விளக்கம் அளிக்கப்படும்.

**இலங்கையில் எவ்வாறான மருத்துவ வசதிகள் அரச வைத்தியசாலைகளில் வழங்கப்படுகின்றன?**
யாழ்ப்பாணம் உட்பட குருநாகல், கண்டி, காலி, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் குழந்தை இருதயவியல் நிபுணரின் சேவை நிரந்தரமாகக் கிடைக்கப்பெறுகின்றது.
கொழும்பு சிறுவர் (Lady Ridgeway) வைத் தியசாலையில் மட்டுமே குழந்தைகளுக்கான இருதய சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படு கின்றது.

சில இருதய நோய்கள் இயற்கையாகவே குணமாகும் தன்மை கொண்டவை. இவற்றுக்கு எந்தவிதமான மருந்துகளோ சத்திரசிகிச்சையோ தேவைப்படாது. இருதயத்தில் உள்ள சில குறைபாடுகளுக்கு உடனடியாக சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லையேல், குழந்தை இறக்கவும் நேரிடலாம். அதேவேளை சில குறைபாடு களுக்கு சற்றுக் காலம் தாழ்த்தியே சத்திரசிகிச்சை தேவைப்படும்.

இருதயத்தில் இருக்கும் சில குறைபாடுகளை சத்திரசிகிச்சையின்றி (Cardiac Catheteri zation) மூலம் குணமாக்கலாம். அதேவேளை சில சத்திரசிகிச்சைகளுக்கு முன்பு (Cardiac Catheterization) என்னும் பரிசோதனை அத்தியாவசியமாக உள்ளது. இந்த வசதியை கொழும்பு, யாழ்ப்பாணம், காலி ஆகிய மாவட் டங்களில் இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

**எனது குழந்தைக்கு இருதயநோய் கண்ட றியப்படின்**
வைத்தியரின் அறிவுறுத்தல்களைச் சரிவரக் கடைப்பிடிக்க வேண்டும்.
சில இருதய நோய்கள் இயற்கையாகவே குணமாகும் தன்மை கொண்டவை. இவற் றுக்கு எந்தவிதமான மருந்துகளோ சத்திரசிகிச் சையோ தேவைப்படாது.
இருதயத்தில் உள்ள சில குறைபாடுகளுக்கு உடனடியாக சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லையேல் குழந்தை இறக்கவும் நேரிடலாம். அதேவேளை சில குறைபாடு களுக்கு சற்று காலம் தாழ்த்தியே சத்திரசிகிச்சை தேவைப்படும்.
சில இருதய நோய்களுக்கு இருதய சத்திர சிகிச்சையின் மூலம் நோய் முழுமையாக குணமாக்கப்படலாம். அதேவேளை சில நோய் களுக்கு கட்டம் கட்டமாக ஒன்றுக்கு மேற்பட்ட சத்திரசிகிச்சைகள் தேவைப்படும்.
சத்திரசிகிச்சையின் பின்பும் சில இருதயநோய் கள் உள்ளவர்கள் வாழ்நாள் முழுவதும் இருதயவியல் நிபுணர்களின் அவதானிப்பில் இருப்பது அவசியம்.

**அடுத்து**
இனிவருகின்ற வாரங்களில் குழந்தைகளில் ஏற்படுகின்ற வெவ்வேறு இருதய நோய்களைப் பற்றி ஆராய்வோம்.

DR.I.R.ரகுநாதன்,
குழந்தை இருதயவியல் நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

## மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி

பாடசாலை மாணவர்களின் விஞ்ஞான, சுகாதார அறிவை தூண்டி வளர்க்கவும் அவர்களதும், அவர்களின் குடும்பத்தவரினதும் உடல் நலத்தை மேம்படுத்துவதற்கும், யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையத்தினர் பாடசாலை மாணவர்களிடையே பரீட்சை ஒன்றை நடத்தி இருக்கின்றனர். நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தின் சுகாதார மேம்பாட்டு இணையத் தளமான www.jaffnadiabeticcentre.org இல் வரும் சுகாதார தகவல்களின் அடிப்படையிலும், பொது அறிவின் அடிப்படையிலும் வினாக்கள் அமைந்திருக்கும். உங்களது ஓய்வு நேரத்தில் இணையத் தளத்திலேயே இந்த வினாக்களுக்கான விடைகளை நீங்கள் அளிக்க முடியும். இதில் கூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.
எனவே ஓய்வு நேரத்தில் www.jaffnadiabeticcentre.org என்ற தளத்திற்குச் சென்று படித்து பரீட்சைக்கு உங்களைத் தயாராக்கிக் கொள்ளுங்கள்.
அத்துடன் பரீட்சைக்கு முன்பே இணையத்தளத்துக்குச் சென்று உங்களையும் அங்கத்தவராக இணைத்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

# புலமைப் பரிசில் பரீட்சை - 2013

## சித்திபெற்று சாதனை படைத்த மாணவச் செல்வங்களை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 45 மாணவர்களையும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 114 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன், இவர்களின் வெற்றிக்கு தம்மை அர்ப்பணித்து சேவையாற்றிய அதிபர் திரு. பே. தனபாலசிங்கம், தரம் 5 இல் கற்பித்த ஆசிரியர்களான திரு.சி. சிவகாந்தி, செல்வி ஐ.வனஜமலர், செல்வி தி.சிவகலை, திருமதி சி.விஜயகோபால் திருமதி ந.நித்தியானந்தன் ஆகியோரினதும் ஏனைய சக ஆசிரியர்களினதும் பணி என்றும் சிறப்புறவும் மற்றும் பல்வேறு வகையில் உதவி புரிந்த பாடசாலைச்சமூகத்தினர் அனைவரையும் அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



மு.நிவேதனா - 187 | த.மிதுலன் - 183 | இ.கிரிஷாஜினி - 179 | லெ.அபிஷேக் - 179 | ச.அட்சயா - 178 | ம.பானுஷா - 175 | ஸ்ரீ.அபிஷன் - 175



இ.மாதவன் - 175 | இ.பிரணவி - 174 | ர.மனுகீதசர்மா - 173 | சு.மாதமி - 172 | ஸ்ரீ.மாதவன் - 172 | பு.நிகிதா - 171 | தி.திலக்ஷன் - 170



ர.ஸதுர்சிமா - 169 | கு.தேனுஷா - 169 | க.ஆரபி - 169 | செ.கிருபிகா - 167 | கோ.அபினாஷ் - 167 | ர.திலக்ஷன் - 166 | ச.சுலக்சன் - 166



உ.கபிலசர்மா - 165 | கு.ராகுலன் - 164 | ஜெ.அஜய் - 164 | ரூ.டிபர்ஷன் - 163 | நி.கொலின்ராஜ் - 163 | கு.கிருஷிக்கா - 163 | தெ.கிருத்தியன் - 162



சு.ஷாரங்கன் - 161 | வி.க்ருஸ்ணபாலன் - 161 | ஆ.கம்ஷானந்தி - 161 | கி.பவிதாகினி - 160 | ச.கணேசவேல்



மோ.பவித்ரா - 158 | சி.விதுன் - 156 | சோ.அபிராம் - 156 | சி.சதுர்சிகா - 156 | ர.ராஜபுத்திரன் - 155



ல.ஜஸ்மிதா - 155 | பி.சாம்பவி - 154 | ந.சபீனா - 154 | வி.சரண்ஜா - 154 | சூ.சங்கீதா - 154

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
புலமைப்பரிசில் மாணவர் கௌரவிப்பு விழா-2013

காலம் : 08.12.2013
நேரம் : மு.ப 10.00 மணி
இடம் : பாடசாலை பிரதான மண்டபம்

தலைவர்:
பே. தனபாலசிங்கம் (அதிபர்)
(யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை)

பிரதம விருந்தினர்:
செ. உதயகுமார்
(கல்விப் பணிப்பாளர், யாழ் கல்வி வலயம்)

சிறப்பு விருந்தினர்:
செல்வி ஞானலோஜினி சிவஞானம்
(எமது பாடசாலை பழைய மாணவியும் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் -கோண்டாவில்)
லயன் E.S.P. நாகரத்தினம்(P.M.J.F)
(பொன் மனச்செம்மல், மனிதநேய ஈகையாளன், கல்விக் காருண்யன்)

கௌரவ விருந்தினர் : சு.சண்முககுமார்
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர் கோட்டம்)

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்

-பாடசாலைச்சமூகம்
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

Congratulations

## புலமைப்பரீட்சையில் சித்தியடைந் மாணவர்களின் பெற்றோர்கள்

Congratulations

விளம்பர அனுசரணையாளர்கள்

**மக்கள் வங்கி**
திருநெல்வேலி, யா/ பல்கலைக்கழகக் கிளை,
திருநெல்வேலி.

**செலான் வங்கி**
சிறுவர்களுக்கான டிககிரி சேமிப்புக் கணக்குகள் மூலமாக நிறைவான வட்டியுடன் தாராளமான பரிசுகளை அள்ளி வழங்கும் செலான் வங்கியின் யாழ்.கிளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ், இந்தியா, மலேசியா, அமெரிக்கா அல்லது இங்கிலாந்தில் பட்டப்படிப்பை பெற்றுக்கொள்ளுங்கள்

# பூரண புலமைப்பரிசில் - 10
# அரை புலமைப்பரிசில் - 100

## 2014 ஆம் ஆண்டுக்கான பூரண மற்றும் அரை புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக தெளிவுபடுத்தும் கருத்தரங்கு

IVS நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி விஜித்தா சேனாநாயக்க அவர்களால் IVS அறக்கட்டளையின் ஊடாக க.பொ.த (சா/த) சித்தியடைந்த மாணவர்களுக்கு மற்றும் க.பொ.த (உ/த) இல் விஞ்ஞானம், கணிதம், வணிக மற்றும் கலைப்பிரிவுகளில் குறைந்தபட்சம் 02 பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களுக்கு கீழ் காட்டப்பட்டுள்ள பாடத்திட்டங்களுக்கு அமைவாக வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியினைப் பெறும் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது. திறமையான மாணவ மாணவிகளுக்காக 10 பூரண புலமைப்பரிசில்கள் மற்றும் 100 அரைப்புலமைப்பரிசில்களை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பமுண்டு என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றோம்.

### விண்ணப்பிக்கக் கூடிய பாடநெறிகள்

Medicine
Dental
Engineering
Computer Applications
Nanotechnology
Biotechnology
Microbiology
Bioscience
Sciences
Biochemistry
Botany
Food Technology
Management
Commerce
Economics
Hotel Management
Architecture
Urban Planning
Interior Design
Fine Arts
Multimedia
Journalism and Film Prod.
Fashion Design
Pharmaceutical Science
Ayurvedic Pharma Sci.
Physiotherapy
Paramedical Sciences
Arts (Humanities)
Performing Arts
Chemistry
Physics
Mathematics
Agriculture
History
Education
Physical Education
Home Science
Political Science
Psychology
Sociology
Geography
Library Sciences
Language
Foreign Languages

### விண்ணப்பிக்கக் கூடிய பல்கலைக்கழகங்கள்


University of Science & Technology Chittagong, Bangladesh
State university of New York – Oswego, New York, USA
Manipal International University Malaysia
Help University –Malaysia
PESIT institute – Bangalore – India
Lovely Professional University India
Sambhram Institute – Bangalore – India
UCFB Wembly - UK
Suresh Gyan Vihar Univaercity- India
Xinya University - China

### Services Provided by the Company

- Student counseling that covers each concern of a student in IVS endeavors
- Obtaining offers for indented studies
- Handling Visa documentations / preparation for interviews where relevant
- Air travel support
- Departure with our representative
- Airport Pickup arrangements
- Reachable accommodation arrangement Support for students indenting to obtain bank
- loan services
- Career guidance support
- Seminars on useful topic - free of charge
- IELTS Preparation classes
- English Classes

### கருத்தரங்கு நடைபெறும் இடங்கள்...

| | | | |
|---|---|---|---|
| டிசம்பர் 14 | (10.00 am -1.00 pm வரை) | வவுனியா | - வவுனியா கலாச்சார மண்டபம் |
| டிசம்பர் 15 | (10.00 am -1.00 pm வரை) | மட்டக்களப்பு | - பொது நூலக கேட்போர் கூடம், |
| டிசம்பர் 16 | (9.00 am -12.00 pm வரை) | நீர்கொழும்பு | - நீர்கொழும்பு நகரசபை மண்டபம். |
| டிசம்பர் 16 | (2.00 pm - 5.00 pm வரை) | குருணாகலை | - Y.M.B.A மண்டபம். |
| டிசம்பர் 21 | (10.00 am -12.00 pm வரை) | கண்டி | - இந்து கலாச்சார நிலையம். |
| டிசம்பர் 22 | (10.00 am -12.00 pm வரை) | இரத்தினபுரி | - மாநகர சபை மண்டபம். |
| டிசம்பர் 23 | (10.00 am -12.00 pm வரை) | காலி | - மாநகர சபை மண்டபம். |



# Institute of Vocational Studies (Pvt) Ltd.

No. 476, Kandy Road, Dalugama, Kelaniya, Sri Lanka
Tel : 0777444500 / 2910323 / 2969211 Fax : 4810829
E-mail : ivsltd@hotmail.com, ivocationalstudies@gmail.com Web : www.ivsedu.com

(ஞ.14160) (45.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இணங்கிப் போவதுதான் அரசுக்குள்ள ஒரே வழி

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் இலங்கை அரசு மிகப் பெரும் சவாலை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் என்பதற்கான அறிகுறிகள் இப்போதே தெரிய ஆரம்பிக்கின்றன. தமிழர்களுடன் இணங்கிப்போக மஹிந்த அரசு மறுத்தால் அது மேலும் மேலும் சங்கடங்களையும் அழுத்தங்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் என்பது தெரிகின்றது.

ஆப்பிழுத்த குரங்கின் கதையாக அரசு இப்போது தத்தளிக்க ஆரம்பித்திருக்கிறது. அது நடத்திய போர் இப்போது அதற்கே எமனாக எழுந்து நிற்கிறது. இதே மேற்கு நாடுகளினதும் இந்தியாவினதும் ஆதரவுடன்தான் இலங்கை அரசு போரை நடத்தியது. பொதுமக்கள் கொல்லப்பட்டுக்கொண்டிருந்தபோது இந்த அரசுகள் வெறும் அறிக்கைகளுடன் தமது கடமையை முடித்துக்கொண்டிருந்தன. அதற்குக் காரணம் இருந்தது. விடுதலைப் புலிகளை ஓரம்கட்ட வேண்டும் என்பதே காரணம். எனவே அவை இலங்கை அரசை ஆதரித்தன; அரவணைத்துத் தடவிக் கொடுத்தன.

புலிகளை மேற்கு நாடுகளும் இந்தியாவும் ஒடுக்க விரும்பியதற்கான ஒரே ஒரு காரணம், அவர்கள் தங்கள் ஆட்டத்துக்கு ஆடவில்லை அல்லது ஆடமாட்டார்கள் என்பதுதான். அதாவது புலிகள் அவர்களின் சொல் கேட்கவில்லை எனவே இந்த உலகில் புலிகள் தேவையற்றவர்கள் என்று அவர்கள் தீர்மானித்தார்கள். தங்களுடன் இணங்கிப் போகாதவர்கள் இருந்தென்ன இறந்தென்ன என்பது அவர்களின் சித்தாந்தமாக இருந்தது.

அன்று இலங்கை அரசுக்குச் சாதகமாக இருந்த இந்தச் சித்தாந்தம், மேற்கு நாடுகளினதும் இந்தியாவினதும் போக்கு இன்று அதற்கு எதிரானதாக மாறிவிட்டது. போர் முடிந்த பின்னர் தாங்கள் சொன்னபடி நடக்கவில்லை; அல்லது இனிமேல் நடக்க மாட்டார்கள் என்று தெரிந்ததால் இலங்கை அரசை கழுத்துப் பிடியாக இறுக்க மேற்கு நாடுகளும் இந்தியாவும் தயாராகி விட்டன.

பிரிட்டிஷ் பிரதமர் இலங்கையில் வந்து விடுத்த கால அவகாச எச்சரிக்கை, அமெரிக்க செனட்டர் தலைமையிலான குழுவின் இலங்கைப் பயணம், இலங்கையில் நடந்தது இனப்படுகொலைதான் என்ற இந்திய மத்திய அமைச்சர் சிதம்பரத்தின் அறிவிப்பு என்று எல்லாமும் இதைத்தான் பறைசாற்றுகின்றன.

ராஜபக்ஷ அரசாங்கம் தங்களுடன் இணங்கிப் போக மறுத்தால் மனித உரிமைகள் சபையின் அடுத்த கூட்டத் தொடரில் கடும் நெருக்கடியைக் கொடுக்கத் தயங்கப்போவதில்லை என்பதை பிரிட்டனும் அமெரிக்காவும் மிகத் தெளிவாகத் தெரிவித்துவிட்டன. இலங்கை மீதான மற்றொரு தீர்மானத்துக்காக சர்வதேச சமூகத்தின் ஆதரவைக் கட்டியெழுப்ப அடுத்த மார்ச் மாதத்துக்குள் பிரிட்டன் தீவிரமாக முயற்சிக்கும் என்று அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் நாடாளுமன்றத்தில் ஓரிரு தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் மனிதஉரிமை மீறல்கள், ஊடக சுதந்திரத்துக்கு எதிரான நடவடிக்கைகள், சிறுபான்மை மதங்களுக்கு எதிரான வன்முறைகள் எல்லாமே முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்று அமெரிக்காவும் கூறியுள்ளது. எனவே ஜெனிவா மார்ச் களம் மிகச் சிரமமானதாகத்தான் இருக்கும். அதிலிருந்து தப்ப அரசுக்கு உள்ள ஒரே வழி, தமிழர்களுடன் இணங்கிப்போவதுதான். ஆட்சியைக் காப்பாற்ற யார் யாரதோ கால்களில் எல்லாமோ விழுவதைக் காட்டிலும் சொந்த மக்களுடன் இணங்கிப்போவதில் ஒன்றும் குறைந்து விடாது.

# வடக்கில் உச்சம் பெற்றுள்ள அதிகாரத்துக்கான பனிப்போர்

தொல்காப்பியன்



என்னதான் அதிகாரம் ஆளுநரிடம் இருந்திருந்தாலும், அதிகாரிகளை மாற்றம் செய்வது தொடர் பாக ஒரு ஆலோசனையை முதலமைச் சருடன் நடத்துவது தான் பண்பு. அத் தகைய பண்பை ஆளுநர் சந்திரசிறி கடைப்பிடித்தி ருக்கவில்லை.

வடக்கு மாகாணசபை தெரிவு செய்யப்பட்டு, இரண்டு மாதங்கள் கழிந்துள்ள நிலையில், அதிகாரப் பகிர்வு குறித்த கேள்விகளும், விசனங்களும் புதிய நிர்வாகத்திடம் தோன்றியுள்ளன. காரணம், வடக்கு மாகாண சபையைக் கைப்பற்றி இரண்டு மாதங்கள் முடிந்துவிட்ட போதிலும் ஆளுநரின் எல்லையை மீறி மத்திய அரசின் அதிகாரத்தை மீறி மாகாண சபை நிர்வாகத்தால் எதையும் சாதிக்க முடியாத நிலையே காணப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு இடையில் காணப்பட்ட கருத்து முரண்பாடுகளுக்கு மத்தியிலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில், நீதியரசர் விக்னேஸ்வரன் முதலமைச்சராகப் பதவியேற்றிருந்தார். இதனால், ஒன்றேகால் இலட்சத்துக்கும் அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்ற அவரையே, ஒரு பகுதியினர் தூற்றவும் செய்தனர். ஆனால் அவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும் தமது முடிவில் உறுதியைக் கடைப்பிடித்ததற்கு காரணம், வடக்கு மாகாணசபையை சுமுகமாக, மக்களுக்குப் பயனுள்ள வகையில் கொண்டு நடத்த வேண்டும் என்ற விருப்பின் பேரிலேயே

மாகாணசபைகளின் அதிகாரங்கள் எந்தளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டவை என்பதை, ஒரு முன்னாள் நீதியரசரான அவர் புரிந்து கொள்ளாதவராக இருக்கவில்லை. எனவே தான், மத்திய அரசுடன் முரண்போக்கி லன்றி, இணக்கப் போக்குடன் செயற்படும் முடிவை எடுத்திருந்தார். ஆனால், வடக்கு மாகாணசபையின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் அளவுக்கு மத்திய அரசோ, அதைச் சார்ந்த நிர்வாகக் கட்டமைப்புகளோ, இணக்கப் போக்குடன் செயற்படவில்லை. அது மட்டுமன்றி, வடக்கு மாகாணசபையின் செயற்பாடுகளை முடக்கவும், நிர்வாகத்தைச் சிறுமைப்படுத்தவுமே இந்த இரண்டு மாதகாலப் பகுதியிலும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

### இராணுவப் பின்னணி ஆளுநர் வடக்குக்குத்தேவையில்லை

வடக்குக்கு ஒரு இராணுவப் பின்னணி கொண்ட ஆளுநர் தேவையில்லை என்று ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க மூலமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேரடியாக ஜனாதிபதியிடமும், கோரிக்கைகளை விடுத்தும் இன்னமும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. முதலமைச்சர் விக்னேஸ்வரன் முதலாவது மாகாண சபை அமர்வில் நிகழ்த்திய உரையிலும் இதனைச் சுட்டிக்காட்டியிருந்தார். இராணுவப் பின்னணி கொண்ட ஆளுநருக்குப் பதிலாக, சிவில் ஆளுநர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று கோரும் தீர்மானமும் வடக்கு மாகாணசபையில் நிறைவேற்றப்பட்டது. ஆனாலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதற்குச் செவிசாய்ப்பதாகத் தெரியவில்லை.

மேஜர் ஜெனரல் சந்திரசிறியை ஆளுநர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு, ஆஸ்ரேலியாவுக்கான தூதுவராக அரசு நியமிக்கவுள்ளதாக, செய்திகள் வெளியான போதிலும், அது நடைமுறைக்கு வரவில்லை. இந்தநிலையில், ஆளுநர் சந்திரசிறி, வடக்கு மாகாணசபையின் நிர்வாகத்துடன் முரண்போக்குடன் செயற்படத் தொடங்கியுள்ளார். தன்னைப் பதவியில் இருந்து அகற்றக் கோரும் வடக்கு மாகாணசபை நிர்வாகத்தைப் பழிதீர்க்கும் வகையில் அவர் அவ்வாறு செயற்படுகிறாரோ என்று சந்தேகிக்கும் அளவுக்கு அவரது செயற்பாடுகள் அமைந்துள்ளன.

### பதவி அதிகாரத்தை பயன்படுத்தும் ஆளுனர்

வடக்கு மாகாண முதல்வரினதும் அமைச்சுக்களினதும் செயலர்களை அடிக்கடி மாற்றி குறுகிய காலத்துக்குள்ளேயே அவர் ஒரு காட்டுத் தர்பார் நடத்தத் தொடங்கிவிட்டார். வடக்கு மாகாணசபையின் புதிய நிர்வாகம் பொறுப்பேற்ற பின்னர், மாகாண கடற்றொழில் அமைச்சு இதுவரை மூன்று செயலர்களை கண்டுள்ளது. முதலமைச்சர் விக்னேஸ்வரனின் செயலராக, இருந்த அதிகாரி மாற்றப்பட்டு, மற்றொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறுகிய காலத்துக்குள் நிகழ்த்தப்பட்ட இந்த மாற்றங்கள், நிச்சயும் நிர்வாக வசதிக்கானதோ, தகுதிக் குறைபாடுகளினாலோ இடம்பெற்றதாக கொள்ள முடியாது. ஏனென்றால், குறிப்பிட்ட அந்த அதிகாரிகள் தான் இன்னமும் மாகாணசபைக்குள் முக்கிய பொறுப்புகளில் உள்ளனர்.

ஆனாலும், ஆளுநர் அடிக்கடி செயலர்களை மாற்றிக், காட்டுகின்ற விளையாட்டின் உட்பொருள், நான் நினைத்தால் எதையும் செய்ய முடியும் என்பதே.

முதலமைச்சரினது செயலரை மாற்றிய போதும், கடற்றொழில் அமைச்சின் இரண்டு செயலர்களை மாற்றிய போதும், மாகாண முதல்வருடனோ, குறிப்பிட்ட அமைச்சருடனோ, ஆளுநர் சந்திரசிறி ஆலோசனை நடத்தவில்லை. இது தான்தோன்றித்தனமான அவரது செயலை மேலும் வெளிச்சம் போட்டுக் காட்டியது. மாகாணசபைகள் சட்டத்தின் படி, அதிகாரிகளை நியமித்தல், இடம் மாற்றம் செய்தல், ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல், என்று சகல அதிகாரங்களுமே, ஆளுநரின் கையில் தான் உள்ளன. ஆனால், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் தான் அவர் அத்னைச் செய்யலாம். இந்த விடயத்தில் மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் ஆலோசனையை அல்லது பரிந்துரையை ஆளுநர் பெற்றுக் கொண்டாரா என்பது முக்கியமான கேள்வியாக உள்ளது. என்னதான் அதிகாரம் ஆளுநரிடம் இருந்திருந்தாலும், அதிகாரிகளை மாற்றம் செய்வது தொடர்பாக ஒரு ஆலோசனையை முதலமைச்சருடன் நடத்துவது தான் பண்பு. அத்தகைய பண்பை ஆளுநர் சந்திரசிறி கடைப்பிடித்திருக்கவில்லை.

### முதலமைச்சருக்கு அழைப்பில்லா ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

கடந்தவாரம், மாகாண ஆளணி மீளாய்வுக் கூட்டத்தை ஆளுநர் சந்திரசிறி கூட்டியிருந்த போதிலும், அதுகுறித்து, மாகாண முதல்வருக்கோ, அமைச்சர்களுக்கோ தெரியப்படுத்தப்படவில்லை. அதிகாரமெல்லாம் கிடக்கட்டும், மாகாண சபைக்குள் என்ன நடக்கிறது என்று கூடத் தெரியாதளவுக்கு, ஆளுநரின் தலையீடுகள் சபை நிர்வாகத்தில் அதிகரித்துள்ளன. அதுமட்டுமன்றி, ஆளுனரினதும், அரசினதும், ஏவலுக்குப் பணிந்து பழகிப்போன அதிகாரிகளும், வடக்கு மாகாணசபையை மதித்து நடக்கும் போக்கைக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆளுநர் தனது கொள்கைப் பிரகடன உரையில், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கு மாகாண முதலமைச்சரும், அந்தந்த மாவட்டத்தைப் பிரதிநித்துவம் செய்யும் மத்திய அரசின் அமைச்சரும் இணைத் தலைமை வகிப்பார்கள் என்று கூறியிருந்தார். அவரது உரை வெளியாகிப் பல நாள்களின் பின்னர், இணைத் தலைமை வகிக்க வேண்டிய முதலமைச்சருக்கு உரியவாறு தெரியப்படுத்தப்படாமல், அவரது ஒப்புதலைப் பெறாமலேயே, அரச அதிகாரிகள் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை ஏற்பாடு செய்தனர்.

### மஹிந்த சிந்தனைக்கு விடை கொடுப்பு

இந்தக் கூட்டம் முடிந்த பின்னர் தான், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக நியமிக்கப் படுவதாகவும், மஹிந்த சிந்தனையை செயற்படுத்தும் பொறுப்பினை திறப்பட வழிநடத்துமாறும் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு ஜனாதிபதி செயலகத்தில் இருந்து கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. வடக்கிலுள்ள மக்கள் மஹிந்த சிந்தனையை நிராகரித்து விட்டே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகத்தை தெரிவு செய்தனர். இந்தநிலையில், மஹிந்த சிந்தனையை நடைமுறைப்படுத்துமாறு, அரசு இட்ட கட்டளையை ஏற்க மறுத்துள்ளார் முதலமைச்சர் விக்னேஸ்வரன். இவற்றையெல்லாம் கூட்டிக்கழித்துப் பார்த்தால், வடக்கு மாகாணசபையை அரசு எப்படியெல்லாம் பழிதீர்க்கலாம் என்றே சிந்திக்கிறது என்பது புலப்படும். நல்லிணக்கத்துக்கான பச்சைக்கொடி காட்ட முயன்ற முதலமைச்சர் விக்னேஸ்வரனையும், அரசின் எதேச்சாதிகாரம், கிள்ளுக்கீரையாகவே நினைத்து விட்டது ஆச்சரியமானதல்ல. ஏனென்றால், தமிழர்கள் விடயத்தில் காலம்காலமாக சிங்கள இனவாத அரசுகள் செய்து வந்தது இதனைத் தான். அந்த நிலை இன்னமும் மாறவில்லை, அந்தநிலையை மாற்றுவதற்கான புறச்சூழல் உருவாகவில்லை என்பதே வடக்கு மாகாணசபைக்கு கொடுக்கப்படும் நெருக்கடிகள் உணர்த்தி நிற்கின்றன.

அரசு அதிகாரங்களைக் கொடுக்காமல் வடக்கு மாகாணசபையின் நிர்வாகத்தை முடக்க நினைத்தாலும், ஒட்டைப்பாத்திரமான 13ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம், சகல அதிகாரங்களையும் வடிகட்டினாலும் கூட, சர்வதேச அங்கீகாரம் என்ற முக்கியமான பலத்தை வடக்கு மாகாண சபை குறுகிய காலத்துக்குள் பெற்றுள்ளது. இந்த அங்கீகாரத்தை அரசினால் ஜீரணிக்க முடியவில்லை. மாகாணசபைகளுக்கு போதிய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளதாக, கருதிக் கொண்டிருக்கும் இந்தியா போன்ற நாடுகளுக்கு, வடக்கு மாகாணசபையின் அதிகாரங்களை பிடுங்கும் அரசின் முயற்சிகளைப் பார்க்கும்போது தான், பல உண்மைகள் புரியத் தொடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செலிங்கோ ஆயுட் காப்புறுதி நிறுவனத்தின் நெல்லியடிக் கிளையின் வாடிக்கையாளரான தியாகராசா சாந்தாதேவியின் மரண இழப்பீட்டுத் தொகையான 6 லட்சம் ரூபாவுக்கான காசோலையை மந்திகை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் டி.வினோதன் வழங்குகிறார். அருகில் கிளை முகாமையாளர் வி.பாஸ்கரன், சிரேஷ்ட விற்பனை நிறைவேற்று அதிகாரி கே.குகநேசன், கிளையின் விற்பனை நிறைவேற்று அதிகாரி வி.குகரூபன் ஆகியோர் உள்ளனர்.

# வடபிராந்தியத்தில் கொமர்ஷல் வங்கி 164 மில்லியன் ரூபா கடன் உதவி

## 86 மில்லியன் இன்னமும் மீளச் செலுத்தப்படவில்லை

கொமர்ஷல் வங்கியால் கடந்த வருடம் வடபிராந்தியத்தில் 164.7 மில்லியன் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 86 மில்லியன் ரூபா மீளச் செலுத்தப்படாமல் உள்ளது என்று வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் ரி.ரஜீவன் தெரிவித்தார்.

வடபிராந்திய வங்கி அதிகாரிகளுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வட மாகாண விவசாய அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது.

வட பிராந்தியத்தில் கடந்த வருடம் அனைத்து வங்கிகளிடம் இருந்தும் விவசாயிகளுக்கு 16 பில்லியன் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது. இந்த வருடம் 14 பில்லியன் ரூபா கடன் ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டுள்ளது என்ற தகவலை இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் கொமர்ஷல் வங்கியால் கடந்த வருடம் 13 கிளைகள் ஊடாக 164.7 மில்லியன் ரூபா கடனாக ஆயிரத்து 25 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் 655 பேர் 86 மில்லியன் ரூபா கடனை மீளச் செலுத்த முடியாது உள்ளனர். கிளிநொச்சி மாவட் டத்தில் 862 பேருக்கு 134 மில்லியன் ரூபா கடனாக வழங்கப்பட்ட நிலையில் 80 மில் லியன் கடன் மீளச் செலுத்தப்படவில்லை.

அத்துடன் வடமாகாணத்தில் விவசாயம், மீன்பிடி, சுய தொழில் உட்பட 3 ஆயிரத்து 868 பேருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த போர்க் காலத்துக்கு முன்னர் கடன்களைப் பெற்றவர்கள் நூறு வீதமானவர்கள் மீளச் செலுத்தியுள்ளனர். அந்தக் காலகட்டத்தில் வங்கிகள் மக்கள் மீது நம்பிக்கை கொண்டிருந்ததால் போருக்கு பின்னர் கடன்களை வழங்கினர். எனினும் பாதிக்கப்பட்ட மக்கள் சகல தேவைகளையும் மீளப்பெற வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் கடன்களைப் பெற்று அவ்வாறான தேவைகளை நிறைவேற்றுகின்றனர்.

எனவே வங்கிகளில் கடன்களை பெற்ற விவசாயிகள் மீளச் செலுத்துவதற்கு இதனால் பின்னடைவைச் சந்தித்துள்ளனர் - என்றார். (த-14)

# களனி கேபிள்ஸுக்கு தங்க விருது

இலங்கையின் முதல் தர இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல்கள் கேபிள்களை உற்பத்தி செய்யும் நிறுவனமான களனி கேபிள்ஸ் பிஎல்சி SLITAD மக்கள் அபிவிருத்தி விருதுகள் 2013 இல் தங்க விருதைத் தன்வசப்படுத்தியிருந்தது. முதல் தடவையாக இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்த விருதுகள் வழங்கும் வைபவம் இலங்கை பயிற்சி மற்றும் அபிவிருத்தி கல்வியகத்தின் (SLITAD) மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இலங்கையின் கூட்டாண்மை துறையை சேர்ந்த நிறுவனங்கள் தமது ஊழியர் குழாமை பயிற்சியளித்து அபிவிருத்தி செய்கின்றமையை ஊக்குவிக்கும் வகையில் முதல் தடவையாக இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த விருதுகளுக்காக தெரிவு செய்யும் செயற்பாடு 10 பிரிவுகளாக அமைந்திருந்தது. இதில், வர்த்தகக் கொள்கை, கற்றல் மற்றும் அபிவிருத்தி, மக்கள் நிர்வாகம், தலைமைத்துவம் மற்றும் நிர்வாகம், நிர்வாக சிறப்பு, மதிப்பளிப்பு மற்றும் கௌரவிப்பு, தொடர்பு மற்றும் அதிகாரமளித்தல், செயற்திறன் மதிப்பிடல் மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றம் போன்றவை இதில் உள்ளடங்கியிருந்தன.

தமது ஊழியர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அவர்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பாக அதிகளவு




கவனம் செலுத்தும் நிறுவனமாக களனி கேபிள்ஸ் பிஎல்சி திகழ்கிறது. எனவே, SLITAD மக்கள் அபிவிருத்தி விருதுகள் 2013 இல் தங்க விருதை தன்வசப் படுத்திக் கொள்ள நிறுவனத்துக்கு முடிந்துள்ளது.

களனி கேபிள்ஸ் பிஎல்சியின் மனித வளங்கள் பிரிவின் முகாமையாளர் கிஹான் விதானகமகே கருத்து தெரிவிக்கையில், 'களனி கேபிள்ஸை பொறுத்தமட்டில் மிகப்பெரும் வளமாக கம்பனியின் ஆளணி அமைந்துள்ளது.

கம்பனியின் அனைத்துச் சாதனைகளுக்குமான பெருமையை அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

எமது ஊழியர்களின் பிரத்தியேக வளர்ச்சி கருதி நாம் பயிற்சிகளை வழங்குவது தொடர்பாக அதிகளவு கவனம் செலுத்தி வருகிறோம். SLITAD விருது, களனி கேபிள்ஸை பணி புரிவதற்கு சிறந்த நிறுவனமாக தரமுயர்த்தியுள்ளது. எந்தவொரு நபரும் பணியாற்றுவதற்கு சிறந்த நிலையமாக இது அமைந்துள்ளது' என்றார். (த)

# தொழில் முயற்சியாளரை உருவாக்குகின்றது சன்சில்க்

சன்சில்க் ரமணி பெர்னாண்டோ ஹெயரா் அன்ட் பியுட்டி அக்கடமி, சிகையலங்காரம் மற்றும் அழகுக்கலை பராமரிப்புத் துறையில் புதிய தொழில் முயற்சியாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கிறது.

கடந்த 2005ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்வியகம் தற்போது 2013ஆம் ஆண்டிற்கான பட்டமளிப்பு விழாவிற்கு தயாராகிவரும் நிலையில், இதுவரை 3000 திறமை வாய்ந்த மாணவர்களுக்கு இந்தத் துறையில் பட்டம் பெறக்கூடிய வகையில் தமது கற்கைகளை வழங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக் கல்வியகத்தின் 9ஆவது வருடாந்த பட்டமளிப்பு நிகழ்வு டிசம்பர் மாதம் 10ஆம் திகதி Great Gatsby என்ற தொனிப்பொருளின் கீழ் இடம்பெறவுள்ளதுடன், 100இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு சிகை மற்றும் அழகுக்கலை பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த துறையில் மிளிர விரும்பும் இளம் பெண்கள் மற்றும் ஆண்கள் கற்கையை பயின்று உயர் திறமை கொண்ட தொழில் முயற்சியாளர்களாக பிரகாசிக்க முடியும்.

சன்சில்க் வர்த்தகநாமத்தின் மூலம் இதுவரை 200 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அன்றாட வீட்டு வேலைகளைச் மேற்கொண்டு வந்த மஹேஷி குணசிங்க தற்போது வெற்றிகரமான முயற்சியாளராக உருவெடுத்துள்ளார். சன்சில்க் ரமணி பெர்னாண்டோ ஹெயார் அன்ட் பியூட்டி அக்கடமியில் டிப்ளோமா கற்கையை பூர்த்தி செய்த மஹேஷி தற்போது கண்டியில் சொந்தமாக ஒரு சலூனை நடத்தி வருகின்றார். இக் கல்வியகத்தின் நேர்முக செயற் திட்டத்தின் மூலம் சன்சில்க் புலமைப்பரிசை இவர் பெற்றுக்கொண்டார்.

அவர் வாரத்தில் நான்கு தடவைகள் கண்டியிலிருந்து கொழும்பிற்கு காலை 4 மணிக்கெல்லாம் புறப்பட வேண்டியிருந்தது. ரயிலிலும், வகுப்பறையிலும் அதிக நேரத்தை செலவிட்ட மஹேஷி, விடா முயற்சியுடன் படிப்பைதொடர்ந்து தனது நேரத்தை முறையாகச் சமாளித்திருந்தார்.



கடந்த 2006ஆம் ஆண்டு Maheshi Salon and Spa என்ற பெயரில் வாடகை சலூனை அவர் ஆரம்பித்திருந்தார். அதன் பின்னர், சலூன் மூலம் உழைத்த பணத்தைக் கொண்டு அவ்வாடகைச் சலூனையே சொந்தமாக்கிக் கொள்ளவும் அவரால் முடிந்தது. இன்று அவருக்கு உதவியாக 5 பேர் பணிபுரிவதுடன், இன்று அவரது சலூன் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய கண்டியின் மிகப் பிரபல்யமான சலூனாக விளங்குகிறது.

# வரிக்கு முன்னரான இலாபமாக செலான் வங்கிக்கு ரூ.2.2 பில்லியன்

செலான் வங்கியானது, 2013 செப்ரெம்பர் 30ஆம் திகதியன்று முடிவடைந்த 9 மாத காலப்பகுதியில் வருமான வரிக்கு முன்னரான இலாபமாக ரூபா 2,269 மில்லியனைப் பதிவு செய்துள்ளது. இக் காலப்பகுதியில் வரிக்கு பின்னரான இலாபமாக ரூபா 1,536 மில்லியன் பெறப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டில் இதனோடு தொடர்புபட்ட காலப்பகுதியான 9 மாதங்களிலும் வங்கி பதிவுசெய்த ரூபா 1,598 மில்லியன்; வரிக்குப் பின்னரான இலாபத்துடன் ஒப்பிடுகையில் இது 3.9ூ சிறியதொரு வீழ்ச்சியாக காணப்படுகின்றது. இதேவேளை, 2013ஆம் ஆண்டின் 3ஆம் காலாண்டில் செலான் வங்கி ரூபா 534 மில்லியனை வரிக்குப் பின்னரான இலாபமாக பதிவு செய்திருக்கின்றது. கடந்த வருடத்தின் இதே காலாண்டில் இது ரூபா 638 மில்லியனாக காணப்பட்டது. LKAS / SLFRS ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக இடைக்கால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மெதுவடைந்த கடன் வளர்ச்சிப் போக்கு மற்றும் வட்டி வீதத்திலான துறைவாரியான அழுத்தம் என்பவற்றுக்கு மத்தியிலும், 2013 செப்டெம்பர் 30ஆம் திகதி முடிவடைந்த 9 மாதங்களில் செலான் வங்கியின் தேறிய வட்டி வருமானம் ரூபா 6,800 மில்லியனில் இருந்து ரூபா 6,847 மில்லியனாக அதிகரித்துள்ளது. கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் ரூபா 1,243 மில்லியனில் இருந்து ரூபா 1,542 மில்லியனாக 24% இனால் அதிகரித்துள்ளது. கடந்த பல வருடங்களில் மைய வங்கியியல் (Core Banking) செயற்பாடுகளில் செலான் வங்கி அடைந்து கொண்டுள்ள திடமான வளர்ச்சியை இது எடுத்துக் காட்டுவதாகவுள்ளது.

பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மேற்படி 9 மாத காலப்பகுதியிலும் செலவுக் கட்டுப்பாட்டு விடயத்தில் வங்கியானது குறிப்பிடத்தக்க கவனத்தை செலுத்திச் செயற்பட்டது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்**: நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப்படுவீர்கள். உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். சகோதர வகையில் நன்மை பிறக்கும். உற்சாகமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள்.

**இடபம்**: சிந்தனைத்திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் கலகலப் பான சூழல் ஏற்படும். பிள்ளைகளின் உடல் நலம் சீராக இருக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள்.

**மிதுனம்**: கணவன்-மனைவிக்குள் ஏற்றத் தாழ்வுப் பிரச்னை வந்து நீங்கும். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். சிலர் உதவுவதை போல் உபத்திரவம் தருவார்கள்.

**கடகம்** : துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். கணவன் -மனைவிக்குள் மகிழ்ச்சியுண்டு. விருந்தினர்கள், நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபம் குறையும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**சிங்கம்**: தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு காரியங்களைச் சாதிப்பீர்கள். குடும்பத்தினருடன் இருந்துவந்த கசப்புணர்வு நீங்கும். கையில் காசுபணம் தேவையான அளவு இருக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஒத்துழைப்பு உண்டு. வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.

**கன்னி**: பழைய நல்ல சம்பவங்களை நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் பெருகும். ஆடம்பரச் செலவுகளை தவிர்ப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும்.

**நாளை**

கார்த்திகை-23 திங்கட்கிழமை 09.12.2013
திதி: ஸப்தமி பி.ப.03.19 வரை
நட்சத்திரம்: சதயம் மு.இ.08.06 வரை
சுபநேரம்: 12.18 - 01.48 வரை
இராகுகாலம்: 07.48 - 09.18 வரை

**துலாம்**: ஆரவாரமின்றிச் சில வேலைகளை முடிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. வியாபார ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**விருச்சிகம்**: மனக்குழப்பங்கள் நீங்கும். நம்பிக்கைக்குரியவர்களின் ஆதரவு கிட்டு. தாய் வழி உறவினர்களால் ஆதாயம் உண்டு. பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத் தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**தனுசு**: அதிரடியாகச் செயல்பட்டு சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். பணவரவு உண்டு வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**மகரம்**: ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளைப் பார்க்க வேண்டி வரும். எந்த வேலையைமுதலில் முடிப்பது என்ற பதற்றம் இருக்கும்.

**கும்பம்**: குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. திடீர் பயணங்கள், செலவு ல் திணறுவீர்கள். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். வெளி உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள்.

**மீனம்**: இழுத்தடித்த காரியங்களெல்லாம் இனி முடிவுக்கு வரும். கணவன்- மனைவிக்குள் அன்னியோன்னியம் பிறக்கும். பிள்ளைகளின் நீண்ட நாள் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வீர்கள். அரசவேலைகளில் அனுகூலமான நிலை காணப்படும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | 1 | 7 | | 5 | 9 | 8 | 6 |
| | 6 | 4 | | | | | | |
| 9 | | 5 | | | | | 1 | |
| | 2 | | 5 | | 1 | 8 | | |
| | | | | 7 | | | | |
| | | 7 | 8 | | 2 | | 6 | |
| | 8 | | | 5 | | 2 | | 3 |
| | | | | | | 1 | 5 | |
| 3 | 5 | 9 | 2 | | 4 | 6 | | 8 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | 6 | 9 | 3 | 5 | 4 | 1 | 2 |
| 9 | 5 | 1 | 2 | 4 | 7 | 6 | 8 | 3 |
| 3 | 4 | 2 | 6 | 8 | 1 | 9 | 5 | 7 |
| 6 | 8 | 5 | 7 | 2 | 4 | 1 | 3 | 9 |
| 7 | 3 | 9 | 1 | 5 | 6 | 2 | 4 | 8 |
| 2 | 1 | 4 | 8 | 9 | 3 | 5 | 7 | 6 |
| 4 | 6 | 8 | 3 | 1 | 9 | 7 | 2 | 5 |
| 5 | 2 | 7 | 4 | 6 | 8 | 3 | 9 | 1 |
| 1 | 9 | 3 | 5 | 7 | 2 | 8 | 6 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டாங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**விற்பனைக்கு**
சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் (Love Lane) 4 ½ பரப்புக் காணி மலிவு விற்பனைக்கு
தொடர்பு: 077 109 2225

**காணி விற்பனைக்குண்டு**
சாவகச்சேரியில் கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 072 966 4616

**வாடகைக்கு**
உடுவில், மருதனார்மடச் சந்தியில் இருந்து 200மீ தொலைவில், மானிப்பாய் வீதியில், 5 அறைகள், 4குளியலறைகள் கொண்ட 3500 சதுரஅடி மாடி வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 750 6311

**சேவை** We Car Children's ஊனமுற்ற, மனநிலை பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மிகச்சிறந்த முறையில் படிப்பறிவுடன் பராமரிக்கப்படுவர். அத்துடன் முதியோர்களும் பராமரிக்கப்படுவர்.
தொடர்பு: 077 756 8349/011 305 3293

**உடனடியான தொழில்**
வருமானப் பிரச்சினையா? தொழில் தேடுகிறீர்களா? கவலையை விடுங்கள் எம்மிடம் கொழும்பை அண்மித்த பகுதிகளில் பிரபல்யமான தொழிற்சாலைகளான சொக்லேட்/ஜேம்/கோடியல்/பிஸ்கட் /PVC/பிளாஸ்டிக் பை /கோழி இறைச்சி போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி/லேபல்/பொதியிடல்/களஞ்சியப் படுத்தல் பிரிவுகளுக்கு 18-55 வயது ஆண், பெண் இருபாலாரும் தேவை. உணவு, தங்குமிட வசதியுடன் மாதாந்த 18,000/=, 25,000/=, 38,000/= சம்பளங்களுடன் உடனடி வேலை வாய்ப்பு.
தொடர்புகளுக்கு: 077 711 7661 (40588) (7.6.3)

FREE HOME - DELIVERY
LANKA PREMIUM DRINKING WATER
19 Lits
T.P : 021 720 1660
077 248 7487
174, Navalar Road, Jaffna.
Lanka Premium Pure Drinking Water

**வைத்தியம்**
சுவாமி ஆயுர்வேத ஆஸ்பத்திரி Home & Hotel Visit வசதி சம்பந்தமான, ஆண்களுக்கான பிரச்சனை மற்றும் அனைத்து நோய்களுக்கும் ... வியாதிகளுக்கும் ... வெள்ளவத்தை
பிரியா
0728 138 773
0777 204 921

**வாடகை**
Attached bathroom உடன் கூடிய அறைகள் வாடகைக்கு உண்டு. (ஒரு நாள் 500/=)
Hotel Villa City,
422 Galle Rd, Colo 6
இராமகிருஷ்ண வீதிக்கு அருகில்
0722 552 222

**கம்பனி உதவியாளர்கள் தேவை**
கல்வி அறிவு இல்லாமலும், இருப்பவர்கள் எல்லோரும் குளிர்பானம், பிஸ்கட், சொக்லட், டொபி தயாரிப்பு நிறுவனத்துக்கு லேபல், பொதி செய்வதற்கு எமது பிரிவிற்கு வயது 18-45 இடையில் ஆண், பெண் தேவை சம்பளம் 25000/- மேல் சாப்படும், தங்குமிட வசதி இலவசம்.
தொடர்பு :
077 403 1154/011 305 6242

**பதவி வெற்றிடம்** இலங்கையில் உள்ள உயர்நிலை பல்தேசிய நிறுவனத்தில் நிரந்தர வேலைவாய்ப்பு

RO இயந்திர தொழில்நுட்ப நிறைவேற்றுநர் - குறைந்தது அதே துறையில் இரண்டு வருட அனுபவம்.
RO தொழில்நுட்பவியலாளர் - ஒரு வருடத்துக்கு மேற்பட்ட அனுபவம் தேவை.

**சம்பளங்களும் கொடுப்பனவுகளும்**
★ சகல பதவிகளுக்கும் கவர்ச்சியான சம்பளம்
★ அடிப்படை சம்பளம் ரூ. 10,000/=இல் இருந்து 30,000/= வரை (அனுபவத்தைப் பொறுத்து)
★ மதிய உணவு கொடுப்பனவுகள்
★ மோட்டார் சைக்கிள் மற்றும் எரிபொருள் கொடுப்பனவு
★ கவர்ச்சியான தரகு பணம் மாதம் ரூ. 40,000/= வரை
★ ஆயுள், மருத்துவ காப்புறுதி ரூபா 3000,000/= (24 மணித்தியாலம்)
★ காலணிகள் மற்றும் சீருடைகள் இலவசம்
★ அடிப்படை கொடுப்பனவுகள் - வெவ்வேறு பகுதியின் அடிப்படையில்
★ கைபேசி இணைப்பு - கட்டணம் நிறுவனத்தால் செலுத்தப்படும்
★ முதல் நாள் தொடக்கம் EPF/ETF வழங்கப்படும்
★ போனஸ் - ஆண்டு இறுதியில் போனஸ்
★ தொடர் பயிற்சி மற்றும் மேலதிக கொடுப்பனவு



**நேர்முகத் தேர்வுக்கு பின்வருமாறு வருகை தரவும்**
➡ 10 டிசெம்பர் 2013 சுகததாச ஸ்போர்ட்ஸ் ஹொட்டல், ஜேதவனா வீதி, கொழும்பு-14 (DIMO வுக்கு அருகில்) மு.ப. 9.00 - 12.00 மதியம் வரை
➡ 12 டிசெம்பர் 2013 ஹொட்டல் நெல்லி ஸ்டார், இல.84, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா, பி.ப 1.00 - 3.00 மணிவரை
➡ 13 டிசெம்பர் 2013 ஹபரண ஓய்வு விடுதி, திருகோணமலை வீதி, ஹபரண. மு.ப. 10.00 - பி.ப 2.00 மணிவரை
மேல் குறித்த நாள்களில் சமுகமளிக்க முடியா[illegible] உங்கள் CV யை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.
E.mail: info@austalentnetwork.com

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**
Well maintained yamaha New Mate 50 blue colour Motor bike is for sale Price 75, 000/=
Phone:077 666 8975 (40945)(4.6.3)

**Lorry / Truck விற்பனை**
Asoklayland Truck 1112 18' feet half body - LH - xxxx 69500 km, TATA 709 14' 6" feet full aluminum body. LH-xxxx, 29950 km. உடன் விற்பனைக்கு.
(40943) (2.3.6) தொடர்பு: 0773659106

**மணமகள் தேவை**
யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1984 Engineer - Singapore மணமகனுக்கு நற்குணமுள்ள பொருத்தமான பட்டதாரி மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க் கின்றனர். ஆஸ்திரேலியா, கனடா PR உள்ள பட்டதாரியும் விண்ணப்பிக்கலாம்.
(40942) (2.3.6) தொடர்பு: 0710629995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மானிப்பாய் திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற சிறுவர் தின விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் இ.இராச யோகனை நிலையத் தலைவர் சிறீகுமார் வரவேற்றபோது... (ஒ-100)



வடமராட்சி கிழக்கு அம்பன் அமெரிக்க மிஷன் த.க.பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் பரிசில் வழங்குவதைக் காணலாம். (ஒ-8)






யாழ். சென் சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி எஸ்.எஸ். செபஸ்ரியன் 'கியூடெக்' நிறுவனப் பணிப்பாளர் றெக்னோ அடிகளார் மற்றும் பாடசாலை அதிபர் திருமதி இ.கிறிஸ்ரபெல் ஆகியோர் மண்டபத்துக்கு அழைத்து வரப்படுவதையும் அங்கு இடம்பெற்ற கலை நிகழ்வுகளையும் காணலாம். (ஒ)



யாழ். மாநகர சபை முன்பள்ளிச் சிறுவர்களின் கண்காட்சியும் கலை நிகழ்வுகளும் முன்பள்ளி திறந்த வெளி அரங்கில் நடைபெற்றன. சிறுவர்களின் நடன நிகழ்வைக் காணலாம். (ஒ-7)



மாணவர்களிடையே வாசிப்பை மேம்படுத்தும் நோக்குடன் கோண்டாவில் பொது நூலகத்தால் அண்மையில் புதிய வரவு நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டபோது நூலகர் கே.அனிதா நூல்கள் தொடர்பான அறிமுகத்தை வழங்கினார். (ஒ-14)





கோண்டாவில் நூலகத்தினால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூலக வலுவூட்டல் நிகழ்வாக ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட வாசிப்புப் போட்டியில் மாணவி ஒருவர் பங்கு பற்றுவதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் காணலாம். (ஒ-14)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை ஆசிரியர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.அ. ஸ்ரீகரன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். (ஒ-8)




விநாயக விரத பெரு விழாவை முன்னிட்டு நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலில் பக்தி அருளிசை நிகழ்வு கோயில் பிரதான மண் டபத்தில் நடைபெற்றது. தென்னிந்திய பிரபல பக்திப் பாடகர் பக்திமாமணி சாஸ்தாதா சன் குழுவினர் பக்தி அருளி சையை வழங்கினர். (ஒ)



தரம் 5புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் பணியாளர்களின் பிள்ளைகளைக் கௌரவித்து பரிசுகள் வழங்கப்பட்ட போது... (ஒ-8)



காரைநகர் ஊரி அ.மி.த.க. பாடசாலை வரலாற்றில் புலமைப் பரிசில் பரீட்சையில் ஒன்றாகச் சித்தியடைந்த 4 மாணவர்களுக்கு பாடசாலை சமூகம் நடத்திய பாராட்டு விழாவின் போது... (ஒ-250)




வலி. மேற்கு பிரதேச சபையின் சங்கானை பொது நூலக கட்டடம் கடந்த 9 வருடங்களாக கட்டிமுடிக்கப்படாத நிலையில் இருப்பதையும் நூலகம் தற்காலிக கட்டடத்தில் இயங்கி வருவதையும் காணலாம். (ஒ-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 52 மாணவர்களுக்கான கௌரவிப்பு மற்றும் பாராட்டு விழா அண்மையில் பாடசாலையின் பிரதம மண்டபத்தில் இடம்பெற்றபோது விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதையும் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (க-12)



கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தில் அமரர்கள் இ.நடராசா, ந.சுதாகரன் நினைவாக குடும்பத்தினர் அமைத்து வழங்கிய நுழைவாசலை கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.செல்வராஜாவுடன் இணைந்து குடும்பத்தினரும் திறந்து வைக்கின்றனர். (ஒ-18)



ஒட்டுசுட்டானிலுள்ள சின்னச் சாளம்பன். ஈசுவரன் வித்தியாலய மாணவர்களுக்கு அங்குள்ள கல் உடைக்கும் ஆலையின் உரிமையாளரால் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வின் ஆரம்பத்தில் அவர் மங்கல விளக்கை ஏற்றி வைக்கின்றார். (க-500)



சுத்தமான நீரை பருக வேண்டும் என்பதற்கு அமைவாக அண்மையில் வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயத்துக்கு ஓய்வு பெற்ற அதிபர் சி.விஸ்வலிங்கத்தால் அதிபர் நேசராஜாவிடம் தலா 8ஆயிரம் ரூபா பெறுமதியான மூன்று சுத்திகாப்பு நீர்த் தாங்கிகள் வழங்கிய நிகழ்வு. (ஒ-421)



கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரி வளாகத்தில் மரநடுகைத் திட்டத்தின் கீழ் மரம் நடப்படுகின்றது. (க-6)



கிளிநொச்சி முகாவில் அ.த.க.பாடசாலையின் இவ் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவின்போது கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் மங்கல விளக்கை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கின்றார். (க)



ஒட்டுசுட்டான் சிவன் ஆலய முன்றலில் முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் மரநடுகைத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கின்றார். (க-500)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மன்னார் நானாட்டான் நகர சபையின் முருங்கன் பொது நூலகத்துக்கான விருதினை நூலகர் மேரியன் வித்தியானந்தா, நகரசபைத் தலைவர் எ.ரி.அன்புராஜ் லெம்பேட் ஆகியோர் கலை கலாசார அமைச்சர் ரி.வி.ஏக்கநாயக்காவிடம் இருந்து பெற்றுக் கொண்டனர். (ஒ-14)



கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் வரவேற்கப்படுகின்றனர். (க-6)





கிளிநொச்சி மகாதேவா சைவச்சிறார் இல்லத்தில் இடம்பெற்ற [illegible] நிகழ்வின்போது ஆராதனை இடம்பெறுவதையும், கலந்து கொண்ட சிறார்களையும் காணலாம். (க)



வவுனியா சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலையில் புலமைப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா, வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வவுனியா கோட்டக்கல்வி அதிகாரி எம்.பி.நடராஜ் மங்கள விளக்கேற்றுகின்றார். (க-402)



அக்கராயன் கமநல சேவை நிலையத்தின் முன்பகுதி தடைசெய்யப்பட்டு வேலி அடைக்கப்பட்டுள்ளதால் அங்கு செல்லும் விவசாயிகள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் இணக்க சபையின் விசாரணை 3 வார காலத்துக்கு வேறு இடத்தில்

ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சை ஆரம்பமாவதால் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்று வந்த கோப்பாய் பிரதேச இணக்க சபை மேற்கொள்ளும் பிணக்குகள் விசாரணை இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் மூன்று வார காலத்துக்கு கோப்பாய் நாவலர் வித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்தச் சபையின் பிணக்குகள் விசாரணை இன்று ஞாயிற்றுக்கிழமை எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை, 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் நாவலர் வித்தியாலயத்தில் நடைபெறும் என்று பிரதேச இணக்க சபைத் தலைவர் இ.மயில் வாகனம் தெரிவித்தார்.

பரீட்சை முடிவுற்றதும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் வழமை போல கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பிரதேச இணக்க சபை பிணக்குகள் விசாரணை தொடர்ந்து இடம்பெறும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-8)

# புத்தகக் கண்காட்சி

புகழ் வெளியீட்டகத்தின் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9 மணி முதல் 6 மணிவரை நடைபெறவுள்ளது. (ஒ-400)

## கருத்தரங்கு

வன்னியில் இருந்து மீள்க்குடியமர்ந்த மற்றும்புணர்வாழ்வுபெற்று மீள்குடியமர்ந் தவர்களுக்கான கொடுப்பனவு குறித்த சுயதொழில் கடன் திட்டம் தொடர்பான ஒருநாள் கருத்தரங்கு நாளை திங்கட் கிழமைகாலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை கரவெட்டி பிரதேசசெயலகமாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புனர்வாழ்வுத்திணைக்கள அதிகாரிகள் இதில் கலந்து கொண்டு கடன் தொடர்பான கருத்துகளைவழங்கவுள்ளனர். நல்லூர், உடுவில், கோப்பாய், மருதங்கேணி பருத்தித்துறை சாவகச்சேரி பிரதேசங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள்இதில்கலந்துகொள்ள முடியும். கலந்து கொள்ளுபவர்கள் தமது அடையாள அட்டை, குடும்ப அட்டைகளுடன் கருத்தரங்குக்கு சமூகமளிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச செயலகப்பிரிவில் குறிப்பிட்ட வகை சார்ந்த 47 பேர்கள் உள்ளதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் நல்லூர்பிரதேசதிட்டமிடல் பணிப்பாளர், தத் தமது கிராம அலுவலர் களுடன் தொடர்பு கொண்டு கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார். (ந-7)

## விபத்தில் காயம்

சுன்னாகம் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் நேற்று முன் தினம் நடந்த வாகன விபத்தில் கோப்பாய் கல்வியியற் கல்லூரி முகிழ் நிலை ஆசிரியர் ஒருவர்படுகாயமுற்றார். காங்கேசன்துறை நோக்கிவந்த லொறி ஒன்றை நடு வீதியில் வைத்துத் திருப்ப முற்பட்ட வேளையில் பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்தவர் லொறியில்மோதுண்டுகையில் பலத்தகாயத்துடன்தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குகொண்டு செல்லப்பட்டார். விபத்தில் காயமடைந்தவர் சுன்னாகம் முட வேம்படியைச் சேர்ந்த [illegible] என்பவராவார். (ஒ-86)

---

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தையா தியாகராசா**
திதி:08.12.2013

மண்ணில் 19 ★ 08 ★ 1960
விண்ணில் 15 ★ 12 ★ 2007

ஆனதோ ஆறாண்டுகள் ஆறவில்லை துயரம் அப்பா!
கவலையின்றி வாழ வைத்தீர்கள்-இன்று
கவலையே வாழ்வானதப்பா! கண்ணீர் நதியினிலே
கரைசேரா ஓடங்களாய் நாம் இங்கே...
பாசமுடன் எமையெல்லாம் பக்குவமாய்
அழைத்திடுவீர்கள்
உங்கள் ஆசி வேண்டி நிற்கின்றோம் என்றும்...

அம்மன் ஹாட் வெயர்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு. (37600)(3.6.4)

குடும்பத்தினர்.

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15.04.1954 — மறைவு 11.12.2012

அமரர் **சின்னத்துரை பரமேஸ்வரி**



வருடங்கள் இரண்டு சென்றாலும் உன் நினைவுகள் எம்மைவிட்டு அகலவில்லை.

குடும்பத்தினர்.
நூல் நிலைய வீதி, கைதடி தெற்கு, கைதடி.

(40781) (7.6.3)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

**அமரர் குட்டியன் சின்னையா**



அன்னை மடியில் 10.08.1932 — இறைவன் அடியில் 08.11.2013

எத்தனை நாள்கள் சென்றாலும் உங்கள்
நினைவுகள் எங்களை விட்டு அகலவில்லை ஐயா!
உங்களை என்றும் நினைவு கூருகின்றோம்

கடந்த 2013.11.08 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தெய்வம் குட்டியன் சின்னையா அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (2013.12.08) ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம் மற்றும் அவரின் பிரிவுத் துயரில் பங்குகொண்டோருக்கும். கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும். தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோருக்கும். பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆதியாமலை, உடுப்பிட்டி. (4040)(4.3.6) குடும்பத்தினர்.

---

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வைத்தியர்
**திருச்சங்குநாதர் சோமசுந்தரம்**

தோற்றம் 24.06.1937 — மறைவு 18.11.2004

திதி: 08.12.2013

Dr.T.S.**விஜயன்** (மகன்).
(முன்னாள் யாழ். சிவன் கோயிலடி வைத்தியசாலை. கோப்பாய் பிரதேச செயலகம் முன்பாக உள்ள வைத்தியசாலை உரிமையாளர்)
சிலாபம்– 077 654 4338,077 772 7798

---

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **மாணிக்கம் சின்னராசா**
(திதி: 08.12.2013)

பிறப்பு 03.03.1945
இறப்பு 07.12.2005

ஆண்டுகள் எட்டு கடந்தாலும்
ஆறவில்லை – எம் துயரம்!
என்றும் உங்கள் நினைவில் வாழும்

"திரவியபவனம்"
மனோகரா, அல்வாய். (40906) (45.6.3)

குடும்பத்தினர்.

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி செலுத்தும் ஆராதனையும்

அமரர் **புவேந்திரா இராஜக்கோன்**



தோற்றம் 01.09.1941 — மறைவு 09.11.2013

கடந்த 09.11.2013 இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் புவேந்திரா இராஜக்கோன் அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அன்னாரின் வாழ்வுக்காக நன்றி செலுத்தும் ஆராதனையும் இன்று (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு எங்கள் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவுச்செய்தி கேட்டு நேரில் வந்து துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், அமெரிக்க சிலோன் மிஷன் குருமாருக்கும், ஏழாலை வடக்கு இரட்சண்ய சேனையினருக்கும், யாழ்/கத்தோலிக்க சபையினருக்கும், யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலய சமூகத்தினருக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவி புரிந்த அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் உள்ளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தபாற்கந்தோர் முன்பாக,
ஏழாலை வடக்கு, ஏழாலை.

குடும்பத்தினர். (40888) (7.6.3)

---

# என்றும் நீங்காத நினைவுகளுடன் 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **தியாகர் அருணாசலம்**
(நயினாதீவு)
திதி : பூர்வபக்க ஷஷ்டி
(08.12.2013)



தோற்றம் 03.02.1921
மறைவு 30.12.2011

அம்பிகை அடியவனாய்
தொண்ணூறு அகவை கண்டு
தூய அன்பினால் அனைவரையும்
அரவணைத்து வாழ்ந்திருந்து
நயினை அம்பாளின் தாள் சேர்ந்து
ஆண்டுகள் இரண்டு சென்றிடினும்
தங்களின் நிர்மலமான இதயத்தின் வெளிப்பாடுகளை நினைந்து
உங்கள் நிழல் என்றும் துணையிருக்க வேண்டி நிற்கும்.

117/4, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (40821) (7.6.3)

குடும்பத்தினர்.

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# ஓராண்டு நினைவலைகள்

அமரர் **சபாரத்தினம் கந்தையா**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
திதி: ஷஷ்டி 08.12.2013



பிறப்பு 14.02.1923 — இறப்பு 18.12.2012

ஆயிரம் பிறை கண்ட அன்புத்
தெய்வமே எம்மைப் பிரிந்து ஆண்டு
ஒன்று சென்றாலும்
உங்கள் நினைவலைகள் என்றென்றும்
எம்மை விட்டு அகலாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிள்ளைகள்.
108/1, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (40551)(3.6.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு 2014 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 09.12.2013 .தொடக்கம் 17.12.2013,பிற்பகல் 3.00 மணிவரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 18.12.2013 முற்பகல் 10.00 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 18.12.2013 மு.ப 10.30

1. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை **செயலாளர், கரைதுறைப் பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரை இட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 18.12.2013 முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறு பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு** என்ற முகவரிக்கு 18.12.2013 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேற்படி மீள் கேள்விக்கான கேள்விப்பத்திரங்கள் கோர விரும்புபவர்கள் 10.11.2013 ஆம் திகதிய உதயன் நாளிதழில் வெளியிடப்பட்ட கரைதுறைப்பற்று பிரதேசசபை,முல்லைத்தீவு 2014 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல் என்ற தலைப்பின் கீழ் தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய கீழ் காட்டப்பட்ட சந்தைகள், கோழி, மாடு, ஆடு இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்கான கேள்விகளுக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| இல | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT, NBT) நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (VAT, NBT) நீங்கலாக |
|---|---|---|---|---|
| | 01. முள்ளியவளை உப அலுவலகம் | | | |
| 1 | முள்ளியவளை பொதுச்சந்தை | 1,500.00 | 40,000.00 | 1,077,100.00 |
| 2 | தண்ணீரூற்று பொதுச்சந்தை | 1,500.00 | 50,000.00 | 1,744,200.00 |
| 3 | முள்ளியவளை மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 35,000.00 | 1,030,300.00 |
| 4 | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 40,000.00 | 1,115,000.00 |
| | 02. முல்லைத்தீவு உப அலுவலகம் | | | |
| 1 | முல்லைத்தீவு பொதுச்சந்தை | 1,500.00 | 50,000.00 | 1,425,100.00 |
| 2 | முல்லைத்தீவு மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 50,000.00 | 1,792,000.00 |
| 3 | முல்லைத்தீவு ஆட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 5,000.00 | 90,000.00 |
| | 03. செம்மலை உப அலுவலகம் | | | |
| 1 | அளம்பில் பொதுச்சந்தை | 1,000.00 | 5,000.00 | 30,000.00 |
| 2 | அளம்பில் மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 25,000.00 | 701,200.00 |
| 3 | குமுழமுனை மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 15,000.00 | 300,000.00 |
| 4 | குமுழமுனை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 18,000.00 |
| 5 | குமுழமுனை கருவாட்டுக்கடை | 1,000.00 | 5,000.00 | 18,000.00 |
| 6 | செம்மலை பொதுச்சந்தை | 1,000.00 | 5,000.00 | 62,000.00 |

**கரைதுறைப்பற்று பிரதேசசபை,**
**முல்லைத்தீவு**

சு.ரவீந்திரநாதன்,
செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை
முல்லைத்தீவு

09.12.2013. (C/14298)(2.6.3)

## பிரத்தியேக வகுப்பு

ஆங்கில பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியரால் தரம் 4-11 வரையான மாணவர்களுக்கு யாழ்., நல்லூர் பகுதிகளில் வீடு களிற்கு வந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

(40946)(4.6.3) தொடர்பு:077 911 5962

## சமையலாளர் தேவை

**கரந்தன் பகுதியில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றுக்கு சமையல் வேலை செய்வதற்குப் பணியாளர் தேவையாக உள்ளது. தங்கி நின்று பணியாற்றக் கூடிய கணவன் மனைவியாக இருப்பது விரும்பத் தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**தொடர்பு: 021 321 6449** (40838)(12.6.8)

**தொடர்பு கொள்ளவேண்டிய நேரம்: காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை.**

## நம்ப முடியாத விலைக்கழிவு

வாடிக்கையாளர் நலன்கருதி எதிர்வரும் ஜனவரி 20ஆம் திகதி வரை ஞாயிற்றுக்கிழமைகளிலும் வாடிக்கையாளர் சேவை இடம்பெறும்

பிரமாண்டமான காட்சியறை.

*புத்தகம் மற்றும் ஸ்ரேசனறி வியாபாரத்தில் என்றும் முன்னணியான நிறுவனம்*

எண்ண முடியாத பரிசில்கள்

குறிப்பிட்ட தொகைக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு அழகிய கோப்பு(பைல்) இலவசம். கையிருப்பு உள்ளவரை மட்டுமே.
முந்துங்கள்! வெல்லுங்கள்!

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (சி/14164)(7.6.3)

## தொழில் வாய்ப்பு

கிளிநொச்சி - அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்

**மேற்படி ஆலயத்துக்கு காரியாலய முகாமையாளருக்கான வெற்றிடம் உள்ளது. ஆர்வமுள்ளவர் மேற்படி முகவரிக்கு விண்ணப்பத்தைத் தபால் மூலம் அனுப்பவும்.**
**40 வயதுக்கு மேற்பட்டவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சார்ந்தவர்களும் விரும்பத்தக்கது.**
**சம்பளம் கலந்துரையாடித் தீர்மானிக்கப்படும்.** (37599)(2.3.6)

**கோ.பத்மநாதன்,** செயலாளர்.
**செ.செல்வரத்தினம்,** உபதலைவர்.
**அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம், கிளிநொச்சி.**



நீங்கள் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவரா?
கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றிருக்கிறீர்களா?
24 வயதுக்கு உட்பட்டவரா?

CISI
CHARTERED INSTITUTE FOR SECURITIES & INVESTMENT

ADB EKSP
Education for Knowledge Society Project

GATEWAY
CfICT

இலவசம்

கல்வி அமைச்சின்
செயற்திட்டத்தின் கீழ்
**முற்றிலும் இலவசமாக** வழங்கப்படும்
**புலமைப் பரிசில்கள்** பற்றிய
மேலதிக விபரங்களுக்கு....

# GATEWAY

347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 021 567 5555
01, நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி 02[illegible] 567 8444
55, பருத்தித்துறை வீதி நெல்லியடி, 021 5677606
கரடிப்போக்குச் சந்தி, கண்டி வீதி, கிளிநொச்சி 021 5674433

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி பிரதேச
செயலகத் திட்டமிடல் பிரிவில் கடமையாற்றும்
சந்திரசேகரம் ஸ்ரீஸ்கந்தராசா
அவர்களின் பாசமிகு தந்தையார்

### வேலுப்பிள்ளை சந்திரசேகரம்

06.12.2013 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தியதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது இரங்கலையும் ஆழ்ந்த அனுதாபங் களையும் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள் நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம், தென்மராட்சி. (சி/7601)(7.6.3)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்
தம்பிராசா சிறீசெல்வம் அவர்களின்
அன்புத் தாயார்

### திருமதி தங்கம்மா தம்பிராசா

அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம், வேலணை. (40953)(7.6.3)

## மரண அறிவித்தல்

### அவுறுகாம் பதுவைநாயகம்

(ஓய்வு பெற்ற அதிபர், செயலவர், முதியோர் சங்கம் நவாலி தெற்கு)



அரசடி வீதி நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அவுறுகாம் பதுவைநாயகம் நேற்று முன்தினம் (06.12.2013) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அவுறுகாம் - கிறிஸ்ரீனா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற சுகிர்தராணியின் அன்புக்கணவரும், அன்ரன் கிருபைநாயகத்தின் (ஆசிரியர் மன்/மூன்றாம்பிட்டி அ.த.க. பாடசாலை) அன்புத்தந்தையும் டெனிஸ் மேரியின் (நீதி மன்றச் சுருக் கெழுத்தாளர் மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்) அன்புமாமனாரும் டொனிக் கிறிஸ்ரினின் அன்புப்பேரனும் இம்மானுவேல், லூர்த்தம்மா, சலேற்றம்மா ஆகியோரின் சகோதரனும் மாகிறற்றம்மா, பரமேஸ்வரன், செல்வராணி (UK), சற்குணராஜா மற்றும் காலஞ்சென்றவர்களான செல்வராஜா, புஷ்பராணி, தேவராஜா, சகுந்தலராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி இரங்கற் திருப்பலி நாளை (09.12.2013) திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நவாலி சென் பீற்றேஸ் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்திற்காக நவாலி சென் பீற்றேஸ் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
ப. அன்ரன் கிருபைநாயகம் (மகன்)
T.P : 077 6272371

அரசடி வீதி, நவாலி தெற்கு.

## மரண அறிவித்தல்

### திருமதி ரூத் செல்வராணி இராசேந்திரம்



உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரூத் செல்வராணி இராசேந்திரம் 05.12.2013 வியாழக் கிழமை உடுவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான S.யோன்சின்னட்டி - அன்னம்மா தம்பதியரின் புத்திரியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் எலைஸ் பிரான்சிஸ் - சீதேவன் மேரி தம்பதியரின் மருமகளும், ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர் (O.I.C) ஆ.இராசேந்திரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சாமுவேல் (ஓய்வுபெற்ற அதிபர்), அல்பேட் (ஓய்வுபெற்ற அதிபர்), கென்றி (ஓய்வுபெற்ற அதிபர்) மற்றும் செல்லத்துரை (சிறைச்சாலை உத்தியோகத்தர்), ஜேசுதாசன் (ஓய்வுபெற்ற புகையிரத அதிபர்), திருமதி சிவசாமி இராசமலர் காலஞ்சென்றவர்களான ராஜேஸ்வரி, டானியல், கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசாத்திஅம்மா, இராசநாயகம், இராசதுரை, இராசலிங்கம், இராசசிங்கம், இராசகுலதேவி, நேசராசா, லங்கா ஆகியோரின் மைத்துனியும், வின்சன், செல்வராசா, திருமதி ரூபி அனுலா தவராசா (கனடா), விக்ரர் மனோகர் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், வில்சன் பிரபாகர் (பிரான்ஸ்), வில்சன் சுதாகர் (பிரான்ஸ்), சாம்சன் கிருபாகர் (லண்டன்), பிறின்சன் திவாகர் (பிரான்ஸ்), யொய்ஸ் (பிரான்ஸ்), லக்சன் சசிகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியம்மாவும், சாமுவேல் தவராசா (கனடா), வசந்தாதேவி, வசந்தா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும், பிரிட்டி சுமனா (கனடா), சேன் (கனடா), பிரபாலினி (கனடா), பிரசாலினி (கனடா), நிரோச் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சயன், நோபா, எயன்யோனா, டிலான், டியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (09.12.2013) திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நல்லடக்க ஆராதனை இடம்பெற்று, மல்வம் சேமக் கல்லறைத் தோட்டத் தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.

உடுவில் தெற்கு. (40937)(12)(3.6)

## உரும்பிராய்க்கு வருகை தந்த கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள்

முன்பள்ளிகள் தொடர்பான தேசிய கொள்கைத் திட்டமொன்றைத் தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த வியாழன் முற்பகல் 10.30 மணியளவில் உரும்பிராய் கிழக்கு செல்லப்பா சனசமூக நிலையம் மற்றும் முன்பள்ளி மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது.

கல்வி அமைச்சிலிருந்து வருகை தந்திருந்த உயர் அதிகாரிகள் ஜனாதிபதி செயலகத்தின் முன்பள்ளி ஆலோசகர் திருமதி பத்மினிரணவீர, கல்வி அமைச்சின் 'எல்லோருக்கும் கல்வி' செயற்றிட்ட பணிப்பாளர் திருமதி பத்ரா விதானகே, ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் வடமாகாணப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா மற்றும் யாழ். கல்வி வலய உயரதிகாரிகள் எனப் பலரும் இந்தநிகழ்வில் கலந்து கொண்டனர்.

செல்லப்பா முன்பள்ளியின் கற்றல் செயற்பாடுகளை அவதானித்ததுடன் முன்பள்ளிக் கல்வி அபிவிருத்தி தொடர்பாக இந்தப் பகுதி பெற் றோர் சனசமூக நிலைய உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களுடன் கலந்துரையாடிய குழுவினர், தமது பிள்ளைகளின் முன்பள்ளிக் கற்றல் செயற்பாடுகளில் இந்தப் பகுதிப் பெற்றோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்தனர். (ஞ)

## ஆபரண வடிவமைப்பு பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ. 08

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் ஏற்பாட்டில் நவீன ஆபரணங்கள் வடிவமைப்பு தொடர்பான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் யாழ். பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் கைவினைப் பொருள்கள் உற்பத்தியில் ஈடுபடுவோர், பாடசாலையில்இருந்து விலகிய மாணவர்கள் பங்குபற்றலாம்.

ஆர்வமுடைய மாணவர்கள் மாவட்ட காரியாலயம், கைத்தொழில் அபிவிருத்தி சபை, தேசிய வீடமைப்பு அதிகார சபை கட்டடம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். எனும் முகவரியுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற் கொள்ளலாம். (ந-14)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
ads@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சந்திரசேகரம்



காந்தியூர், புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சந்திரசேகரம் 06.12.2013 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், குமாரு-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இரத்தினத்தின் அன்புக் கணவரும் சிவராசன் (சுவிஸ்), சிறிஸ்காந்தராஜா (அபிவிருத்தி உதவியாளர் பிரதேச செயலகம், சாவகச்சேரி), சிவதர்சினி (ஆசிரியை யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித் துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரதி, புவிதா (ஆசிரியை, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), செந்தூரன் (சமுர்த்தி அ/தி உத்தியோகஸ்தர் பிரதேச செயலகம், மருதங் கேணி) ஆகியோரின் அன்பு மாமனாரும், பொன்னம்மாவின் அன்புச் சகோதரனும், கிருஸ்ணபிள்ளை, சோமசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தாரு கேசன், ஆருதி, வேணுகேஷன், அர்ச்சயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காந்தியூர்,
புலோலி தெற்கு, புலோலி. (40039)(7.6.3)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா தம்பிராசா



சரவணை கிழக்கு, மயிலப்புலத்தைப் பிறப்பிடமாகவும் 25, மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா தம்பிராசா 05.12.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி -தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிராசாவின் பாசமிகு மனைவியும், பத்மா (ஆசிரியை, யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை), திருச்செல்வம் (சுவிஸ்), நந்தகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற சிறிகாந்தன் மற்றும் கௌசலாதேவி, சிறிசெல்வம் (ஆசிரியர், யா/ வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும், முருகதாஸ் (சாரங்கா நகை மாடம்), பாமகேதினி (சுவிஸ்), ரூபராணி (சுவிஸ்), சந்திரலிங்கம் (ஞானா களஞ்சியம்), துஷாந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் நல்லூர்) ஆகியோரின் அன்பு மாமியும், துளசி (முகாமைத்துவ உதவியாளர், கல்வி அமைச்சு, வடமாகாணம்), தனுஜா (A/L 2013 யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கஜானன் (சுவிஸ்), ஆருதி (சுவிஸ்), நிதுஜன் (தரம்-4 மாணவன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), அபிஷானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் தம்பு, இராசம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான யோகராசா, தங்கம்மா, செல்லம்மா, இராசம்மா மற்றும் கந்தசாமி, சந்திரகாந்தா, மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

25, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி. (40924)(7.6.3)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி பரம்சோதி சிவகுருநாதர்



தெல்லிப்பழை, கொல்லங்கட்டியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய், சங்குவேலி யை வசிப்பிடமாகவும் தற்போது இல.112, கந்தசாமி கோயில் வீதி, திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரம்சோதி சிவகுருநாதர் அவர்கள் 05.12.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் சிவகுருநாதர் (ஓய்வுபெற்ற நில அளவை உதவி அத்தியட்சகர்) அவர்களின் அன்பு மனைவியும், தெல்லிப்பழை Dr.செல்லப்பா-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், மானிப்பாய் சண்முகம் - இளையப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், யசோதா (கனடா) காலஞ்சென்ற சிவபாலன் மற்றும் வாசுகி (கனடா), அனுஷியா (ஆசிரியை-தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி), தேவகி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரீஸ்கந்தன் (கனடா), தர்மராஜன் (கனடா) ஜனகன் (ஆசிரியர் தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி), ஜெயமனோகரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும், கஜன், கஜானி, சரண்யா, சாரங்கன், ஆதித்யா, சுஜீவன், விபூஷனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சிவசோதி நாகமணி (கனடா), மலர் சோதி தில்லையம்பலம் (மருதனார்மடம்), ஜெயசோதி (மருதனார்மடம்), காலஞ்சென்ற ராமச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவக்கொழுந்து, சிவசம்பு (கனடா), சாம்பசிவம்(கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 08.12.2013 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக திருகோணமலை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

026 222 0473,
077 196 3836 (40941)(3.6.4)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

எல்லா வகையான பழைய காகிதாதிகள், புத்தகங்கள், கொப்பிகள், காட்போட், பிளாஸ்ரிக் என்பன மொத்தமாக தேவை.

தொடர்பு: (I/14307)(10.14) 0774 180 185, 0719 102 313


# ஊசி மூலம் மருந்தேற்றி உயிரை மாய்க்க முயற்சி

தென்மராட்சி, டிசெ.8

களைநாசினியை ஊசி (சிறிஞ்) மூலம் உடலில் ஏற்றிய நபர் உடல் வீங்கிய நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் தனியார் மருந்தகத்தில் ஊசி மருந்து ஏற்றும் 'சிறிஞ்'மூலம்களைநாசினியை கை, கால்களில் ஏற்றி புதிய பாணியில் உயிரை மாய்த்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இதன் பிரதி பலனாக உடலின் சில பகுதிகளில் திடீரென வீக்கம் ஏற்பட்டது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவருக்கு சிகிச்சை வழங்குவதற்காக விசாரணைகளை மேற்கொண்ட போது ஊசி மூலம் நஞ்சு மருந்து ஏற்றியமை தெரியவந்தது. சத்திரசிகிச்சை உபகரணங்கள், ஊசி மருந்து, சிறிஞ் போன்றவை வைத்தியத்துறையுடன் சம்பந்தப்பட்டவர்கள் தவிர்ந்த ஏனையோருக்கு விற்பதில் தனியார் மருந்தகங்கள் மக்கள் நலன் கருதவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ந-9)


## மத்திய கிழக்கில் உடனடி வேலை வாய்ப்பு

10 நாள்களுக்குள் பயணம்

QATAR (நெஸ்லே வோட்டர்)

- ★ விற்பனை விநியோகஸ்தர்கள் 45,000/= இற்கு மேற்பட்ட சம்பளம் 95 பேர்
- ★ உற்பத்தி தொழிலாளர் 45,000/= இற்கு மேற்பட்ட சம்பளம் 60 பேர்
- ★ A/C டெக்னீசியன் 52,000/= இற்கு மேற்பட்ட சம்பளம் 04 பேர்
- ★ சாரதிகள் 72,000/= இற்கு மேற்பட்ட சம்பளம் 55 பேர்
- ★ வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர் 100,000/= இற்கு மேற்பட்ட சம்பளம் 05 பேர் (ஆண்/பெண்)

கடந்த 16.11.2013 யாழ் மாவட்ட செயலகத்தினால் யாழ் மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட தொழிற்சந்தையில் கலந்துகொண்டு பயன்பெற்றோர் அதிகம் அதிகம்.....

2ஆம் கட்ட நேர்முகப் பரீட்சை இம்மாதம் 10, 11ஆம் திகதிகளில்

பதிவுகளுக்கு முந்துங்கள் ....
தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதி இலவசம்

அரச அங்கீகாரம் பெற்றவர்கள் PV72052 LL2502

(40819)(10.6.3)

T.P.No: 077 843 6475
021 221 7085
Email: rifraajaffna@gmail.com
www.rifraa.com

தொடர்புகளுக்கு: Branch Office
Rifraa International (Pvt) Ltd,
No: 95, Muslim College Road,
Jaffna. Sri Lanka.

## யாழ் மக்களுக்கு அருமையான வரப்பிரசாதம்

நீங்கள் கறுப்பாக இருக்கின்றீர்களா? உடல் பருமனா? கவலை வேண்டாம்!!!



இதோ வந்துவிட்டது
**New Whitening Cream**

எப்படிப்பட்ட கருமையையும் இல்லாது ஒழித்திடும். கரும்புள்ளி, பரு, வடுக்கள், சுருக்கம் என்பவற்றை நீக்கி முகப்பொலிவுக்கு Day/Night/Body/Face Pack/Soap இன்னும் பல.

விலை 2500/=

இருபாலாருக்கும் ஏற்றது 100% Herbal

மற்றும் உடல் எடை ஒரு மாதத்தில் 5-10 Kg வரை குறைக்கலாம் Diet Chat Free

ஒரே தடவையில் Facialலில் அருமையான வித்தியாசம்

அனைத்து Facial உம் உண்டு

(C/13766)(10.6.3)

பதிவுகளுக்கு முந்துங்கள்: 071 673 3292



10th Anniversary & Pre- School Graduation 2003 - 2013

BRITISH BUSINESS COLLEGE CONGRATULATES OUR PAST PRE- SCHOOL & NURSERY STUDENTS WHO HAVE SUCCESSFULLY PASSED THE YEAR 5 SCHOLARSHIP EXAMINATION IN 2013

BELOW ARE SOME OF THE TOP STUDENTS IN 2013

British BUSINESS COLLEGE — Where Students Come First

**Congratulations**



S. Theyvanthy | S. Sathurthika | S. Suvetha | M. Thibiya



T. Kugashanth | R. J. Kishanthy | T. Thilaksan | R.Bavishikaran



P. Pirabash | R. Makieban | J. Jerun Kingston | S. Vaishnavi



Poorvaja | N. Tharun | R. Vaishnavi | S.Kukashambavi

கடந்த 10 வருடத்தில் யாழ் குடா நாட்டில் அமைந்துள்ள எமது பதினொரு வளாகங்களிலும் கல்வி கற்று வெளியேறியுள்ள 8000 மாணவர்களில், இலங்கையிலும், வெளிநாடுகளிலும் இன்று பிரபல பாடசாலைகளில் கல்வி செயற்பாடுகளிலும் ஏனைய கல்வி சார் செயற்பாடுகளிலும் முன்னிலையில் திகழ்ந்து கொண்டிருக்கும் எமது ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு அத்திவாரம் இட்டுக்கொடுத்த பெருமையுடன் British Business College தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றது.

BRITISH BUSINESS COLLEGE ,Temple Road, Jaffna. Tel : 077 3627055 / 021 2225796

## சிறுநீரகம் தேவை

34 வயதுடைய O+ குருதி வகையைச் சேர்ந்த ஒருவருக்கு சிறுநீரகம் தேவைப் படுகிறது. தர விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு : 077 666 0422 (40955) (7.6.3)

## காணி விற்பனைக்குண்டு

நல்லூர் கோயிலுக்கு அண்மையில் வீட்டுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

(40952)(12.3.6) தொடர்பு: 077 365 8321

## வீடு வாடகைக்கு

வவுனியா, இறம்பைக்குளத்தில் மொட்டை மாடி, வாகனத் தரிப்பிட வசதிகளுடன் அழகிய மாடி வீடு வாடகைக்குண்டு. பகுதியாகவும் எடுக்க முடியும். வாடகை பேசித் தீர்மானிக்கலாம். 395/122, ஜோசப்வாஸ் லேன், இறம்பைக்குளம், வவுனியா.

தொடர்பு : 071 512-8126 (40954) (7.6.3)

## வாகனம் விற்பனைக்கு

கொழும்பு-யாழ்ப்பாணம் 87 ROUT உடன் காலை நேர ரைம் உடன் 54 ஆசனம் கொண்ட RUBY BODY ASHOCK LEYLAND பஸ் விற்பனைக் குண்டு. கைக்குக் கொடுக்க வேண்டிய பணம் 28 இலட்சம். மிகுதி 108,000 X 19 மாதம் கட்டுக் காசு. தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம். தொடர்பு : 077 775 3897 (40954) (7.6.3)

## தவறிவிட்டது

ஜோசேப்பு அனோஸ் என்பவருடைய தே.அ.அட்டை (861583937V), சாரதி அனுமதிப்பத்திரம், வரிப் பத்திரம், வங்கிப்புத்தகம் என்பன நல்லூர் வீதியில் ஓட்டோவில் இருந்து தவறிவிட்டன. கண்டெடுத்த வர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்க.

(40947)(12.3.6) தொடர்பு: 077 037 6174

## வேலையாள்கள் தேவை

ஆர்.எஸ்.ஞானப்பிரகாசம் கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு

வேலையாள்கள் தேவை

01. தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்
02. வெளிக்கள உத்தியோகத்தர்கள்

சுய விவரங்களை 15.12.2013 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய முகவரி: (40940)(2.3.6)

32, நக்கா வீதி, யாழ்ப்பாணம்.

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

பொமேரியன் நல்லின நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

(40965)(10.14) தொடர்பு: 077 4873 253

## NEW SCIENCE HALL JAFFNA

2014 A/L
விடுமுறைகால வகுப்பு
PHYSICS
ELECTRICITY
MR.G. பிரபா
MON, TUE, WED, THU, FRI
3.00 - 5.00 pm
ஆரம்பம் - 09.12.2013
MONDAY 3.00 PM (I/14309)(10.14)

## K.S.Y.அம்பாள் கட்டட ஒப்பந்தகாரர்

கட்டட நிர்மாண வேலை, பூரணமாக நீர்க்குழாய் பொருத்தல், மின்இணைப்பு, தச்சுவேலை அனைத் தும் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். வடமாகாணத்தில் எப்பகுதியிலும் (தீவுப்பகுதி, வன்னிப் பகுதி உட்பட) அரச அங்கீகாரம்பெற்ற ஒப்பந்தகாரர்.

(40937)(12.3.6) தொடர்பு: 077 403 4160/075 096 4061

## தையல் பயிற்சி வகுப்பு

கொழும்பில் பயிற்றுவிக்கும் தையல் ஆசிரியையினால் 6th Batch சிறந்த விளக்கத்துடன் இலகுவான முறையில் துணியிலே கீறி வெட்டித் தைக்கும்முறை வயது வித்தியாசமின்றிப் பயிற்றப்படும். சாறிபிளவுஸ், சல்வார் (வேலைக்குச் செல்பவர்களுக்கு சனி, ஞாயிறு காலை 9-1 மணிவரை, திங்கள் - வெள்ளி 9-1 மணிவரை) மற்றவர்களுக்கு, அத்துடன்Skirt,Blouse, Nighty, சட்டை பயில விரும்புபவர்கள் 12ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். 14ஆம் திகதி ஆரம்பம்.

(F/14171)(12.3.6) தொடர்பு: 077 929 7474
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

## இலகு ஆங்கிலக் கல்வியும்

விஞ்ஞானம், சுகாதார கல்வி (ஆங்கில மொழி மூலம்/தமிழ் மொழி மூலம்) மேற்படி பாடங்களைக் கற்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். தனியாகவும், குழுவாகவும் கற்பிக்கப்படும்.

தொடர்பு : 077 490 4100 (40954) (7.6.3)

## கணிதம்/விஞ்ஞானம்

ஆங்கிலமொழி, தமிழ்மொழி மூலம் 6இல் இருந்து GCE. O/L வரை ஆங்கிலமொழி மூல பட்டதாரி ஆசிரியரால் மிகச் சிறப்பாக தனிப்பட்ட முறையில் ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படும். பிரபல கல்லூரிகளில் கற்பித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆசிரியர், பெற்றோர்கள் மட்டும். (40752) (7.6.3)

தொடர்பு : 077 242 3400, 077 887 1217

## சோதிடநிலையம்

உள்நாட்டு, வெளிநாட்டு ஜாதக குறிப்புகளை நுட்பமாகக் கணித்து விரிவான பலன் களுடன் எழுதிக்கொள்வதற்கு.

தொடர்பு: சோதிடர் T.V.பாலா,
இல.05, கோட்டைக்காடு லேன்,
பலாலி றோட், கோண்டாவில்.
077 297 1167 (40960)(12.3.6)

# Baby Mother Care Stationary
## பேபி மதர் கெயா ஸ்ரேசனரி



மாபெரும் மலிவு விற்பனை

எதிர்வரும் 2014 ஆவது புத்தாண்டை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான அனைத்து வகை அப்பியாசக் கொப்பிகள், எழுது கருவிகள், கொப்பிகளுக்கான ஸ்ரிக்கர் வகைகள், அலுவலகங்களுக்குத் தேவையான காகிதாதிகள் மற்றும் பிறந்த, பிறக்கப் போகின்ற குழந்தைகளுக்குத் தேவையான பொருள்கள் அத்தோடு அழகுசாதனப் பொருள்கள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

(40958)(10.6)

இல.430, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ் நிலையம் முன்பாக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு துப்புரவுப் பணி

துணுக்காய் , டிசெ.8

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு 20 கிராம அலுவலர் பிரிவுகளிலும் துப்புரவுப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

துணுக்காய் பிரதேச செயலகம், துணுக்காய் பிரதேச சபை, சுகாதார வைத்திய அதிகாரி பணி மனை, மல்லாவி பொலிஸ் நிலையம் என்பவற்றின் பணியாளர்கள் இணைந்து கடந்த 29 ஆம் திகதி தொடக்கம் இந்தத் துப்புரவுப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்களும் இதில் அதிகளவு ஈடுபடுவதைக் காண முடிகின்றது. தற்போது பெய்துவரும் மழையினால் நுளம்புகளின் பெருக்கம் இங்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. இவற்றை இனம் கண்டு அழிக்கும் நடவடிக்கைகள் தேறாங்கண்டல், மங்கை நகர், அனிஞ்சியன் குளம், 1 ஆம் யூனிட் ஆகிய பகுதிகளில் இடம் பெற்று வருகின்றன.




இது தொடர்பாக துணுக்காய் பிரதேச சபையினர் ஒலி பெருக்கி மூலமாக அறிவித்தல் வழங்கி வருகின்றனர்.

(க-415)

# ‘வாழ்க்கைக்கு ஆங்கிலம்’ ஆசிரியருக்கு செயலமர்வு

வவுனியா, டிசெ. 8

வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கான " வாழ்க்கைக்கு ஆங்கிலம்" என்ற தலைப்பிலான செயலமர்வு கடந்த 13 ஆம் திகதியில் இருந்து 10 நாள்கள் ஆசிரிய நிலைய முகாமையாளர் எஸ். பரஞ்சோதி தலைமையில் இடம்பெற்றுள்ளது.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் வாழ்க்கையில் சுமுகமாக ஆங்கிலம் பேசும் ஆற்றலை வளர்க்கும் நோக் குடனும் 2016 ஆம் ஆண்டில் கல்வி திட்டத்தில் 80 வீதப் புள்ளிகளுக்கான எழுத்துப் பரீட்சைக்கும் 20 வீத புள்ளிகளுக்கான வாய் மொழி மூலம் பரீட்சைக்கும் மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கில் இச் செயலமர்வு நடைபெற்றுள்ளது. இதில் ஆசிரியர்கள் 243 பேர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றுள்ளனர்.

கட்டம் கட்டமாக இப்பயிற்சி செய லமர்வு வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. அன்ரன்சோமராஜா சான்றிதழ் களை வழங்கிவைத்தார். (ஜ-402)



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வன்முறைக

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் தமது கடப்பாடுகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும். மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்கள் குறித்தும் மோசமான குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் பதிலளிக்கும் வகையில் நம்பகரமான நீதிப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் அமெரிக்கா நீண்டகாலமாகக் கோரி வருகின்றது.

ஊடக சுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் தொடர்பான கட்டுப்பாடுகள் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்தும், சட்டத்தின் ஆட்சி சிதைக்கப்படுவது, மத, சிறுபான்மையினருக்கு எதிரானவன்முறைகள் என்பன குறித்தும் நாம் தொடர்ந்து கவலை கொண்டுள்ளோம்.

மனித உரிமை ஆர்வலர்கள் பழி வாங்கும் நடவடிக்கைகள் தொடர்வது குறித்தும் கரிசனை கொண்டுள்ளோம். வெளிப்படையாக இவை முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டிய தேவை உள்ளது - என்றார். (த-5)

### சனசமூக

யின் பின் வைக்கப்பட்டிருந்த பெட்டி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. அதில் துப்பாக்கி ரவைகள் இருப்பதைக் கண்டு கிராம அலுவலர் ஊடாகப் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

அங்கு வந்த சுன்னாகம் பொலிஸார் ரவைகளை மீட்டதோடு கிராம அலுவலர் மற்றும் சனசமூக நிலைய நிர்வாகத்தினரையும் அழைத்து விசாரணைக்கு உட்படுத்தினர்.

பொதியில் இருந்து சுமார் முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-86)

### மன்னாரில்

(வயது-55) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் இவர் தெப்பம்' ஒன்றில் தொழிலுக்குச் சென்றுள்ளார்.

இதன் போது பலத்த காற்றுக் காரணமாக தெப்பம் கவிழ்ந்ததில் கடலில் மூழ்கி இவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தெப்பம் கடலில் மிதப்பதைக் கண்ட சக மீனவர்கள் குறித்த நபரை மீட்டு சிலாபத்துறை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்த்து பின்னர் மன்னார் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை சிலாபத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஜ-12)

### கோடரியால்

ழந்தார். இதன்போது படுகாயமடைந்த தந்தை தொடர்ந் தும் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் குறித்து சம்பவ இடத்தில் கைரேகைப் பதிவோ அல்லது மோப்பநாய் மூலமாகத் தேடுதலோ எதையும் பொலிஸார் மேற்கொள்ளவில்லை என்று உயிரிழந்த இளைஞனின் உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது குறித்து இதுவரை எவரையும் கைது செய்யவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உடுவில் லவ்லேனில் கடந்த புதன்கிழமை நள்ளிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த சண்முகநாதன் யதுஷன் (வயது - 20) என்ற இளைஞனே சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். அவரது தந்தையான செல்லத்துரை சண்முகநாதன் (வயது - 54) தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இளைஞனின் தாயாரான நாகேஸ்வரியும் (வயது - 48) கொள்ளையரின் தாக்குதலில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருந்தார்.

ஆயுதங்களுடன் வீடு புகுந்த நான்கு பேரே இந்தத் தாக்குதலில் ஈடுபட்டனர். இதன் பின்னர் அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இவ்வாறு கொள்ளை முயற்சியில் ஈடுபட்டவர்கள் சிங்களத்தில் உரையாடினர் என்று உறவினர்கள் கூறுகின்றனர். இது குறித்துப் பொலிஸார் உரியவாறு விசாரணை நடத்தவில்லை என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (த-4)

### இன அழிப்பை

வேலியூடாக அப்பகுதிகளைப் பார்வையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து யாழ். நகரில் மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் கலந்துரையாடல் நடத்தினர். அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரனுடனும் சந்திப்பு நடத்தினர்.

இந்தச் சந்திப்புக்களின் போதே மேற்படி விடயங்கள் சுட்டிக் காட்டப் பட்டுள்ளன.

கடந்த இரண்டு ஆண்டுகளும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு எதிராக இரண்டு பிரேரணைகள் சமர்பிக்கப்பட்டன. இந்தப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு அதில் சில விடயங்களில் இலங்கை அரசு மீது கேள்வியெழுப்பப்பட்டது.

இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு இலங்கை அரசு தன்னைத் தயார்படுத்தி வருகின்றது. இதற்காகவே இங்கு கணக்கெடுப்புக்கள்.விசாரணை ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இதன் உண்மைத் தன்மை பற்றிச் சொல்வதற்கு பாதிக்கப்பட்ட தரப்பாகிய எங்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதில்லை என்று இதன்போது அவர்களுக்கு எடுத்து விளக்கப்பட்டது.

ஐ.நா கூட்டத் தொடரில் நாங்கள் கலந்துகொண்டு உண்மை நிலைமை தெரிவிக்க முடியாது. உங்களால் சமர்பிக்கப்படும் பிரேரணையில் எழுப்பப்படும் கேள்விகளுக்கு இலங்கை அரசே பதில் வழங்குகின்றது. அதற்குப் பொய்யான தயார்ப்படுத்தல்களையும் அரசு செய்கின்றது.

தற்போது நாடளாவியரீதியில் போர்க்கால இழப்புத் தொடர்பில் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்தக் கணக்கெடுப்புக்கள் எந்த வகையிலும் உதவப் போவதில்லை. தமிழ் மக்கள் போரில் குடும்பம் குடும்பமாக கொல்லப்பட்டனர். அவர்கள் இந்தக் கணக்கெடுப்புக்குள் உள்ளடக்கப்படவில்லை.

அவர்களின் உறவினர்கள் கூடத் தகவலை வழங்க முடியாத நிலை இருக்கின்றது. இவ்வாறானதொரு நிலையில் உயிரிழப்புக்கள் தொடர்பில் எவ்வாறு உண்மையான தகவல் பெறப்படும். மாறாகப் பொய்யான குறைந்தளவான உயிரிழப்புக்கள் தொடர்பான தகவல்கள் மட்டுமே கிடைக்கப் பெறும்.

இதனூடாக இனவழிப்பு இடம் பெறவேயில்லை என்பதை காண்பிப்பதற்கு அரசு முயல்கின்றது. அத்துடன் நீங்கள் (அமெரிக்கா) தனித்து 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் மட்டும் இடம்பெற்றதைப் பார்க்கக் கூடாது. தமிழர் தாயகப் பகுதியில் 1983 ஆம் ஆண்டிலிருந்தே போர் இடம் பெற்று வருவதை நினைவில் கொள்ள வேண்டும் என்று ஒரே குரலில் அமெரிக்கக் குழுவிடம் அனைவரும் எடுத்துரைத்தனர். (த-5)

### பிரேரணையில்

வரை தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்கவில்லை. இனியும் தாமதம் காட்டாமல் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கப்பெற்றால் தான் தமிழ் மக்களால் வாழ முடியும். இல்லாவிடின் தமிழ் மக்கள் இந்த நாட்டில் வாழ முடியாத சூழ்நிலை தான் ஏற்படும். தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் திட்டமிடப்பட்ட ரீதியில் அபகரிக்கப்படுகின்றன. வலி. வடக்கில் இராணுவத்தினரால் தமிழ் மக்களின் காணிகள் முகாம்கள் அமைப்பதற்காக அபகரிக்கப்பட்டுள்ளன. 23 வருடங்களாக அந்த மக்கள் தமது சொந்த நிலங்களுக்குத் திரும்ப முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

தமிழ் மக்களுக்கு பொருளாதார ரீதியாக நெருக்குதல்கள் கொடுத்தும் சிங்கள குடியேற்றப் பரம்பலை ஏற்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எமது மக்களின் வாழ்வாதாரம் முழுவதையும் இராணுவம் கைப்பற்றியிருக்கின்றது. இதனால் வர்த்தக நடவடிக்கைகளுக்காக மக்கள் காணிகளை வங்கிகளில் அடகு வைக்கின்றனர். அதற்குரிய பணத்தைச் செலுத்த முடியாமல் போகின்றபோது அவை ஏலம் விடப்படுகின்றன. அதை வாங்குவதற்குத் தமிழ் மக்களிடம் பணம் இல்லை. அதனைத் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் வாங்குகின்றனர். இங்கு குடியேறுகின்றனர். இதுவும் சிங்கள மயமாக்கலின் ஒரு பகுதியே.

எங்கள் மக்களின் காணிகளில் இராணுவ முகாம் அமைத்து இராணுவத்தை தங்க வைக்கின்றனர். இராணுவத்தினர் வடக்கில் குறைக்கப்படாமையால் சிவில் விடயங்களிலும் தலையீடு செய்கின்றனர். அத்துடன் இங்கு தங்கியுள்ள இராணுவத்தினரின் குடும்பங்களும் எங்கள் நிலங்களில் மெல்ல மெல்ல குடியமர்த்தப்படுகின்றன. நாளடைவில் எங்கள் மண்ணில் எங்களைச் சிறுபான்மையினராக்கும் முயற்சியே இது.

இவ்வாறான சிங்களமயமாக்கல், இராணுவமயமாக்கலினால் தெற்குக்கும், வடக்குக்கும் இடையேயான நல்லிணக்க இடைவெளி அதிகரித்துச் செல்கின்றது. இது தொடருமேயானால் தமிழ் மக்களால் இந்த நாட்டில் வாழ முடியாத நிலைதான் ஏற்படும்.

இனியும் தாமதிக்காமல் தமிழ் மக்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வுபெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் ஊடாகவே நாங்கள் இந்த மண்ணில் வாழ முடியும். வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டதன் ஊடாக நாம் சந்தோசமடைய முடியாது. அதிகாரம் முழுவதும் மத்திய அரசிடமும், ஆளுநரிடமுமே உள்ளது. அதிகாரங்களை மாகாண முதலமைச்சரிடம் பகிர்ந்தளிக்க வேண்டும்.

தனித்துப் போர்க் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகிய விடயங்களுடன் மாத்திரம் நின்று கொள்ளாமல் தமிழ் மக்களின் மேற்படி அடிப்படை, அரசியல் பிரச்சினைகளுக்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலும் பிரேரணை கடுமையானதாக அமைய வேண்டும் என்று அமெரிக்கக் குழுவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (த-5)

### மக்களின்

அவர்கள் இந்த மோசடியில் ஈடுபட்ட இரண்டு பேரைக் கைது செய்தனர்.

கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்று தன்னை அந்த இடத்தில் அறிமுகப்படுத்திய கஜபாகு என்பவரும் நாவற்குழியைச் சேர்ந்த தேவி என்று அழைக்கப்படும் பெண் ஒருவருமே இந்த மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:

கைதடியில் வடக்கு மாகாண சபைக் கட்டடம் அமைந்துள்ள இடத்துக்கு முன்னால் உள்ள செல்வாபுரம் பகுதியிலேயே நேற்று இந்த மோசடிச் சம்பவம் இடம்பெற்றது.

தேவி என்றழைக்கப்படும் பெண் அந்த இடத்தில் காணி பெற்றுத் தருவதாகக் கூறி பலரிடம் பணம் பெற்றுள்ளார். இதனை கஜபாகு என்பவரிடம் கொடுத்து அவர் மூலமாக இந்தக் காணி மோசடி நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள மக்கள் பல வருடங்களாக குடியமர்ந்து வசித்து வருகின்றனர். அவர்களின் காணிகளையே வெளியாருக்கு விற்பனை செய்வதற்கு இந்த இருவரும் முயன்றுள்ளனர்.

கைதடி வீட்டுத் திட்டச் சங்கம் என்ற பெயரிலேயே காணிகளை விற்பனை செய்வதற்கு இவர்கள் முயன்றுள்ளனர். ஆயினும் அவ்வாறான பெயரில் சங்கம் எதுவும் இல்லை என்பது தெரியவந்துள்ளது.

கைதடி வீட்டுத் திட்டச் சங்கத்தின் அலுவலகம் கொழும்பில் தான் உள்ளது என்று கூறி இருவரும் அந்த மக்களுடன் முரண்பட்டுள்ளனர்.

அங்குள்ள ஒரு சனசமூக நிலையத்தில் வைத்து இருவரும் நேற்றுப் பதிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அங்குள்ள மக்கள் இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச் சந்திரனின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். அவர் யாழ். மாவட்ட அரச அதிபர், தேசிய வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள் ஆகியோருடன் தொடர்பு கொண்டு இது குறித்து விசாரித்தார். அவ்வாறான எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்று அரச அதிபரும், வீடமைப்பு அதிகார சபையினரும் தெரிவித்தனர்.

இதனையடுத்து சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் இந்த இருவரையும் கைது செய்தனர்.

அங்குள்ள காணிகளைப் பகிர்ந்தளிக்குமாறு இந்த இருவருக்கும் அதிகாரமளித்தது யார் என்பது தெரியவில்லை. இதன் பின்புலத்தில் தீய சக்திகள் ஏதாவது இருக்கலாம் என்று சந்தேகப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச் சந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து விசாரணை முன்னெடுக்கப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(த-4-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எவ்.ஏ.கிண்ண ஆட்டம் இன்று

யாழ்ப்பாணம்.டிசெ.8
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டமொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணிக்கு திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இதில் செம்மலைஉதய சூரியன் விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்துதிருகோணமலை ஈஸ்ரேன் ஈகிள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)





கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் கடந்த வாரம் இடம்பெற்ற வடக்கு மாகாண சபையின் 4ஆவது வர்ண இரவு நிகழ்வில் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான தேசிய மட்டக் கபடிப் போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்ற கிளிநொச்சி சிவநகர் அ.த.க.பாடசாலை அணியின் கௌரவிக்கப்பட்ட வீராங்கனைகள் விருந்தினர்களுடன்..... (த-23)

## அரையிறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம்.டிசெ.8
யாழ்.உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையியே நடத்தும் தலைவர் கிண்ணத் துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் முதலாவது அரை இறுதியாட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## வென்றது அண்ணா ஸ்ரார்

யாழ்ப்பாணம், டிசெ.8
யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டமொன்றில் அண்ணா ஸ்ரார் அணி வெற்றி பெற்றுள்ளது.
இந்த ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## சென்.யூட்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.8
முல்லைத்தீவு 591 ஆவது இராணுவப் படைப்பிரிவு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று சனிக்கிழமை அலம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென்.யூட்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.
நேற்றுக் காலை இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.யூட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளம் பறவை விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் சென்.யூட் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



# 'மைலோ' கிண்ண ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகள்

வலி.வடக்கு, டிசெ.8
'மைலோ' வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாண மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினால் நெஸ்லே லங்கா பிறைவேட் நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட லீக்குகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட் டித் தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வடமராட்சி இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள் வருமாறு:
வல்வை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும் அல்வாய் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் வல்வை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் பெற்றி பெற்றுள்ளது.
உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகத்துக்கும் கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டிகளில் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுள்ளது.
இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகத்துக்கும் வடமராட்சி விண்மீன் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டிகளில் விண்மீன் விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. (த-23-86)



வடமாகாண சபை அமைச்சுக்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்ட பிரதம செயலாளர் அணியினரைப் படத்தில் காணலாம். (த-23)

## யாழ். நகர் அணிகளுக்கு கரம், கரப்பந்துப் போட்டி

யாழ்ப்பாணம்.டிசெ.8
கொய்யாத்தோட்டம் கலைச் சுடர் சனசமூக நிலையம், நிலையத்தின் 37 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு யாழ்.மாநகர சபைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டம், கரம் (இரட்டையர்) போட்டிகளை நடத்தவுள்ளது.
மேற்படி போட்டிகளில் பங்கு கொள்ள விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது சனசமூக நிலையத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (த-23)

# நான்கு இலக்குகளால் வென்றது ஜொனியன்ஸ்

வலி.வடக்கு, டிசெ.8
யாழ்ப்பாணம் நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கு இடையே லீக் முறையில் நடத்தி வரும் 20/20 கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 4 இலக்குகளால் வெற்றி பெற்றது.
கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.
முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம் 19.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கோகிலதாஸ் 26 ஓட்டங்களையும், டிலோசன் 24 ஓட்டங்களையும், ஜனந்தன் 15 ஓட்டங்களையும், அஜித் 12 ஓட்டங்களையும், பிரணவன், சரண்ராஜ் தலா 11 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 13 ஓட்டங்களும் பெறப்பட்டன.
ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த லவேந்திரா 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், யதுசன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 9 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், [illegible] தன் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், பிரந்தாபன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.



பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 19.3 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.
இதில் விதுசன் 35 ஓட்டங்களையும், அன்புஜன் 31 ஓட்டங்க ளையும், லவேந்திரா 21 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 14 ஓட்டங்களும் பெறப்பட்டன.
கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ரஜித் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ரவிசங்கர் 3.3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றத்துடன் 22 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், கபிலன், ஜனார்த்தன் முறையே 16, 18 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள். (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையால் தப்பிய தீவுகள்

நியூசிலாந்து சென்றுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி, மூன்று போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. முதல் டெஸ்ட் டுனிடினில் நடந்தது.



நியூசிலாந்து அணியுடனான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி மழை குறுக்கிட்டதால் தப்பிப் பிழைத்தது. மழையி னால் நேற்றைய இறுதி நாள் ஆட்டம் பாதியில் கைவிடப்பட சமநிலையில் ஆட்டம் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

நியூசிலாந்து சென்றுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி, மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. முதல் டெஸ்ட் டுனிடினில் நடந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி, தனது முதலாவது இன்னிங்ஸிற்காக 9 இலக்குகளை இழந்து 609 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்துவதாகத் தெரிவித்தது. துடுப்பாட்டத்தில் ரெய்லர் 217, பிரெண்டன் மக்கலம் 113 ஓட்டங்களைக் குவித்தனர். பந்து வீச்சில் பெஸ்ட் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.


பதிலளித்து ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி சொதப்பலாகத் துடுப்பெடுத்தாடி 213 ஓட்டங்களுக்குள் சுருண்டது. துடுப்பாட்டத்தில் சந்தர் போல் 76, டரன் பிராவோ 40 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சவுத்தீ 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

396 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 'பலோ ஒன்' நிலைக்கு மேற்கிந்தியத்தீவுகள் தள்ளப்பட்டது. இரண்டாவது இன்னிங்ஸில் அந்த அணி சிறப்பான ஆட்டத்தைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தியது.

கன்னி இரட்டைச் சதம் விளாசிய டரன் பிராவோ மேற்கிந்தியத்தீவுகள் அணியை பலப்படுத்தினார். நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்ட நிறைவில் 6 இலக்குகளை இழந்து 443 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றைய ஐந்தாம் நாள் ஆட்டம் ஆரம்பித்து சிறிது நேரத்திலேயே மேற்கிந்தியத்தீவுகளின் இலக்குகள் தகர்த்தெறியப்பட்டன. டரன் பிராவோ 218, சமி 80 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப இரண்டாவது இன்னிங்ஸ் 507 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது.

112 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற வேகத்துடன் களமிறங்கிய நியூஸிலாந்து அணிக்கு மேற்கிந்தியத்தீவுகள் அணி அதிர்ச்சி கொடுத்தது. ஆரம்ப இலக்குகள் வேகமாக சரிக்கப்பட்டது. இறுதியில் நியூசிலாந்து அணி 4 இலக்குகள் இழப்புக்கு 79 ஓட்டங்கள் எடுத்த போது மழை குறுக்கிட ஆட்டம் நிறுத்தி வைக்கப்பட்டன. தொடர்ந்து மழை நீடித்ததால், 5 ஆம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இதனையடுத்து ஆட்டம் சமநிலையில் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது. ஆட்ட நாயகனாக நியூஸிலாந்தின் ரெய்லர் தெரிவானார். (5)





இறுதியில் நியூசிலாந்து அணி 4 இலக்குகள் இழப்புக்கு 79 ஓட்டங்கள் எடுத்த போது மழை குறுக்கிட ஆட்டம் நிறுத்தப்பட்டது.

# பயிற்சி போதாதுதான் ஆனால் தோல்விக்கு காரணம் அதுவல்ல

**டோனி**



போதுமான பயிற்சிகளின்றி ஆட்டங்களில் பங்குபற்றுவது கடினமானது என்று இந்திய அணியின் தலைவர் மகேந்திர சிங் டோனி தெரிவித்துள்ளார். ஆனால் அதனையே காரணமாகக் குறிப்பிட விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 ஒருநாள் சர்வதேசப் போட்டி, 2 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது. இதில் முதலாவது ஒருநாள் சர்வதேச ஆட்டத்தில் இந்திய அணி 141 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

இதில் இந்திய அணியின் பந்துவீச்சாளர்கள் ஓட்டங்களை விட்டுக் கொடுத்ததோடு, துடுப்பாட்ட வீரர்களில் அணித்தலைவர் மகேந்திரசிங் டோனி தவிர ஏனையோர் ஓட்டங்களைப் பெறத் தவறியிருந்தனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மகேந்திரசிங் டோணி, இந்தத் தொடருக்கு முன்னதாக இந்திய அணி தென்னாபிரிக்காவில் பயிற்சிப் போட்டியில் பங்குபற்றாதது இந்திய அணிக்கு பிரதிகூலமாக அமைந்தது என்ற போதிலும், தொடருக்கான அட்டவணை ஏற்கனவே வெளியிடப்பட்ட நிலையில், மன ரீதியாக இந்தத் தொடருக்காகத் தயாராகி இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

தற்போதைய காலங்களில் சர்வதேசப் போட்டி வருடம் முழுவதும் விளையாடப்படுகின்றன எனக் குறிப்பிட்ட மகேந்திரசிங் டோனி, இதன் காரணமாக போதுமான பயிற்சிப் போட்டியில் பங்குபற்றி, ஒரு தொடருக்காக முழுமையாகத் தயாராகுவதற்கு முடிவதில்லை எனக் குறிப்பிட்டார். (5)

# இந்தியா திருப்பியடிக்கும்

## எதிர்பார்க்கும் டீ வில்லியர்ஸ்



தென்னாபிரிக்காவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி தனது முதலாவது ஒருநாள் ஆட்டத்தில், படுதோல்வியடைந்துள்ள போதிலும், இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெற்றுக் கொள்ள முயற்சிக்கும் என தென்னாபிரிக்க அணியின் தலைவர் ஏபி.டி.வில்லியர்ஸ் தெரிவித்துள்ளார். முதலாவது ஆட்டத்தில் வெற்றிபெற்றதன் காரணமாக 3 போட்டி கொண்ட தொடரை வெற்றி கொள்வது நிச்சயம் என்றாகிவிடாது எனக் குறிப்பிட்ட ஏபி.டி.வில்லியர்ஸ், ஏராளமான கடின உழைப்புத் தேவைப்படுவதாகக் குறிப்பிட்டார்.

அடுத்த ஆட்டம் இடம்பெறவுள்ள டேர்பன் மைதானம் இந்திய அணிக்குச் சாதகமானதாக அமையும் எனக் குறிப்பிட்ட ஏபி.டி.வில்லியர்ஸ், அதன் காரணமாக அந்த ஆட்டத்தில் வென்று தொடர் நிலையைச் சமப்படுத்திக் கொள்ள இந்திய வீரர்கள் நிச்சயமாக முயற்சிப்பார்கள் எனக் குறிப்பிட்டார்.

இந்திய அணியின் பந்துவீச்சு வரிசை மோசமானது அல்ல எனக் குறிப்பிட்ட ஏபி.டி.வில்லியர்ஸ், ஆனால் முதலாவது ஆட்டத்தில் இந்திய அணியின் பந்துவீச்சாளர்கள் முதல் 10 பந்துப் பரிமாற்றங்களில் சிறப்பாகப் பந்து வீசியிருக்கவில்லை எனவும், அது தங்கள் அணிக்கு தன்னம்பிக்கையை வழங்கியதாகவும் குறிப்பிட்டார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

---

தரம் 6 முதல் 8 வரை
ஆங்கில மொழி மூலமான
## பிரத்தியேக வகுப்புக்கள்
கணிதம்/விஞ்ஞானம்/புவியியல்/
குடியுரிமை/சுகாதாரம்
ஆகிய பாடங்கள் பிரபல ஆசிரியரால்
உங்கள் வீடுகளுக்கு வந்து
கற்பிக்கப்படும். (40938)(4.6.3)
தொடர்பு:075 544 5421

---

## அன்றும் இன்றும் என்றும் ஐடியல் அக்கடமி
சீரணிச்சந்தி, சண்டிலிப்பாய்.
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (பாரதி பதிப்பகம் முன்)
**தரம் 6 முதல் O/L வரை**
ஆரம்பம்: 09.12.2013 திங்கள்

| யாழ்ப்பாணம்: | சண்டிலிப்பாய்: |
|---|---|
| 9.30 a.m | 2.30 p.m |

மாணவர்களாலும் பெற்றோர்களாலும் அழைக்கப்படுகின்ற
*No:1* கல்வி நிறுவனம்
கணித ஆசானும் நிர்வாகியும்
V.N.பத்மநாதன் (40939)(4.6.3)

---

## சொற்ப நாள்களுக்கு மட்டுமே இச்சலுகை
★HOLLAND, டென்மார்க், இத்தாலி, போலந்து விசேட கட்டணச் சலுகையுடன்
★கனடா கையிலுள்ள காசே போதும்
7 நாள்களும் திறந்திருக்கும்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட், 175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090 www.thisaivisa.com (4105)(4.3.6)

---

## LONDON METROPOLITAN COLLEGE
LONDON METROPOLITAN COLLEGE
மாணவர்கள் பூரணமான ஆங்கில மொழியாற்றல் திறமையை எய்துவதற்கு வழிகாட்டிவரும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

**IELTS**
ACADEMIC & GENERAL
Duration: 48 hrs Week/ Week ends
- எம்மிடம் visa செய்யும் மாணவர்களுக்கு இலவச IELTS Classes
- முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
- IELTS 5.5-7.5 Band பெறுவதற்கான உத்தரவாதம்
- British Council Special Trained Lecture Panel

**City & Guilds A1 A2 B1 B2**
Duration: 48 hrs Week/ Week ends
- UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
- இதுவரை நடந்த பரீட்சையில் 100% சித்தி.
- காலவரையறையற்ற சான்றிதழ் பெறமுடியும்.
- ESOL, SESOL பரீட்சைகளை தனித்தனியாக தோற்ற முடியும்.

**Certificate in SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick learning programme)
Duration: 60 hrs Week/ Week ends
- ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்து கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- தொழில் புரிவோர், மாணவர்களுக்கான தனிப்பட்ட பிரிவுகள் ஆரம்பம்.

**DIPLOMA IN ENGLISH**
Duration: 3 Months Week/ Week ends
Writing - 60Hrs Reading - 48Hrs
Listening - 48Hrs Speaking - 48Hrs
Be a power speaker INTENSIVE COMMUNICATION PROGRAM
- தொழில்தேடுவோர், தொழில்புரிவோர், A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்துகொள்வதற்கான கற்கைநெறி.
- Speaking, Reading, Listening, Writing ஆகியன விசேட செயன்முறை மூலம் விரிவாக கற்பிக்கப்படும்.
- மாணவர்கள் தமது தேர்ச்சிக்கேற்ப தொடர்ச்சியாக Advanced Dip. In English இனை எம்மிடமே கற்க முடியும்.
- கற்கைநெறி முடிவில் சர்வதேச தரத்திலான சான்றிதழ் வழங்கப்படும்.

**Weekdays: 09.12.2013 | 12.12.2013 || Weekends: 08.12.2013 | 14.12.2013**
அனைத்து கற்கைநெறிகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம். தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்
#197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

---

## German Language Academy
ஜேர்மன் மொழியும் இலகு வழியும் ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் ஜேர்மன் தூதரகத்தினால் நடத்தும் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு ஜேர்மனியில் பல வருடங்கள் வசித்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது. வேறு எங்கும் இல்லாதவாறு மிகக் குறைந்த கட்டணத்துடன் பரீட்சைகள் ஆரம்பமாகும்.
No.23, Palaly Road, Jaffna. 077 970 7322 (40784)(12.3.6)

---


## மலேசியா நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு
(3 Years Contract (Work Permit) Furniture Factory மரத்தளபாட உற்பத்தி உதவியாளர் Helpers -Nos 20 அதி உயர் சம்பளம் +OT+ மேலதிக உற்பத்திக்கு Commission 3வருட முடிவில் கை நிறைய சம்பளத்துடன் தொழில் ஒன்றையும் கற்றுக்கொள்ள அரியதோர் சந்தர்ப்பம் வயதெல்லை 22 - 38 ( ஒரு மாதத்துக்குள் பயணம் விரையுங்கள்)
உங்கள் Passport சகிதம் எதிர்வரும் 7 ஆம் திகதி இல. 24 Station Road வவுனியா Lanka Voice இலும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் Hospital வீதி ஆசிர்வாதம் ஒழுங்கையில் அமைந்துள்ள Green Grass Hotel இலும் காலை 9.00 மணி முதல் பி.ப. 1.00 மணி வரை உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
வீட்டுப்பணிப்பெண்களும் உடன்தேவை. ( 2 Years work permit செய்து கொடுக்கப்படும்)
தொடர்பு: Lanka Voice 075 0650084, 024 5615610 (40981)(3.6.4)

---

## கணிதம்
A.K.பரிந்தன்
தரம் 6 முதல் O/L வரையான பிரத்தியேக வகுப்புக்கள்
T.P: 077 188 2518 (40940)(4.6.3)

---

Signature
The Achiever's Choice



## தேசத்தின் கம்பீரமான அடையாளச் சின்னமாகிய "சிக்னேச்சர்"
மார்கழி 20ஆம் திகதி யாழ் நகரில் காலடி வைக்கின்றது.

20 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை 15% விசேட தள்ளுபடி

கார்கில்ஸ் சதுக்கம்,
420, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.

---

## சுந்தர்சன் நிறுவனத்தின் வருடாந்த மாபெரும் மலிவு விற்பனை
**14.12.2013 முதல் 22.12.2013 வரை**




10,000/- இற்கு மேல் கொள்வனவு செய்யும் [illegible] 50 பேருக்கு 175,000/- பெறுமதியான பரிசில்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி


உதயன் 08.12.2013 ஞாயிறு சிறப்பிதழ்




# கரைந்து கலையும் உயிர்கள்

யாழ். குடாநாட்டில் நடப்பது பற்றிய அதிர்ச்சி அறிக்கை

பக்கம் 9



பக்கம் 02

## நீதி வேண்டும்




பக்கம் 20

## திகட்டத் தொடங்கும் சிரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றெக்சியனின் கொலைக்கான காரணத்தை கூறும் முக்கிய சாட்சிக் கடிதத்தை அவரது சகோதரி றெஜீனா நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

# அண்ணன் கொலைக்கு நீதி வேண்டும்


## றெக்சியனின் சகோதரி உருக்கம்

சரவணையிலிருந்து அன்ரன்

தோழர் ரஜீவ் என அழைக்கப்படும் தானியேல் றெக்சியனின் கொலை விசாரணையில் திடீர் திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது, கொலைக்கு முன்பாகவே அவர் எழுதி வைத்திருக்கும் ஒரு கடிதம். பற்றுச்சீட்டு ஒன்றின் இருபுறங்களிலும் அவசரமாக எழுதப்பட்ட அந்தக் கடிதம் றெக்சியனின் சகோதரியால் ஊர்காவற்றுறை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பொலிஸாரின் விசாரணையில் கணிசமான முன்னேற்றத்தை ஏற்படுத்த இந்தக் கடிதம் உதவியதாகக் கூறப்படுகின்றது. கடிதத்தில் தனது சாவுக்கு யார் காரணமாக இருக்கக்கூடியவர்கள் என்ற விவரத்தை பெயர்களுடன் றெக்சியன் குறிப்பிட்டுள்ளார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியால் (ஈபிடிபி) மேற்கொள்ளப்பட்ட சகோதரப் படுகொலை என்ற வர்ணிப்பைப் பெற்றுள்ள இந்தக் கொலை, தனிப்பட்ட குடும்பத்தகறாறு காரணமாக ஏற்பட்டது என்று பொலிஸ் கூறுகின்றபோதும் இது விடயம் தொடர்பாக றெக்ஷயனுக்கும் ஈபிடிபியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல் எனப்படும் கந்தசாமி கமலேந்திரனுக்கும் இடையில் பிணக்கு, முரண்பாடு இருந்தது என்ற விடயம் அமைச்சரும் அந்தக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவுக்குத் தெரிந்தே இருந்தது என்று கூறப்படுகின்றது.

இதனால் பொலிஸார் இந்தக் கொலையை சாதாரண குடும்பத் தகராற்றினால் நிகழ்த்தப்பட்டது என்ற கோணத்தில் மட்டும் பார்க்காமல், கட்சியின் உள்பிணக்குக் காரணமாக ஏற்பட்டதா என்ற கோணத்திலிலும் தீவிரமாக ஆராய வேண்டும் என்ற குரல்கள் ஓங்கிக் கேட்கின்றன.



றெக்சியன்

### போராளி றெக்சியனின்

தமிழர்களின் விடுதலைக்காக எனப் போராடப் புறப்பட்ட அப்பாவி இளைஞர்களில் ஒருவர் றெக்சியன். அதே வேகத்துடன் ஈழ மக்கள் புரட்சி கர விடுதலை முன்னணி (ஈபிஆர் எல்எவ்) அமைப்பில் இணைந்து கொண்டார். இந்தியாவின் துணையுடன் தமிழீழத்தை விரைவில் கண்டுவிடலாம் என்று போராடப் புறப்பட்டவர்கள் அனைவரும் கனவு கண்ட காலம் அது. றெக்சியனின் கண்களிலும் அந்தக் கனவு இருந்தது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக எல்லா இளைஞர்களது கண்களிலும் இந்தியா மண்ணை அள்ளிப் போட்டதுபோலவே றெக்சியனின் கண்களிலும் மண் அள்ளிக் கொட்டப்பட்டது.

இருந்தாலும் மக்களுக்கான போராட்டத்தை அந்தப் போராளி கைவிடத் தயாராக இல்லை. எனவே இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் வழங்கப்பட்ட பொதுமன்னிப்பை ஏற்றுக்கொண்டு இலங்கை வரப் புறப்பட்ட றெக்சியன் ஈபிஆர்எல்எவ் இயக்கத்தின் முன்னாள் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான டக்ளஸ் தேவானந்தா தொடக்கிய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் (ஈபிடிபி) இணைந்து கொண்டார். அப்போதும் மக்களுக்குச் சேவையாற்றப் போகிறோம் என்பது தான் அவரது எண்ணமாக, எதிர்பார்ப்பாக இருந்தது.

1990களில் யாழ். குடாநாட்டின் தீவுப் பகுதிகள் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் ஈபிடிபியினர் அந்தப் பகுதியில் இறங்கி மக்களிடம் அரசியல் செய்ய ஆரம்பித்தனர். அந்தக் காலப்பகுதியில்தான் றெக்சியனும் தீவகத்துக்கு மீண்டும் வந்து சேர்ந்தார். எனினும் 1996ஆம் ஆண்டு வரைக்கும் அவர் தனது குடும்பத்தினருடன் எந்தத் தொடர்பையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கவில்லை.

1995ஆம் ஆண்டு யாழ். குடா நாடு முழுவதையும் இராணுவம் கைப்பற்றிக் கொண்டதை அடுத்து றெக்சியனின் குடும்பம் தமது சொந்த இடமான வேலணைக்குத் திரும்பியது. அங்கு சொந்த வீடு உடைக்கப்பட்டுக் கிடந்ததால் சரவணை கிழக்கில் உள்ள ஒரு வாடகை (குத்தகை) வீட்டில் வாழ ஆரம்பித்தனர். ஆனாலும் 1996 ஆம் ஆண்டு றெக்சியன் தனது தாயாருடன் தொடர்பை ஏற்படுத்தினாலும் அடுத்த ஆண்டுதான் குடும்பத்தினரால் அவரை நேரில் பார்க்க முடிந்தது.

### பாசக்கார அண்ணன்

இரண்டு சகோதரர்களையும் இரண்டு சகோதரிகளையும் கொண்ட றெக்சியனுக்கு வீட்டின் மேலிருந்த அக்கறையைவிட மக்கள் சேவையிலேயே அதிக அக்கறை இருந்ததாக அவரது குடும்பத்தினர் கூறுகிறார்கள். எனினும் அவர் ஒரு பாசக்கார அண்ணனாக நடந்து கொண்டார் என்றும் சொல்கிறார்கள். "எங்களுக்கு என்ன ஏதுமென்றால் அண்ணன்தான் ஓடி வருவார்" என்கிறார் சகோதரி தானியேல் றெஜீனா.

றெக்சியனின் ஒரு சகோதரர் திருகோணமலையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். கடை ஒன்றில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது இது நடந்தது. அண்மையில்கூட அவரது சகோதரியின் ஒரு மகள் கிணற்றினுள் வீழ்ந்து இறந்து போனார். அப்போது வீட்டவர்களுக்கு பெரிதும் உதவியாக இருந்து இறப்புச் சடங்குகளை எல்லாம் செய்வதற்கு உதவியிருக்கிறார். அப்படிப்பட்ட ஓர் அண்ணனை, மகனை இழந்துவிட்டு பரிதவித்து நிற்கின்றது அந்தக் குடும்பம்.

அண்ணனை ஏன் கொன்றார்கள் என்ற காரணம் தெரியவேண்டும் என நா தழுதழுக்க வேண்டுகோள் முன்வைக்கிறார் சகோதரி றெஜீனா. "அண்ணன் எல்லாருக்கும் நல்லது தான் கண்களில் கண்ணீர் வழிந்தோட செய்தவன். ஒருத்தருக்குக்கூட *நாங்கள் யாழ்ப்பாணம் போய்க் கொண்*கெட்டது நினைக்கேல்ல. அப்படிப்பட்டவனைப் போய் ஏன் கொலை செய்தவங்கள்? அவதான் (மைத்துனி) இதுக்குக் காரணம். ஆனால் ஏன் கொலை செய்தவை என்று எங்களுக்கு ஒரு முடிவு வேணும்" என்கிறார் அறச் சீற்றத்துடன்.

தான் கொலை செய்யப்பட்டால் அதற்கு யார் காரணமாக இருப்பார்கள் என்று றெச்சியன் எழுதிய கடிதம் இவரிடம் தான் கொடுக்கப்பட்டிருந்தது. நவம்பர் மாதம் 4ஆம் திகதி அந்தக் கடிதத்தைத் தன்னிடம் றெக்சியன் கொடுத்தார் என்கிறார் றெஜீனா.

"எனக்கு ஏதும் ஒண்டு நடந்தால் இந்தக் கடிதத்தைக் கொண்டுபோய் ஜட்ஜ் ஐயாட்டக் குடு என்று சொல்லி என்ர கையில தந்தவர். தனக்கு ஒண்டும் நடக்காது என்றும் அப்படி ஏதாவது நடந்தால் கடிதத்தைக் குடு என்றும் சொல்லித்தான் தந்தவர். நான் அதை வாங்கி அப்படியே மடிச்சு பாக்கில வைச்சிட்டன். படிச்சுக்கூடப் பாக்கேல்ல" என்கிறார் றெஜினா.

கொலைத் தினத்தன்று நடந்தவைகளையும் அதற்கு முன் நடந்தவைகளையும் அவர் விவரிக்கிறார்...

### கொலையும் பின்னணியும்

*"மாலை 4 மணியளவில் அண்ணி கோல் எடுத்து அண்ணனுக்கு ஏலாம இருக்கு அதால யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில சேர்த்திருக்கு என்று சொன்னா. என்னட்ட கையில காசு இல்லை நீங்க போங்கோ நான் ஆட்டோ பிடிச்சென்றாலும் அங்க வாறன் என்று சொன்னன். உடனயே அம்மாட்டப் போய், அண்ணனுக்கு ஏலாம இருக்கெண்டு கொஸ்பிட்டலுக்குக் கொண்டு போகினமாம் என்று சொன்னன்.*

(31 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஓயாத நீதியின் குரல்

■ ஓடுகாலி

காலம் கடந்து போனாலும் நியாயங்கள் ஒரு போதும் சாவதில்லை என்று சொல்வார்கள். ஆனாலும் சில காலங்களுக்கு முன்னர் நிகழ்ந்தவற்றை பார்க்கும்போது அவையெல்லாம் காலாவதியாகிப்போன நம்பிக்கைகளோ என்று எண்ணத்தோன்றியது. ஏனெனில் கைகளில் குருதிக் கறையோடு வலம் வந்தவர்களே, " நாங்கள் அமைதிப்புறாவின் காவலர்கள்" என்று கூச்சமின்றி அவிழ்த்து விட்ட பொய்களை விரும்பியோ விரும்பாமலோ நாங்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்டு தலையாட்ட வேண்டியிருந்தது. மீறி " நீங்கள் தான் குற்றவாளிகள்" என்று சுட்டு விரலை நீட்ட முனைந்தால் அடுத்த நொடியே தலை கொய்யப்பட்டு விடும்.

தலை தப்புவது தம்பிரான் புண்ணியத்தில் மட்டுமல்ல, பொய்களை உண்மையாக ஏற்கும் பச்சோந்தித்தனத்திலேயே அதிகம் தங்கியிருந்தது.

இப்போது போர் முடிந்த பின்னர் உருவாகியுள்ள சூழல் பொய்மையின் இருளில் ஆங் காங்கே சில மெல்லிய துவாரங்களினூடாக ஒளியை கசிய விட்டுள்ளது. இந்த மெல்லிய ஒளியை இருளில் புதைந்து கிடக்கும் லட்சக்கணக்கான மூடி மறைப்புகளில் ஒரு சிலவற்றை இனம் காணும் நிலை ஏற்பட்டுள்ளது. உண்மையில் இந்த இனம் காணல்கள் ஒன்றும் புதிய கண்டுபிடிப்பு இல்லை. ஏற்கனவே எங்களுக்கு மிக உறுதியாகத் தெரிந்த உண்மைகள் தான். ஆனால் அவை உண்மை யென்று தெரிந்தும் வெளியே சொல்லப் பயந்திருந்தோம். இல்லாவிடில் அதிகாரம் கேட்கும் ஆதாரங்களை சமர்ப்பிக்க முடியாதவர்களாக மாற்றப்பட்டிருந்தோம். துப்பாக் கிகளின் முற்றுகைக்குள் எப்படி நீதியைப் பிரசவிக்க முடியும் ?

எப்படி கிருஷாந்தி செம்மணிக்குள் புதைந்து போனாளோ, எப்படி இசைப்பிரியா இரையாக்கப்பட்டாளே, எப்படி பாலச்சந்திரன் என்ற பாலகன் பிஸ்கெற் உண்டு கொண்டு இருக்கும் போதே துப்பாக்கி ரவைகளால் சல்லடையாக்கப் பட்டானோ அப்படித்தான் இறுதிப் போரின் ஆரம்பத்தில் - 2006 இல் - ஒரே அறைக்குள் 'அக்ஷன் பாம்' பணியாளர்கள் 17 பேர் அதிகாரத்தால் காவு கொள்ளப்பட்டார்கள்.

புலிகள் பின்வாங்கி இருந்த அந்தப் பகுதியில் ஆயுதம் தரித்த வேறு எவரும் இருக்கவில்லை. சீருடையின் கட்டுப்பாட்டில் இருந்த ஒரு நிறுவனத்தின் பணியாளர்கள் அத்தனை பேரும் கூட்டுக்கொலை செய்யப்பட்டமை பெரும் அதிர் வலைகளை எங்கும் ஏற்படுத்தி யிருந்தது.

எல்லோருக்குமே அந்த அனர்த்தத்தை நிகழ்த்தியது படைத்தரப்பு தான் என்பது பட்டவர்த்தனமாக தெரியும். ஆனால் எப்படி துணிந்து கந்தகப்புகை கக்கும் அதிகார ஆயுதத்துக்கு எதிராக கை நீட்ட முடியும்? நிறுவனக் கட்டடத்துக்குள் படையினர் உள் நுழைந்ததும், நிறுவனப் பணியாளர்களின் கூக்குரல் எழுந்ததும், தொடர்ந்து அந்தப் பகுதியையே அதிர வைக்கும் வகையில் வேட்டோசை கிளம்பியதும் எல்லோருக்கும் தெரியும். ஆனால் தெரியாதது போலவே நடிக்க வேண்டியிருந்தது.

உண்மையை எத்தனை நாளைக்குத்தான் பொத்தி வைக்க முடியும் ? இறுதிப் போரில் படைத்தரப்பு ஈவிரக்கமின்றி மேற்கொண்ட மனிதப் படுகொலைகள் பற்றி சர்வதேச விசாரணைகள் அவசியம் என்ற குரலுக்கு ஓரளவுக்கேனும் மேற்கு நாடுகள் செவி சாய்க்கத் தொடங்கியுள்ள தருணத்தில் எதிர்பாராத திசையில் இருந்து நீதிக்கான இன்னொரு குரல் ஒலிக்கத் தொடங்கியுள்ளது. அது கொல்லப்பட்ட தனது பணியாளர்களுக்கான நீதி கேட்கும் அக்ஷன் பாம் நிறுவனத்தின் குரல் தான்.

" எங்கள் பணியாளர்களைக் கொன்றது இராணுவம் தான். இதற்கு வலுவான ஆதாரங்கள் எங்களிடம் உண்டு. எனவே இது குறித்து சர்வதேச விசாரணை அவசியம்" என்று அந்த தொண்டு நிறுவனம் பெரும் குரலெடுத்து கதறத் தொடங்கியுள்ளது. வழக்கம்போலவே நீதிக்கான இந்தக் குரலையும் தனது விதண்டாவாதக் கதையால் எட்டி மிதித்து விட்டு நகர நினைக்கிறது அரசு.

"ஏழு வருடங்களுக்கு பிறகு ஏன் இந்த திடீர் ஞானோதயம்? இது சர்வதேச சதியின் ஓர் அங்கம்" என்று மழுப்பிவிட்டு தப்ப நினைத்தாலும் மேற்கு நாடுகள் விடுவதாக இல்லை. ஏனெனில் இது ஒரு தனி மனித பிரச்சினை அல்ல. மனிதாபிமான ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உதவ வந்த ஒரு சர்வதேச தொண்டு நிறுவனத்தின் மீதான வெறிப்பாய்ச்சல்.

தனது நிறுவன பணியாளர்கள் மீதான தாக்குதல் குறித்து அக்ஷன் பாம் நிறுவனம் அரசோடு ரகசியப் பேச்சுகளில் ஈடுபட்டே வந்துள்ளது. கொலையாளிகளை தண்டிக்குமாறு அது வலியுறுத்தியிருந்தது. ஆயினும் எல்லாவற்றிற்கும் தலையாட்டி விட்டு பேசாமல் இருக்கும் போக்கையே அரசு கடைப்பிடிப்பதால் பொறுமையை தூக்கி எறிந்து விட்டு, சர்வதேச அரண்மனையின் முன்றலில் கட்டியிருந்த ஆராய்ச்சி மணியை அடித்து ஒலிக்கப்பண்ணியிருக்கிறது அக்ஷன் பாம். ஏற்கனவே இதே ஆராய்ச்சி மணியை அடித்து அடித்து கைதேய்ந்து கதறிக் கொண்டு இருக்கும் அப்பாவிகளின் வலுவை விடவும் அக்ஷன் பாமின் வலு அதிகம் தான். ஏனெனில் அக் ஷன் பாம் பிட்டுக்கு மண் சுமந்த கடவுளைப் போன்றது. அதற்கு விழுந்த அடி முழு மேற்குலகுக்குமே விழுந்ததற்கு சமம். எனவே வாங்கிய அடியை திருப்பிக் கொடுக்க அது தருணம் பார்த்திருந்தது இப்போது சுருக்குக் கயிற்றை பொதுவெளியில் நின்று அரசை நோக்கி எறிந்திருக்கிறது. எந்தத் திசையில் தப்புவது என்று தெரியாமல் தவிக்கிறது அரசு. இப்படித்தானே எங்கள் உறவுகளும் தப்பும் வழி தெரியாமல் முள்ளிவாய்க்காலில் தவித்திருந்தார்கள். அரசன் அன்று கொன்றான்; அக்ஷன் பாம் நின்று கொல்கிறதோ?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cow & Gate

## பொதுமக்களுக்கான அறிவித்தல்

இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் அனைத்துத் தொகுதி Cow & Gate தயாரிப்புகளும் DCD எனப்படும் இரசாயனப்பொருள் உள்ளடங்கவில்லை என்பதனை, இலங்கை கைத்தொழில் தொழினுட்ப நிறுவனத்தினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறித்து இத்தால் சகல பொதுமக்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

எமது பண்டகசாலையிலிருந்து வெளியேறும் ஒவ்வொரு Cow & Gate பக்கட்டுகளும், (கீழே குறிப்பிட்டுள்ளது போல) DCD இரசாயனப்பொருள் உள்ளடங்கவில்லை என்பதை உறுதிப்படுத்தும் முகமாக, சுகாதார அமைச்சினால் கட்டாயமாக்கப்பட்டுள்ள ஸ்டிக்கர் ஒன்றினைத் தாங்கி வரும்.

இது 2013 செப்டெம்பர் 4ம் திகதி சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட PA/EOH/FCAU/42/2013 இலக்க திருத்தியமைக்கப்பட்ட பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்படுகின்றது.

ඩී.සී.ඩී රසායනිකය අඩංගු නොවන බවට තහවුරු කරන ලදී.
டி.சி.டி. எனும் இரசாயணப் பொருள் அடங்கவில்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
Batch No:

இது பற்றிய மேலதிக விளக்கங்களுக்கு அழையுங்கள் 0773-290183 அல்லது 0773-290160




# ஓரங்கட்டுதலும் ஒட்டுறவும்

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் படுதோல்வியடைந்ததிலும் பார்க்க, அதன் பின்னரான அரசின் ஓரங் கட்டலே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு பெரும் தலையிடியாக அமைந்திருக்கின்றது.

வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர், எந்த நிகழ்வாயினும் சரி, எந்த இழவாயினும் சரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா , வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் ஜனாதிபதியின் படங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளே வைக்கப்பட்டிருக்கும். அத்துடன் சகல நிகழ்வுகளுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆளுநர் சந்திரசிறியும் அவரது பரிவாரங்களுமே அணி வகுத்து நிற்கும்.

இவர்களை அழைக்காமல் எந்தவொரு நிகழ்வும் செய்ய முடியாது. இவர்களின் வருகைக்காக நிகழ்வுகள் ஒத்தி வைக்கப்படுவதும், காத்திருப்ப தும் வழக்கமான ஒன்றாகவே அரங்கேறிக் கொண்டிருந்தன.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் அரச கூட்டு படுதோல்வியடைந்திருந்தது. தோல்வி எதிர்பார்க்கப்பட்டதொன்றாயினும் இத்தகைய படுதோல்வியை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அரச கூட்டில் முக்கிய கட்சியாக இருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பியும் இதனை எதிர்பார்க்கவில்லை.

பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல், வடக்குத் தேர்தல் தோல்வியால் துவண்டு கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அரசு ஓரங்கட்டி வருகின்றது.

வடக்கு மாகாணசபைத் தேர்தலின் பின்னர் இடம்பெற்ற இரண்டு நிகழ்வுகளில் வடக்கு ஆளுநர் பங்கெடுத்திருந்த போதும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பங்கெடுக்கவில்லை.

வடக்கு மாகாண பேரவைச் செயலகம் கைதடியில் திறந்து வைக்கப்பட்ட போதும் வடக்கு மாகாண ஊழியர்களுக்கான நியமனம் வழங்கப்பட்ட நிகழ்விலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஓரங்கப்பட்டிருந்தார். அத்துடன் வடக்கு மாகாண ஊழியர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வில் வைக்கப்பட்டிருந்த 'பனரில்' கூட அவர் ஒதுக்கப்பட்டிருந்தார். வழமையாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் படம் காணப்படும் இடத்தில் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் படமே இடம்பெற்றிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு மாகாணசபை வந்த பின்னரும் வடக்கு நிர்வாகத்தின் முடிவுகளை ஆளுநரே எடுத்து வருகின்றார். ஊழியர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புறக்கணித்திருந்தனர். ஆனாலும் அந்த நிகழ்வை வடக்கு ஆளுநர் நடத்தி முடித்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நிகழ்வுகளுக்கு அழைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் என்ற போலியான குற்றச்சாட்டை முன்வைக்க முடியாது. முடிவெடுக்கும் அதிகாரத்தை வைத்திருக்கும் ஆளுநர் - ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதி - அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவை ஓரங்கட்ட முயல்கின்றார் என்பதே உண்மை. சந்திரிக்கா அம்மையாருக்கு ஒரு லக்ஷ்மன் கதிர்காமர் மாதிரி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஒரு லக்ஷ்மன் கதிர்காமராகவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தேவைப் பட்டார். தேவை முடிந்ததும் கறிவேப்பிலை போன்று தூக்கி எறியப்பட்டுள்ளார். இதையுணர்ந்து இனியாவது தமிழ் மக்கள் நலன் சார்ந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செயற்படுவரா? இல்லை, அடித்துக்கலைத்தாலும் போகமாட்டேன் என்று தொடர்ந்தும் அரசுடன் தான் ஒட்டிக் கொண்டிருக்கப் போகின்றாரா ?

SUZUKI Way of Life

JAPANESE TECHNOLOGY

உலகின் அதிநவீன கார் வடிவமைப்பு என் மனதைக் கவரும் வரை எனது ALTO
தான் எப்போதும் 1ல் இடம்




உறுதியானதும், கவர்ச்சிகரமானதுமான மீள்விற்பனைச் சந்தை கொண்ட மிகப்பிரபல்யம் மிக்க Brand New ஸ்மார்ட் கார்

- 10 வருடங்களுக்கு மேலாக உலகின் சந்தை முதல்வன்
- இணையற்ற மீள்விற்பனை பெறுமதி
- நாடளாவிய விற்பனைக்குப் பிந்திய சேவை

ரூ. 1,767,857.00 + VAT *நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

AMW bringing the world to you

அசோஷியேட்டட் மோட்டார்வேய்ஸ் (பிரைவேற்) லிமிட்
445, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 08
www.suzukilk.com

மின்னஞ்சல் : sales@amwltd.com
விற்பனைத் துரித இலக்கம் : 0117 609 609

பொரளை | குருநாகல் | நீர்கொழும்பு | மாத்தறை | இரத்தினபுரி | அம்பாறை | கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TOSHIBA
Leading Innovation

e-STUDIO


# நத்தார் பண்டிகைக் காலம் ஆரம்பம்




**2013 டிசம்பர் 1ஆம் திகதி முதல் 31ம் திகதி வரையான பண்டிகைக் கால சலுகைகள் ரூ.105,000/- தொடக்கம்.**

## e-Studio 2006
20 PPM | A3 - A5 | 250 Sheet Cassette
512MB RAM | USB Print | USB Colour Scan

நத்தாருக்கு நல்வரவு கூறுவது போல, இலங்கையின் தலைசிறந்த டிஜிட்டல் மல்டி.்.பங்ஷன் .்.போட்டோ கொப்பியர்கள் மிகச் சிறந்த சலுகை விலைகளில் வழங்கப்படுகின்றன! நவீன முறையில் பிரதியெடுத்தல், அச்சிடுதல் மற்றும் ஸ்கேனிங் வேலைகளைச் செய்ய உதவும் இந்த இயந்திரமொன்றை வாங்கி, உங்கள் நத்தார் குதூகலத்தை அதிகரியுங்கள். ஒவ்வொரு டொஷீபா டிஜிட்டல் மல்டி.்.பங்ஷன் கொப்பியரும் பல்தொழிற்பாடு, கச்சிதமான அளவு, கவர்ச்சியான குறைந்த விலை ஆகிய சிறப்புக்களைக் கொண்டது. அலுவலகத் தன்னியக்க சாதனங்கள் துறையில் முன்னணி வகிக்கும் ஜோண் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷன் நிறுவனத்திலும் அதன் நாடளாவிய விற்பனை முகவர் நிலையங்களிலும் வாங்கலாம்.



**e-Studio 2505H**
25 PPM
A3 - A5
512MB RAM
Duplex
NW Print & Colour Scan
Automatic Document Feeder

**e-Studio 2007**
20 PPM
A3 - A5
512MB RAM
Duplex
PCL 6 Network Print
Colour Scan to Email

**-Studio 256/306**
25/30 PPM
A3 - A5
1GB RAM/80GB
Duplex
Electronic Filing
PCL6/PS3 Network Print
Colour Scan to Email*

**e-Studio 356/456**
35/45 PPM
A3 - A5
1GB RAM/80GB
Duplex
Electronic Filing
PCL6/PS3 Network Print
Colour Scan to Email*

**e-Studio 556/656/756/856**
55/65/75/85 PPM
A3 - A5
1GB RAM/80GB
Duplex
3600 Paper Supply
PCL6/PS3 Network Print*
Colour Scan to Email*

**e-Studio 2051/2551**
20/25 PPM
A3 - A5 Full Colour
2GB RAM + 8GB SSD
250 Sheet Cassette
Trimming & Masking
PCL 6 Network Print
Colour Scan to Email

**e-Studio 2050/2550**
20/25 PPM
A3 - A5 Full Colour
2GB RAM + 8 GB SSD
160GB Hard Disk
250 Sheet Cassette
PCL6/PS3 Network Print
Network Colour Scan to Email
Electronic Filing System*

**Authorized Dealers for John Keells Office Automation (Pvt) Ltd.**

**Ampara:** Badurcom and Stationery - 077 9350738/077 7725241, Taibah Marketing (Pvt) Ltd. - 077 7667900/077 7725241, **Badulla:** Imtiaz Pakeerdeen - 055-2222497/077 7725241, **Batticaloa:** Jilans Macsar Techno - 077 7482011/077 7725241, **Colombo 06:** Geotrans (Pvt) Ltd. - 077 2222045/077 7278472, **Hatton:** VKR Telecom - 051-2222967/077 7725241, **Jaffna:** North Link Engineering - 021-2224099/077 3182838, **Mannar:** North Link Engineering - 077 7593743/077 3182838, **Trincomalee:** Trintec Computers (Pvt) Ltd. - 026-2222552/077 3182838, Trinco Stationers - 026-2223071/077 3182838, **Vavuniya:** North Link Engineering - 024-2224537/077 3182838

*Optional settings **Conditions apply ***Accessories not included

**John Keells Office Automation (Pvt) Ltd.**
90, Union Place, Colombo 02. Tel: 2 313 000, Fax: 2 431 745
E-mail: jkoa@keells.com www.jkoa.com

For more information, call:
Colombo - 0777 386 909 | Outstation - 0777 725 241

2 6 1 + 1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாவின் நெற்றிக்கண்



பாண்டிய மன்னன் செண்பக பாண்டியனுக்குத் தன் மனைவியின் கூந்தலின் வாசனை இயற்கையானதா செயற்கையானதா என்ற சந்தேகம் வரவே தன் சந்தேகத்தைத் தீர்ப்பவருக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசளிக்கப் போவதாக முரசறைவிக்கிறான். சிவபெருமான் ஒரு புலவர் வேடத்தில் தனது பித்தனும் பரம ஏழையுமான தருமி என்பவனிடம் "கொங்குதேர் வாழ்க்கை" என ஆரம்பமாகும் ஒரு பாடலைக் கொடுத்து அதை அரசவையில் சமர்ப்பித்து பரிசைப் பெறும் படி கூறுகிறார். அவனும் அதை அரசவையில் பாடிக் காட்டியபோது அகமகிழ்ந்த அரசன் பரிசை வழங்கும்போது அரசவைப் புலவரான நக்கீரர் அப்பாடலில் பொருட்குற்றம் இருப்பதாகக் கூறித் தடுக்கிறார். தருமி இறைவனிடம் போய் முறையிடவே அவர் கோபம் கொண்டு அரசவைக்கு வருகிறார். அவர் பாடலில் காணப்படும் குற்றம் என்னவெனக் கேட்டபோது நக்கீரர் பெண்களின் கூந்தலுக்கு இயற்கை மணம் இல்லையெனவும் அதனால் பாடலில் பொருட் குற்றம் உண்டு எனவும் கூறுகிறார். சிவன் உமையவளின் கூந்தலுக்கும் இயற்கை மணம் இல்லையோ என்கிறார். நக்கீரர் இல்லையென மறுக்கிறார். சிவபெருமான் கோபம் கொண்டு நெற்றிக் கண்ணைத் திறக்கிறார். நக்கீரரோ "நின் இறை வரையிலும் நெற்றிக்கண்ணைத்திறப்பினும்குற்றம் குற்றமே" என அடித்துக் கூறுகிறார். நக்கீரர் இறைவன் முன்பே தனது கருத்தை விட்டுக் கொடுக்கவில்லை. மன்மதனையே எரித்து சாம்பலாக்கிய நெற்றிக் கண்ணின் வெப்பத்துக்கு அஞ்சி விடவில்லை அவர் நியாயத்துக்காக நிமிர்ந்து நின்றார்.

### தமிழர்கள் நக்கீரர் பரம்பரையினர்

நாங்கள் தமிழர்கள். நக்கீரன் பரம்பரையில் வந்தவர்கள். திறக்கப்படும் நெற்றிக் கண்களைக் கண்டு நாம் அஞ்சிஅடிபணிந்துவிட்டுபோவதில்லை. நாம்எப்போதும்எந்தசக்தியின்முன்பும் நியாயத்துக்காகநிமிர்ந்து நிற்பவர்கள். அரசியல் பலம், இராணுவ பலம் என்பவற்றின் மேலேறி நின்று அதிகாரம் செலுத்தும் ஒரு சிலர் தமிழ் மக்களின் இந்த அடிப்படை அம்சத்தை அடிக்கடி மறந்துவிடுவதுண்டு. இறைவன் முன்பே நிமிர்ந்து நின்று குற்றத்தைச் சுட்டிக் காட்டிய ஓர் இனத்தைத் தம் அதிகார பலம் மூலம் அடக்கிவிட முடியும் என நப்பாசை கொள்கின்றனர்.

அவர்களில் முக்கியமானவர் முன்னாள் இராணுவ அதிகாரியான கோத்தபாய ராஜக்ஷ.

இவர் ஏற்கனவே வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய வாழிடமல்ல எனக் கூறித் தன் இன ஒடுக்குமுறை முகத்தையும் வரலாற்று அறிவின் வறுமையையும் வெளிக் காட்டிக் கொண்டவர்.

இப்போது அவர் மீண்டும் ஒருமுறை நெற்றிக் கண்ணைத் திறக்கப் போவதாக மிரட்டுகிறார்.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழீழ விடுதலைப் புலிகளையும் மாவீரர்களையும் நினைவுபடுத்தி அரசையும் படையினரையும் வெறுப்பூட்டும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என அவர் ஒரு ஆங்கில நாளேட்டுக்கு வழங்கியுள்ள பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

### உரிமை மறுப்பு

அந்தக் கருத்தை வேறு வார்த்தைகளில் சொல்லப் போனால் தமிழ் மக்கள் அரசையும் படையினரையும் திருப்திப்படுத்தும் வகையில் தான் சிந்திக்க வேண்டும். செயற்பட வேண்டும். இல்லையேல் அரசினதும் படையினரதும் வெறுப்புக்கும் உள்ளாக வேண்டி வரும். அதுமட்டுமன்றி இது போருக்குப் பின்னர் நிலவுகின்ற நல்லெண்ண சூழலைக் குழப்பும் சதி நடவடிக்கையாம். இங்கு அவரின் மிரட்டல் உச்சத் தொனியில் ஓங்கி ஒலிக்கிறது.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையில் சிந்தனைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், வழிபாட்டுச் சுதந்திரம் என்பன அரசமைப்பால் இங்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளோ, மாவீரர்களோ அனைவரும் இந்த நாட்டுப் பிரஜைகளான தமிழ் மக்களின் பிள்ளைகள்தான். எமது பிள்ளைகளை நாம் நினைவு கூருவது என்பது மனித குலத்தின் அடிப்படை உரிமைகளில் ஒன்று.

எமது அந்த உரிமையைக் கூடப் பாதுகாப்புச் செயலர் மறுக்கிறார் என்றால் அவர் தமிழ் மக்களை மனிதர்களாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதுதான் அர்த்தம்.

அதாவது அரசு விரும்புவதையும் படையினர் விரும்புவதையும் மட்டுமே நாம் செய்ய முடியும் என அவர் கூறும் போது தமிழினத்தை முற்றுமுழுதாக ஓர் அடிமை இனமாகவே அவர் பார்க்கிறார் என்பதே அர்த்தமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் போருக்குப் பின்புநிலவும்நல்லெண்ணச் சூழலைக் குழப்புவதற்கு சதி செய்கிறார்களாம். அப்படியானால் நல்லெண்ணச் சூழல் என்றால்எது என்ற ஒரு பெரிய கேள்வி இங்கே எழுகிறது.

வலி.வடக்கு சம்பூர் ஆகிய பகுதிகளில் பாதுகாப்பு, அபிவிருத்தி என்ற பெயரில் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. அந்த மக்கள் இன்று வரை இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் சகல அவலங்களையும் அனுபவித்து வாழ்ந்து வருகின்றனர். மண லாற்றில் தமிழ் மக்களின் விவசாய நிலங்கள் சிங்களவரால் ஆக்கிரமிக்கப்படுகின்றன. முஸ்லிம்மக்களின் குடியிருப்புகள் தொல்பொருள் மையங்கள் என்ற பேரில் புத்த பிக்குகளால் ஆக்கிரமிக்கப்படுகின்றன. நாடெங்கும் முஸ்லிம் பள்ளிவாசல்களும் இந்துக் கோயில்களும் உடைக்கப்படுகின்றன. பகிரங்கமாகவே இந்த அத்துமீறல்கள் இடம்பெற்ற போதும் இதுவரை எவரும் தண்டிக்கப்படவில்லை. அதுமட்டுமன்றி இவை தொடர்ந்து இடம்பெறாமல் தடுத்து நிறுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் ஒரு பௌத்த மதத்தினன்கூட வாழாத பிரதேசங்களிலெல்லாம் புத்த விகாரைகளும் புத்த சிலைகளும் நிறுவப்பட்டு வருகின்றன.

### சுதந்திரம் இல்லை

வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டு அதீத பெரும்பான்மைப் பலத்துடன் அதிகாரத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது. ஆனால் இன்று வரை மாகாண சபை இயல்பாக இயங்குவதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படவில்லை. அமைச்சுகளின் செயலாளர்களைக் கூட ஆளுநர் தன்னிச்சையாக நியமிக்கும் நிலையே நிலவுகிறது.

அடிப்படையில் இந்த நாட்டில் தமிழ் மக்களின் குடிவாழும் சுதந்திரம் வழிபாட்டுச் சுதந்திரம், தமது மாகாண சபையைத் தாமே நடத்தும் சுதந்திரம் என்பன சட்டவிரோத மாகப் பறிக்கப்பட்டுள்ளன.

இதை ஒரு நல்லெண்ணச் சூழல் என ஏற்றுக் கொள்ள முடியுமா? அப்படிப்பட்ட சூழலை குழப்ப தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் சதி செய்கின்றனர் என்றா குற்றம் சாட்டுகிறார் பாதுகாப்புச் செயலர்?

இப்போது நிலவுவது ஒரு தற்காலிக அமைதி. அது ஆயுத ஒடுக்குமுறை மூலமும் தமிழ் முஸ்லிம் மக்களின் ஜனநாயக உரிமைகளைக் காலில் போட்டு நசுக்கியதன் மூலமும் ஏற்படுத்தப்பட்ட ஒரு செயற்கையான அமைதி. இன்று ஜனாதிபதியும் அமைச்சர்களும் எவரும் எவ்வித அச்சமுமின்றிநாட்டின்எந்தப்பகுதிக்கும்சென்று வருமளவுக்கு நல்லெண்ணச் சூழல் நிலவுவதாகச் சொல்லி வருகின்றனர்.

எமது பிள்ளைகளின் நினைவால யங்கள் அழிக்கப்பட்டு நாம் அவர்க ளுக்கு அஞ்சலி செலுத்தும் உரிமை எமக்கு வலுக்கட்டாயமாக மறுக்கப்படும் போது சிங்கள மக்கள் இங்கு வந்து இறந்த படையினரின் நினை விடங்களை வணங்கிச் செல்கி[illegible] மண்ணில் எமது பி[illegible] சலிக்க முடியாத நி[illegible] மக்கள் தமது பிள்ளைக ளுக்கு எமது மண்ணில் அஞ்சலி செலுத்தும் போது நல்லிணக்கம் உருவாகுமா?

நாம் போரில் இறந்த படையினரை மதிக்கிறோம். அதேவேளை உயிர் நீத்த எமது பிள்ளைகளை அஞ்சலிக்க விதிக்கப்படும் தடைகளை எப்படி நாம் ஏற்றுக் கொள்ள முடியும்? சிங்கள மக்களும் தமிழ் மக்களுக்கு மிடையே ஒரு சகோதரத்துவ உறவு நிலவும் போது ஒரு நிரந்தர நீடித்த நல்லிணக்கம் உருவாக முடியும். ஒருவர் அடக்கப்படுபவராகவும் மற்றவர் அடக்குபவராகவும் இருக்கும் நிலையில் உருவாவது நிச்சயம் நல்லிணக்கமல்ல. வெறுப்பும் குரோதமும் தான்.

### நல்லிணக்கத்துக்கு ஆட்சியாளர்களே தடை

இன்று நாட்டில் நல்லிணக்கம் உருவாவதற்குத் தடையாக இருப்பவர்கள் இன்றைய ஆட்சியாளர்களும் அவர்களால் போதிக்கப்பட்டு வணங்கப்படும் இன வெறியர்களுமே.

பொதுபலசேனா, இராவணா அமைப்பு, ஜாதிக ஹெல உறுமய போன்ற இனவெறி அமைப்புகளுக்கு ஆதரவு வழங்கி அவர்களின் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருப்பவர்களில் முதன்மையானவர் பாதுகாப்புச் செயலர்.

இன்று இலங்கையில் நல்லிணக்கம் உருவாவதற்குத் தடையாய் இருப்பவர்களில்முதன்மையானவர் அவரே. அவருக்கும் அரசுக்கும் படையினருக்கும் தமிழ் மக்கள் தம் பிள்ளைகளை நினைவு கூர்ந்தால் கோபமும் வெறுப்பும் வருமாம். ஆனால் எமது உரிமைகள் மறுக்கப்படும் போது எமக்குக் கோப மும் வெறுப்பும் வரும் என்பதை அவர் உணர மறுக்கிறார். இறைவன் நெற்றிக் கண்ணைத் திறந்த போதே அஞ்சாமல் குற்றம் குற்றமே என நிமிர்ந்து நின்ற நக்கீரரின் பரம்பரையில் வந்தவர்கள் தமிழர்கள் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சரும பாதுகாப்புக்கு

முதுகுப் பகுதியில் வெயில் படும் இடங்கள், சருமத்தின் மற்ற பகுதிகளை விட, அதிகமாகவே கறுத்து போகும். இதை போக்க, எலுமிச்சம் பழத் தோலை, அந்தப் பகுதிகளில் நன்கு தேய்த்து, சிறிது நேரம் ஊற விட்டு, கழுவுங்கள். சோப்பில் கூட போகாத அழுக்குகள் மூக்கு நுனியிலும், மூக்கின் ஓரங்களிலும் தேங்கி நின்று விடும். அரிசி மாவில், பால் கலந்து, குழைத்து, சருமத்தின் மீது, தேய்த்து விட, அத்தனை அழுக்கும் காணாமல் போய்விடும்.



டிசம்பர் 11 IPO ஆரம்பம்

உங்கள் பங்குரிமையுடன்
எங்கள் வெற்றிப் பயணத்தில்

# இணையுங்கள்

உங்கள் வங்கி, இலங்கையின் இஸ்லாமிய வங்கி மற்றும் நிதித்துறையில் முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் திகழ்கின்றது.

- கடந்த 2 ஆண்டுகளில் வாடிக்கையாளர்களுக்கான நிதி வசதிகளில் 188% வளர்ச்சி மற்றும் வைப்புக்களில் 70% வளர்ச்சி
- 2013ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில், 410 கோடி ரூபாய் நிதி வசதிகளிலும் 360 கோடி ரூபாய் வைப்புக்களிலும் வளர்ச்சி
- 100,000ற்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு 24 கிளைகள் மற்றும் 500க்கும் மேற்பட்ட ATM இயந்திரங்களினூடாக வழங்கப்படும் சௌகரியமான சேவை
- ஆசியா மற்றும் மத்திய கிழக்கில் உள்ள 3 மாபெரும் சர்வதேச வங்கிகளின் மூலோபாய பங்குரிமையின் உறுதியான துணை

**நீங்களும் ஒரு பங்குரிமையாளராகுங்கள்!**

ஒரு பங்கு ரூ.7/ வீதம் 214,300,000 சாதாரண பங்குகள் வழங்கப்படவுள்ளன, இது 71,500,000 வரை அதிகரிக்கவல்லது. மேலதிக விபரங்களுக்கு முன் விவரணப்பத்திரத்தைப் பார்க்கவும். முன்விவரணப் பத்திரங்கள் மற்றும் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள பங்கு தரகர்கள், அமானா வங்கி கிளைகள், தேர்ந்தெடுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி கிளைகள் மற்றும் வெளியீட்டு நிர்வாகிகளான அக்குவிட்டி (Acuity) பங்கு தரகரையும் நாடுங்கள். இணையத்திலிருந்து www.cse.lk மற்றும் www.amanabank.lk மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.

அழையுங்கள் 011 7 756 756
www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களால் பல வேலைகளை ஒரே நேரத்தில் செய்ய முடியும்

பல வகையான வேலைகளை ஒரே நேரத்தில் கொடுக்கும் போது அதனை ஆண்களை விட பெண்களே மிகவும் வேகமாகச் செய்து முடிப்பதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

அதாவது பல வேலைகளை ஒன்றாகக் கொடுத்து இவற்றை முடியுங்கள் என்று கூறினால், அவற்றை திட்டமிட்டு, எதனை முதல் செய்வது எதனை பின்னர் செய்வது என்று ஒழுங்குபடுத்திச் செய்வதில் ஆண்கள் மிகவும் தாமதமாக இருக்கிறார்கள் என்று பிரிட்டன் உளவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

ஆனால், இந்த விடயத்தில் இப்போது இரு கேள்விகள் இருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். முதலாவது கேள்வி இது ஏன் என்பதாகும். அடுத்தது எந்த வேலையை கொடுத்தாலும் இந்த நிலைமைதானா அல்லது சில வேலைகளில் மாத்திரந்தான் இந்த நிலைமையா என்பதாகும்.

இதற்கான விடைகளைக் கண்டு பிடிக்கும் போதுதான் வேலைத் தளங்களை எப்படி ஏற்பாடு செய்வது என்பதில் சரியான திட்டங்களைத் தீட்ட முடியும்.

பல வேலைகளை ஒன்றாக அடுத்தடுத்து முடிப்பது என்பது வேலைத் தளங்களில் மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஆனால், அதுதான் எமது வேலை தொடர்ச்சியாக நடப்பதிலும் தாமதத்தை ஏற்படுத்துகிறது.

### *முன்னைய ஆய்வுகள்*


முன்னர் இந்த விடயங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் வெவ்வேறான முடிவுகளைத் தந்துள்ளன.

சீனாவில் நடந்த ஒரு ஆய்வில் பெண்கள், ஆண்களை விட பல வேலைகளை ஒன்றாக முடிப்பதில் மிகவும் வேகமானவர்கள் என்ற பதில் வந்திருக்கிறது. ஆனால் சுவீடனில் நடந்த ஆய்வில் ஆண்கள் தான் வேகமானவர்கள் என்ற முடிவு வந்திருக்கிறது.

இதற்காக இன்னுமொரு ஆய்வு நடத்தப்பட்டது. அதில் சில அலுவலக வேலைகளை, அதாவது மின்னஞ்சல்களைப் படிப்பது, அதற்கு பதிலளிப்பது, தொலைபேசிகளுக்கு பதிலளிப்பது, அடுத்தடுத்த கூட்டங்களில் கலந்துகொள்வது என பல வேலைகள் இருதரப்பாருக்கும் கொடுக்கப்பட்டது. அதேபோல வீட்டுவேலைகள், அதாவது, சமைப்பது, குழந்தைகளை பார்த்துக் கொள்வது, வீட்டு தொலைபேசி அழைப்புக்களுக்கு பதில் சொல்வது என்று பல வேலைகள் ஒன்றாக அவர்களுக்கு கொடுக்கப்பட்டது.

### *ஒற்றை வேலையைச் செய்வதில் இருவரும் சமம்*

இதில் ஒவ்வொரு வேலையாகச் செய்யச் சொன்னால், இருதரப்பாரும் ஒரே வேகத்திலேயே செய்தார்கள். ஆனால் எல்லா வேலைகளை ஒன்றாகக் கொடுத்த போது, அவற்றை ஒவ்வொன்றாக செய்து முடிப்பதற்கும் ஒரு வேலையில் இருந்து அடுத்த வேலைக்கு மாறும் போதும் இருதரப்பாரும் சிரமப்பட்டார்கள். ஆனாலும் பெண்கள், ஆண்களை விட அவற்றை வேகமாக முடித்தார்கள்.



- பார்கவி

இந்த வேறுபாடு மிகவும் சிறியது தான் என்றாலும், தொடர்ச்சியாக வாரக் கணக்கில் இவற்றைச் செய்யும்போது அது மிகவும் அதிகமாகிவிடும்.

### *அவசரக்குடுக்கை ஆண்கள்*

அதன் பின்னர் 8 நிமிடத்துக்குள் சில வேலைகளை ஒன்றாக செய்ய வேண்டும் என்று இரு தரப்பாருக்கும் கொடுக்கப்பட்டது. உண்மையில் அந்த அனைத்து வேலைகளையும் 8 நிமிடத்தில் முடிக்க முடியாது.

இப்போது, வேலை களை ஆரம்பிப்பதற்கு முன்னதாக அவற்றை திட்டமிடுவதற்கு நீண்ட நேரத்தை பெண்கள் எடுத்துக் கொண் டார்கள். ஆனால் ஆண்கள் அவசரக் குடுக்கையாக, நிறைய யோசிக்கா மல் வேலையில் குதித்து விட்டார் கள். ஆனால் இங்கும் பெண் கள்தான் முன்னணியில் இருந் தார்கள்.

இதில் இருந்து எந்த அழுத்தமான நிலைமைகளிலும் நின்று நிதானமாகச் சிந்தித்து, திட்டமிட்டு, செயற்படும் திறன் பெண்களுக்கே அதிகம் என்ற முடிவுக்கு விஞ்ஞானி கள் வந்தார்கள்.

அது மாத்திரமன்றி ஆண்களைப் பொறுத்தவரை அவர்கள், பல வேலைகளை ஒன்றாகக் கையாள்வதில் தாம் உண்மையில் எவ்வளவு திறமையானவர்களோ, அதனைவிட அதிகமாகவே தம்மிடம் திறமை இருப்பதாக அவர்கள் தம்மைப் பற்றி நினைத்துக் கொள்வதாகவும், ஆனால் பெண்களோ மறுபுறமாக, தமக்கு இந்த விடயங்களில் இருக்கும் உண்மையான திறமையின் அளவை விட குறைவாகவே தமக்குத் திறமை இருப்பதாக நினைத்துக்கொள்கிறார்கள் எனவும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

தம்மிடம் அதிக திறமை இருப்பதாக அளவுக்கு அதிகமாக ஆண்கள் நினைப்பதால்தான் அவர்கள் சிந்திக்காமலேயே வேலையைத் தொடங்கிவிட்டு முடிக்க முடியாமல் தடுமாறுகிறார்களாம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தமின்றி நடக்கும் கருவறுப்பு



பசுபதி தேபிந

கருக்கலைப்பைத் தீர்மானிப்பதற்கான உரிமையும் சுதந்திரமும் பெண்ணுக்கு உள்ளது என்ற வாதங்கள் ஒருபுறத்தில் அதிகரித்தபடி இருக்க, சட்டங்களால் அனுமதிக்கப் படாத கருக்கலைப்புக்கள் யாழ்ப்பாணத்தில் பெருமளவில் அதிகரித்திருக்கின்றன என்கிறது எமது புலன் விசாரணை. சட்டவிரோத மருந்துகள் பல வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு யாழ். குடாநாட்டில் தாராளமாகப் புழக்கத்தில் உள்ளன. நாளாந்தம் விற்பனையாகும் அளவுக்கு இந்த மருந்துகளுக்கு கிராக்கி இருக்கின்றன என்பது அதிர்ச்சி அளிப்பதாக இருக்கின்றது.

கிராமத்தில் அரச அதிகாரிகளால் பெண்களுக்குக் கட்டாயக் கருத்தடை செய்யப் பட்டமை அரசியல் சர்ச்சையாக வெடித்துள்ள பின்னணியில், சத்தமே இல்லாமல் விரும்பியோ விரும்பாமலோ ஏராளம் ஏராளம் கருக்கலைப்புக்கள் யாழ்ப்பாணத்தில் நடந்தேறுகின்றன.

கருக்கலைப்புக்கான மருந்துகள் உட்பட பல சட்டவிரோத மருந்துகளின் பாவனை வடக்கில் அளவு கணக்கின்றி அதிகரித்திருக்கின்றது என்ற உண்மை, பழைமைவாதக்ளள கட்டிறுக்கம் கொண்ட யாழ்ப்பாணத்துச் சமூகத்தை அதிர்ச்சி அடைய வைக்கும் என்பது திண்ணம். 3 வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலைமை யுடன் ஒப்பிடுகையில் இது மிகப் பயங்கரமா னது என்று வடக்கு மக்களில் பலர் கருதுகின் றனர்.

விடுதலைப் புலிகளின் மறைவுக்குப் பின்னர் கட்டற்ற பாலியல் சுதந்திரம் வடக்கில் அதிகரித்துவிட்டதும், சில பல சமயங்களில் அது திட்டமிட்டு ஊக்குவிக்கப்படுவதுமே இதற்குக் காரணம் என்று நம்பும் அநேகம் பேர் யாழ்ப்பாணத்திலும் வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் இருக்கிறார்கள்.

> விடுதலைப் புலிகளின் மறைவுக்குப் பின்னர் கட்டற்ற பாலியல் சுதந்திரம் வடக்கில் அதிக ரித்துவிட்டதும், சில பல சமயங்களில் அது திட்ட மிட்டு ஊக்குவிக்கப்படுவதுமே இதற்குக் காரணம் என்று நம்பும் அநேகம் பேர் யாழ்ப்பா ணத்திலும் வடக்கின் ஏனைய மாவட்டங்க ளிலும் இருக்கிறார்கள்.

### புலன் விசாரணை

யாழ். நகரத்தின் மத்தியில், பஸ் நிலையம் முன்பாக, பெயர்கூடச் சரியாகத் தெரியாத வகையில் மற்றொரு கடையின் பெயர்ப்பலகை மறைத்திருக்கும் ஒரு சிறிய கடை கருக்கலைப்பு மாத்திரைகளுக்குப் பெயர்போனது என்றால் நம்புவது கடினம். அங்கிருக்கும் வயதான நபரிடம் Missoprostal என எழுதப்பட்ட, அப்பியாசக் கொப்பியிலிருந்து கிழிக்கப்பட்ட ஒரு துண்டுக் காகிதத்தை நீட்டினால், பார்த்துவிட்டுச் சாதாரணமாக மருந்தைக் கொடுக்கிறார்.

சட்டவிரோத கருக்கலைப்பின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்துவிட்டது என்றும், அதற்கான மாத்திரைகள் கிடைப்பதுடன் ஆங்காங்கே கருக்கலைப்புச் செய்யும் நிலையங்கள் பலதும் இரகசியமாக இயங்கி வருகின்றன என்றும் தகவல் கிடைத்ததும் இது பற்றிய விசாரணையில் 'உதயன்' இறங்கியது.

யாழ். நகரில் உள்ள முக்கிய மருந்துக் கடைகளில் சென்று கேட்டபோது அத்தகைய மருந் m Pills) விற்கப்படுவதில்லை என்று பதிலளிக்கப்பட்டது. ஆனால், சில பிரபல கடைகளில் நம்பகத் தன்மையுடன் நடந்துகொண்டால் மருந்துகளைப் பெறலாம் என்று எமக்கு நம்பிக்கையூட்டினர் சில தரப்பினர். எனினும் என்ன முயன்றும் முக்கியமான கடைகளில் உள்ளவர்களின் நம்பிக்கையை எம்மால் வென்றெடுக்க முடியவில்லை.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை, சங்கானை போன்ற [illegible] கடைகளில் மருந்தை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் எமக்குச் சொல்லப்பட்டிருந்தது. ஆனால் எவ்வளவு முயன்றும் அங்கெல்லாம் எம்மால் கருக்கலைப்பு மருந்தைப் பெற முடியவில்லை.

பலத்த பிரயத்தனத்தின் பின்னர் மருத்துவ ஆய்வுகூடம் ஒன்றில் பணியாற்றும் ஒருவரைத் தெரிந்து வைத்திருந்த நண்பரின் உதவியை நாடினோம். பலத்த நிபந்தனைகளுக்குப் பின்னர் அவர் எமக்கு உதவ முன்வந்தார். ஆய்வுகூடத்தில் பணியாற்றிய நபருடன் தொடர்பு கொண்டு இவ்வாறான மருந்துகள் தேவையாக இருக்கின்றது என்று கேட்கப்பட்டது. ஏற்பாடு செய்யலாம் எனக்கூறிய அவர், மருந்துக்கு 2,000 ரூபா வரையில் ஆகும் என்று கூறினார். பின்னர் அவர் தனக்கு நம்பிக்கையான ஒரு மருந்தகத்தில் (Pharmacy) பணியாற்றுபவரை அறிமுகப்படுத்தியதுடன் அவரின் கைப்பேசி எண்ணைக் கொடுத்தார்.

நண்பகல் அளவில் அந்த நபருடன் தொடர்பு கொண்டபோது, வேறு ஒரு மருந்தகத்திலேயே மருந்து இருப்பதாகக் கூறிய அவர், தான் பேசிவிட்டு ஒன்றரை மணி நேரத்தின் பின்னர் பதில் சொல்கிறேன் என்று கூறினார். இத்தனைக்கும் இவர்கள் [illegible] நாம் ஏற்கனவே நேரடியாகக் கருக்கலைப்பு மருந்து கேட்டு ஏறி இறங்கிய பிரபல மருந்தகங்களில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள்தான்.

திரும்பவும் நாம் தொடர்புகொண்டபோது, அந்த நபர் ஒரு கடையின் அடையாளத்தைக் கூறி அங்கிருக்கும் ஆளின் அடையாளத்தையும் கூறினார். அவரிடம் சென்று மருந்தைப் பெறுமாறும் சொன்னார். ரூபா 3,000 வரையில் செலவாகும் என்று அவர் தெரிவித்தார்.

### கடையில் கதையாடல்

இப்போதும் முன்னர் உதவிய நண்பரே உதவிக்கு வந்தார். பரட்டைத் தலையும் அழுக்கேறிய உடையுமாகப் பார்ப்பதற்கு கொஞ்சம் பிரச்சினையால் பதற்றப்பட்டவராகத் தன்னைக் காட்டிக்கொண்டு அவர் தயாராகி இருந்தார். நகரில் எமக்குக் குறிப்புச் சொல்லப்பட்டிருந்த கடை சிறியதாக, வெளிச்சமற்றதாக இருந்தது. அங்கே ஒரு மருந்தகம் இருக்கின்றது என்றே அடையாளப்படுத்த முடியாததாக இருந்தாலும் நகரத்தில் நடுநாயகமாக நின்றிருந்தது.

நண்பர் கடைக்குச் சென்று பரிதாபமாக முகத்தை வைத்துக்கொண்டு மருந்தின் பெயர் எழுதப்பட்ட துண்டுக்காகிதச் சீட்டை நீட்டினார். வாங்கிப் பார்த்தவர் எத்தனை மாதக் கர்ப்பம் என்று கேட்ட பின்னர் மாலை 4 மணிக்கு வந்தால் மருந்தைப் பெறலாம் என்றார். ஆனால் மருந்துக்கு 4,000 ரூபா ஆகும் என்றார். நண்பர் எல்லாவற்றுக்கும் தலையாட்டினார். "இந்த மருந்தால் ஏதாவது பிரச்சினை வருமா?" என்று கேட்டார். "அதெல்லாம் ஒன்றுமில்லை. எல்லோரும் வந்து வாங்கிப் போகிறார்கள். மருந்து தரும்போது எப்படி பயன்படுத்துவது என்று சொல்லித்தானே தருவேன்" என்றார் கடைக்காரர். நண்பர் மேலும் தயக்கத்துடன் "நிறையப்பேர் வந்து வாங்குகிறவர்களோ?" என்றார். "நான் எத்தினை பேருக்குக் குடுத்திருக்கிறன். ஒன்றுக்கும் பயப்படத்தேவையில்லை" என்று உள்ளன்போடு நம்பிக்கையூட்டினார்.

நண்பரோ விட்டபாடில்லை. தயங்கித் தயங்கி, அங்கே இப்படி துண்டுச் சீட்டுடன் ஏதேதோ மருந்துகள் கேட்டு வரும் ஒரு சிலருக்கும் இடம் ஒதுங்கி விட்டு மசங்கிக் கொண்டு நின்றார். "நாளைக்கு உடனே கிடைக்குமோ?" என்று தயக்கத்துடன் அவரது கேள்வி தொடர்ந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தைக் கொடுத்தால் உடனே தரலாம்" என்றார் கடைக்காரர். "மருந்தின் விலையைக் கொஞ்சம் குறைக்க முடியாதா?" என்று ஏதோ நாளாந்த சாப்பாட்டுக்கே கஷ்டப்படுபவனைப் போன்று சிரமப்பட்டு முகபாவனையை வைத்துக்கொண்டு நண்பரும் விட்டபாடில்லை.

கடைக்காரர் மசிவதாக இல்லை. "இது மருத்துவர்களுக்குத்தான் வரும் மருந்து. அவர்கள்தான் எங்களிடம் தந்திருக்கிறார்கள். இந்தப் பணத்தை மருத்துவரிடம் கொடுத்துவிடுவோம். நீங்கள் மருத்துவரிடம் போனால் 5,000 ரூபா வரையில் செலவாகும். இங்கு நேரடியாக வாங்குவதால் 4,000 ரூபாவுக்குக் கொடுக்கிறோம்." வியாபாரத்தில் கறாராக நின்றார் அவர்.

மறுநாள் நண்பர் அதே வேடஉடை ஒப்பனையில் சென்று பணத்தைக் கொடுத்ததும் 'ஜென்டில்மேனாக' சொன்னபடி நான்கு வில்லைகள் கொண்ட மருந்தை உடனேயே எடுத்துக் கொடுத்தார் கடைக்காரர். அதனைப் பயன்படுத்த வேண்டிய முறைகள் பற்றியும் அந்த வயதான நபர் விளக்கினார். எந்தப் பிரச்சினையும் வராது என்று அவர் உறுதியான உத்தரவாதமளித்தார்.

## மருந்துக் கடத்தல்

அந்த மருந்து கருக்கலைப்புக்காகப் பயன்படுத்தப்படும் இந்திய மாத்திரை என்கிறார்கள் மருத்துவர்கள். யாழ்ப்பாணத்தில் அதிகமாக இப்போது பயன்பாட்டில் உள்ளதாம். இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் இந்த மருந்து சட்டவிரோதமாக விற்கப்பட்டு வருகின்றபோதும் யாழ்ப்பாணத்தில் இதன் விற்பனை அதிகரிப்பு மக்களிடம் பெரும் அதிர்ச்சியையும் பயத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

குறித்த மருந்துக்கு இலங்கையில் இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை என்றாலும் யாழ்ப்பாணத்தில் அந்த மாத்திரைகள் பெருமளவில் விற்பனையாவதாகத் தானும் அறிந்திருக்கிறார் என்கிறார் யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி சிவரூபன். ஆனால் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் எதுவும் தனக்கு இல்லை என்று அவர் கைவிரிக்கிறார்.

கருக்கலைப்புக்கான வேறு பல மாத்திரைகளும் தனியார் மருந்தகங்களில் விற்கப்படுகின்றன என்கிறார்கள். எத்தனை மாதக் கர்ப்பம் என்பதைப் பொறுத்து தாங்கள் பொருத்தமான மருந்துகளைத் தருவோம் என்று விற்பனையாளர்கள் உறுதியளிக்கிறார்களாம்.

பாதுகாப்பானது மற்றும் பயன்படுத்த இலகுவானது என்பதால் இரு மருந்துகள் (அவற்றின் பயன்பாட்டை மேலும் ஊக்குவிக்காமல் இருக்க அவற்றின் பெயர் இங்கு தவிர்க்கப்படுகிறது.) அதிக அளவில் யாழ்ப்பாணத்தில் விற்பனையாவதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## வலையமைப்பு

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோத கருக்கலைப்புக்கான மருந்துகளை விற்பதற்கு ஒரு வலையமைப்பே செயற்படுகின்றது என்பதை இந்த விசாரணையின் போது 'உதயன்' அறிந்தது.

"எத்தனை மாதக் கர்ப்பம் என்பதற்கு ஏற்ப எங்களிடம் மருந்துகள் உள்ளன. பயப்படத் தேவையில்லை. நாங்கள் தரும் மருந்துக்கும் கரு கலையாவிட்டால், பின்னர் அந்தப் பெண்ணை வைத்தியசாலையில் சேர்ப்பித்து தேவையான சிகிச்சையையும் நாங்கள் தருவோம். அதற்கு மூன்று நாள்கள் தேவைப்படும். வீட்டில் சந்தேகம் ஏற்படாத வகையில், வைத்தியசாலையில் தங்கியிருக்கத் தேவையில்லாமல் உரிய வகையில் நாங்கள் ஏற்பாடு செய்வோம். 20 ஆயிரம் ரூபா வரையில் செலவாகும். ஒரு வேளை நாங்கள் தரும் மருந்துகளைப் பயன்படுத்தி அதிக இரத்தப் போக்குப் போன்ற பின் விளைவுகள் ஏதாவது ஏற்பட்டாலும் எங்களிடம்தான் வரவேண்டும். நாங்கள் உரிய பரிகாரங்களைச் செய்வோம்" என்று எங்கள் விசாரணைக் குழுவின் உறுப்பினர் ஒருவரிடம் விரிவாக விளக்கினார் 22 வயதேயான மருந்துப் பொருள் விற்பனைப் பிரதிநிதி . ஆனால் அவரிடம் இருந்து மருந்தைப் பெறுவதற்கான எமது முயற்சி தோற்றுப்போனது. எங்கள் குழுவைச் சேர்ந்தவர் தனது உறவினரான பெணுக்குத் தேவை என்றே அதனைக் கேட்டிருந்தார். எனினும் அவர் ஒரு பத்திரிகையாளர் என்பது தெரியும் என்பதால் சம்பந்தப்பட்ட பெண் நேரடியாக வந்தாலன்றி மருந்தைப் பெற முடியாது என்பதில் விற்பனைப் பிரதிநிதி உறுதியாக இருந்தார்.

சட்டவிரோதக் கருக்கலைப்பு மருந்து விற்பனை வலையமைப்பில் மருந்துப் பொருள் விற்பனைப் பிரதிநிதிகளின் (Medical rep.) பங்களிப்பு மிக அதிகமானது என்கிறது மருத்துவத்துறை. அதுதவிர இதற்கான முகவர்களும் இருக்கிறார்களாம்.



## பகல் கொள்ளையும் தாராளம்

சட்டவிரோத கருக்கலைப்பு நடவடிக்கைகள் இரகசியமாக மேற்கொள்ளப்படுபவை என்ற காரணத்தை வைத்துக் கொண்டு பாதிக்கப்பட்டவர்களை தமது வலைக்குள் வீழ்த்திய பின்னர் பணத்தைக் கொள்ளையடிக்கும் சம்பவங்களும் அவர்களைத் தொடர்ந்து துஸ்பிரயோகம் செய்யும் சம்பவங்களும் கூட நடந்திருப்பதாக 'உதயன்' அறிந்தது.

சட்டவிரோத மருந்துகளைப் பயன்படுத்திக் கருக்கலைப்புச் செய்து கொண்டதால் அதிக இரத்தப் போக்கு உள்ளிட்ட உபாதைக்கு உள்ளான, பாதிக்கப்பட்ட பெண்கள் ஒரு மாதத்தில் சாராசரியாக 5 முதல் 10 வரையானோர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்படுகின்றனர் என்றும் 'உதயன்' அறிந்தது.

உண்மையில் கருக்கலைப்புச் செய்வோரின் எண்ணிக்கை அதிகம் என்றும் இதில் வெறும் 5 சதவீதம் மட்டுமே அரச வைத்தியசாலைகளுக்கு வருவதாகவும் மருத்துவத்துறையினர் கூறுகின்றனர்.

காதலிப்பதாகக் கூறி இளைஞர்களால் ஏமாற்றப்படும் இளம் பெண்கள் (குறிப்பாகப் பாடசாலை மாணவிகள்), விதவைகள், பாலியல் தொழிலாளிகள் போன்றோரே அதிக எண்ணிக்கையில் சட்டவிரோதக் கருக்கலைப்பை நாடுகின்றனர் என்று மருத்துவத்துறை கூறு கின்றது.

குடும்ப வறுமை காரணமாக மேலதிக குழந்தை வேண்டாம் என்று கருக்கலைப்புச் செய்வோரின் எண்ணிக்கை கணிசமானது என்பதையும் மருத்துவத்துறை மறுக்கவில்லை.

காதலிப்பதாகக் கூறி இளைஞர்களால் ஏமாற்றப்படும் இளம் பெண்கள் (குறிப்பாகப் பாடசாலை மாணவிகள்), விதவைகள், பாலியல் தொழிலாளிகள் போன்றோரே அதிக எண்ணிக்கையில் சட்டவிரோதக் கருக்கலைப்பை நாடுகின்றனர் என்று மருத்துவத்துறை கூறுகின்றது.

## சட்டவிரோத மருந்துப் பயன்பாடு

"யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதக் கருக்கலைப்பில் மட்டும் ஊடகங்கள் தமது கவனத்தைக் குவிக்க வேண்டிய அவசியமில்லை, ஏனெனில் இங்கு சட்டத்துக்குப் புறம்பான மருத்துவப் பயன்பாடு (Illegal medical practice) எல்லா வகையிலும் அதிகரித்திருக்கிறது. அதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு கருக்கலைப்பைவிட அதிகமானது; மோசமானது" என்கிறார் மருத்துவர் எஸ்.சிவரூபன்.

யாழ்ப்பாணத்தில் உள்ள 60 வீதமான மருந்தகங்கள் (Medical shop or Pharmacy) பதிவுசெய்யப்படாதவை. இவற்றைப் பதிவு செய்யுமாறும் இல்லையேல் அவற்றின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிராந்திய சுகாதார அதிகாரி (RDH) கேதீஸ்வரன் இரு வருடங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

ஆனால், பதிவு செய்யாமல் தொடர்ந்து இயங்கும் மருந்தகங்களுக்கு எதிராக இதுவரையில் காத்திரமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை.

யாழ். மாவட்டத்தில் 105 மருந்தகங்கள் இயங்குகின்றன. அவற்றில் 61 மருந்தகங்கள் உரிய முறைப்படி பதிவுசெய்யப்படவில்லை. யாழ். நகரத்தினுள் மட்டும் 34 உள்ளன. அவற்றில் 16 மட்டுமே பதியப்பட்டுள்ளன என்று தெரிவிக்கின்றன பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுப் புள்ளிவிவரங்கள். இவற்றை உடனடியாக மூடிவிட்டால் பின்தங்கிய இடங்களில் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள் என்ற வாதம் ஒன்று முன்வைக்கப்படுகிறது. இந்த வாதம் எந்தளவு தூரம் நியாய மானது என்பது கேள்[illegible] நின்றாலும் யாழ்ப்[illegible] படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதல் கோணல் முற்றிலும் கோணல்

## பேரறிவாளனின் சோகக்கதை

கு.சந்துரு

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனையை எதிர் நோக்கியிருக்கும் மூவரில் ஒருவரான பேரறிவாளன் வழக்கு விசாரணையின்போது கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில், இந்திய மத்திய புலனாய்வு அமைப்பான சி.பி.ஐயில் காவல் ஆணையாளராக இருந்த வி.தியாகராஜனே திருத்தம் செய்தார் என்று ஒப்புக்கொண்ட செய்தி, அனைவரையும் அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது. ஒப்புதல் வாக்குமூலத்தில் செய்யப்பட்ட திருத்தமே இறுதியாகப் பேரறிவாளனுக்குத் தூக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்துவிட்டது.

### தடா விசாரணை

ராஜீவ் காந்தி கொலை வழக்கு ஆரம்பம் முதலே முறையாக நடத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து கூறப்பட்டு வந்திருக்கிறது. அன்றிருந்த தடா (தீவிரவாத மற்றும் சீர்குலைவுகள் தடுப்புச் சட்டம்) சட்டத்தின்படி வழக்கு விசாரணை சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது. பார்வையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. மாவட்டக் கண்காணிப்பாளராக உள்ள பொலிஸ் அதிகாரி முன்னால் குற்றவாளி கொடுக்கும் வாக்குமூலம் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்தத் தீர்ப்பின் மேல் உச்ச நீதிமன்றத்தில் மட்டுமே முறையீடு செய்ய முடியும்.

தடா சட்டத்தைத் திரும்பப்பெற இந்தியா முழுவதும் கோரிக்கை எழுப்பியதில் 2004இல் அந்தச் சட்டம் நீக்கப்பட்டாலும் அந்தச் சட்டத்தின்கீழ் ஏற்கெனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைத் தொடரலாம் என்பதால், இன்னும் பலர் அந்தச் சட்டத்தின்கீழ் விசாரணையில் உள்ளனர் என்பது வேதனைக்குரிய விவகாரம்.

பேரறிவாளன் உட்பட 26 பேருக்குத் தூக்குத் தண்டனை வழங்கிய சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் போடப்பட்ட மேன்முறையீட்டை விசாரித்த நீதிபதி கே.டி.தோமஸ் அடங்கிய அமர்வு, 22 பேரின் தூக்குத் தண்டனையை நீக்கி நான்கு பேருக்கு அந்தத் தண்டனையை உறுதி செய்தது. அந்த வழக்கு தீவிரவாதக் குற்றத்தின் கீழ் வராது என்று தீர்ப்பளித்த பிறகும், வழக்கை சாதாரண குற்றவியல் நீதிமன்றத்தின் மறு விசாரணைக்கு அனுப்பவில்லை.

### சிறுபான்மைத் தீர்ப்பு

பிரிட்டிஷ் அடிமைத்தனத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட இந்தியச் சான்றியல் சட்டத்தின்கீழ், பொலிஸாரால் பெறப்படும் வாக்குமூலம் சான்றாக எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது என்று கூறப்பட்டிருப்பது பொலிஸார் மீது அவர்களே எத்தகைய நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்பதை உணர்த்தும். குற்றத்தை நிரூபிக்க சித்திரவதைகள் மூலம் ஒப்புதல் வாக்குமூலங்கள் பெற வாய்ப்பு இருப்பதால், அந்த வாக்குமூலங்களுக்குச் சட்டத் தடை விதிக்கப்பட்டது. ஆனால், தடா சட்டத்திலோ மாவட்டப் பொறுப்பிலுள்ள காவல் அதிகாரிகளிடம் கொடுக்கப்படும் வாக்குமூலங்களைக் குற்றவாளிக்கு எதிரான சாட்சியங்களாக ஏற்றுக் கொள்ளலாம் என்று கூறப்பட்டது.

தடா சட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் போடப்பட்ட (கர்தார் சிங்-எதிர்- பஞ்சாப் மாநிலம், 1994) வழக்கில் இந்தச் சட்டப்பிரிவு செல்லும் என்று நான்கு நீதிபதிகள் கூறிய போதும் நீதிபதி கே.ராமசாமி அந்தப் பிரிவு செல்லாது என்று சிறுபான்மை தீர்ப்பு வழங்கினார். சாதாரண பொலிஸார் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவது முறைகேடாகப் பயன்படுத்தப் படலாம் என்று சட்டம் இருப்பினும் மாவட்ட நிலையில் உள்ள காவல் அதிகாரி தரத்தைச் சேர்ந்தவர்கள் (ஐ.பி.எஸ்.) தவறான செயலில் ஈடுபட மாட்டார்கள் என்று பெரும்பான்மையான நீதிபதிகள் நம்பிக்கை தெரிவித்திருந்தனர்.

நீதிபதி கே.ராமசாமி மட்டும் தனது தனித் தீர்ப்பில் மாவட்டப் பொலிஸ் அதிகாரிகளும் தங்களது மாவட்டத்தில் உள்ள குற்ற வழக்குகளைத் துரிதமாகத் தீர்க்க ஒப்புதல் வாக்குமூலத்தை முறைகேடாகப் பெற்று தண்டனையை வாங்கித்தரவே விழைவார்கள் என்பதால், இந்தச் சட்டப் பிரிவு தவறாகப் பயன்படுத்தப்படும் என்று அன்றே தீர்க்கதரிசனமாகக் குறிப்பிட்டிருந்தார். பேரறிவாளனிடமிருந்து பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைத் தானே திருத்தியதாக 22 ஆண்டுகளுக்குப் பின் விசாரணை அதிகாரி கூறியிருப்பது இக்கூற்றையே நிரூபிக்கிறது.

தடா சட்டம் திரும்பப் பெறப்பட்டாலும், பின்னால் பொடா சட்டமும் (ப்ரிவென்ஷன் ஒஃப் டெரரிஸ்ட் அக்ட்) அதுவும் நீக்கப்பட்ட பிறகு, தற்போது உபா (அன்லோஃபுல் அக்டிவிட்டீஸ் ப்ரிவென்ஷன் அக்ட்) சட்டமும் அதே போன்ற பிரிவுகளுடன் பவனி வருவது இந்தியாவில் அனைவரையும் அச்சப்பட வைக்கிறது.



### சாவுக் கொட்டடியில் தவம்

நால்வரது தூக்குத் தண்டனையையும் நீக்கக் கோரிய கருணை மனுக்களை அன்றைய ஆளுநர் பாத்திமா பீபி தள்ளுபடி செய்ததை எதிர்த்து பேரறிவாளனும் மற்ற மூன்று தூக்குத் தண்டனைக் கைதிகளும் கொடுத்த மனுவை ஏற்றுக்கொண்ட சென்னை உயர் நீதிமன்றம் அவர்களது மனுவைச் சட்டப்படி பரிசீலனை செய்யுமாறு அன்றைய முதல்வர் கருணாநிதியின் அமைச்சரவைக்கு உத்தரவிட்டது.

நளினிக்கு மட்டும் தூக்குத் தண்டனையை நீக்கிவிட்டு, மற்றவர்களது மனுக்களைத் தள்ளுபடி செய்ய அமைச்சரவை ஆளுநருக்குப் பரிந்துரைத்ததில் நளினியின் தலை மட்டும் தப்பியது. மற்ற மூவரின் கருணை மனுக்கள் குடியரசுத் தலைவரின் பரிசீலனையில் 19 ஆண்டுகள் கழிந்த பிறகு தள்ளுபடி செய்யப்பட்டன. இதுபற்றி மத்திய அரசின் பரிந்துரையைத் தெரிந்துகொள்ள தகவல் அறியும் சட்டத்தின் கீழ் முயன்ற பேரறிவாளனின் மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. குடியரசுத் தலைவர் கருணை மனுக்களைப் பரிசீலிப்பதில் தாம தம் ஏற்பட்டால், தூக்குத் தண்டனைக் கைதி களின் தண்டனையை ஆயுள் தண்டனை யாக மாற்ற முடியுமா? என்று தொடரப்பட்ட வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் ஐந்து நீதிபதி கள் அடங்கிய அரசமைப்பு அமர்வின் தீர்ப் புக்காகக் காத்திருக்கின்றன.

குடியரசுத் தலைவர் கருணை மனுக்களைப் பரிசீலிப்பதில் தாம தம் ஏற்பட்டால், தூக்குத் தண்டனைக் கைதி களின் தண்டனையை ஆயுள் தண்டனை யாக மாற்ற முடியுமா? என்று தொடரப்பட்ட வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் ஐந்து நீதிபதி கள் அடங்கிய அரசமைப்பு அமர் வின் தீர்ப் புக்காகக் காத்திருக்கின்றன.

நான்கு பேருக்கும் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்த நீதிபதி கே.டி.தோமஸ், தான் அந்தத் தீர்ப்பில் கைதிகளுக்குத் தூக்குத் தண்டனை விதித்தது தவறு எனக் கருதுகிறார் என்று ஒரு பேட்டியில் இப்போது கூறியுள்ளார். அந்த வழக்கை விசாரித்த சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவர் டி.ஆர்.கார்த்திகேயனும் அந்தக் குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை என்பது அதிகபட்சத் தண்டனை என்று வேறொரு பேட்டியில் கூறியுள்ளார். தற்போது ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்த சி.பி.ஐ. அதிகாரி தியாகராஜன், குற்ற உணர் வின் உந்துதலால் பேரறிவாளனின் வாக்குமூலத்தைத் திருத்தியது தவறு என்று தற்போது பகிரங்கப் பேட்டி ஒன்றில் கூறியுள்ளார். முதல் கோணல் முற்றும் கோணல் என்று சொல்வார்கள். இத்தனை கேலிக்கூத்துக்குப் பிறகாவது மூன்று கைதிகளுக்கும் இந்திய மத்திய அரசு கருணை அளித்து சாவுக் கொட்டடியிலிருந்து அவர்களை விடுவிக்க முன்வருமா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடராசா இராமநாதன்




# வெள்ளைப் பூனை

முகாமையாளரின் கண்டிப்பான உத்தரவின் பேரில் கோவைகள் அனைத்தையும் சீர் செய்ய வேண்டிய கட்டாய நிலையில் கோவைகளைப் பார்வையிட்டுச் சரி செய்து கொண்டிருந்தேன். சக பணியாளர் இராசலிங்கமும் மனைவியின் பிரசவம் காரணமாக ஒரு வாரம் லீவு போட்டமையால் அவரது வேலையும் என் தலைமேல்தான். சின்ன யன்னல் ஊடாக வரும் காற்றும் வெளிச்சமும் போதவில்லை. மின் விளக்கும் மின் விசிறியும் சற்று ஆறுதலைத் தந்தன. எனது மேசையின் முன்னால் வலது பக்கமும் இடது பக்கமுமாய் பார்த்த கோவைகளும் பார்க்கப்பட வேண்டிய கோவைகளும் அடுக்கப்பட்டிருந்தன.

"ரகு... ரகு...." என்னைத் தான். ரகுநாதன் என்ற பெயரைச் சுருக்கமாக ரகு என்றுதான் அழைப்பது வழக்கம். யார் அழைப்பது...? நிமிர்ந்து பார்த்தேன். புனிதம் அன்ரி கைகளில் தேநீரோடு நின்று கொண்டிருந்தார். புனிதம் அன்ரியின் வீட்டின் முன் பக்க விறாந்தையோடு கூடிய ஓர் அறையில்தான் எங்கள் அலுவலகம் இயங்கிக் கொண்டிருந்தது. முகாமையாளர், நான் மற்றும் எங்களோடு இன்னும் இருவர் என நான்குபேர் வேலை செய்யும் ஒரு சின்ன அலுவலகம் இது.

தேநீர் குவளையை வாங்கி மேசையில் வைத்தபடி புனிதம் அன்ரியைப் பார்த்தேன். வழமைக்கு மாறாக அழகாக உடுத்தி எங்கோ புறப்படுவதற்குத் தயாரான வேளை தேநீரைக் கொண்டு வந்து தந்திருந்தார்.

"என்ன அன்ரி! எங்கயோ வெளிக்கிட்டாச்சுப் போல கிடக்கு..?"

"ஓம் ரகு! எங்கட இவற்றை தம்பியாரின்ர மகனுக்கு நாளைக்குப் பிறந்தநாள். அதுதான் நாங்கள் குடும்பமாக அங்க போறம். நாளைக்கு நிண்டு நாளையிண்டைக்குத்தான் வருவம். அதுதான்...."

என்னிடம் எதையோ எதிர்பார்ப்பதுபோல் புனிதம் அன்ரியின் பதில் தொக்கி நின்றது. "...... அதுதான் எங்கட பூனைக்கு நீங்கள் நாளைக்கு மத்தியானம் சாப்பாடு வைக்க வேணும்...." கெஞ்சும் தோரணையில புனிதம் அன்ரி கேட்டிருந்தார்.

"ஓம் அன்ரி! இது என்ன பெரிய விசயமே. நான் நாளைக்கு மதியம் சாப்பிட்டிட்டு வரேக்க கொண்டு வந்து வைக்கிறன்" புனிதம் அன்ரி போய்விட்டார். புனிதம் அன்ரி, கணவர், இரண்டு குழந்தைகள் என்று சிறிய குடும்பம். சின்னக் காணி. அதற்குள் ஒரு வீடு என்பதால் ஆடு, மாடு, கோழி என இவற்றை வளர்க்க முடியாத ஒரு சூழல். நாய் கூட இல்லை. எங்கிருந்தோ வந்த பூனை மட்டும் வளர்ந்து வருகிறது. அந்தப் பூனை வளர்வதால் எங்களுக்கும் நல்லதுதான். எலிகளின் தொல்லை இல்லை. அதனால் அலுவலகக் கோவைகள் எலிகளுக்குத் தீனியாவதில் இருந்து தப்பிவிடுகின்றன.

புனிதம் அன்ரி வீட்டுப் பூனை அந்த வீட்டின் எல்லா இடங்களிலும் சுதந்திரமாக நடமாடும் நல்ல அழகான வெள்ளைப்பூனை. ஒளி வீசும் கண்கள். ஆண்டு ஒன்றில் பூனையைப் பற்றி ஐந்து வசனாங் கள் எழுதும்போது எழுதியதைப் போன்று ஒருவால், பஞ்சு போன்ற பாதங்கள்....

பஞ்சு போன்ற பாதங்கள் என்று எழுதியதைப் போன்றுதான், அந்தப் பூனை வருவதும் தெரியாது. போவதும் தெரியாது அவ்வாறு திட்டமிட்டபடி அதன் அசைவுகள்... எப்படித்தான் இந்த எலிகள் வாழ்க்கை நடத்துகின்றனவோ! அம்மாடியோவ்....

இந்தப் பூனைகளைப் பற்றித்தான் ஏராளமான பாட்டுக்கள் இருக்கின்றனவே.

சின்னச் சின்னப் பூனை. சிறிய நல்ல பூனை... பாரதியார் கூட ஒற்றுமையை வெளிப்படுத்தி பூனை பற்றிய பாடல் ஒன்றைப் பாடியுள்ளார்.

*வெள்ளை நிறத்தொரு பூனை- எங்கள்*
*வீட்டில் வளருது கண்டீர்*
*பிள்ளைகள் பெற்றதப் பூனை - அவை*
*பேருக்கொரு நிறமாகும்*

பூனையையும் நாயையும் எங்கட வீடுகளில வளர்த்தாலும் நாய் சாப்பாட்டுக்கு எங்களைத் தான் நம்பியிருக்கும். ஆனா பூனை அப்படியில்லை. அது தன்ர சாப் பாட்டைத் தானே எப்படியும் தேடிக் கொள்ளும்... பூனைகள் பற்றிக் கதைக்கும்போது யாரோ ஒருவர் சொன்ன தத்துவம் நினைவில் வந்தது.

பூனைகள் இரவிரவாக நித்திரை கொள்ளமாட்டா. எலிகளைப் பிடிப்பதற்கென்றே வீட்டுச் சுவரில் ஏறி கூரையில் நடந்து, முகடுகளின் வாசலில் நின்று... எப்படியோ எலிகளைப் பிடித்தேயாக வேண்டும்.

இரவில் நாங்கள் நித்திரை கொண்டு, இடையில் விழித்துப் பார்த்தால் எலிகள் முகட்டு வளையால் அல்லது சுவருக்கு மேலால் பாய்ந்து பாய்ந்து ஓடித் திரிவதைக் காண முடியும். பூனையில் பார்வைபட்டு அல்லது பூனையில் அசுமாத்தம் ஏதும் அறிந்ததால் தான் எலிகளுக்கு அந்த அவலம் அல்லது சஞ்சலம்.

இப்படியிருந்தாலும் பூனை குறுக்கால போனால் கூடாது என்றொரு நம்பிக்கையும் கூட இருக்கிறது.

பூனைகள் பற்றி நினைக்கும்போது நாங்கள் பந்து ஒன்றை உருட்டிவிட்டால் தன் முன்னங் கால்களால் தட்டி, பின் மற்றக் காலால் தட்டி, ஓட வைத்து வாயாற் கௌவ்வி, மீண்டும் தட்டி ஓட வைத்து வாயாற் கௌவ்வி...

இவற்றைப் பார்த்தவர்கள் அது வேட்டை பழகுது என்று சொல்வார்கள். அவை எல்லாங் கூட நினைவில் வரும். இப்படித்தான் அவசர எழுத்து வேலை ஒன்று. வீட்டில் இருந்து எழுதிக் கொண்டிருந்தேன். நேரம் நடு இரவைத் தாண்டியிருந்தது. பூனையின் அசைவும், எலிகளின் கலவரமுமாய் இரவு கழிந்து கொண்டிருந்தது. காலையில் எழுந்து பார்த்தபோது எலியின் வாய்ப்பாகமும் சில எலும்புத் துண்டுகளும் எங்கள் வீட்டு விறாந்தையின் மூலையில் எச்சங்களாக இருந்தன. பூனையின் பகல் உறக்கத்தைப் பார்த்தாலே மிக ஆச்சரியமாகத் தோன்றும். அப்படி ஒரு நித்திரை, எவ்வித அச்சமும் இல்லாத, எல்லாவற்றையம் மறந்த ஒரு பரிபூரண உறக்கம், பெட்டியோ, வைக்கோலோ, பழைய துணியோ போதும். ஒரு ஒதுக்கான இடம். அந்த இடத்தைத் தெரிவு செய்து கடந்த இரவின் விழிப்பை ஈடு செய்யும் சுகமான உறக்கம். அசைவற்ற உறக்கம் அந்த உறக்கத்தைப் பார்க்கும் போதெல்லாம் கடும் உழைப்பின் பின்னான பெறுமதியான ஓய்வைக் காண முடியும்.

சில வேளைகளில் வேட்டைகள் கிடைக்காத போதிலெல்லாம் சமையற் கட்டுக்குள் புகுந்து சட்டி,

> **தன் பற்களால் இரையை இறுக்கிப் பிடித்தவாறே பூங்கன்றுகளுக்குள்ளால் ஓடி ஓடி என் அடிகளுக்குத் தப்பிக் கொண் டேயிருந்தது. அந்தப் பூனை, பூனையின் வாயில் அகப்பட்ட அணிலோ தவிப்பது எனக்குப் புரிந்தது. பெண்ணா..?**

பானைகளை உருட்டி அங்கிருந்தவற்றைச் சாப்பிட்டு தும்புத் தடியால் அல்லது கையில் அகப்பட்ட தடியால் அடிவாங்கிய சரித்திரங்களும் பூனைகளுக்கு உண்டு. அவை சதியோ தவறோ என்று பூனைகளுக்குத் தெரியாது. தங்களுக்குத் தேவையான வேட்டை என்றே அவை கருதுகின்றன. அதன் போதான அடிகளும் உதைகளும் அவைகளுக்குச் சாதாரணமானவைதானே.

அலுவலக நேரம் முடிந்துவிட்டது. மதியம் புறப்பட்டுப் போன முகாமையாளர் இன்னமும் வரவில்லை. இன்னும் சொற்ப கோவைகளே பார்வையிட வேண்டியுள்ளன. நாளை பார்ப்போம் என எண்ணியபடியே அலுவலகத்தைப் பூட்டுமாறு அலுவலக உதவியாளரிடம் கூறினேன். புனிதம் அன்ரியின் வீட்டை எட்டிப் பார்த்தேன். வீட்டில் யாரும் இல்லை.

வீடு நோக்கிய எனது பயணம் தொடங்கியது. இடையில் பேக்கரியில் இரவுச் சாப்பாட்டுக்கான பாண் வாங்கி ராதா கடையில் மகளுக்குத் தேவையான மூன்று கட்டுக் கொப்பி, பேனா என்பன வாங்கி வீடு சென்றேன். மீண்டும் ஒரு சுற்றுவட்ட ஒழுங்கில் சூரியன் கிழக்கில் உதயம். உலகின் எல்லா ஜீவராசிகளும் தங்கள் தங்கள் சுற்றுவட்ட ஒழுங்குகளில் தங்கள் தங்கள் பயணங்களைத் தொடர்ந்தன. அந்த ஒழுங்கில் எனது மிதிவண்டியும் அலுவலகம் நோக்கிப் பயணித்தது.

அலுவலக கேற்றின் ஒரு திறப்பு என்னிடம் இருந்ததால் 'கேற்' றைத் திறந்து மிதிவண்டியை முற்றத்து மாமரத்தில் சாத்தினேன். அகன்று கிளைகள் பரப்பிய மாமர நிழலில் மோனத்தவமிருந்தது புனிதம் அன்ரியின் அந்த வெள்ளைப் பூனை.

அந்தப் பூனைக்குப் புனிதம் அன்ரி மதியச் சாப்பாடுதானே வைக்கச் சொன்னவர். ஆனால் பூனை காலையில் ஏதும் சாப்பிட்டதோ தெரியாது.

எண்ணும்போது மனதுக்குள் இலேசான வலியெடுத்தது. அது ஏதும் வேட்டை பிடித்துச் சாப்பிட்டிருக்கும் என்று உள்மனம் சொல்ல சற்று ஆறுதலாக இருந்தது. அலுவலக அறையைத் திறந்து தும்புத்தடியை எடுத்து அலுவலகத்தைக் கூட்டிச் சுத்தஞ் செய்து விறாந்தையைக் கூட்டி வெளியில் தள்ளி வாசலைக் கூட்டும்போது மாமரத்தில் இருந்து ஏதோ 'பொத்' என்று விழும் ஓசை என் காதுகளில் கேட்டது.

என்னவாயிருக்கும்... என்று திரும்பிப் பார்க்கையில் மாமரத்துக் கிளைகளில் ஓடித்திரிந்து விளையாடிய அணில்கள் இரண்டே 'பொத்' என்று நிலத்தில் வீழ்ந்து வட்டமாக ஓடின. கண்ணிமைக்கும் பொழுதில் அவற்றில் ஒன்றை மாமரத்தின் கீழே மோனத் தவமிருந்த பூனை வாயில் கௌவிக் கொண்டது. அதைப் பார்த்த எனக்கோ நெஞ்சு 'பக்' என்றது. மாமரத்தில் இருந்து வீழ்ந்த மற்ற அணில் வேகமாக ஓடி மரத்தில் ஏறிக் கொண்டது. அது இழந்து போன தன் இணையை எண்ணி எண்ணி ஒரு கிளையில் அமர்ந்து துடித்துக் கொண்டிருந்தது. காதலர்களான அந்த ஜோடியில் ஒன்று அந்த வெள்ளைப் பூனையின் வாயில் அகப்பட்டுத் தன் இறுதிக் கணத்தை எண்ணிக் கொண்டிருந்தது.

நான் தும்புத்தடியை ஓங்கியபடி பூனையை விரட்டினேன். தன் பற்களால் இரையை இறுக்கிப் பிடித்தவாறே பூங்கன்றுகளுக்குள்ளால் ஓடி ஓடி என் அடி களுக்குத் தப்பிக் கொண் டேயிருந்தது அந்தப் பூனை பூனையின் வாயில் அகப்பட்ட அணிலோ தவிப்பது எனக்குப் புரிந்தது. அதை உயிரோடு விடு விப்பதற்கான எனது பிரயத் தனங்கள் எவையுமே பலிக்க வில்லை. அந்த அணில் ஆணா... பெண்ணா..?

அவை காதல் ஜோடிகளா...? அப்படியாயின் இன்பக்கிளுகிளுப்பில் அவை ஒன்றை ஒன்று துரத்தி விளையாடினவா? இங்கே கீழே மோனத் தவமிருந்த வெள்ளைப் பூனையை அவை காணவில்லையா? அல்லது தங்கள் உச்ச இன்பநிலையில் இந்த எச்சரிக்கையை அவை மறந்துவிட்டனவா? சே.....

அந்த அணில்களின் பிரிவை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. என் மனந்துடித்தது. பெருமூச்சொன்றை விட்டபடியே மீண்டும் பூனையைப் பார்த்தேன். அதன் வால் நிலத்துக்குச் சமாந்தரமாய் விறைத்து நின்றது. வயிறு ஒட்டியிருந்தது. அதன் கண்களை உற்றுப் பார்த்தேன். அதன் விழிகள் என்னோடு பேசின.

".... நான் இந்த இரைக்காக எவ்வளவு நேரம் கார்த்திருந்தேன் தெரியுமா...? எத்தனை அணில்கள் ஓடி ஓடி என்னை ஏமாற்றிப் போய்விட்டன எனக்கான உணவுக்காக நான் காத்திருந்தேன். நான் எதை உண்பது? புல்பூண்டுகளை என்னால் உண்ண முடியுமா?

காலையில் இருந்து தவங்கிடந்து நான் பிடித்த அணில் இது என் உழைப்பின் அறுவடை. எப்படி நான் இதை இழக்க முடியும். தடி கொண்டடித்து இந்த அணிலை மீட்க முனைகின்றாயோ.. என் பசியை ஒருமுறை நீ எண்ணிப்பார்...!"

பூனையின் விழிகளில் இருந்து என் பார்வையை விலக்கி நிலத்தைப் பார்த்து என் நெற்றியை தடவிக் கொண்டேன். சற்று நேரத்தின் பின் நிமிர்ந்து பார்த்தபோது அந்தப் பூனையை அங்கு காணவில்லை.

மீண்டும் அலுவலக வேலைகளில் மூழ்கிய போதும் அந்த பூனை வாயில் சிக்கிய அணில் என் நெஞ்சைக் குடைந்து கொண்டேயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

103 அசை போட ஒரு விடயம்

# பிரசித்தமான சில உலக பத்திரிகைகள்

ரம்யன்

உலகின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு விதமான செய்திப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. அவைக்கெல்லாம் ஆங்கில பத்திரிகைகளே முன்மாதிரியாக இருந்துள்ளன. அவ்வாறான முக்கிய ஆங்கில பத்திரிகைகளில் சிலவற்றைப் பற்றிய தகவல்களை பார்க்கலாம்.

## 1 வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல்

த வோல் ஸ்ட் ரீட் ஜேர்னல் (The wall Street journal) இது ஒரு அமெரிக்க தினசரி செய்திப் பத்திரிகை. ஆங்கில மொழியில் வெளிவரும் இப்பத்திரிகையானது வர்த்தகம் மற்றும் பொருளாதார விடயங்களுக்கே முன்னுரிமை வழங்குகின்றது.

டவ் ஜோன்ஸ் என்ற நிறுவனத்தால் வாரத்தில் ஆறு நாள்கள் நியூயோர்க் நகரில் வெளியிடப்படும் இப்பத்திரிகை ஆஸிய, ஐரோப்பிய பதிப்புக்களையும் வெளியிடுகின்றது.




நியூயோர்க் நகரில் வோல் ஸ்ட்ரீட் என்ற பகுதியிலிருந்து வெளியிடப்படுவதால் அதற்கு இந்த பெயர் இடப்பட்டுள்ளது. 1889 ஜூலை 8 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகை தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்றது. சார்ள்ஸ், எட்வர்ட் ஜோன்ஸ் மற்றும் சார்ள்ஸ் பேர்க் ஸ்ட்ரெஸர் ஆகியவர்களே அதன் ஆரம்ப கர்த்தாக்கள். இந்தப் பத்திரிகையின் அச்சுப் பதிப்புகளுக்கு இணையாக 1996 ஆம் ஆண்டு வோல் ஸ்ட்ரீட் ஜேர்னலின் இணையப் பதிப்பும் ஆரம்பிக்கப்பட்டது.

2006 ஆம் ஆண்டு இந்தப் பத்திரிகை முதல் தடவையாக அதன் முதல் பக்கத்தில் விளம்பரங்களையும் பிரசுரிக்க ஆரம்பித்தது. அதன் ஏனைய பதிப்புகளிலும் அவ்வாறே செய்யப்பட்டது.

த வோல் ஸ்ட்ரீட் ஜேர்னலின் 51 நாடுகளில் உள்ள 85 செய்தி பிரிவு களில் மொத்தம் 2,000 பத்திரிகையாளர்களுக்கு மேல் பணி புரிகின்றார்கள். இவை அனைத்துக்குமாக 26 அச்சு இயந்திர தொழிற்சாலைகள் செயற்படுகின்றன. இந்தப் பத்திரிகை அதன் சரித்திரத்தில் 30 'புளிட்சர்' பரிசுகளை வென்றுள்ளது.

## 2 பினான்சியல் ரைம்ஸ்

இது ஒரு பிரிட்டன் ஆங்கில நாளேடு. இதுவும் பிரிட்டனின் வர்த்தகம் மற்றும் நிதி தொடர்பான விடயங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றது. லண்டன் பியர்சன் பி.எல்.சி. நிறுவனத்தால் இது வெளியிடப்படுகின்றது. இந்தப் பத்திரிகை 1888 ஆம் ஆண்டு ஜேம்ஸ் ஷெரிடன் மற்றும் ஹொரேஷியோ பொட்டாம்வி என்பவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் 1888 ஜனவரி 9 ஆம் திகதி இந்தப் பத்திரிகை லண்டன் பினான்சியல் கைட் என்ற பெயரிலேயே தொடங்கப் பெற்றாலும் அதே வருடம் பெப்ரவரி 13 ஆம் திகதி பினான்சியல் ரைம்ஸ் என்ற பெயர் மாற்றம் செய்து கொண்டது. அதன் வாசகர்கள் லண்டன் நகரிலுள்ள நிதித்துறை சமூகத்தினராகவே இருந்தனர். இதன் எதிர் பத்திரிகையாக பினான்சியல் நியூஸ் என்ற பத்திரிகை விளங்குகின்றது.

காலப்போக்கில் இந்தப் பத்திரிகை தனது அளவிலும் வாசகர் தொகையிலும் விடயத் தொகுப்பிலும் விரிவடைந்து உலகம் முழுவதும் தனக்கென நிருபர்களை நியமித்துக் கொண்டுள்ளது.

2000 ஆம் ஆண்டு த பினான்சியல் ரைம்ஸ் ஜேர்மன் மொழி பதிப்பொன்றையும் வெளியிடத் தொடங்கியது. அதன் ஆசிரியர் குழுவினரும் செய்திப் பிரிவினரும் ஹம்பேர்க்கை தளமாகக் கொண்டு இயங்கலாயினர். பினான்சியல் ரைம்ஸ் பத்திரிகையின் உலகப் பதிப்பானது தினமும் 2,93,000 பிரதிகள் சரா சரியாக விற்பனையாவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

## 3 த எக்கொனொமிக் ரைம்ஸ்

த எக்கொனொமிக் ரைம்ஸ் (The Ecomonic Times) இது ஒரு இந்திய தினசரி பத்திரிகை. 1961 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பென்னெட், கொல்மன் நிறுவனத்தினரால் இது ஆரம்பிக்கப் பட்டது. ஆங்கில மொழியில் வெளியாகும் வர்த்தக பத்திரிகையான இது உலகில் வால் ஸ்ட்ரீட் பத்திரிகைக்கு அடுத்த படியாக பெரும் எண்ணிக்கையில் (8 லட்சத்துக்கும் அதிகம்) விற்பனையாகின்றது.




இந்தப் பத்திரிகையானது ஏக காலத்தில் மும்பை, பெங்களூர், டெல்லி, சென்னை, கொல்கத்தா, லக்னோ, ஹைதராபாத், ஜெய்பூர், அகமதாபாத், நாக்பூர், சந்திகார் மற்றும் புனே ஆகிய 12 நகரங்களிலிருந்து வெளியிடப்படுகின்றது. இந்தப் பத்திரிகையின் ஞாயிறு இதழ் பல்வேறு அம்சங்களைக் கொண்டு வெளிவருகின்றது. வட்நியூஸ், நியூஸ் இன் நம்பர்ஸ், பிகைன்ட் த நியூஸ், ஸ்பொட் லைட், கவர் ஸ்டோரி, எக்ஸ்பேர்ட் வியூ, எகோனாமி, சென்ரஸ் பிரேட், ட்ரவல் கைட்பூட் ட்ரிங்க் என பல்வேறு தலைப்புகளில் தகவல்களை வழங்குகின்றது.

## 4 த நியூயோர்க் ரைம்ஸ்

"அச்சிடப் பொருத்தமான அனைத்தும் செய்திகளே" என்பது இந்தப் பத்திரிகையின் கொள்கை என முன்பக்கத்திலேயே குறிப்பிடப் பட்டிருக்கின்றது. 1851 ஆம் ஆண்டிலிருந்து நியூயோர்க் நகரிலிருந்து வெளிவருகின்றது. வேறு எந்தப் பத்திரிகையையும் விட அதிகமா 112 புளிட்சர் பரிசுகளை வென்றுள்ளது. இது பல்வேறு பகுதிகளைக் கொண்டதாக வெளியிடப்படுகின்றது.

செய்திகள், கருத்துக்கள், வர்த்தகம், கலை, விஞ்ஞானம், விளையாட்டு, இல்லம், வேறும் விசேட அம்சங்கள் என்ற தலைப்புகளில் விடயங்கள் தரப்படுகின்றன.

த நியூயோர்க் ரைம்ஸ் 1851 செப்ரெம்பர் 18 ஆம் திகதி நியூயோர்க் டெய்லி ரைம்ஸ் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் உரிமையாளர் அப்போது பத்திரிகை யாளரும் அரசியலாளருமான ஹென்றி ஜார் விஸ் றேமொன்ட் என் பவராவார். 1942 இல் இருந்து இந்தப் பத்திரிகை குறுக்கெழுத்துப் போட்டிகளை வெளியிட்டு வருகிறது. 1946 இல் அதன் சர்வதேசப் பதிப்பு ஆரம்பிக்கப்பட்டது. 1967 இல் அந்தப் பதிப்பு நிறுத்தப்பட்டது.




வால் ஸ்ட்ரீட் ஜேர்னல், யு.எஸ். ஏ.ருடே ஆகியவற்றை அடுத்து இந்தப் பத்திரிகை விற்பனையில் மூன்றாவது இடத்தில் இருக்கிறது.

## 5 டெய்லி ரெலிகிறாப்

இது லண்டனில் இருந்து வெளிவரும் ஒரு பத்திரிகை. பிரிட்டன் முழுவதும் மற்றும் சர்வதேச மட்டத்திலும் இது விற்பனையாகின்றது. 1855 ஜூன் மாதம் ஆர்த்தர் பி.ஸ்லெய்க் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பத்திரிகைக்கு 2004 ஆம் ஆண்டு டேவிட் அன் ப்ரெடெரிக் பார்சிலே என்பவர்கள் உரிமையாளர்கள் ஆனார்கள். அரசியல் மட்டத்தில் இந்தப் பத்திரிகை கொன் சர்வேடிவ் கொள்கைகளையே கொண்டுள்ளது. இந்தப் பத்திரிகையின் ஆசிரியர்களுக்கும் கொன்சர்வேடிவ் கட்சித் தலைவர்களுக்கும் இடையில் உள்ள உறவுகளினாலும் அதன் வலது சாரி கொள்கைகளினாலும் கொன்சர்வேடிங் செயற்பாட்டாளர்களின் தொடர்புகளினாலும் இந்தப் பத்திரிகை பொதுவாக பெரும்பாலானவர்களால் டோரிகிராப் என்று சிலேடையாக அழைக்கப்படுவதுண்டு. அதன் ஞாயிறு பத்திரிகை 1961 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு இந்தப் பத்திரிகை பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களால் செலவினங்கள் தொடர்பான விவரங்களை வெளியிட்டு பரபரப்பு ஏற்படுத்தியது. அதனால் ஆட்சியிலிருந்த தொழிற்கட்சி உயர் நிலை உறுப்பினர்கள் பலரும் கொன்சர் வேடிவ் கட்சியிலிருந்தும் எதிர்க்கட்சியிலிருந்தும் பல உறுப்பினர்கள் பதவிவிலக நேர்ந்தது. 2010 ஆம் ஆண்டு பிரிட்டன் பத்திரிகைகளுக்கான விருது வழங்கலின் போது அந்த ஆண்டில் தேசிய பத்திரிகை என்ற விருதைப் பெற்றது.

## 6 இந்துஸ்தான் ரைம்ஸ்

இது 1924 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆங்கிலப் பத்திரிகை. இந்திய விடுதலை இயக்கத்துடன் இதற்கு தொடர்பு உண்டு. இந்துஸ்தான் என்பது இந்தியாவின் புராதனமான பெயராகும். இந்தப் பத்திரிகை காங்கிரஸ் கட்சி சார்புடையதாகும். அதன் நிர்வாக ஆசிரியராக காங்கிரஸ் ராஜ்ய சபை உறுப்பினர் ஷோபனா பார்த்திபா என்பவர் இருந்து வருகின்றார். அகாலி இயக்கத்தினதும் சிரோமணி அகாலிதளத்தினதும் தந்தையென்று கூறப்படும் மாஸ்டர் சுந்தர் கிங் லால்பூரியால் இந்தப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் பத்திரிகை நிர்வாகக் குழுவில் பண்டிட் மதன்மோகன் மாளாவியா மற்றும் மாஸ்டர் தாராசிங் முதலியவர்கள் பணியாற்றியுள்ளார்கள்.

இந்தப் பத்திரிகை கல்விக்கென புதன்கிழமைகளில் சிறப்பு தொகுப்பு ஒன்றை வெளியிடுகின்றது.

இந்தப் பத்திரிகை 1924 செப்ரெம்பர் 26 ஆம் திகதி மகாத்மா காந்தியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் முதல் ஆசிரியராக கே.எம்.பணிக்கர் இருந்தார். மகாத்மா காந்தியின் புதல்வர் தேவதாஸ் காந்தியும் இந்தப் பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் இருந்துள்ளார். இந்தியாவில் பெரும்பான்மையாக வாசிக்கப்படும் பத்திரிகைகளில் இது இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. 2012 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்தப் பத்திரிகை 37.67 லட்சம் வாசகர்களால் வாசிக்கப்படு கின்றது.

புதுடெல்லி, மும்பை, கொல்கத்தா, லக் னோ, பட்னா, ராஞ்சி, போபால் மற்றும் சண்டிகார் ஆகிய நகரங்களில் ஏக காலத்தில் வெளி வருகின்றது.

## 7 த கார்டியன்

த கார்டியன் 1959 ஆம் ஆண்டு வரை மான் செஸ்டர்கார்டியன் என்று அழைக்கப்பட்டு வந்தது. 19 ஆம் நூற்றாண்டில் உள்ளூர் பத்திரிகையாக ஆரம்பித்து அது தேசிய பத்திரிகையாக வளர்ந்துள்ளது. புடைவை வியாபாரிகளாலும் வர்த்தகர்களாலும் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பத்திரிகை நடுத்தர மக்களின் கருவி என்று பொதுவாக அழைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வார நாளிலும் இந்தப் பத்திரிகை தேசியப் பதிப்பொன்றை வெளியிடுகின்றது. அதில் விசேட அம்சங்கள், பத்திகள், வானொலி, தொலைக்காட்சி விவரங்கள் மற்றும் விரைவான குறுக்கெழுத்துப் போட்டிகள் முதலியவற்றை வெளியிடுகின்றது. கார்டியன் இரண்டு பிரதான இலக்கியப் பரிசுகளை வருடந்தோறும் வழங்கி வருகின்றது. அதில் ஒன்று 1999 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கார்டியன் புனை கதை விருது மற்றது 1965 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சிறுவர்களுக்கான புனைகதை விருது.

## 8 யு. எஸ். ஏ. ருடே

அமெரிக்காவில் வெளிவரும் தினசரி பத்திரிகை 1982 செப்ரெம்பரில் ஆல் நியூஹார்த் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இப்பத்திரிகை வோல் ஸ்ட்ரீட் ஜேர்னலுடன் விற்பனையில் போட்டி யிடுவதாக உள்ளது.

யு.எஸ். ஏ. ருடே செய்திகளை வாசிப்புக்கு இலகுவாகவும் விரிவாகவும் வழங்கும் வகையில் ஒரு முறையைக் கடைப்பிடிக்கின்றது. கலிவர் மொன்ட் எழுத்துக்களை பயன்படுத்தும் ஒரே பத்திரிகை என்று கூறப்படுகின்றது. இந்த எழுத்துக்கள் தலைப்புகளுக்கும் உள்ளடக்கத்துக்கும் பயன்படுத்தப்படும்.

## 9 த சன்

இந்தப் பத்திரிகை பிரிட்டனிலும் அயர்லாந்திலும் வெளியாகின்றது. 1969 நவம்பர் 17 ஆம் திகதி அது முதன் முதலில் வெளிவந்தது. அன்றைய தலைப்புச் செய்தியாக குதிரை ஒன்றுக்கு போதையூட்டி சவாரியில் ஈடுபடுத்தப்பட்டமை தொடர்பான விடயம் வெளியிடப்பட்டிருந்தது. பிரத்தியேக செய்தியாக வெளியிடப்பட்டிருந்த இந்தச் செய்தியில் குதிரையைப் பழக்கியவர் அதற்குத் தாம் போதையூட்டியிருந்ததை ஒப்புக் கொண்டிருந்தார். இந்தப் பத்திரிகை பொதுவில் தொழிற் கட்சியை சார்ந்ததாலும் அவ்வப்போது தடம்புரண்டுமிருக்கிறது. சுரங்கத் தொழிலாளர்களின் போராட்டத்தின்போது 1984-85 வருட காலத்தில் இந்தப் பத்திரிகை சுரங்கத் தொழிலாளர்களுக்கு எதிராக மார்கிரட் தட்சர் அரசையும் பொலிஸ் செயற்பாடுகளையும் ஆதரித்திருந்தது. [illegible] களையும் த சன் வெளியிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பர்மாவில் கைவிட்ட சொத்துக்களை மீட்கும் முயற்சியில் செட்டிமார்கள்

சண்முகசுந்தரம்

60 வருடங்களுக்கு முன்பு பர்மாவில் கைவிட்டுப் போன பல லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்களை மீட்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறது. நகரத்தார் என்று சொல்லப்படும் தமிழ்நாட்டின் நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகம்.

கெட்டாலும் செட்டி, கிழிந்தாலும் நெய்(யும்) புடவை என்பார்கள். என்னதான் வறிய நிலைக்குப் போனாலும், தங்களது மதிப்பை விட்டுக்கொடுக்காதவர்கள் செட்டிமார்கள். அடுத்தவர் சொத்துக்கு ஆசைப்பட மாட்டார்கள். அதேபோல், தங்களது சொத்துக்களையும் மற்றவர்களுக்கு விட்டுத்தர மாட்டார்கள். சரி! இவர்களுக்கும் பர்மா சொத்துக்களுக்கும் என்ன சம்பந்தம்?

**விளைநிலமும் ரப்பர் தோட்டமும்**

காவிரிப்பூம்பட்டினத்தில் உப்பு வணிகம் செய்து கொண்டிருந்த செட்டியார்கள், பழைய ராமநாதபுரம் பகுதிக்கு இடம்பெயர்ந்த பிறகு, தொழிலையும் மாற்றிக்கொண்டார்கள். மலேசியா, சிங்கப்பூர், பர்மா, இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்று, கொண்டு விற்றல் என்று சொல்லப்படும் வட்டித் தொழிலைச் செய்ய ஆரம்பித்தார்கள். மலேசியாவுக்குப் போனவர்கள், வட்டி வருமானத்தை ரப்பர் தோட்டங்களாக்கினார்கள். பர்மாவுக்குப் போனவர்கள், வருமானத்தை விளைநிலங்களாக மாற்றினார்கள்.

19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே செட்டியார்கள் பர்மாவுக்குப் போய்விட்டார்கள். கிழக்கு பர்மாவில் உள்ள மோல்மேன் என்ற இடத்தில்தான் இவர்கள் முதன்முதலில் குடியேறினார்கள். ஆண்டு முழுவதும் ஓடிக்கொண்டிருக்கும் 'கோல்டன் வோட்டர்' என்று சொல்லப்படும் ஐராவதி நதியின் வளமையும் லட்சக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களும் இருந்தும் அவற்றைப் பயன்படுத்தத் தெரியாமல் முடங்கிக் கிடந்தார்கள் பர்மிய மக்கள். வறுமையும் சோம்பலுமே இதற்குக் காரணம்.

**பசுமை தேசம்**

செட்டியார்கள் அங்கு சென்ற பிறகு, பர்மியர்களுக்கு வட்டிக்குப் பணம் கொடுத்து நிலங்களை உழுது பயிரிட வழிகாட்டினார்கள். தொடக்கத்தில் அடமானம் ஏதும் இல்லாமல் பணம் கொடுத்துப் பழகியவர்கள், காலமாற்றத்தில் நிலங்களை அடமானம் வைத்துக்கொண்டு பணம் கொடுத்தார்கள். தரிசாகக் கிடந்த பர்மிய பூமி முப்போகம் விளையும் பசுமை தேசமாக மாறியது. அன்பு, கருணை, பரிவைத் தவிர எதுவும் தெரியாத பர்மியப் பெண்களைச் செட்டிமார்களில் பலர் திருமணம் முடித்து அங்கேயே குடும்பமானார்கள்.

காலப்போக்கில், வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாததால், பர்மாவின் விளை நிலங்களில் 70 சதவீதத்துக்கும் மேல் செட்டியார்கள் உள்ளிட்ட தமிழர்களின் கைக்கு மாறியது. 1923ஆம் ஆண்டிலேயே பர்மாவில் 150 ஊர்களில் 1,250 வட்டிக் கடைகளில் சுமார் 200 கோடி ரூபாய்க்கு மேல் செட்டியார்களின் பணம் சுழன்றது. சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதில் அக்கறை கொண்ட செட்டியார்கள், பர்மாவிலும் 59 ஊர்களில் 62 முருகன் கோயில்களைக் கட்டினார்கள். இவற்றில் ஆற்றை முருகன் கோயில் உள்ளிட்டவை இன்னமும் செட்டிமார்களின் ஆன்மிகச் சிறப்பைச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. இந்தக் கோயில்களுக்கும் கோடிக்கணக்கான ரூபாய்க்குச் சொத்துக்கள் உண்டு.

**தொழிலுக்குப் பாதிப்பு**

ஒரு கட்டத்தில், தமிழர்களின் இந்த வளர்ச்சி அந்த நாட்டு தேசியவாதிகள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. வட்டிக்குப் பணம் கொடுத்து பர்மியர்களின் சொத்துக்களை அபகரிப்பதாகப் போராட்டத்தில் குதித்த அவர்கள், செட்டிமார்கள் மீது தாக்குதல்களையும் நடத்தினார்கள். இது செட்டிமார்களின் வட்டித்தொழிலுக்குப் பெரும் பாதிப்பை உண்டாக்கியது.

இந்த நிலையில், இரண்டாம் உலகப் போரின் உச்சத்தில் பர்மா மீது குண்டுகளை வீசியது ஜப்பான். இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, செட்டிமார்கள் தங்களது சொத்துக்களை அப்படியே விட்டுவிட்டும், சிலர் தமக்காக அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களை நியமித்துவிட்டும் படிப்படியாகத் தாயகம் திரும்பினார்கள். பர்மாவை ஜப்பான் பிடித்துவிட்டதால், பர்மாவுக்கு வெளியில் சிம்லாவில் தலைமையகம் வைத்துக்கொண்டு "நாடுகடந்த அரசாங்கம்" நடத்தியது பிரிட்டன்.

ஜப்பான் வெளியேறியதும் மீண்டும் பிரிட்டன் ஆதிக்கம் வந்து, பர்மாவுக் குச் சுதந்திரம் கொடுக்கப்பட்டது. ஜன நாயக அரசு வந்ததுமே 1952இல் பர்மாவின் விளைநிலங்கள் அனைத் தையும் அரசுடைமை ஆக்கிவிட்டது. இது செட்டி மார்களுக்கு இரண்டாவது பேரிடி.

**இரண்டாவது பேரிடி!**

அந்த நேரத்தில், பாதிக்கப்பட்ட இந்தியர்கள், குறிப்பாக செட்டிமார்கள், பறிபோன தங்களது சொத்துக்களுக்கு இழப்பீடு கேட்டு பிரிட்டன் அரசிடம் கோரிக்கை வைத்தனர். அதற்கு, நாட்டைவிட்டு ஜப்பானியர்களை வெளியேற்றிய பின், உங்களது கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று கடிதம் கொடுத்தது பிரிட்டன் நிர்வாகம். ஆனால், நடந்ததோ வேறு.

ஜப்பான் வெளியேறியதும் மீண்டும் பிரிட்டன் ஆதிக்கம் வந்து, பர்மாவுக்குச் சுதந்திரம் கொடுக்கப்பட்டது. ஜனநாயக அரசு வந்ததுமே 1952இல் பர்மாவின் விளைநிலங்கள் அனைத்தையும் அரசுடைமை ஆக்கிவிட்டது. இது செட்டிமார்களுக்கு இரண்டாவது பேரிடி.

பர்மா அதிபராக ஊனு இருந்தபோது, இளையாத்தங்குடியைச் சேர்ந்த வெள்ளையன் செட்டியார் அங்கு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். ஊனுவுக்கு வெள்ளையன் செட்டியார் நெருக்கம். இதை வைத்து சொத்துக்களை இழந்த செட்டிமார்களுக்கு உரிய இழப்பீடு வழங்குவது தொடர்பாக இருவரும் ஓர் ஒப்பந்தத்தைப் பேசி வைத்திருந்தார்கள். அது தீர்மானமாக நாடாளுமன்றத்தில் வருவதற்கு இரண்டு நாள்கள் முன்னதாக செட்டியாரை, இந்து மாமன்றம் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படுவோர் சுட்டுக் கொன்றுவிட்டார்கள்.





இந்தச் சம்பவத்துக்குப் பிறகு, செட்டிமார்கள் தங்களது உரிமை பற்றிப் பேசவே பயந்தார்கள். ஆனாலும், அரசுடைமையாக்கப்பட்ட நிலங்களுக்கு அதன் வரி மதிப்பைப் போல் 12 மடங்கு தொகையை இழப்பீடாகத் தர பர்மா அரசு ஒப்புக்கொண்டது. இதன்படி முதல் தவணையாக சுமார் 100 பேருக்குத் தலா 5,000 ரூபாய் இழப்பீடும் வழங்கப்பட்டது. ஆனால், மறுபடியும் பர்மாவில் குழப்பம் ஏற்பட்டு, இராணுவத்தின் கைகளில் ஆட்சி ஒப்படைக்கப்பட்டது. இராணுவ அரசோ, இப்போதைக்கு நிதி இல்லை என்று சொல்லி, செட்டிமார்களின் இழப்பீட்டுக் கோரிக்கையை நிராகரித்தது.

மேலும், துவண்டுபோன செட்டிமார்களும் அவர்களது வாரிசுகளும் தங்களது கையை விட்டுப்போன பர்மியச் சொத்துக்களுக்கு என்றைக்காவது இழப்பீடு வந்துசேரும் என்ற நம்பிக்கையில், ஆவணங்களை [illegible] கொண்டு 60 ஆண்டுகளுக்கும் மேலாகத் தவம் இருக்கிறார்கள்.

பர்மாவில் செட்டிமார்கள் விட்டுவந்த சொத்துக்களின் மதிப்பு பல லட்சம் கோடி ரூபாய் இருக்கும் என்கிறார்கள். இவர்கள் வைத்திருந்த விளைநிலங்கள் மட்டுமே 2 லட்சத்து 28 ஆயிரத்து 425 ஏக்கர். இதில் செட்டி நாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் குடும்பத்துக்குச் சொந்தமான நிலம் மட்டும் ஒரு லட்சம் ஏக்கரைத் தாண்டுமாம்.

**நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது**

இப்போது இந்தச் சொத்துக்களை மீட்பதற்கு மீண்டும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள் செட்டியார்கள். பர்மா முதலீட்டாளர்கள் குழுவை 2011இல் உருவாக்கினோம். கடந்த ஆண்டே எங்கள் பிரச்சினை குறித்து இந்திய நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு, கோரிக்கை பரிசீலிக்கப்படுவதாக பர்மிய அரசிடமிருந்து தகவல் வந்தது. ஆனால், வேலை எதுவும் நடக்கவில்லை. பர்மாவிலிருந்து இப்போது வந்து கொண்டிருக்கும் தகவல்கள் புது நம்பிக்கையையும் தெம்பையும் கொடுத்திருக்கின்றன என்கிறார் பர்மா முதலீட்டாளர் குழுவின் தலைவர் ஆறு. அழகப்பன் செட்டியார்.

பர்மா சொத்துக்களுக்கு இழப்பீடு பெறுவது சம்பந்தமாக "இதுவரை 10 ஆலோசனைக் கூட்டங்களை நடத்தியிருக்கிறோம். இழந்த சொத்துக்களை மீட்க வேண்டும் என்பது செட்டியார்களின் நோக்கமாக இருக்கிறது. ஆனால், சொத்துக்களை மீட்கப்போவதாகச் சொல்லிக் கொண்டு போனால், யாரையும் பர்மாவுக்குள் நுழையவிடமாட்டார்கள். அதற்காகத்தான் முதலீட்டாளர்கள் குழு என்று மாற்றினோம்" என்கிறார் மத்திய இணை அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன்.

"நாங்கள் பேச ஆரம்பித்த பிறகு, இதுவரை நான்கு குழுக்களாகச் செட்டியார்கள் பர்மாவுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். அவர்கள் தரும் தகவல்படி, பர்மாவில் விளை நிலங்களைத் தவிர, மற்றச் சொத்துகளை மீட்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. நகர்ப்புறங்களில் செட்டியார்களுக்குச் சொந்தமான இடங்களில் வீடுகளைக் கட்டியிருப்பவர்கள். செட்டியார்களுக்காகவும் ஒரு வீட்டைக் கட்டி பூட்டி வைத்திருக்கிறார்கள். பர்மா இன்றைக்கும் ஏழை நாடாகத்தான் இருக்கிறது. அதனால், அவர்கள் தொழில் தொடங்க வரும் வெளிநாட்டினரை வரவேற்கிறார்கள்.

"தோட்டத் தொழில்கள், மருத்துவம், கல்வி, வர்த்தக நிறுவனங்களில் முதலீடு செய்ய வெளிநாட்டினருக்கு அவர்கள் வாய்ப்பளிக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், மூத்த செட்டிமார்கள் மீண்டும் பர்மாவுக்குப் போகப் பயப்படுகிறார்கள். இளவட்டங்கள் தயாராக இருக்கிறார்கள். எனவே, பர்மாவில் யாருடைய சொத்துக்களை எல்லாம் மீட்க முடிகிறதோ அதையெல்லாம் முடிந்தவர்கள் மீட்பது, அதற்கான இழப்பீட்டுத் தொகையை உரியவர்களுக்கு இங்கே கொடுத்து விடுவது என்று பேசுகிறோம். இப்படி ஓரளவு சொத்துக்களைக் திரும்பப் பெற்ற பிறகுதான், அடுத்த கட்டத்துக்குப் போக வேண்டும். இந்தப் பிரச்சினையை முடிக்கக் குறைந்தது, இரண்டு ஆண்டுகளாவது ஆகும்" என்கிறார் சுதர்சன நாச்சியப்பன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பால்நிலை தாக்கங்கள்

எல்லாவித செயற்பாட்டுக் குமான அடித்தளமானது நமது 0-7 வயது வரையிலேயே இடப்படுகிறது. அக்காலத்தில் பெற்றோரே தம் கட் டுப்பாட்டில் அனைத்தையும் வைத்துக் கொள்கிறார்கள். எனவே நல்ல அல்லது கெட்ட நடத்தை யானது நல்ல அல்லது கெட்ட பெற்றோரைப் பொறுத்திருக்கிறது

**3**

“சாம் ஸ்பேட்” எழுதுவது

தமிழில்: ரம்யன்



ஒரு குழந்தையானது தனது நடத் தைகளை அதற்கு மிக பொருத்த மான பெற்றோர், பாதுகாவலர் மற்றும் குடும் பத்தினரிடம் இருந்து கற்றுக் கொள்கின்றது என்பது இப்பொழுது சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ள கருத்தாகும். ஏனைய அனைத்தும் புற நிலையிலிருந்து வருவதாகும்.

குழந்தை பிறந்தவுடன் என்ன நடக்கிறதென்றால், பெற்றோர் அதன் தோற்றம் மற்றும் ஆரம்பச் செயற் பாடுகள் குறித்து பிரதிபலிக்கத் தொடங் குகிறார்கள். பெண் பிள்ளைகள் ஆண் பிள்ளையை விட வித்தி யாசமாக கவனிக்கப்படுகிறார் கள். குழந்தையும் தனது சுற் றாடலுக்கு ஏற்ப எப்படி நடந்து கொள்வது என்பதைக் கற்றுக் கொள்கின்றது. குழந்தையின் மீதான மிக தாக்க மான செல்வாக்கு முதல் நாளில் இருந்தே பெற்றோர் மூலம் பிரயோ கிக்கப்படுகின்றது.

நமது எல்லாவித செயற்பாட்டுக் குமான அடித்தளமானது நமது 0-7 வயது வரையிலேயே இடப்படுகிறது. அக்காலத்தில் பெற்றோரே தம் கட்டுப்பாட்டில் அனைத்தையும் வைத்துக் கொள்கிறார்கள்.

எனவே நல்ல அல்லது கெட்ட நடத் தயானது நல்ல அல்லது கெட்ட பெற்றோரைப் பொறுத்திருக்கிறது என்பதை இப்போது நாம் அறிவோம். அது ஒரு சாதாரணமான விடயம்தான். ஆனால் அந்தளவுக்கு சிக்கலானதாக வும் இருக்கிறது.

பெற்றோரைத்தான் குறை கூற வேண்டும். அவர்களும் அவர்களின் பெற்றோரால் வளர்க்கப்பட்டவர்கள். இது இவ்வாறே பின்நோக்கி செல்லும். பெற்றோர்தான் பொறுப்பு என்று கூறுவது அவர்களைக் குற்றம் காண்பதாகமாட்டாது. பிரச்சினை எங்கே இருக்கிறது என்பதை அறிந்து அதைத் தீர்த்துக் கொள்வதே நோக்கம். பெற்றோரின் அன்பு இங்கே கேள்விக் குரியதன்று. குடும்பப் பிணைப்பு என்பது நாம் அனுபவிக்கக் கூடிய மிகப் பலமான உணர்வாகும். பெற்றோர் என்ற முறையில் ஒருவர் தன் பிள்ளைகளுக்காக உயிர்த் தியாகம் செய்யவும் துணிகிறார் என்பதுஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. இருந்தபோதிலும் பாதுகாப்புக்கான இந்த பலமிக்க உணர்வானது சிக்கல டையக் கூடியது. குழந்தைக்கு உதவி புரிவதைவிடுத்து எதிர்காலத்தில் பாதிப்புக்களையும் ஏற்படுத்தக்கூடியது.

**பயப்பீதியின் அறிமுகம்**

உதாரணம்- இரண்டு வயதான குழந்தை எரியும் நெருப்பை நோக்கி ஓடுகிறது. அந்த வேளையில் ஏற்படும் உள்ளுணர்ச்சியால் பெற்றோர் ஓட வேண்டாம் என்று கத்துகிறார். அதனை முரட்டுத்தனமாகப் பிடித்து இழுத்து நிறுத்துகிறார். சிலவேளை அதற்குப் பாடம் புகட்டுவதற்காக அடிக்கவும் செய்கிறார். இதில் மூன்று ஆபத்தான விடயங்களை குழந்தை கற்றுக் கொள்கின்றது. ஒரு சிறு குழந்தையை பார்த்து பெரிதாகக் கத்துவது அதற்கு மனக்குழப்பத்தை ஏற்படுத்துவதாகும். பெரியவர்களால் கொடூரமாக நடத்தப்படுவது மற்றும் உடல் அளவில் கடுமையாக இம் சைக்குள்ளாக்கப்படுவது சிறுவர் களை கன்னத்தில் அறைவது இப்பொ ழுது பல நாடுகளில் தடை செய்யப் பட்டுள்ள துஷ்பிரயோகம் ஆகும்.

குழந்தையானதுதாம் ஆர்வமாக அன்பு செலுத்த வேண்டியவர் களா கவும் மதிக்கப்படுபவர்களாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படு பவரால் இம்சைக்குள்ளாகிறது. தாம் ஏன் துன்புறுத்தப்பட்டோம் என்பதை குழந்தை அறியாது. பயபீதி பிள்ளை யின் வாழ்வில் அறிமுகப்படுத்தப் பட்டு விடுகின்றது. நெருப்பு குறித்தும் அதிகாரம் குறித்தும் பயம் ஏற்படுகின் றது. அவர்களின் பாதுகாப்பு நிலை அதிர்ச்சிக்குள்ளாகிறது. தாம் நம்பும் அல்லது தங்கியுள்ள மிக நெருக்க மானவராலேயே அது இம்சிக்கப்பட் டுகிறது. அதேசமயம் பெற்றோரு இந்த நெருக்கடிக்கு மேலும் உரப சேர்க்கிறார். அழ வேண்டாம் என் றார்- அணைத்தும் கொள்கிறார். இந்த செய்கையால் உள ரீதியில் அவர்கள் ஏற்படுத்திவிட்ட கெடுதியை அவர்கள் உணர்வதில்லை.

குழந்தையை கூப்பிடுவதுடன் செல்ல மாக ஆனால் உறுதியான முறையில் நெருப்பிலிருந்து அப்புறப்படுத்தி நெருப்புஎவ்வளவுவெப்பமாகஇருக்கு என்பதை குறுகிய அளவில் விளக்கு தனால் குழந்தை உள ரீதியி அதிகம் பாதிக்கப்படாமல் செய்யலா என்பதை அவர்கள் அறிந்திருப் தில்லை. இம்மாதிரியான பல அனு பவங்கள் குழந்தையின் வாழ்வின் பிற்காலத் தில் ஏற்படலாம்.

அழுது கொண்டிருக்க விடுவது பேசாமல் இருக்கும்படி உறுத்தி கூறுவது. கவனிக்காமல் விடுவது எதற்குமே “அப்பால் போ” என்று கூறிவிடுவது. நண்பர்கள் இல்லாம செய்துவிடுவது தாங்களே தனி திருக்க விடாமல் செய்வது. அவர்களின் சொந்த கருத்துக்களை வைத்து கொள்ள அனுமதிக்காமல் இருப்பது. எதிர்பால் தரப்பினருடன் பழக அவர்களைப் பற்றி அறிய அனு மதிக்காமை, பால்வினை விட யங்களை விவாதிக்க விடாமை போன்றவை பிள்ளையின் நடத் தையை மிக மோசமாகப் பாதிக் கும் சம்பவங்கள் பால்நிலைதான் சமூகத் திலும் உறவுகளிலும் பெரிய தடையா இருக்கிறது. இங்கிருந்து தான் மன தர்களின் முரண்பாடான நடத்தை கள் எல்லாம் பகிரங்கமாக வெளியில் வருகின்றன.

*(வளரும்)*

---

## மொழி

கனி மொழியாம் தாய்மொழியை வாழ்த்தி வணங்கி
தனித் தமிழில் பேச எழுதக் கற்றுக் கொண்டு
பிற மொழிகள் பல கலந்து பேசிடாமல்
பிறர் போற்ற இவ்வுலகில் வாழ்வீர் இனிது

செம்மொழியாம் தமிழ் மொழியை மறந்துவிட்டு
எம்மொழியும் பேசலாமென நினைத்துக் கொண்டு
தம் மொழியாம் தாய்மொழியை மறப்போர் உலகில்
எம்மொழியும் திடமாகப் பேச வல்லரல்லர்

பெரும் ஆசையால் உள்ப் பொருளை மாசுபடுத்தி
உருத் தெரியாமல் கலப்படம் செய்வது போல்
பொங்கு தமிழுக்குக் கலப்படம் செய்ய நினைப்பீராகில்
இங்கு இழுக்காகும் தமிழனுக்கே அறிவீர் நீவீர்

தொன்று தொட்டுப் பேசப்படும் தமிழ் மொழியை
இன்று முழுப் பிறமொழியில் புகுத்திக் கலந்து
பெருமையோடு மார்புதட்டிப் பேசுவோர்கள்
சிறியோரே யன்றிப் பெரியோரல்லர்

ஈன்றெடுத்த தாய்க்கு நிகரான தொன்றில்லை- இவ்வுலகில்
சான்றோர்கள் சொன்ன மொழி இதுவேயாகும்
கற்ற தமிழ் மொழியை மறப்பது இப்பாரில்
பெற்றவளை மறப்பதற்கு ஒப்பாகும் காணீர்

பெருங்கடலில் கப்பலுக்குப் பேராபத்தானால்
அருளாளர் ஓடிச் சென்று அதைக் காப்பது போல்
பொங்கு தமிழுக்குப் பேராபத்து வருமேயானால்
ஆங்கு முன்னின்று காக்க வேணும் தமிழா நீயும்

மோகத்தினால் தாய்மொழியை முன் மறந்தவர்களெல்லாம்
மோகினிப் பேயின் பின்னே சென்றவன் கதியை எண்ணி
மறவோம் இனித் தாய்மொழியை ஒருபோதும் என்று
உறுதியுடன் கூறுகின்றார் உய்ந்தார் இன்று

பிறர் மொழியைக் கற்பது தவறில்லை தமிழா
மறவாமல் தாய்மொழிக்கு முதலிடம் கொடு மகனே
பிறக்கையிலே அம்மா என்ற மூன்றெழுத்தைக் கூறினாய்
இறக்க முன்னே 'தமிழ்' என்ற மூவெழுத்தை வளர்ப்பாய் நீயும்

தேனினும் இனிய தமிழ் மொழியைக் கற்று
பாரினில் பட்டங்கள் பல பல பெற்று
ஊரினில் தமிழுக்குத் தொண்டுகள் செய்து
வானினில் கொடி கட்டிப் பறப்பாய் தமிழா இனிது

பாரெல்லாம் பரந்து பேசும் தமிழ்மொழிக்கு
ஊரெல்லாம் ஒன்று கூட்டி விழாவெடுத்து
சீரெல்லாம் இனிது கொடுத்து அணிகள் பூட்டி
தேரேற்றி சிறப்புச் செய்து வணங்குவோமே

*சைவப்புலவர்,*
*சைவ சித்தாந்த*
*பண்டிதர்*
*அம்பலவாணர்*
*இராஜட்ணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டியிலிருந்து நெருப்பில் விழுந்த கதை

அனஸ்

'கோ ஹோம் வான்' (GO HOME VAN - வீடு செல்லும் வாகனம்) என்ற பெயருடைய விளம்பர வாகனங்கள் பல தொடர்ச்சியாக லண்டன் தெருக்களில் ஓடிக் கொண்டே இருக்கின்றன. இவை அகதிகளை அல்லது விசா இல்லாதவர்களை வந்து சரணடையுங்கள் என்று அழைக்கிறன.




பிரிட்டனில் அகதிகள் ஒரு முற்றுகையில் இருப்பதாகவே தெரிகிறது. 'கோ ஹோம் வான்' (GO HOME VAN – வீடு செல்லும் வாகனம்) என்ற பெயருடைய விளம்பர வாகனங்கள் பல தொடர்ச்சியாக லண்டன் தெருக்களில் ஓடிக் கொண்டே இருக்கின்றன. இவை அகதிகளை அல்லது விசா இல்லாதவர்களை வந்து சரணடையுங்கள் என்று அழைக்கின்றன. அப்படி இல்லாவிடில் நீங்கள் கைதுசெய்யப்பட்டு, நாடு கடத்தப்படுவீர்கள் என்று அச்சுறுத்துகின்றன.

### இங்கிலாந்திலும் இலங்கையைப் போலவே

இங்கு லண்டனில் வோல்தம்ஸ்டோ, கென்சல் கிறீன், ஸ்ரட்போட், ஈஸ்ட் ஹம் போன்ற பகுதிகளில் அதிகாலை 7 மணிக்கே சுரங்க ரயில் நிலையங்களைச் சுற்றி ஏராளம் பிரிட்டிஷ் குடிவரவு (இமிக்ரேஷன்) அதிகாரிகள் வந்து நிற்கிறார்கள். வெள்ளை நிறம் தவிர்ந்த ஏனைய நிறமுடையவர்களை மறித்து விசா கேட்கிறார்கள்.

இங்கு வெளிநாட்டவர்கள், அகதிகள், மாணவர்கள் போன்றவர்கள் விசா அட்டை ஒன்றை வைத்திருக்க வேண்டும் என்ற நடைமுறையை எல்லை முகவர்நிலையம் அண்மையில் கொண்டுவந்தது. முதலில் எல்லா பிரிட்டன் வாசிகளும் அந்த அட்டை எடுக்க வேண்டும் என்று இருந்ததைப் பின்னர் ஐரோப்பியர் அல்லாத வெளிநாட்டவர்கள் எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஐரோப்பியர் அந்த அட்டையை ஏற்கெனவே அவர்கள் நாடுகளில் வைத்திருக்கிறார்கள்.

மாணவர் விசா, வேலை விசாவுக்கு விண்ணப்பிக்கும்போது இப்போது அட்டையில்தான் விசாவைப் பதிவு செய்து வழங்குகிறார்கள். அதில் கண் விழி அடையாளம்கூட பதிந்திருக்கிறது. அதனை அதிகாரிகள், அடையாள அட்டைப் போல சோதனையின்போது கேட்கிறார்கள். அந்த அட்டை இல்லாதவர்கள் விசாவில் குளறுபடி உள்ளவர்கள் என்று அவர்களைக் கைதுசெய்து தடுப்பு முகாமுக்கு அனுப்புகிறார்கள்.

இலங்கையில்தான் அடையாள அட்டையை சிங்கள இராணுவத்தினரிடம் காட்டிக் காட்டி நொந்து போனோம்: இப்போது லண்டனில் அடையாள அட்டை காட்ட வேண்டிய அவலம் வந்துவிட்டது என்று ஈழத் தமிழர் ஒருவர் சொன்னார்.

### கறுப்பு நிறம் என்றால் மோசடியா?

கறுப்பு நிறமுடையவர்களை மறித்து விசா கேட்பது இப்போது குடிவரவு-குடியகல்வு அமைச்சுக்குப் பெரும் சவாலாக மாறியிருக்கிறது. இது நிறவெறிசம்பந்தப்பட்ட பிரச்சினைஎன்று மனித உரிமை அமைப்புகள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன. வெள்ளை நிறமுடையவர்கள் விசா மோசடி செய்ய மாட்டார்களா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. ஆனால், வெள்ளைக்காரர்களுக்கு விசா மோசடி செய்ய வேண்டிய தேவை இல்லையே.

ஈராக்கியர், இந்தியர், வங்கதேசத்தவர், ஆப்கானிஸ்தான்காரர், இலங்கையர், ஆபிரிக்க நாட்டவர்தான் விசா இல்லாமல் இங்கு பிரிட்டனில் தங்கியிருக்கின்றனர்.

எனவே, அவர்களைத்தான் தாங்கள் சோதனை செய்ய வேண்டும் என்று குடிவரவு அதிகாரிகள் சொல்கின்றனர். தினமும் இங்கே இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசத்தில் இருந்து வரும் மாணவர்கள் விமான நிலைய குடிவரவுப் பகுதியில் கடும் சோதனைக்கு உள்ளாக் கப்படுகிறார்கள்.

### மாணவர் விசா

பொய்யான கல்லூரிகளைக் காட்டி விசா எடுத்தவர்கள் பிடிபடுகிறார்கள். நிறைய பணம் கொடுத்துப் பொய்யான கல்லூரிகள் பெயரில் விசா விண்ணப்பம் போட்டு இங்கு வந்து வேலை செய்யலாம் என்று வரும் இளைஞர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இங்கு, இப்போது மாணவர் விசாவில் வருபவர்கள் வேலை செய்யவே முடியாது: அவர்களுக்கு காப்புறுதி எண் கிடைக்க மாட்டாது. படிக்க என்று வருபவர்கள் முழுமையாகப் பணத்தைச் செலுத்திப் படிக்க வேண்டும்.

அப்படி மாணவர் விசாவில் வந்து காப்புறுதி எண் இல்லாமல் களவாக வேலை செய்து பிடிபட்டால் வேலை கொடுத்தவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும்; அபராதம் ஒரு ஆளுக்கு இருபதாயிரம் பவுண்டுகள். பிரிட்டனில் வரி கட்டாமல் வேலை செய்வது கிரிமினல் குற்றமாகும். அப்படிப் பிடிபட்டவர்களின் விசாக்கள் உடனடியாகவே நீக்கப்பட்டு அவர்கள் நாடுகடத்தப்படுவார்கள்.

### கொள்கலனுக்குள் கரியமில வாயு

இப்போது ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து இங்கு கொள்கலன்களில் மறைந்து களவாக வருபவர்களைக் கண்காணிக்க என்று குடிவரவுப் படை விசேடமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் படை துறைமுகத்துக்கு வரும் அனைத்து கொள்கலன்களையும் முழுமையாகச் சோதனை செய்கிறது. சோதனை எவ்வளவு கடுமைஎன்றால்கொள்கலனுக்குள்கரியமில வாயு (காபனீர் ஒக்சைட்) இருக்கிறதா என்று கருவி வைத்து சோதிக்கிறார்கள். அகதிகள் இங்கு வந்து பொருளாதாரத்தில் முன்னேறி விடலாம் என்று நினைக்க கூடாது என்று உள் துறை அமைச்சர் நேரடியாகவே சொல்கிறார்.

### நிரூபியுங்கள்

இப்போது ஈழத்தமிழ் அகதிகள் லண்டன் தெருக்களில் நடமாடவே அச்சப்படுகின்றனர். எந்த நேரமும் கைதுசெய்யப்படலாம் அல்லது நாடு கடத்தப்படலாம் என்ற அச்சம்தான் அது. தங்கள் அரசியல் தஞ்ச விண்ணப்பம் நிராகரிக்கப்படும் பட்சத்தில் அவர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும்அபாயம்காணப்படுகிறது. அவர்கள் அங்கு திருப்பி அனுப்பப்பட்டால் தங்கள் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என் பதை இங்கு அதிகாரிகளிடம் நிரூபிக்கப் பெரும் பிரயத்தனப்படுகிறார்கள். அவ்வாறு உறுதியாக நிரூபிக்காவிட்டால் அவர்கள் உடனடியாக நாடு கடத்தப்படுகிறார்கள்.

கொழும்பில் கைது செய்யப்படலாம் என்பதை இங்குள்ள அதிகாரிகளுக்கு எப்படி உறுதிப்படுத்துவது? அதனால் அவர்கள் அடைத்து வைக்கப்படுகிறார்கள். இங்கு ஈட்டன் ஹவுஸில் அகதிகளை உடனடியாகக் கொண்டு செல்வதற்கு வாகனங்கள் தயார் நிலையில் இருக்கின்றன.

இப்போது ஈழத்தமிழ் அகதிகள் லண்டன் தெருக்களில் நடமாடவே அச்சப்படுகின்றனர். எந்த நேரமும் கைதுசெய்யப்படலாம் அல்லது நாடு கடத்தப்படலாம் என்ற அச்சம்தான் அது. தங்கள் அரசியல் தஞ்ச விண் ணப்பம் நிராகரிக்கப்படும் பட்சத்தில் அவர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும்

ஊரிலும் போய் வாழ முடியாது: இங்கும் கைதுசெய்கிறார்கள்: என்ன செய்வது? ஓடுகின்ற ரயில் முன்னால் பாய்ந்து தற்கொலை செய்துகொள்ளலாம்போலஇருக்கிறதுஎன்றுஈழத்தமிழ் அகதிஒருவர்விரக்தியாகத்தெரிவித்தார்.

### ஒரு மாற்றமும் வராது

பிரித்தானிய பிரதமர் யாழ்ப்பாணத்துக்குப் போய் வந்ததன் பின்னர் அகதிகள் தொடர்பான கொள்கைகளில் மாற்றம் வரும் என்று சிலர் எதிர்பார்க்கின்றனர். ஆனால் மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது என்று சொல்பவர்கள்தான் அதிகம். ஏனெனில், பிரிட்டன் தனது தேர்தல் அறிக்கையில் அகதிகளைக் கட்டுப்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறது. அதுதான் நடைமுறையில் இருக்கும் கெடுபிடி என்று அரசியல் ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். உண்மையான அகதிகளுக்கு பிரிட்டன் எப்போதும் விசா வழங்கும் என்று குடிவரவு அமைச்சர் சொல்கிறார். பிரச்சினைகளை இங்குள்ள அதிகாரிகளுக்கு எழுத்துபூர்வமாக நிரூபிப்பதற்காகப் படாத பாடுபட வேண்டியிருக்கிறது.

### ஓரின உறவாளரென்றால் சரி.

ஆனால் அகதிகளாகப் பதிவுசெய்வதற்கு இன்னொரு முறையையும் பிரிட்டன் சொல்கிறது. ஓரின உறவாளராக இருப்பவர்கள் (ஆண்களாக இருந்தாலும் சரி, பெண்களாக இருந்தாலும் சரி) தங்கள் நாடுகளில் வாழ்வதற்கு முடியாமல் இன்னல் அனுபவித்தால், பகிரங்கமாக வாழ முடியாதுபோனால் இங்கு பிரிட்டன் சரியான ஆதாரத்தைக் காண்பித்து அகதியாவதற்கு விண்ணப்பிக்கலாம். ஆதாரபூர்வமாக தாங்கள் ஓரின உறவாளர்கள் என்று நிரூபிக்க வேண்டும்.

வெளிநாடுகளிலிருந்து இங்கு வருகின்றவர்கள் மீது அதிகாரிகளின் கண் பின்தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

நான் எனது வீட்டிலிருந்து லண்டன் நகரத்துக்குப் போகும்போது ஆயிரக் கணக்கான கமெராக்கள் என்னைக் கண்காணிக்கின்றன என்பது எனக்குத் தெரியும். ஆனால் அது ஒரு அகதிக்கு ரண வேதனை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிட்டு அழிக்கப்படும் கிழக்குத் தமிழர் வரலாறு

கே.குமாரவேல்



மட்டக்களப்பு நகரில் இருந்து தெற்கே 7 மைல் தொலைவில் உள்ளது ஆரையம்பதி எனும் கிராமம். போரில் தமிழர் பக்கத்துக்காகப் பல இளம் உயிர்களை ஈகம் செய்த கிராமம். இதன் எல்லைகளாக வடக்கு காத்தான்குடி, கிழக்கு வங்கக்கடல், தெற்கு தாழன்குடா, மேற்கு மட்டக்களப்பு வாவி உள்ளன.

வரலாற்று தொன்மைமிக்க இந்தக் கிராமத்தை உள்ளடக்கிய மண்முனைப்பற்றுப் பிரதேசம் உலக நாச்சி எனும் தமிழ் அரசியால் ஆளப்பட்டது. இதற்கான ஆதாரங்கள், தொல்பொருள் சான்றுகள் சிகரம் எனும் இடத்தில் உண்டு. ஆரையம்பதி கிராமத்துக்கும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஈஸ்வரர் கோயிலுக்கும் 850 வருட பழைமையான தொடர்பு உண்டு. கொக்கட்டிச்சோலை தான்தோன்றி ஈஸ்வரர் தேர் ஓட்டத்துக்கு ஆரையம்பதி சிறி கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து வடம்பூட்ட வேல் கொண்டு செல்வர். போர்க் காலங்களில் கடும் இன்னல்களின் மத்தியிலும் இந்த நிகழ்வைப் பாரம்பரியம் விட்டுப் போகாமல் நடத்தி இருக்கின்றனர். (ஆதாரம்-மட்டக்களப்பு பாரம்பரியம்)

இப்படி பாரம்பரியமும் தமிழ்க் கலாசாரமும் ஒளி வீசும் இந்தக் கிராமம் தற்போது பெரும் அழிவைக்குமுகம்கொடுக்கின்றது. இதன் நீடிப்பின் மூலம் இந்த ஊரே பெரும் எதிர்காலத்தில் இருந்த இடம் இன்றிச் சென்றுவிடும் நிலை ஏற்படும்.

இந்த ஊரின் பிரச்சினை மேலோட்டமாகப் பார்ப்பின் தெரியாது. ஆயினும் கறையான் அரிப்பது போல இந்த ஊர் அரிக்கப்பட்டுக் கொண்டி ருக்கின்றது.

## பிரச்சினைகள்

இந்த ஊரை சுற்றியுள்ள தமிழருக்குச் சொந்தமான காணிகள் இப்போது. வேற்று ஆள்களால் அபகரிக்கப்படுகின்றன. இதற்கு அரசில் பதவி அதிகாரம் கொண்ட சிலரும் உடந்தையாக உள்ளனர். தற்போது ஊரின் உட்புறமாக உள்ள காணிகளையும் அடாவடியாக பறிக்கின்றனர். கிழக்குப் புற இந்து மயானக் காணி, ஆரையம்பதி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட காணி என்பனவும் அபரிக்கப்பட்டுள்ளன. ஆரையம்பதி ஒரு மீன்பிடிக் கிராமமாகும். இவ்வாறு கிழக்கு கடற்கரை ஓரம் அபகரிக்கப்பட்டால் ஆரையம்பதி மீனவர்கள் கடல் வளத்தை இழந்து விடுவார்கள்.

அமைச்சர் ஒருவரின் அழுத்தம் காரணமாக இதில் ஆரையம்பதி பிரதேச செயலாளர்,



ஊழியர்கள், கிராம சேவையாளர்கள் மற்றும் நாட்டுப் பற்றுள்ளோர் எதுவும் செய்ய முடியாதுள்ளனர் என்று கூறப்படுகிறது. உண்மையை சொல்லின் அவர்கள் உட்பட ஊர்மக்களே பெரும் அச்சத்தில் உள்ளனர். அமைச்சரை மீறி எதுவும் செய்ய முடியாது என பொலிஸாரும் கையை விரித்துவிட்டனர்.

## வரலாற்றுச் சுத்திகரிப்பு

சிகரம் எனப்படும் தொல்பொருளியல் இடத்தில் ஈரான் குடியேற்றம் என்ற பெயரில் ஈரானிய நாட்டின் நிதியுதவியில் வீடுகள் கட்டப்பட்டு மக்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது.



இவை அனைத்தும் 2006 ஆம் ஆண்டுக்குப் பிறகு திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் மண்முனைப் பற்று (மட்டக்க ளப்பு) தமிழர் பூர்வீகம், தாயகம் சம்பந்த மான வரலாற்று அழிப்பு கச்சிதமாக மேற்கொள்ளப்படுகின்றது. தமிழர் வரலாற்றைப் பாதுகாப்பதற்காக 2012 ஆம் ஆண்டு உலக நாச்சி அம்மையாருக் கும். குளக்கோட்டன் அரசனுக்கும் ஆரையம்பதி பிரதேச செயலகத் துக்கு அண்மையாக சிலைகள் வைக்கப்பட்டன. 2013 ஒகஸ்ட் மாதம் அளவில் உலகநாச்சி ஏந்தி நிற்கும் வாள் உடைக்கப்பட்டது. இதை ஏறாவூரைச் சேர்ந்த ஒருவரே மேற் கொண்டார் எனக்கூறி காத்தான்குடி பொலிஸார் அவரைக் கைது செய்தனர். அது தங்க வாள் என நினைத்து அவர் அதனை உடைத்தார் என்று பொலிஸார் பின்னர் கூறினர். (சின்னக் குழந்தைக்கும் தெரியும் அது சீமெந்தால் செய்த வாளென்று)



2012 ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தரின் சிலை வடக்கு எல்லையில் உடைக்கப்பட்டது. இவற்றின் அடிப்படையில் தெரிவது யாதெனில் கிழக்கிலிருந்து தமிழ் மக்களை விரட்டி அடிக்க பல சக்திகள் செயற்பட்டு வருகின்றன என்பதுதான். இன்னல்கள் பல பட்ட தமிழர் இன்னும் எமது உரிமைக்காக போரிட்டுக் கொண்டே இருக்கின்றனர். தமிழரை இனி கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்ற தந்தை செல்வாவின் கூற்று உண்மையாகி வருகிறது. இந்த அழிவில் இருந்து கிழக்கைக் காப்பதற்கு வடக்கு மக்களின் உதவி தேவை. வடக்கு மாகாண சபையும் அதன் முதல்வர் க.வி.விக்னேஸ்வரனும் இதுவிடயத்தில் அக்கறை எடுக்க வேண்டும். கிழக்கை கைவிட்டுவிடக் கூடாது.

2012 ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தரின் சிலை வடக்கு எல்லையில் உடைக்கப்பட்டது. இவற்றின் அடிப்படையில் தெரிவது யாதெனில் கிழக்கிலிருந்து தமிழ் மக்களை விரட்டி அடிக்க பல சக்திகள் செயற்பட்டு வருகின்றன என்பதுதான்.

# வடக்கை விரட்டுங்கள்

# ஜ ஸ ஷ ஹ க்ஷ ஸ்ரீ கிரந்தம்

ஞானாம்பிகை, உரும்பிராய்

தமிழில் ஏன் வடமொழி எழுத்துக்களைச் சேர்க்க வேண்டும்? சிறீநிவாசன் -சிறி என்பதை வடமொழி எழுத்தில் (ஸ்ரீ) எழுதி வடமொழிப் புலமை காட்டப்படுகிறது. விடமுண்ட கண்டன் என்பதில் இப்போது விடம்(விஷம்) கலக்கப்பட்டு விட்டது. விடம் எழுதக் கரைச்சல் எனின் விசம் என்று எழுதலாமே? உச்சரிக்கும்போது விரும்பினால் விஷம் என்று "ஷ"ப்பட உச்சரியுங்கள்.

"பாசை"யும் அப்படியே. "ஷ" வை விட்டுவிடலாம். எந்தவித தோசமும் கிடையாது. ஆனால் ஒரு சிலர் அந்த "ஷ"வை விடமுடியாது இடம்பிடிக்கின்றனர். தமிழின் துயரம் அது. அதிர்ஸ்டம் என்று "ஸ" சேர்க்கிறார்கள்- அதிர்ஸ்டம் என்பதற்குத் தமிழில் பொருத்தமான சொற்களே இல்லையா?

தமிழில் ஒரு எழுத்துக்கு வெவ்வேறு உச்சரிப்புக்கள் வருவது நடைமுறையில் உள்ளது. அது ஏற்றுக் கொள்ளப்பட்டும் உள்ளது. உதாரணமாக 'காகம்' என்ற சொல்லில் இரண்டாவதாக வரும் 'க' வடமொழிக்குரிய 'ஹ' என்ற உச்சரிப்பைக் கொண்டுதான் வருகிறது. அப்படி இருக்கையில் ஏன் 'ஹ' என்ற வட எழுத்தைப் பயன்படுத்த வேண்டும்?

இந்தியரில் வடமொழிக்காரர் உண்டு. அங்கு தமிழர் வடமொழி கலந்தாலும் பரவாயில்லை. ஈழத் தமிழ் மொழியில் மட்டும் அதைக் கலக்க அனுமதிக்கலாமோ? இவ்வளவு தமிழ் எழுத்தும் போதும் என்று வகுத்திருக்கும் போது அவசியமில்லாமல் ஏனோ பிறமொழிக்கடன்?


காணொலி- காணொளி அர்த்தம் சிறப்பாக உள்ளது. இது போன்று அறிஞர்கள் அர்த்தங்கள் வெளியிடுவது தமிழுக்கும் , தமிழருக்கும் செய்யும் நன்றியாகும். பழைய நூலொன்றில் -பாசை என்பதை பாடை என்று தான் எழுதப் பட்டிருந்தது. அந்த நூல் கைவசம் இல்லை. பாடை பாடையில் போக பாஷையாகி- இப்போ பாசையில்? காலம் மாறிப் போச்சுதண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணங்கள்

## மிக முக்கியம்

ஞானி



ஆவணங்கள் முக்கியமானவை. தனியார் ஆவணமாக இருக்கலாம், அரசு ஆவணமாக இருக்கலாம், அவை எல்லாமே மனித உயிரோடும்கூட விளையாடக்கூடியவை.

ஒரு சின்னச் சிட்டை பேரறிவாளன் (ராஜீவ் காந்தி வழக்கில் தூக்குத் தண்டனைக் கைதி) வாழ்க்கையைக் குறிவைக்கப் போதுமான ஆவணமாகக் கருதப்பட்டுவிட்டது என்று தகவல்கள் வருகின்றன. இரண்டு பற்றரிகள் வெடிகுண்டில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இரண்டு பற்றரிகளை வாங்கியதற்கான சிட்டை பேரறிவாளன் சட்டைப் பையில் இருக்கிறது. எனவே பேரறிவாளன் தூக்குத் தண்டனைக்கு உகந்த குற்றவாளியாகக் கருதப்படுகிறார். எத்தனை கடைகளில் இரண்டு பற்றரிகளை விற்பதற்குச் சிட்டை கொடுக்கும் நடைமுறை பின்பற்றப்படுகிறது என்ற ஆதாரமான கேள்விக்கே அங்கு இடமில்லை. ஆவணங்களின் வலிமை அதுதான். அதனால்தான் அவை காக்கவும்படுகின்றன, அழிக்கவும்படுகின்றன, பல சமயங்களில் காணாமலும் போகின்றன.

### ஒளிந்துகொண்ட ஒலிப்பதிவு

இந்தியாவில் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட மடாதிபதியும் அவரது சார்பில் ஒரு பெண்ணும் நீதிபதியிடம் லஞ்சப் பணம் கொடுக்கக் கால அவகாசம் பற்றிப் பேசியதாகச் சொல்லப்பட்ட ஓர் ஒலிப்பதிவு ஆவணம் முன்னர் வெளியானது. அது அசல் ஒலிப்பதிவுதானா, இல்லை போலியானதா என்பதை மூவரின் குரல் பதிவுகளையும் எடுத்து ஒப்பிட்டுப் பார்த்து உண்மையைக் கண்டறியும்படி காவல்துறைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

சில மாதங்கள் கழித்துக் காவல் துறை அளித்த பதிலின்படி, அந்த ஒலிப்பதிவு ஆவணம் 'கரெப்ட்' (சேதமாகிவிட்டது) ஆகிவிட்டதால் அதில் எதையும் கேட்க முடியவில்லை. அதே ஒலிப்பதிவு துல்லியமாகக் கேட்கும் விதத் தில் இன்றும் இணையத்தில் வலம் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் நீதிமன்றம், காவல்துறையைப் பொறுத்த மட்டில் அசல் ஆவணம் சேதமாகிவிட்டதால் அதன் உண்மைத்தன்மையைக் கண்டறியவே முடியாமல் விடயமே காலாவதியாகிவிட்டது.

### தொலைக்கும் வழிகள்

ஆவணங்களைத் தொலைக்கப் பல வழிகள் இருக்கின்றன. தீ விபத்து எளிமையான வழி. யாரும் யார் மீதும் இதற்காகப் பழிபோடவே முடியாது. எல்லாம் அவன் செயல். பழியெல்லாம் 'மின் ஒழுக்கு' என்ற பெயரில் கடவுளைப் போல கண்ணுக்குத் தெரியாத மின்சாரத்தின் மீதுதான். சில அரசு அலுவலகங்களில் குறிப்பிட்ட பிரிவில் மட்டும் அடிக்கடி தீ விபத்து ஏற்படுவதையும் தற்செயல் என்றே நாம் நம்ப வேண்டும்.

### பிரிட்டன் அமைத்துக் கொடுத்த பாதை

அரசு தன் வசமுள்ள ஆவணங்களை எப்படிப் பராமரிக்க வேண்டும், எப்படி இரகசியப்படுத்த வேண்டும், எப்படி அழிக்க வேண்டும் என்பதையெல்லாம் நவீன உலகத்தில் எல்லா நாடுகளுக்கும் சொல்லிக்கொடுத்த வழிகாட்டி பிரிட்டன்தான்.

சனல் 4 படங்கள் வாயிலாக இலங்கை அரசின் போர்க்குற்றங்களை ஆதாரத்தோடு வெளிப்படுத்துவதை இன்று ஊக்குவிப்பதும் அதே பிரிட்டன்தான். (இப்போதும் அந்தப் போரில் இலங்கை அரசுக்கு தன் ஆயுத உதவி எவ்வளவு என்ற கோப்பை பிரிட்டன் வெளிப்படுத்தாது.) சாம்ராஜ்ஜியமாக இருந்து அடிமை நாடுகளைத் தன்கீழ் வைத்திருந்த பிரிட்டன் அவற்றில் அரசு இயந்திரத்தை உருவாக்கியதுபோலவே, விடுதலை அளித்துவிட்டு வெளியேறும்போது எந்தெந்த ஆவணங்கள் அழிக்கப்பட வேண்டும், அகற்றப்பட வேண்டும் என்று மிக விரிவான திட்டமே தீட்டியிருக்கிறது.

### சுதந்திரம் கொடுப்பதற்கு முன்னரே ஆவண அழிப்பு

பிரிட்டிஷ் ராணியின் ஆட்சிக்கோ, அதன் இராணுவம், காவல்துறை, அதிகாரிகள், ஊழியர்கள், உள்ளூரில் அதுவரை உதவிய உளவாளிகள், யாருக்கும் எந்த தர்மசங்கடத்தையும் ஏற்படுத்தக்கூடிய ஆவணக் கோப்புகளை எல்லாம் அழிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. தங்கள் அரசு பாரபட்சமாகவோ இனவெறியுடனோ மத எதிர்ப்புடனோ ஏதேனும் செய்ததாக ஆவணத்தின் மூலம் கருத வாய்ப்பிருந்தால், அந்த ஆவணத்தை அழிக்கச் சொல்லியிருக்கிறது.

பல அடிமை நாடுகளில் சுதந்திரம் அறிவிக்கப்பட்டு ஆட்சி மாற்றம் செய்வதற்கு ஓராண்டு முன்பிருந்தே இந்த வேலைகள் தொடங்கப்பட்டன. ஏனென்றால் அவ்வளவு ஆவண அகற்றலும் அழித்தலும் செய்ய வேண்டியிருந்தது.

ஆட்சி மாற்றத்துக்கு முந்தைய கால கட்டத்தில் பிரிட்டிஷ் அதிகாரிகளும் உள்நாட்டு அதிகாரிகளும் ஒன்றாக வேலை செய்துவந்தபோதே, எந்தெந்த கோப்புகளை பிரிட்டிஷ் அதிகாரி மட்டுமே பார்க்கலாம் என்பது பிரிக்கப்பட்டுவிட்டது. புது அரசிடம் ஒப்படைக்கச் சில கோப்புகளைத் திருத்தியும் புதிதாகவே உருவாக்கியும் கொடுத்தார்கள்.

ஆவணங்களை எப்படி அழிப்பது என்பதையும் துல்லியமாகத் தங்கள் அதிகாரிகளுக்கு பிரிட்டிஷ் அரசு தெரிவித்தது. எரிப்பதாயிருந்தால், நன்றாக எரித்துச் சாம்பலானதும், சாம்பலை ஒரே இடத்தில் வைக்காமல் பிரித்துப் பல இடங்களில் சிதற வைத்துவிட வேண்டும். கடலில் ஆவணங்களைக் கொட்டுவதானால், கனமான பெட்டிகளில் வைத்து ஆழ்கடலில், கடல் நீர்ப்போக்கு அதை வேறு இடத்துக்கு அடித்துக் கொண்டு போய்விடாத பகுதியாகப் பார்த்து, கடற்கரையிலிருந்து எளிதில் அடைய முடியாத இடத்தில் கொட்ட வேண்டும்.

### அம்பலமாக்கிய கார்டியன்

அடிமை நாடுகளிடமிருந்து பல்லாயிரக்கணக்கான ஆவணங்கள் பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டமை போலவே மேலும் ஆயிரக்கணக்கானவை இவ்வாறு அழிக்கப்பட்டன. பிரிட்டனுக்கு வந்த ஆவணங்களிலும் பெரும்பாலானவை இன்னும் இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளன. கென்யா நாட்டினர் சிலர், 1950இல் நடந்த புரட்சியின்போது தங்கள் மனித உரிமைகளை பிரிட்டிஷ் அரசு மறுத்துத் துன்புறுத்திச் சித்திரவதை செய்த தற்கு இழப்பீடு கேட்டு நீதி மன்றத்தில் தொடுத்த ஒரு வழக்கால், இப்படி மறைக்கப்பட்ட, அழிக்கப்பட்ட சில ஆவணங்கள் பற்றி அரசு ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. இந்த விவரங்களை அண்மையில் கார்டியன் ஏடு வெளியிட்டது.

**இன்று நவீன தொழில்நுட்பம் மேலும் பல ஆவணங்களை உருவாக்கிக் கொண்டே இருக்கிறது. அந்த வசதியில்தான் பல புலனாய்வு முயற்சிகள் புதிய ஆவணங்களையே உருவாக்குகின்றன. செல்போன், மின்னஞ்சல், கண்காணிப்பு கமராக்கள், காணொலி, தொலைக் காட்சிப் பதிவுகளும் இன்று முக்கிய ஆவணங்கள்.**


### நெருக்கடிநிலை பிரகடனமா, அப்படியென்றால்?

ஆவணங்களை ரகசியமாக வைத்திருக்க ஒரு காலக்கெடுவை எல்லா அரசுகளும் பின்பற்றும். அதன்பின் அவை பொதுப் பார்வைக்கு வர வேண்டும். இந்தியாவில் அண்மையில் அவ்வாறு நெருக்கடிநிலை பிரகடனம் தொடர்பான ஆவணங்களைப் பார்வையிட ஒருவர் மனு போட்டபோது, அந்த ஆவணங்கள் ஏதும் இல்லை என்று பதில் வந்தது. எந்த அடிப்படையில் நெருக்கடிநிலை அறிவிக்கப்பட்டது என்பதற்கான அரசுக் கோப்பே இல்லையாம்!

### நவீன ஆவணங்கள்


இன்று நவீன தொழில்நுட்பம் மேலும் பல ஆவணங்களை உருவாக்கிக்கொண்டே இருக்கிறது. அந்த வசதியில்தான் பல புலனாய்வு முயற்சிகள் புதிய ஆவணங்களையே உருவாக்குகின்றன. செல்போன், மின்னஞ்சல், கண்காணிப்பு கமராக்கள், காணொலி, தொலைக்காட்சிப் பதிவுகளும் இன்று முக்கிய ஆவணங்கள்.

ஆவண அரசியல் முன்னெப்போதையும்விட இன்னும் மும்முரமாகத் தொடரும். சில காணாமல் போகும். சில அழிக்கப்படும். எனவே எந்த ஆவணத்துக்கும் ஒரு 'பக் அப்' (மற்றொரு பிரதி) வைத்துக்கொள்வதுதான் இனி அடுத்த ஆவண அரசியல் அத்தியாயம்.



**ஆவணங்களின் வலிமைமிக்கவை. அதனால்தான் அவை காக்கவும் படுகின்றன, அழிக்கவும் படுகின்றன. பல சமயம் காணாமலும் போகின்றன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பில்கேட்ஸ்

## உலகப் பணக்காரன் உருவான கதை

அழகிய பாண்டியன்

இந்தப் பில்கேட்ஸ், மைக்ரோசொப்ட், மென்பொருள் விண்டோஸ் என்றே ஓடிக் கொண்டிருக்கிறாரே.. இவரது வாழ்வில் காதல் கல்யாணம் கச்சேரி எதுவும் இல்லையா? என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம்.

அந்த வாழ்க்கையையும் கொஞ் சம் பார்த்து விடுவோம். 1975இல் மைக்ரொ சொப்டைத் தொடங்கிய பில் கேட்ஸுக்குக் காதல் வந் தது என்றால் அது மென் பொருள் மீதுதான். இரவு, பகல் பாராமல் தூக்கம், பசி இல்லாமல் மென் பொருள் எழுதுவதிலேயே மூழ்கிக் கிடந்தவருக்குக் காதலிக்க நேரம் ஏது?

மைக்ரோசொப்ட் அலுவ லகம் ஆல்பகர்க்கீ நக ரில்இருந்தபொழுது. வேக மாகக் கார் ஓட்டிச் சென்ற தற்காகப் பில்கேட்ஸுக்குப் பலமுறை அபராதம் விதிக்கப்பட்டிருந்தது.

இதுபற்றி ஒரு நண்பர் கேட் ஸிடம், "வேகமாக வந்து அபராதம் கட்டி ஏன் நஷ்டப்பட வேண்டும்?" என்று வினவினார்.

அதற்குப் பில்கேட்ஸ், "இது நஷ்டமில்லை. லாபம்தான். நான் வேக மாக வருவதால் பல நிமிடங்களை மிச்சப்படுத்த முடிகிறது. அந்த நிமிடங்களில் கூடுத லாக மென் பொருள் எழுதிச் சம்பாதிக்கிறேன். அதனுடன் ஒப்பிடும் போது, இந்த அபராதத் தொகை ஒன்றும் பெரிய விடயமில்லை" என்றாராம்.

இந்தளவுக்குத் தொழிலில் வேகம் காட்டிய மனிதர் காதலில் இறங்கி நேரத்தை வீணடித்திருக்கமாட்டார் என்பது நிச்சயம். பில்கேட்ஸ் காதல் வயப்படாததில் அவருக்கோ அவரது குடும்பத்தினருக்கோ வராத வருத்தம். அவரது தொழில் போட்டியாளர்களுக்கு வந்தது.

இருபத்து நான்கு மணி நேரமும் தொழிலில் இவர் காட்டும் அக்கறை, போட்டியாளர்களைத் தலையெடுக்க விடாமல் செய்துவிடுகிறது. "இந்த ஆள் காதலில் இறங்கி ஒரு பெண்ணோடு ஊர் சுற்றத் தொடங் கினால், அந்த நேரம் பார்த்து நமது தொழிலை உயர்த்திக் கொள்ள லாமே" என்று அவரது போட்டி யாளர்கள் ஏங்கினார்கள்.

வயது முப்பத்தைந் தைத் தாண்டிய பிறகும் கூட ஒரு வாய்ப்பை அவரது போட்டியாளர்களுக்குத் தரவில்லை கேட்ஸ். நமது ஊர் இளைஞர்கள் கடன் வாங்கிக் கல்யாணம் முடிப்பதுண்டு. ஆனால் பில் கேட்ஸோ முப்பத் தெட்டு வயதாகியும் அமெரிக்காவின் மிகப்பெரும் பணக்காரர் என்ற அந்தஸ்தைப்பெற்ற பிறகும் திருமணத்தைப் பற்றி யோசிக்கத் தயாராக இல்லை.

உலகத்திலேயே மிகப்பெரும் பணக்காரர் என்ற நிலையை அடைந்த பிறகு திருமணம் செய்து கொள்ளலாம் என்று நினைத் தாரோ என்னவோ.

திருமணத் தைப் பற்றி யார் கேட்டாலும் "இப்போது இல்லை" என்று மறுத்து விடுவார்.

அவரது பிரம்மசாரிய வாழ்க்கையைப் பார்த்து, தொழில் போட்டியாளர்களும் ஏன் மைக்ரோசொப்ட் ஊழியர்களும் கூட 'ஏ ஜோக்' சொல்லி சிரித்துக் கொண்டனர்.

மென்பொருள்பெண்ணையே தீவிரமாகக் காதலித்த பில் கேட்ஸுக்கு ஒரு சதைப் பெண்ணின்மீதும்காதல் வந்தது.

"அடே.... வெளியே சென்று காதலிப்பதற்கெல்லாம் அவர் நேரம் ஒதுக்கினாரா?"

நேரத்தை வீணடித்து வெளியே சென்று காதல் செய்வதற்கு அவர் என்ன ஏமாளியா? அவரது காதல் மைக்ரோசொப்ட்டுக்கு வேலை பார்க்க வந்த பெண் ணிடத்தில் தான்.

"எந்த விதத்தில் அந்தப் பெண்ணை பில்கேட் ஸுக்குப் பிடித்தது?"

மைக்ரோசொப்டில் யாரெல்லாம் கடுமை யாக உழைக்கிறார் களோ அவர்களையெல்லாம் பில்கேட்ஸுக்குப் பிடிக்கும். அந்த வகையில் வேலையில் படு சுறு சுறுப்பு காட்டிய தால் அந்தப் பெண் ணைப் பிடித்தது.

"அந்தப் பெண் யார்?"

"மெலிண்டா ஃப்ரெஞ்ச்" என்பது அந்தப் பெண்ணின் பெயர். கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு மைக்ரோசொப்டில் ஒரு சாதாரண வேலைக்குச் சேர்ந்தவர். தனது உழைப்பால் படிப்படியாக உயர்ந்து மைக்ரோசொப்டின் ஒரு பிரிவுக்கு மேலாளர்என்றபொறுப்பில்இருப்பவர். மைக்ரோசொப்டின் மீது மெலிண்டா காட்டிய அக்கறையில் மனதைப் பறிகொடுத்த பில்கேட்ஸ் அந்தப் பெண்ணைக் காதலிக்கத் தொடங்கி விட்டார்.

ஒருமுறை மெலிண்டாவைத் தன் தாயிடம் அழைத்துச் சென்று "இவள் தான் என் பெண்தோழி" என்று கேட்ஸ் அறிமுகப்படுத்திய போது "அட, நம்ம பயலுக்கும் கூடக் காதல் வந்திருக்கிறதே" என்று ஆனந்த அதிர்ச்சியடைந்த அவரது தாயார் இருவரையும் மகிழ்ச்சியுடன் வாழ்த்தினார்.


> மைக்ரோசொப்டில் யாரெல்லாம் கடுமையாக உழைக்கிறார் களோ அவர்களையெல்லாம் பில்கேட்ஸுக்குப் பிடிக்கும். அந்த வகையில் வேலையில் படு சுறுசுறுப்பு காட்டியதால் அந்தப் பெண்ணைப் பிடித்தது.



# சி

ரிக்க....
ந்திக்க....
ல வரிகள்

முத்துமணி



1965 ஆம் ஆண்டு வவுனிக்குளம் குடியேற்றத் திட்ட அலுவலராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன. கட்டைப் பிரமச்சாரி. எனக்குரிய விடுதியில் ஊரில் உள்ள எனது அம்மா சொல்லித் தந்த சமையல் குறிப்பு பிரகாரம் சமைத்துச் சாப்பிட நிர்ப்பந்தம். காரணம் காடு; சாப்பாட்டுக் கடைகள் கிடையாது. எனது சமையலை நானே புகழ்ந்து (மனதுக்குள்) ரசிப்பேன். சாப்பிட்ட கோப்பை- பாத்திரங்களை சாப்பாட்டு மேசையிலேயே விட்டுவிடுவேன். (கழுவ வேலையாள்கள் இருப்பதாக பெரிய எண்ணம்). பின்பு வேறு வழியில்லாமல் நானே கழுவி வைத்துவிடுவேன்.

அற்ப ஆசை- அற்ப ஆசை என்பார்கள். அதன் விளைவுகளை நானே அனுபவித்திருக்கிறேன். அதை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்ற அற்ப ஆசைதான் இந்த சிலவரிகள்.

ஒரு கிழமை லீவில் யாழ்ப்பாணம் வீட்டுக்குச் செல்ல ஒரு வெள்ளிக் கிழமை ஆயத்தமானேன். அரசகடமைகளைச் செய்வதைவிட சமையல டிப்பாற்மென்றை துப்புரவு செய்வது பெரும் வேலை.

கடை[illegible] வெங்காயம். எஞ்சி[illegible] கோழி முட்டை மட்டும் என்னை முழித்து முழித்து பார்த் துக் கொண்டே இருந்தது. அதை வீட்டுக்கு எடுத்துச் செல்லலாமா அல்லது விட்டுவிட் டுப் போகலாமா எனத் தீர்மானிக்க முடியாது மனதில் போராட்டம். கடைசியில் அற்ப ஆசையே வென்றது. அதைக் கவனமாக எனது கால்சட்டை பொக்கற்றுக்கு கைலேஞ்சியில் சுற்றி வைத்துவிட்டு யாழ்ப்பாண பஸ்ஸில் ஏறிவிட்டேன். கையில் வேறு 'பாக்'. ஏதும் இல்லை. கோணர் சீற் கிடைத்தது. நாடாளு மன்றத்தில் எம்.பி. சீற் கிடைத்தது போன்ற புளுகம். சீற்றில் அமரும்போது முட்டை தட்டுப்படாதவாறு பக்குவமாக அமர்ந்துகொண்டேன். பஸ் மாங்குளம் தாண்டி முறிகண்டிப் பிள்ளையார் கோயிலை நெருங்க நெருங்க முட்டையைப் பற்றிய கவலை - பயம் கூடிக் கொண்டே இருந்தது. வெள்ளிக்கிழமை முட்டையைக் கொண்டு முறிகண்டிப் பிள்ளையாரைக் கும்பிடலாமா என மனதில் பட்டிமன்றம் வேறு. முறிகண்டிப் பிள்ளையார் கோயில் வந்ததும் சன மெல்லாம் முண்டியடித்துக் கொண்டு இறங்கினர். நானோ கோணர் சீற்றில் அப்படியே அமர்ந்திருந்தேன். பஸ் கொண்டக்ரர் "ஏன் ஐயா இறங்கேல்லையோ" என்றார். அவருக்கு எனது வேதனை எங்கே தெரியப் போகிறது. நானோ அந்த கோழி முட்டையை பக்குவமா கொண்டுபோய் அம்மாவிடம் எப்படி ஒப்படைப்பேன் என்ற பயத்தில் இருந்தேன். எ[illegible]தில் பிரயாணம் செய்தவர் [illegible]இருந்ததால் அவரால் முட்டைக்கு ஒரு இடையூறும் இருக்கவில்லை. முறிகண்டியிலிருந்து புறப்பட்ட பஸ் படுவேகமாக போய்க் கொண்டிருந்தது. ஆனையிறவில் செக்கிங் இல்லை. அப்படி இருந்தாலும் பொக்கற்றைத் தட்டிப் பார்க்கமாட்டார்கள் என்ற துணிவு மனதை சற்று சாந்தப்படுத்தியது. நான் நினைந்தது போல் செக்கிங் இல்லை. இயக்கச்சியை தாண்டுபோது பஸ்ஸில் உள்ள பிரயாணிகளும் குதிரைச்சவாரி செய்வதுபோல் எழும்பி எழும்பி அமர்ந்தனர். எனது முட்டையை செக் பண்ணிப் பார்த்தேன். அது கைலேஞ்சிக்குள் கச்சிதமாக இருந்தது.

இறுதியாக பஸ் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நின்றபோது நீல் ஆம்ஸ் சந்திரமண்டலத்தில் காலடி வைத்த போது ஏற்பட்ட மகிழ்ச்சிபோல் கம்பீரமாக இறங்கினேன். சொல்லி வைத்தாற்போல் 771 தாவடி, மானிப்பாய் இரட்டைத் தட்டு பஸ் ரெடியாக நின்றது. எப்படியும் வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்ற ஆசையில் பாய்ந்து ஏறினேன். அச்சமயம் பார்த்து பஸ்ஸும் புறப்பட, பக்குவமாக இருந்த முட்டை பஸ்ஸில் ஏறும் வாசலில் இருந்த தூண் போன்ற அமைப்பில் "நறுக்" என்றது. முட்டையின் பயணம் முடிவுற்றது. எனது பயணம் வீடுவரை தொடர வீட்டு வாசலில் நின்ற அம்மாகேட்டா "என்ன மோனை முகம் வாடிப் போச்சு. ஏதும் சுகயீனமோ" என்று. அத்துடன் எனது அற்ப ஆசைகளை கைவிட மனது தீர்மானம் எடுத்தாலும் இன்னொரு அற்ப ஆசையை அடுத்தவாரம் உங்க ளுக்குச் சொல்ல எனக்கு ஆசைவிட்ட பாடில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திகட்டத் தொடங்கும் சிரிப்பு

தொகுப்பு: ஆதங்கன்

ஒரு வெற்றிப்படம் எடுக்க வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்?

மிகவும் சுலபம். நாலைந்து பிரபலமான நகைச்சுவை நடிகர்களை ஒரு பிரதான நாயகனோடு களமிறக்கி, நிமிடத்துக்கு ஆகக்குறைந்தது நான்கு முறையாவது சிரிக்கச் செய்யுமளவுக்கு நகைச்சுவைகளை கண்டுபிடித்துவிட்டால் போதும். படம் வசூலைக் குவித்துவிடும் என்பதுதான் இப்போது தமிழ் சினிமா இயக்குநர்களின் எண்ணமாக இருக்கிறது. ஆனாலும் இனிப்பாக, சுவையாக இருக்கிறது என்பதற்காக தொடர்ச்சியாக ஐஸ்கிரீமை மட்டுமே உணவாகக் கொள்ளமுடியுமா? ஒரு கட்டத்தில் அது திகட்டி, கடைசியில் ஐஸ்கிறீம் மீதே வெறுப்பு வந்துவிடும். கிட்டத்தட்ட நகைச்சுவைப் படங்கள் மீதும் அப்படியானதொரு வெறுப்பை உண்டுபண்ணவே தமிழ்சினிமாவின் தற்போதைய போக்கு விரும்புகிறது போலும்.

இந்தப்பாணியில் அண்மையில் வெளிவந்திருக்கிறது நவீன சரஸ்வதி சபதம்'.



சினிமாவில் நடித்து அடுத்த சூப்பர் ஸ்டார் பட்டத்தைப் பிடிக்கத் துடிக்கும் ராஜ்குமார், பெரும் அரசியல்வாதியாகி இன்னமும் பணத்தை சம்பாதிக்கத் துடிக்கும் சத்யன், சொர்ணாக்கா மாதிரியான ஒரு அடாவடி மனைவியிடம் மாட்டிக் கொண்டு தவிக்கும் வி.டி.வி. கணேஷ், ரகசிய வியாதி மருத்துவர் ஜெய். இவர்கள் நால்வரும் நண்பர்கள். நால்வருக்கும் ஒரு ஒற்றுமை தலைகால் தெரியாமல் மூக்குமூட்ட மதுவில் மூழ்கும் பெருங்குடிமக்கள்.

குடியின் தீமைகளைப் பற்றி இவர்களை வைத்தே ஒரு நாடகம் நடத்த ஆசைப்படுகிறாராம் சிவபெருமான். ஆகவே ஜெய்யின் திருமணம் நடைபெற ஒரு வாரத்துக்கு முன்பு ராஜ்குமாரின் புதிய படப்பிடிப்புக்கு தொடங்கும் ஒரு வாரத்துக்கு முன்பு பெரும் விருந்துக்காக பாங்கொங்' புறப்படுகிறார்கள் நண்பர்கள்.

அங்கே வைத்து அவர்களைக் கடத்தும் சிவபெருமான், ஆளில்லாத ஒரு தனித் தீவில் அவர்களை கொண்டு போய்ச் சேர்க்கிறார். மிதமிஞ்சிய குடியால் அந்த இடத்துக்கு எப்படி வந்து சேர்ந்தோம் என்பதுகூட தெரியாதவர்களாக இருக்கிறார்கள் அவர்கள். அங்கிருந்து தப்பிச் செல்ல அவர்களுக்கு 2 முறை வாய்ப்புகள் கொடுக்கிறார் சிவன். அவர்கள் அதனை தவறவிட 6 மாதங்கள் கழிந்த நிலையில் அவர்கள் செய்த பாவம், புண்ணியத்தை சீர்தூக்கிப் பார்த்து, கடைசியாகவும் ஒரு வாய்ப்பு தருகிறார். அதில் அவர்கள் தப்பித்தோம் பிழைத்தோம் என்று தப்பி வருகிறாகள். இப்போது அவர்களது நிலைமை ஊரில் எப்படி இருக்குமென்பதை படத்தின் இறுதிக்காட்சிகள் சொல்கின்றன.

கதையின் அடிப்படையே தவறானது. படம் நெடுகிலும் குடிகாரர்களையே திட்டிக்கொண்டிருக்கும் இயக்குநர், குடியைத் தூண்டக்கூடிய வகையில் மதுபானக்கடைகளைத் திறக்க அனுமதித்திருக்கும் அரசுகளை பற்றி ஒரு வார்த்தைகூட இதில் சொல்லவில்லை..! மதுபானக் கடைகளே இல்லையெனில் பலர் குடிக்கமாட்டார்களே. கஷ்டப்பட்டு இவர்களைத்திருத்த நினைக்கும் சிவபெருமான் மதுபானக்கடை வைத்திருப்பவர்களையோ அல்லது அதற்கு அனுமதியளிக்கும் ஆட்சியாளர்களையோ திருத்த முனைந்தால், கடவுளின் பொதுநோக்கு வெளிப்பட்டிருக்கும். மற்ற எல்லோரையும் விட்டுவிட்டு நாரதர் சொன்னார் என்பதற்காக இந்த நால்வரையும் இவ்வளவு மினக்கெட்டு திருத்த வேண்டியளவுக்கு அவசியமெதுவும் வந்துவிடவில்லை.

படத்தின் முற்பாதி முழுவதிலுமே பெருங்குடி நண்பர்கள் நால்வரையும் பற்றிய அறிமுகத்திலேயே கழிந்துவிடுகிறது..! அதிலும் கொடுமையோ கொடுமை சிவலோகத்தின் தற்போதைய காட்சிகள். சிரிக்க வைப்பதாக நினைத்துக் கொண்டு ஐ பாட்டில்' விளையாடும் முருகன், உடல் எடை குறைய நவீன இயந்திரத்தில் உடற்பயிற்சி செய்யும் பிள்ளையார் என்று நாடகத்தனமான காட்சிகளை இயக்குநர் ஏன் பயன்படுத்தினார் என்று புரியவேயில்லை. எடுத்திருப்பது நல்ல கருத்துள்ள, அறிவுரை சொல்லும் படமாம்..! ஆனால் காட்சியமைப்போ கதையோ பார்ப்போரின் மனதில் ஒட்டாதபோது எப்படி அறிவுரை மண்டைக்குள் ஏறும்?

விடிவி கணேஷின் சின்னச் சின்ன கடிகள் தான் படத்தை பிற்பாதியில் காப்பாற்றுகின்றன. இப்படி தனித்தீவில் மாட்டிக் கொண்ட பின்பும் உல்லாசமாகத்தான் பொழுதைக் கழிக்கிறார்கள் நண்பர்கள். அங்கேயும் கள்ளைக் குடித்து விட்டு ஆட்டமோ ஆட்டம் ஆடுகிறார்கள்..! குடியினால்தான் இப்படி தனித் தீவில் மாட்டிக் கொண்டு அல்லற்படுகிறோம் என்பதை அழுத்தமாகப் பதிவு செய்யும் காட்சிகள் இல்லாததால் எல்லாமே மனதில் ஒட்டாமல் வழுக்கிக் கொண்டே செல்கின்றன.

இரண்டாவதாகக் கிடைத்த வாய்ப்பை கணேஷ் விட்டுவிடும்போதுதான் திடீரென்று நண்பர்களுக்கு ஞானதோயம் வந்து இனி மேல் குடிக்க மாட்டோம் என்று சத்தியம் செய்து கொள்கிறார்கள். படத்தை முடித்தாக வேண்டிய கட்டாயம் இருந்ததால் இப்படி வலுவான காரணமில்லாமலே அவர்கள் திருந்த வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது பார்க்கும் ஒவ்வொருவருக்கும் சொல்லாமலே புரிகின்றது.

சித்த மருத்துவர் கோவை காமராஜாக நடித்திருக்கும் சித்ரா லஷ்மணனுக்கு மிகப் பொருத்தமான பாத்திரம். ஒருவகையில் இவரும் பிரபல சித்த மருத்துவர் சேலம் சிவராஜ் போலவேதான் தெரிகிறார். அவருடைய வசன உச்சரிப்பே எடுத்தவுடன் சிரிப்பை மூட்டுகிறது. அதிலும் கடைசியில் அவரது மனைவியை அறிமுகப் படுத்தும் காட்சி கலகலப்பு.

அதேபோல் தலையில் தேங்காய் விழுந்து அடிபட்டவுடன் சரஸ்வதி சபதம் படத்தின் வசனங்களை அள்ளி வீசும் கணேஷின் நகைச்சுவையும் சிரிப்பலையை எழுப்பத் தவறவில்லை. கணேஷ் இதற்கடுத்து செய்யும் அனைத்துமே சரவெடி. திரையரங்கில் இவருக்காகவே ஒரு கூட்டம் வருகிறது போலும்.

ஜெய் வழக்கம்போல இந்தப்படத்திலும் துள்ளி விழுகும் காதலர். கண்டவுடன் காதலாகி, பாடலைக் கேட்டவுடன் காதல் மலர்கிறது. காதலியை பார்த்து பேசி ஒரு ஒப்பந்தத்தின்படி 2 வருடமாக பின்னாடியே அலைந்து திரிந்து சம்மதிக்க வைப்பதும்கூட காதலர்களுக்குப் பிடித்தமான காட்சிகள்தான்..!




நாயகி நிவேதா தோமஸ் கொஞ்ச நேரமே வந்தாலும் அழகாக நடித்திருக்கிறார். சத்யன், அவரது அப்பாவான சுவாமிநாதன், நடிகராக ராஜ்குமார், சிவபெரு மானாக வரும் சுப்பு பஞ்சு, நாரதராக மனோபாலா, பார்வதியாக தேவதர்ஷினி என்று நடிகர்களை கச்சிதமாக பொறுக்கியெடுத்து நடிக்க வைத்து வேலை வாங்கியிருக்கிறார் இயக்குநர். ஆனால் கதையிலும், அதை நகர்த்தும் முறைமையிலும் தான் கோட்டை விட்டிவிட்டார்.

பிரேமின் இசையில் நாலைந்து பாடல்களும் ஒலிக்கின்றன. ஆனால் எந்த வொரு பாடலும் மனதில் நிற்கவில்லை. ஒளிப்பதிவாளர் ஆனந்து சிறப்பாகச் செயற்பட்டிருகிறார். ஒரு புறம் கடலைத் தாண்டி சென்று மறுபுறம் மீண்டும் கடலுக்கே திரும்பி வந்து நிற்கும் காட்சியில் ஒரு பயத்தை அவரது ஒளிப்பதிவு மட்டுமே காட்டியிருக்கிறது. ஆனால் நடிகர்கள் காட்டவில்லை.

படத்தின் பெயர் பொருத்தம்கூட இல்லை. 'நவீன திருவிளையாடல்' என்றுதான் பெயர் வைத்திருக்க வேண்டும். ஆனால் அப்படியொரு படம் சமீபத்தில் தனுஷ் நடிப்பில் வெளிவந்து விட்டதால் 'சரஸ்வதி சபதத்தை கையில் எடுத்திருக்கிறார்கள் போலும். தலைப்பு வைத்த கடனுக்காக படத்தின் இடையில் திடீரென்று சரஸ்வதிக்கு கோபம் வந்து, சிவனுடன் மோதுவதைப் போல ஒரு காட்சியைத் திணித்திருக்கிறார்கள்.

ஒரு முக்கியமான விடயத்தை நகைச்சுவையாகச் சொல்ல முனைந்திருப்பதால் இது மக்கள் மனதில் நிற்குமா என்பது சந்தேகமே. ஏனெனில் 2 மணி 20 நிமிடங்கள் ஓடும் நவீன சரஸ்வதி சபதம் படத்தை விடவும், ஒவ்வொரு திரையரங்கிலும் இடைவேளையில் நுரையீரல் பஞ்சு போன்ற மென்மையானது என்ற கர்ண கொடூரக் குரலுடன் ஒலிக்கும் அந்த ஒரு நிமிட விளம்பரப் படமே மக்கள் மனதை பெரிதும் தொடுகிறது.

தமிழ்ப் படம் படத்தில் அமுதனிடமும், பின்பு வெங்கட் பிரபுவிடமும் இணை இயக்குநராகப் பணியாற்றிய சந் துரு இயக்கியிருக்கிறார். ஆனால் அவரது இயக்கத்தில், அந்த அனுபவம் கொஞ்சமும் வெளிப்படவில்லை. வழமைபோல நகைச்சுவை என்ற ஒன்றை மட்டும் வைத்துக் கொண்டு வெற்றிக்கொடி நாட்டிவிடலாமென்று நினைத்த இயக்குநர்களுக்கு இந்தப் படத்தின் தோல்வி நல்லபாடம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# அனைவரையும் வசீகரிக்க

## வலிமைமிக்க, நீடித்து, நிலைக்கக் கூடிய வசீகரிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளும் வழிகள்

நிலாமகன்

குறைவான கவர்ச்சி விளைவை உடைய மக்கள், ஏற்ற இறக்கம் இல்லாத ஒரே தொனி தங்களுக்கு இருக்கிறது என்பதையே உணர்ந்திருக்கமாட்டார்கள். சலிப்பூட்டும் குரல் உண்டாவதற்குச் சில பொதுவான காரணங்கள்:

சலிப்பூட்டும் உள்ளடக்கம், எழுதி வைத்துள்ள உரையை அதிகம் சார்ந்திருத்தல், கேட்பதற்கு இனிமையாக இல்லாத தொனி. எழுதி வைத்த உரையைப் படிப்பது நிச்சயமாக சலிப்பூட்டுவது; கவர்ச்சியை உறிஞ்சி குரலைத் தாழ்த் துகிறது. மிகச் சிறந்த நடிகர்களுக்குக் கூட மிக நீண்ட வசனத்தைச் சுவை குன்றாமல் பேசுவது மிகவும் சிரமமான செயல்.

உங்கள் தொனியை வேறுபடுத்த உங்கள் உடலை அசைப்பது முக்கியம்! ஆம், நிச்சயமாக அது பயனளிக்கிறது! மற்ற வழிகள் கீழ்வருமாறு:

- ஆழமாகச் சுவாசியுங்கள், ஓய்வாக இருங்கள்.
- பேச்சின் முக்கிய சொற்கள், சொல் தொகுதிகளில் 'சார்ந்து', அவற்றில் அதிக சக்தியைச் செலுத்தவும்.
- நீங்கள் சொல்வதில் அதிக அளவு உணர்ச்சிகளைப் புகுத்தவும்.
- அறிவிப்புகள், குறிப்புகள், கேள்விகள் இவற்றின் முடிவில் அழுத்தம் கொடுங்கள்.

தனிப்பட்ட வளர்ச்சியில் இது கடினமான பகுதி. இதைக் கவனத்துடனும், திறமையுடனும் கையாளத் தகுதி உடைய 'தொனி பயிற்சியாள ரிடம்' பயிற்சி பெறுவதே சிறந்தது. மாறுபாடு உடையதாகவும் ஆர்வ முடையதாகவும் உங்கள் தொனி இருப்பதற்கு அவரால் உடனே உதவி செய்ய முடியும்.

### ஒலி அளவு

விலைகளை ஒப்பீடு செய்கின்ற தன்னுடைய 'சிம்பிளிஸ்விட்ச்' இணையதளத்தை கரேன் டெர்பி என்ற பிரபல தொழிலதிபர், 22 மில்லியன் டொலர்களுக்கு விற்றார். அவரைப் பற்றி, "கடைசி வரிசையில் இருப்பவரும் கேட்கக் கூடிய குரலில் அவர் பேசினார், அப்போது ஒரு சிறிய அறையில் நாங்கள் இருவர் மட்டுமே அமர்ந்திருந்தோம்" என்று ஒக்ரோபர், 2007, கார்டியன் இதழ் குறிப்பிடுகிறது. இதற்கு மாறாக பிரபலமான அமெரிக்க எழுத்தாளரும் நகைச்சுவையாளருமான டாரதி பர்க்கர் வேண்டுமென்றே மிகக் குறைந்த ஒலியில் பேசினார்; அவருடைய சொற்களைச் சரியாகக் கேட்பதற்கு மக்கள் இருக்கையிலிருந்து முன்னே வந்து அவர் பக்கமாகச் சாய்ந்து கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் காதுகளுக்கு இனிய விருந்தாக அது அமைந்தது. நையாண்டியும் நகைச்சுவையும் நிரம்பிய அவருடைய மிகச் சிறந்த பேச்சு, கேட்பவர் மீது குறிப்பிட்ட தாக்கத்தை ஏற்படுத்தியது. மிக மிக மெதுவாகப் பேசும் முறையை அவர் தேர்ந்தெடுத்திருந்தார். தான் என்ன செய்கிறோம் என்பதை அவர் முழுவதும் அறிந்திருந்தார்; அதனால் மக்களின் கவனம் தன்மீது தங்கியிருப்பதற்கு போதுமான அளவை மட்டும் அவர் வெளிப்படுத்தினார்.

மிகச் சத்தமாகவோ அல்லது மிகக் குறைவான குரலிலோ பேசுவது உங்கள் கவர்ச்சி விளைவை வலுவிழக்கச் செய்கிறது.

அதனால் உங்களது ஒலி அளவு கட்டுப்பாடு அதிகமாக/குறைவாக இருக்கிறதா என்பதைக் கவனிப்பது முக்கியமாகிறது. 'சத்த மாகப் பேசவும்', அல்லது 'மறுபடியும் சொல்லுங்கள்' என்று மனிதர்கள் உங்களிடம் அடிக்கடி கேட்கிறார்களா? அப்படி அவர்கள் கேட்கிறார்கள் என்றால், உங்களுக்கு மிகச் சரியானதாகத் தோன்றும் உங்கள் குரல் ஒலி அளவு, மற்றவர்களைப் பொறுத்தவரையில் குறைவானது என்பதையே அது காட்டுகிறது.

உரத்த கடுங்குரல் அல்லது கரகரப்பான குரல் உங்களுக்கு உள்ளது என்று நீங்கள் கவலைப்பட்டால், சிறிதளவுதான் என்றாலும் மக்கள் உங்களிடமிருந்து விலகுகிறார்கள் அல்லது முகம் சுளிக்கிறார்களா என்பதைக் கவனியுங்கள். இல்லை என்றால் உங்கள் நம்பிக்கை குறித்து நண்பர்கள், சக ஊழியர்களிடம் சென்று அவர்களுடைய பின்னூட்டத்தைக் கேட்டுப் பெறுங்கள்.

### குரலின் தன்மை

நட்பாக, கோபமாக, மகிழ்ச்சியாக, பொறுமையாக....என்று நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதை உங்களுடைய குரலின் தன்மை வெளிப்படுத்துகிறது. அதனால் உங்களுடைய தனிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்துவதில் அது ஒரு முக்கிய பங்கைப் பெறுகிறது.

### பேச்சு வெளிப்படும் வேகம்

பயன்படுத்தப்பட்ட கார்களை விற்கும் விற்பனையாளர்கள், அரசியல்வாதிகள், வக்கீல்கள் போன்றோர் மிக வேகமாகப் பேசுவார்கள். துப்பாக்கிக் குண்டுகளைப் போல் அவர்களுடைய வாயிலிருந்து சொற்கள் வெடிக்கின்றன. மெதுவாகப் பேசுபவர்கள் உங்களை இழுக்குமாறு பேச்சை நீட்டிப்பார்கள். அதனால் அவர்கள் சொற்களை, நீங்கள் விடாமல் பிடித்துக் கொண்டிருப்பீர்கள். தங்கள் பேச்சைக் கேட்பவர்கள் மீது ஆதிக்கத்தைச் செலுத்த இந்த இரு சாராருமே வேகத்தைப் பயன்படுத்த முயலுகிறார்கள். அதன் மூலம் தங்கள் தாக்கத்தை அதிகரிக்க முடியும் என்று நம்புகிறார்கள்.

சாதாரண உரையாடல் பேச்சில் ஒலி குபீரென்று வெளிப்படுகிறது. அதனால்தான் மிக மெதுவாகப் பேசுவது கவர்ச்சி விளைவை வளர்ப்பதில் நல்ல பயனைத் தரும். வேகத்தைக் குறைப்பதற்கான சில வழிகள்:

- பேச்சுக்கு நடுவே இடைவெளி கொடுப்பதன் மூலம் கேட்பவர்கள் சிந்திப்பதற்கு நேரம் கொடுக்க முடியும்.
- பேசும் வேகத்தைச் சில நேரங்களில் கூட்டுங்கள் அல்லது குறையுங்கள்.
- குறைவான சக்தியைப் பயன்படுத்துங்கள், அதனால் சொற்கள் குறைவாகவும், தடங்கல் இல்லாமலும் சீராகவும் வெளிவரும்.

மிகவும் மெதுவாகப் பேசுவதாக நீங்கள் நினைப்பீர்களானால் இதை உங்கள் நண்பர்களிடம் கேட்டுச் சரிபார்த்துக் கொள்ளவும். ஏனெனில் அது பெரிய அளவு நன்மையை அளிக்கக் கூடியது.

### வேகத்தை அதிகரிப்பதற்கான சில வழிகள்:

- உங்களுடைய பேச்சில் அதிக சக்தியைக் கொடுங்கள், அதன் மூலம் சொற்கள் வெடிப்பது போல் வெளி வரும்.
- பேச்சுக்கு முன்னால் தசைகளைத் தளரச் செய்வதான சொற் பயிற்சிகளை மேற்கொள்ளவும்-தொழில் முறை நடிகர்களும் பேச்சாளர்களும் பேச்சைத் தயார் செய்யும்போது இந்தப் பயிற்சியைத் தவறாமல் பயன்படுத்துகிறார்கள்.
- ஒரு லிஸ்டை உரக்கப் படியுங்கள். கடிகாரத்தைப் பார்த்து அதற்கான நேரத்தைக் கவனியுங்கள். வேகமாக, இன்னும் வேகமாக அந்தப் பட்டியலைப் படிப்பதற்குப் பயிற்சியை மேற்கொள்ளவும்.

## நீதி தேவதைக்கு பசுவின் மனு

அம்மா...!
வருக வருக
ஆற அமர இரு தாயே
நலமென்று விசாரிக்கா
நலத்தோடு நாங்களில்லை...
இளைப்பாறியது போதுமெனில்
இனிப் புறப்படு
ஈழத்தின் வடக்குக்கும் கிழக்குக்கும்
போகலாம் எங்கள்
இதயங்கள் எரிக்கப்பட்டதும்
இறைமை பறிக்கப்பட்டதும்
இங்கு தான்

போரின் முறைமை தவறி
ஊரின் உயிர்களும் உடைமைகளும்
உலை வைக்கப்பட்டதை
உறையாமலிருந்துரைக்கும்
உறைவிடமிதுதான்
பக்குவமாய் நட தாயே...!
உன் பாதங்கள்
பயணிப்பதுவு
எங்கள் உறவுகள்
எரிக்கப்பட்ட சிதையின் மேலே
இப்போது சுவாசிப்பதெல்லாம்

அவலங்கள்
கலந்த காற்றைத் தான்
நீ
உண்பதெல்லாம்
குருதியில் சமைத்த சாதங்கள் தான்
இதோ...!
தாயே இங்குதான்
தமிழிச்சிகள் சூறையாடப்பட்டார்கள்
காப்பாற்றப்படாமைக்காக
வெட்கப்படு
தலைகுனியம்மா
பிஞ்சுக் குழந்தைகள்
பிரங்கியா வைத்திருந்தார்கள்
காணாமற் போனவரின



கணக்கென்ன சொல்லு...?
இல்லையேல்
கண்டறிந்து சொல்லு....
எங்களூர் தமிழிச்சிக்கு
நீ-
இரத்த உறவென்றால்
கர்ச்சிப்புகளின் செய்த
சமூகத்துக்கு...
கடுந்தண்டனை விதி...
கரிசனை கொள் தாயே
உன்னினம் அழிவதை
ஒரு தடவையாவது நிறுத்திட
உறுதியெடு....

*கவிஞர். த. பருத்திதாசன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாகரிக மோகம்

நண்பர்களுடன் நகரத்து வீதியிலே
நடை பயில போனேன்
நறும் பூ மணந்திடும்
நானும் வாடி நின்றேன்

காதிலே கடுக்கண்
கையிலே காப்பு
கழுத்திலே சங்கிலி
கூந்தலோ இரண்டடி
பின்னழகு எனை வாட்ட
முன்னழகைப் பார்த்து நின்றேன்
ஐயோ! சொக்கிப் போனேன்
அது அவள் இல்லை
அவன் என கண்டபிறகு...

எங்கோ பழகிய முகம்
என்றோ கேட்ட மொழி
ஐந்தடி உயரம்
அழகிய தோற்றம்
சாக்கு துணியில் ஒரு முக்கால்
காற்று பிடிக்க கை இல்லா ரீசேட்
தலைகூட கிப்பி...பாவம்
அவன் தலை மயிரோ சிவப்பு
கைகளை பிடித்திடும்போது நான்
உணர்ந்தேன் நண்பன் அல்ல
நண்பி என்று..

கலாசாரத்திடம் கல்வெறி
வாங்கிய எனக்கு ஒன்று மட்டும்
ஆறுதல் தந்தது
திருவிழா தேரில் தெருவில்
திருஉலா போன அம்மனாவது
பச்சைப் பட்டுடுத்தி
போனதை பார்த்து....



தமிழ் உலா, சாவகச்சேரி.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 295

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | 5 | 6 |
| 7 | | | 8 | | 9 | | |
| 10 | | 11 | | 12 | | | |
| | | 13 | 14 | | | | |
| | 15 | | | 16 | | 17 | |
| 18 | | | | 19 | | | |
| | | | 21 | | | | |
| 22 | | | | | 23 | | |

அனுப்புபவர் பெயர்:.......................................

விலாசம்:.......................................

.......................................

கையொப்பம்:.......................................

### இடமிருந்து வலம்

1. வேடிக்கைக் கவி புனைவதில் வல்லவன்
5. சுட்டும் சொல்
7. ஒரு திசையின் சுருக்கம்
8. எங்கும் நிறைந்திருக்கும் தன்மை
10. மாட்சிமை
12. மீண்டும் வா
13. இணங்க
15. பாட்டின் பதத்தில் ஓர் உறுப்பு
17. வீதம் கணக்கிடுவது இந்த அடிப்படையில்
18. மேலிருந்து நீர் விழும் இடம்
19. ஜனக் கூட்டத்தில் ஏற்படுவது
20. கூட்டல் குறி
21. இணைக்கச் சொல்
22. ஒரு இராகம்
23. சர்ப்பம்.

### மேலிருந்து கீழ்

1. கமக்காரன்
2. சமுத்திரம்
3. பாடல்
4. நோய்
5. உள்புறம்
6. கூட்டுவதற்கு உதவும்
9. குடி
11. மகள்
14. சேர்
15. அருந்துதல்
16. நஞ்சு
17. நூறு செய்யுள் கொண்ட தொகுதி
18. களைப்பால் வருவது
21. முதல் எழுத்தை இப்படித்தான் உச்சரிப்போம்

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.
★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 293 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) அகவை (4) உபசரி (8) கண்ணகி (10) கட்சி (11) வழிகாட்டி (13) பாகம் (15) தடு (17) வடை (18) கலி (19) கரு (20) தூண் (21) கல்வி (22) மண்டபம் (23) வேண்டும் (24) பிச்சை.

### மேலிருந்து கீழ்

(1) அகம்பாவம் (2) கண் (3) வைணவம் (5)பகட்டு (6) சட்டி (7) ரிசி (9) கிழி (12) காதலி (14) கடை (16) குருவிச்சைச (18) கண்டம் (19) கல் (20) தூண்டு. (21)கம்பி (22) மண்

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

சொற்சிலம்பம் போட்டி
இல. 294
நியூ உதயன் பப்ளிகேஷன்
[பிறைவேற்]லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (18.12.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.295இல்வெற்றி பெறுவோர்களது விவரம் 22.12.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 293 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
ப.சத்தியசுலோசனா,
இல.80, பெரியதம்பனை, மடுக்கோவில்.

**2 ஆம் பரிசு**
சுந்தரம் பாலகிருஷ்ணன்,
இல.1265, நாதன் திட்டம்,
புன்னை நீராவி, தருமபுரம்.

**3 ஆம் பரிசு**
சா.வி.றெபேக்கா ஜெனிபர்,
இல.29/2, பழைய பூங்கா வீதி,
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
திருமதி அ.லூர்தம்மா குரூஸ்,
ஆஸ்பத்திரி வீதி, சின்னக்கடை, மன்னார்.

**5 ஆம் பரிசு**
சி.செல்வராசா,
ராணி இல்லம், கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

**பாராட்டுப் பெறுவோர்**

யூ.மேரி றொயிண்டா,
சுருவில் வீதி, ஊர்காவற்றுறை.

ஆர்.டயானா ஷிரோமினி,
கீதா பஸில், இல.1005/2, வாசல றோட்,
கொழும்பு- 13

ச.நிலானி,
இல.811, சிவிக் சென்றர், வட்டக்கச்சி,
கிளிநொச்சி.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் [illegible] பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி...?

08.12.2013 முதல் 15.12.2013 வரை

### மேடம்

கடந்தகால நற்செயல்களினால் மனதில் நிம்மதியும் பெரு மிதமும் நிறைந்திருக்கும். புதிய பணிகளை உத்வேகத்துடன் மேற்கொள்வீர்கள். எதிரியின் தொந்தரவு அணுகாத, சுமுக வாழ்வு பெறுவீர்கள். பணியாளர்கள் சக பணியாளர்களிடம் நிதானித்து பேசுவது நட்பைப் பாதுகாக்க உதவும். மாணவர்கள் கல்வியில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

### இடபம்

வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்கும். கூடு தல் சொத்து வாங்க யோகம் உண்டு. இல்லறத் துணை யின் அன்பு, பாசத்தால் மகிழ்ச்சி அடைவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து பணவரவு கிடைக்கும். மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதை குறைப்பதால் படிப்பில் முன்னேற்றம் உருவாகும்.

### மிதுனம்

மனதில் உருவாகும் சஞ்சலம் நிவர்த்தியாகி பணிகளில் ஆர்வம் கொள்வீர்கள். அனுபவ ஞானம், புதிய செயல் நிறைவேற துணை நின்று உதவும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். மாணவர்கள் பாதுகாப்புக் குறைவான இடங்களுக்குச் செல்வதைத் தவிருங்கள்.

### கடகம்

சிக்கனம் பின்பற்றுவீர்கள். உழைப்புக்கு தகுந்த ஓய்வு தேவை. இல்லறத்துணையிடம், தேவையற்ற விவாதத்தில் ஈடுபடவேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகிற மந்த நிலையை ஓரளவு சரி செய்வீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தின் வழி காட்டுதலை கவனமுடன் பின்பற்ற வேண்டும். மாணவர் கள் புதியவரை நண்பராக ஏற்பதில் கவனம் வேண்டும்.

### சிங்கம்

வெளியூர் பயணம் சில நன்மையைப் பெற்றுத் தரும். சமூக நிகழ்வுகளால் புதிய அனுபவம் கிடைக்கும். இல்லறத் துணை மற்றும் அறிமுகம் இல்லாதவரிடம் நிதானித்துப் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூல தனம் செய்வீர்கள். பணியாளர்களுக்குத் தாமதமான சலுகைப்பயன் எளிய முயற்சியால் பெற அனுகூலம் உண்டு. மாணவர்கள் கவனத்துடன் படித்து கூடுதல் தேர்ச்சி பெறுவர்.

### கன்னி

உறவினர், நண்பர் உங்களிடம் கொண்டுள்ள நம்பிக்கைக்கு உரியவராக நடந்து கொள்வீர்கள். சொத்து விடயத்தில் கிடைக்கும் பணவரவு அதிகரிக்கும். தொழில், வியாபாரம் அபிவிருத்தி பெற சில சீர்திருத்தும்செய்வீர் கள். பணியாளர்களுக்கு, சலுகை பெற அனுகூலம் உண்டு. மாணவர்கள் தகுதி, திறமை வளர்ப்பதில் முயற்சியுடன் ஈடுபடுவர்.

### துலாம்

வாழ்வில் நெருக்குதல் தந்த சில சிரமம் வந்த சுவடுதெரியாமல் மறைந்து போகும். சமூகத்தில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர் உதவிகரமாகச் செயற்படுவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு, முயற்சி உதவும். பணியாளர்கள் பணச்செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் நண்பர்களின் நம்பிக்கைக்கு உரியவராக நடந்து கொள்வர்.

### விருச்சிகம்

முக்கியமான செயல் ஒன்று நிறைவேற தாமதம் ஏற்படும். எனினும் புதிய அணுகு முறையால் சரி செய்வீர்கள். இல்லறத் துணை உங்களின் சாந்த குணம் நிறைந்தமனதைப்பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். மாணவர்கள் அதிக விலையுள்ள பொருட்களை கவனத்துடன் பயன்படுத்தவும்.

### தனுசு

பேசுவதில் வசீகரமும் கவித்துவமும் கலந்திருக்கும். சமூகப் பணியிலும் ஈடுபாடு கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகும் சந்தைப் போட்டியை ஓரளவு சமா ளிப்பீர்கள். பணியார்கள் இடமாற்றம், ஒழுங்கு நடவடிக்கை போன்றவற்றை எதிர் கொள்வர். மாணவர்கள் புதிய முயற்சியால் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

### மகரம்

வாழ்வில் செல்வ வளம் அதிகரிக்கும். எதிரி உங்கள் மீது நல்ல எண்ணம் கொள்ள புதிய சூழ்நிலை உருவாகும். தொழில், வியாபாரத்தில் மந்த நிலையைச் சரி செய்ய மாற்று வழிமுறை பின்பற்றுவீர்கள். உத்தியோகத்தர் பணியாளர்களும் அனுசரணையாக நடந்து உற்பத்தி அளவை அதிகரிப்பர்.

### கும்பம்


திட்டமிட்ட பணியை எளிதாகச் செயற்படுத்தி அதிக நன்மை பெறுவீர்கள். பலரும் உங்கள் மீது நல்ல அபிப்பிராயம் கொள்வர். தாமதமான செயல் நிறைவேற புதிய வாய்ப்பு, உதவி கிடைக்கும். வாழ்வியல் நடைமுறை சுமுகமாக இருக்கும். தொழில், வியாபாரம் அபரிமிதமாக செழித்து வளரும். மாணவர்கள் படிப்பில் அதிக தேர்ச்சி பெறுவர்.

### மீனம்

எந்தச் செயலிலும் முன்யோசனையுடன் ஈடுபட வேண் டும். இல்லறத் துணை கருத்து, ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் தாமதக தியில் இயங்கும். பணியாளர்கள் நற்பெயரை பாது[illegible] கூடுதல் [illegible] வேண்டும். மா[illegible] பாதுகாப்புடன் ஈடுபடுவது நல்லது.

# குரு பக்தி

## (இறையுணர்வுக் கதைகள்)



இறைவனிடத்தில்செய்தபாவம் குருவினிடத்தில் தீரும். குருவினிடத்துச் செய்த பாவம் எங்கும் தீராது. ஆகவே சிவபக்தியைக் காட்டிலும் குரு பக்தி உன்னதமானது. அதனால்தான் அருணகிரிநாதர் பாடுகிறார். 'குருவாய் வருவாய் அருள்வாய் குகனே' என்று. குருவாக வருபவர் சிவனன்றி வேறொருவர் இல்லை.

துன்பத்துக்குக் காரணம் அறியாமை. பேரின்பத்துக்கு காரணம் பேரறிவாகிய ஞானம். அறியாமை நம்மை இழுக்க இழுக்க துன்பம் இருக்கும். இத் துன்பம் நீங்க அஞ்ஞானமாகிய இருளை நாம் போக்க வேண்டும். அப்படிப் போக்கும் போது ஞானமாகிய ஆதவன் நம் இதயத்தில் அருள் ஒளி பரப்பிடுவான்.

ஞானத்தை வழங்குபவர் குருநாதரைத் தவிர வேறொருவரும் இல்லை. பாஞ்சால நாட்டு இராஜகுமாரன் ஆருணி சிறந்த குருபக்திக்கு எடுத்துக் காட்டானவன்.

அயோத தௌம்யர் என்ற குருநாதர் கங்கைக் கரையிலே குருகுலம் ஒன்றில் வாழ்ந்து வந்தார். அயம் என்றால் இரும்பு. இரும்பு போன்ற உறுதியான தசையை உடையவர் என்று பொருள். இவரது முதல் சீடனின் பெயர் ஆருணி. பாஞ்சால நாட்டு இராஜகுமாரன். அவனுக்கு ஒருவேளைதான் உணவு. அயோத தௌம்யர் ஒரு நாள் காலையில் பாடம் நடத்திக் கொண்டிருந்த போது அந்த இராஜகுமாரனை அழைத்து "ஆருணி நம் வயலில் மடை உடைபட்டு வெள்ளமாக நீர் ஓடுகிறது. நீ போய் மடையை அடைத்துவிட்டு வா" என்றார். அவன் குருவின் கட்டளையின்படி மண்வெட்டியை எடுத்துக் கொண்டு வயலுக்குச் சென்றான். மண்ணை வெட்டி வெட்டி மடையில் போட்டுக் கொண்டே இருந்தான். காலை முதல் மாலை வரை இவ்வாறு செய்தான். ஆனால் மடை அடைபடவில்லை. உடைந்து கொண்டே இருந்தது. 'குருநாதரின் கட்டளையை நிறைவேற்றாமல் திரும்பச் செல்லக்கூடாது' என்று மண்வெட்டியை மடையிலே போட்டுவிட்டு 'குருநாதா' என்று கூறி விட்டு குறுக்கே படுத்து விட்டான் ஆருணி. அங்கு வரும் நீர் அப்படியே தேங்கி நின்றது. இரவில் குரு பாடம் கற்றுத் தரும்போது முதலாவதாக அமரும் ஆருணி அங்கு இல்லாததைக் கண்டு தீப்பந்தத்தை எடுத்துக் கொண்டு வயலுக்குச் சென்று 'ஆருணி' என்றழைத்தார் குரு அயோத தௌம்யர். "குருவே அடியேன் நீருக்குள் இருக்கின்றேன்" என்றான் சீடன். "ஏன்" எனக் குரு வினவினார். "மடை அடைபடவில்லை. ஆதலால் மடையில் படுத்துவிட்டேன்" என்றான் ஆருணி.

அதற்குக் குரு, "மகனே நீ உன்னையே தியாகம் செய்து விட்டாய். எழுந்து வா" என்றார். குரு அவ்வாறு கூறியதும் ஆருணி மடையிலிருந்து நீரைப் பிளந்து கொண்டு எழுந்து வந்தான். அதனால் உத்தலாகன் என்ற பெயர் பெற்றான். அவன் சிரசில் குரு கை வைத்து, "உனக்கு எல்லா ஞானமும் உதிக்கும்" என்று ஆசீர்வதித்தார். குரு தொட்டாலே ஞானம் வந்து விடும்; அப்படிப்பட்டவர்கள் தான் குருமார்கள்.

இது கற்பனைக் கதையல்ல புராண காலத்தில் நடந்த ஒரு சம்பவம்.

ஆருணி போல் குருவின் மனதை வென்றவர்கள் பலர் இன்று வரை இருக்கிறார்கள். இளம் சந்ததியினரே உங்களுக்குள் உறைந்து போய் இருக்கும் தெய்வீகத்தை மலரச் செய்ய ஒரு குரு அவசியம். எமது தேசத்தையும் மக்களையும் காப்பாற்ற ஞானம் ஒன்றே ஒவ்வொரு இளம் சந்ததியினருக்கும் உறுதுணையாக நிற்கும். அந்த ஞானத்தாலேதான் அனைத்தையும் வெல்ல முடியும் அர்ஜுனனைப்போல்.

சா.ரமேஸ்குமார்
மருதனார்மடம்

## கவலைக் கொரு மருந்து சிரிப்பு



கவலைக் கொரு மருந்து சிரிப்பு
இதை கவனத்தில் கொள்வது உன் பொறுப்பு
சிரித்து வாழ்ந்தால் என்றும் சிறப்பு
பிறர் சிரிக்க வாழ்ந்தால் அவமதிப்பு
பெரிய மனிதர் போல் இருப்பவர்க்கு
அவரின் புராணத்தை புரட்டினால் அருவருப்பு
கன்னியை கண்டால் நகைப்பு
கன்னத்தில் கிடைப்பது பழஞ் செருப்பு
இளமை என்றும் இனிமை சிறப்பு
முதுமை அணைத்தால் துடி துடிப்பு
காதலித்து கை பிடித்தால் மதிப்பு
காதல் தோல்வி என்றால் பதை பதைப்பு

நல்லையூர். சுப்பிரமணியம் பாலசிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குரு என்பவர் யார்

குரு மரணப் படுக்கையில் இருந்தார். அவரிடம் ஒரு சிஷ்யன் கேட்டான்: சுவாமி! உங்கள் குருநாதர் யார்? எனக்கு ஆயிரக்கணக்கான ஆசான் கள்.. இருப்பினும் மூவரைச் சொல்கிறேன். முதல் குரு ஒரு திருடன். ஒரு முறை நான் ஒரு கிராமத்தை அடைந்த போது இருட்டிவிட்டது. வீட் டுக் கதவுகள் எல்லாம் மூடியிருந்தன. கடைசியில் திருடன் ஒருவன் ஒரு வீட்டிற்குள் நுழைவதற்காக சுவரில் மறைந்து கொண்டிருந்தான். நான் அவனிடம் தங்குவதற்கு இடம் கேட்க, உங்களுக்கு ஒரு திருடனுடன் தங்குவதில் ஆட்சேபனை இல்லையென்றால் என்னுடன் தங்கலாம் என்றான். அவனுடன் ஒரு மாதம் தங்கினேன். தினமும் இரவில் அவன், நான் வேலைக்குப் போகிறேன். நீங்கள் வீட்டில் தியானம் செய்யலாம்; அல்லது ஓய்வெடுக்கலாம் எனச் சொல்லிவிட்டுப் போவான். அவன் திரும்பி வந்ததும் ஏதாவது கிடைத்ததா? என்று கேட்பேன் .அவன், இன்று ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால், நாளை மறுபடியும் முயற்சி செய்வேன்.கடவுள் அருள் இருந்தால் கிடைக்கும்! என்று நம்பிக்கையுடன் பதில் சொல்வான். நான் தியானம் செய்யும்போது, ஒரு பயனும் இல்லையே என பலமுறை நம்பிக்கை இழந்திருக்கிறேன். உடனே அந்தத் திருடனின் திட நம்பிக்கை நினைவுக்கு வரும். உடனே, கடவுள் அருள் கிட்டினால் நாளை நமக்கு ஞானம் பிறக்கும் என்று உற்சாகமடைவேன்!

என்னுடைய அடுத்த குரு ஒரு நாய். நான் தண்ணீர் பருக ஒரு நதிக்குச் சென்றேன். அங்கு ஒரு நாய் தண்ணீர் குடிக்க வந்தது. நாய் நதியை நோக்கிக் குனிந்தது. அங்கே தன் பிம்பத்தைப் பார்த்து இன்னொரு நாய் இருப்பதாக எண்ணி பயந்து குரைத்துக்கொண்டே ஓடியது; மீண்டும் தாகத்தால் வரும், ஓடும். இப்படிப் பலமுறை செய்த பின் நதியில் குதித்தது. பிம்பம் உடனே மறைந்துவிட்டது! பயங்களை வென்று செயலில் இறங்க வேண்டும் என்பது இதன் மூலம் புரிந்தது.

மூன்றாவது ஒரு சிறுவன். நான் ஓர் ஊருக்குள் சென்றபோது, அவன் எரியும் மெழுகுவர்த்தியுடன் வந்து கொண்டிருந்தான். அவனிடம், மெழுகுவர்த்தியின் ஒளி எங்கிருந்து வந்ததென்று உன்னால் சொல்ல முடியுமா? என்று கேட்டேன், உடனே சிறுவன் சிரித்துக்கொண்டே மெழுகுவர்த்தியை வாயால் ஊதி அணைத்துவிட்டு, ஒரு வினாடி முன் ஒளி இருந்தது; இப்போது இல்லை. அது எங்கே போயிற்று? நீங்கள் சொல்லுங்கள்! என்றான் என்னிடம். நான் அதிர்ச்சியில் பேச்சிழந்து போனேன். மெத்தப் படித்த அறிவாளி என்ற அகங்காரம் ஒரு நொடியில் மாயமாயிற்று! அன்றிலிருந்து அகங்காரப்படுவதை விட்டொழித்தேன். சிஷ்யன் என்றால் கற்றுக்கொள்ளத் தயார் நிலையில் இருக்க வேண்டும். அதாவது, கற்றுக் கொள்ளக் கற்றுக்கொடுப்பதே ஆசிரியரின் தலையாய கடமை என்று குரு சொல்லி முடிக்க, சீடர்கள் தெளிவடைந்தனர்



ச.சாருஜா, தரம்-7ஏ
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி



ஈ.சுகாசன், தரம்-9ஏ
யா/ சங்கானை சிவப்பிரகாச ம.வி.



பா.திலக்ஷிகா, தரம்-1பி
யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை



ர.சபீனா, தரம்-8
யா/ ஆனைக்கோட்டை ஆர்.சி.ரி.எம். பாடசாலை



அனிருத்தன், தரம்-2
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி

# அறிந்து கொள்ளுவோம்

⇨ இலங்கையின் தேசிய இரத்தினக்கல்?
☆ நீலமாணிக்கம்
⇨ அநுராதபுரத்தை தலை நகராக்கிய மன்னன்?
☆ பண்டுகாபயன்
⇨ இலங்கையை ஆண்ட கடைசி மன்னன்?
☆ சிறீ வீரபராக்கிரம நரேந்திரசிங்க
⇨ மஞ்சள் உலோகம் எனப்படுவது?
☆ தங்கம்
⇨ தேசிய மட்டப் பரீட்சைகளை நடத்தும் நிறுவனம்?
☆ இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்
⇨ உயர் நீதியரசரின் பதவிக் காலம்?
☆ 5 ஆண்டுகள்
⇨ சூரிய மையக் கோட்பாட்டை விளக்கியவர்?
☆ கொபர் நிகல்ஸ்
⇨ பூமி உருண்டையானது என்பதை முதன்முதலில் கூறிய விஞ்ஞானி?
☆ கலிலியோ கலிலி
⇨ பச்சையம் இல்லாத தாவரம்?
☆ காளான்
⇨ புகையிலையிலுள்ள நச்சுப் பொருள்?
☆ நிக்கொட்டீன்

சி.சுவேத்தா, தரம்-5எவ்,
யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தி.



## தேனீ

*வண்ண வண்ணப் பூவில்,*
*வாசம் வீசும் பூவில்,*
*உண்ணும் தேனை உண்டு,*
*ஓடிப் பறந்து செல்லும்!*

*காலை, மாலை நேரம்*
*கானம் பாடி ஓடும்!*
*சோலை தன்னில் சுற்றும்,*
*சுவைக்கும் தேனை நித்தம்!*

*உள்ளம் கவரும் பூவில்,*
*ஊறும் தேனை அள்ளும்!*
*அள்ளி, அள்ளி மீண்டும்,*
*அடுத்த பூவுக்குத் தாண்டும்!*

*தேடித் தேடிப் பறக்கும்!*
*தேடித் தேனைக் குடிக்கும்!*
*தேடும் தேனீ போலே*
*தேடிச் சென்று கற்போம்!*

# ஈபில் கோபுரம்

பிரான்ஸ் பாரீஸில் இந்தக் கோபுரம் உள்ளது. இதனைச் சுற்றிலும் மிகப் பெரிய பரப்பளவில் பசும்புல் தரை அமைந்துள்ளது. அங்கிருந்து பார்க்கும் போது ஈபில் கோபுரம் அற்புதமாகத் தெரியும். ஒரு சராசரிக் கட்டடத்தைப் போல் 81 மடங்கு உயரம் கொண் டது. அதாவது 324 மீற்றர் உயரம் மொத்தம் 1652 படிகள் உள்ளன. இந்தக் கோபுரத்தை வடிவமைத்தவர் குஸ்டவ் ஈஃபில் என்ற பொறியியல் வல்லுநர் ஆவார். இவருடன் 300 மனிதர்கள் வேலை செய்து இதனை உருவாக்கியுள்ளனர். பிரெஞ்ச் புரட்சியின் நூற்றாண்டு நிறைவை ஒட்டி இந்தக் கோபுரம் நிறுவப்பட்டது. ஈபில் கோபுரம் 7000 தொன் எடை கொண் டது.



[illegible]னி, தரம்-9டி,
கிளி/ இந்துக் கல்லூரி.

## விடை தெரியுமா ? 240

### உங்களுக்கும் பரிசுகள்

1. சுத்தி அரிவாள் உள்ள தேசியக் கொடி எந்த நாட்டினுடையது?
2. நடக்கத் தெரிந்த பறக்கும் பூச்சி எது?
3. இந்தியாவின் சுதந்திரதினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?
4. பெரிய முட்டையிடும் பறவை எது?
5. உடம்பில் உள்ள எலும்புகளில் மிக நீளமானது எது?

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடைகள் 238

1. மால்ட்டா
2. 53
3. கமரூன்
4. ஐக்கிய அமெரிக்கா
5. சஹாரா

### விடை தெரியுமா?

தெரிந்தால் 14.12.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 பெறுமதியான பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### வெற்றி பெற்றவர் விவரம் (237)

♥ சு.ஹரிபிரசாத், தரம்-4டி, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
♥ சி.லக்சிகா தரம்-5ஏ, நாகேஸ்வரி வித்தியாலயம்

(238)

♥ ரா.உஷாந்தினி, தரம்-10 எம், யா/ ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி.
♥ ஆ.பாலமதுஜா, யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
♥ க.முகிலன், தரம்-6, யா/ வயாவிளான் ம.ம.வித்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்ன சின்ன பாடங்கள்....

கற்பிப்பது
அன்ரன்

ஒரு நாள் விமானத்தில் பயணித்துக் கொண்டிருந்த போது 50 வயதான வழக்குரைஞருக்கு ஒரு சிறுவ னின் பக்கத்தில் இருக்கை கிடைத்தது. அது 11 மணி நேரத்தைக் கொண்ட விமா னப் பயணம். எனவே பொழுது போவதற்காகப் பக்கத்தில் அமர்ந்தி ருந்த சிறு வனைச் சீண்ட நினைத்தார் அந்தப் பெரியவர். உடனே சிறுவனை விளையாட வ்ருமாறு அழைத்தார்.

சிறுவனுக்கோ விளையாடும் மனோ நிலை இல்லை. கொஞ்ச நேரம் நித் திரை கொள்ள விரும்பினான் அவன். ஆனால் அவனது மனோநிலை பற்றி சட்டத்தரணி அக்கறைப் படவில்லை. விளையாட வருமாறு வற்புறுத் தி னார். விளையாட்டுக் கான விதியையும் சொல்ல ஆரம்பித்தார்.

"இது சந்தோசமான விளை யாட்டு. நான் உன்னிடம் ஒரு கேள்வி கேட் பேன். உனக்கு விடை தெரியா விட் டால் நீ எனக்கு 5 ரூபாய் தரவேண் டும். அதேபோல எனக்குப் பதில் தெரியா விட்டால் நான் உனக்கு 5 ரூபா தருவேன்" என்றார். சிறு வனுக்கோ சட்டத்தரணி யின் விதிகள் சலிப்புத் தட்டின. அவரைத் தவிர்ப்ப தற்காக முறைத்துப் பார்த்துவிட்டு அவன் மறுபக்கம் திரும்பிக் கொண்டான். கொஞ்ச நேரம் கழித்து அவன் திரும் பியபோது சட்டத்த ரணி அவனையே பார்த் துக் கொண்டிருப்பதை அவன் கண்டான். அவன் திரும்பியதும் சட்டத் தரணி மீண்டும் பிடித்துக் கொண்டார். "இந்தத் தடவை நாங்கள் வித்தியாச மாக விளையாடலாம். உனக்கு விடை தெரியாவிட்டால் நீ எனக்கு 5 ரூபாய் தந்தால் போதும். எனக்கு விடை தெரியாவிட்டால் நான் 5000 ரூபாய் தருகின்றேன்" என்றார்.

தான் 'ஒரு தரமாவது விளையாடா விட்டால் இந்த மனிதன் தன்னை விடப்போவதில்லை என்பது சிறுவனுக் குப் புரிந்தது. அவனுக்கோ விரைவில் ஒரு குட்டித் தூக்கம் போட வேண்டும் போல இருந்தது. எனவே சட்டத் தரணியின் விதிகளை ஏற்று விளை யாடச் சம்மதித்தான்.

"பூமிக்கும் சந்திரனுக்கும் இடைப்பட்ட தூரம் என்ன?" சட்டத்தரணியின் முதல் கேள்வி இதுதான். சிறுவன் அதிர்ந்து போனான். இப்படிப்பட்ட கேள்வியை அவன் எதிர் பார்க்கவில்லை. சட்டைப் பையிலிருந்து 5 ரூபாய் குற்றியை எடுத்துக் கொடுத்தான்.



இப்போது அவனது முறை. சட்டத்தர ணியை மடக்கும் வகையில் கேள்வி யைக் கேட்க வேண்டும். "எந்த ஒன்று மலையில் இரண்டு கால்களால் ஏறி மூன்று கால்களால் இறங்கும்?" என்றான் சிறுவன்.

இப்போது சட்டத்தரணி திகைத்துப் போனார். அவருக்கு விடை தெரியாது. அவசரமாக எழுந்து மேலே வைத்தி ருந்த தனது மடிக் கணினியை எடுத்துத் தேடினார். விமானத்தில் இருந்த தனது நண்பர்களிடம் எல் லாம் கேட்டார். விமானத்தில் இருந்த வேறு சிலரிடமும் கேட்டார். ஒருவருக் கும் விடை தெரிந் திருக்கவில்லை.

வெறுத்துப் போன சட்டத்தரணி 5000 ரூபாய் தாளை எடுத்து சிறுவ னிடம் நீட்டினார். அதனைப் பெற்றுக் கொண்ட அவன் "நன்றி" என்று சொல்லிவிட்டு நிம்மதியாகத் தூக்கம் போட ஆரம்பித்துவிட் டான். சட்டத்தர ணிக்கோ ஒரே மண்டைக் குடைச் சல். விடை யைச் சொல்லாமல் வேறு சிறுவன் தூங்குகின்றானே என்றஎரிச்சல். பொறுக்க முடியாமல் அவனை உலுப்பிதூக்கத்திலிருந்து எழுப்பினார். "அந்தக் கேள்விக்கு என்ன விடை" என்றார். சிறுவன் அவரைப் பார்த்து மெல்லப் புன் னகைத்தான். தன் சட்டைப் பையில் மற்றொரு 5 ரூபாய் தாளை எடுத்து சட்டத்தரணியிடம் நீட்டியபடியே சொன்னான். "யாருக்குத் தெரியும்?" அவனுக்கு வயது 12 மட்டும்தான்.

*அடுத்தவர்கள் உங்கள் மீது அதிகம் செல்வாக்குச் செலுத் துவதற்கான சந்தர்ப் பத்தை நீங்களே கொடுக்காதீர்கள்.*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்துவமாக இருங்கள்

அடுப்பூதும் பெண்ணிற்கு படிப் பெதற்கு என்ற காலம் மலை யேறி, இன்று எல்லாத் துறையிலும், பெண்கள், கோலோச்சிக் கொண்டிருக் கும் காலம் இது. அலுவலகம் என்பது, மற்றொரு வீடாக மாறிப் போன சூழ்நிலையில், நாம் நம் தனித்தன்மையுடன் விளங்க, இதோ சில வழிகள்.

அலுவலக பணியில், சூழ் நிலைக்கேற்ப, அனுசரிக்கப் பழகிக் கொள்ளுங்கள். அதற் காக, உங்கள் நோக்கத்தைக் கைவிட வேண்டியதில்லை.

எதைச் சொல்ல வேண்டுமென் றாலும், வெளிப்படையாகப் பேசுங்கள். அதற்காக, முரட்டுத் தனமாகவோ, மரியாதைக் குறைவாகவோ நடந்து கொள் ளாதீர்கள். இது, உங்கள் மீது வெறுப்பு வளர கார ணமாகி விடும். சக மனிதரி டத்தில் நம் பிக்கை வைப்பது டன், தன் னம்பிக்கையுடன் இருங்கள். அதற்காக, ஏமாளி யாகவோ, கர்வத்துடனோ இருக்கா தீர்கள்.

தொடர்ந்து கடுமை யாக உழை யுங்கள்: இடை வெளி விட்டு உழைப்பதில், பலனில்லை.

ஏதாவது ஒன்றில், விசேட திறமை மற்றும் பேச்சு, எழுத்து திறமையை வளர்த்துக் கொள் வதுடன், நாட்டில் நடக்கும் தினசரி நிகழ்வுகளையும் அறிந்து வைத்திருங்கள்.

ஒரு விடயம் பேசும்போது, அதில் தெளிந்த அறிவு இருந் தால் மட்டும் பேசுங்கள். அதை விட்டு, வெறும் வார்த்தை ஜாலங் களில் ஈடுபடாதீர்கள். இது, மற்றவர்களின் நகைப் பிற்கு இடமளிக்கும்.

ஒரு செயலுக்கு திட்டமிடும் போது, அதன் அடிப்படை விவ ரங்களை அறிந்து, அதற்கு தகுந்த படி, திட்டமிடுங்கள். அதே சமயம், எந்த விவரங் களையும் அலட்சியப் படுத்தா தீர்கள். மன தில் ஒரு சித்தி ரத்தை உரு வாக்கி, முன் கூட்டியே திட்ட மி டுங்கள். உடனடி எதிர் காலத்தைமறந்து, நீண்ட எதிர்காலத்துக் குத் திட்டமிடா தீர்கள்.

வேலையை நேசியுங்கள். அதுவே, முழு திருப்தி அளிக் கும். முயற்சியை வளர்த்துக் கொள்ளுங்கள். சிறிய குழிகள் தான், பெரிய பள்ளங்களாகின் றன. கஷ்டங்களைக் கடக்க, அது உங்களுக்கு உதவும்.



மனதில் ஒரு சித்திரத்தை உருவாக்கி, முன் கூட்டியே திட்ட மிடுங்கள்.

# சாறி பிளவுஸ் எப்படித் தைத்தால் யாருக்குப் பொருத்தம்



குட்டைக் கை வைத்த சாறி பிளவுஸ், தற்போது பெண் களிடையே நாகரிகமாகி உள்ளது. சிறிதளவு கைகள் பூசினால் போல் இருந்தால் தான், குட்டை கை வைத்த சாறி பிளவுஸ், அவர்களுக்கு பொருந்தும். மிகவும் குண் டான கைகள் உள்ள பெண் கள் மற்றும் மிக ஒல்லியான கைகளைக் கொண்ட பெண் கள், சாதாரண பிறவுஸ்களில் தோள் பட்டையில், சிறு சிறு ப்ளீட்ஸ் வைத்து அணியலாம்.

குண்டாக உள்ள பெண்கள், குட்டை கை உள்ள பிளவுஸ் அணிய ஆசைப்பட்டால், அந்த ரவிக்கையை இறுக்கமாக தைத்து விடாதீர்கள். சிறிது தளர்வாக, சிறிதளவே இறக்கம் கொடுத்து தைத்துக் கொள்ளுங்கள். குட்டைக் கையில் இறுக்கமாக வைத்தால், சதை வெளியே தொங்கிக் கொண்டு அசிங்கமாகத் தெரியும்.

அதே போல், இடுப்பில் உள்ள சதை தெரியாமலிருக்க வேண்டுமானால், இடுப்பு வரையில் இறக்கம் வைத்து தைக்கச் சொல்லுங்கள். முதுகின் அளவை அதிகப்படுத்தி பிளவுசை இறக்கித் தைத்தால், இடுப்பின் சதை மறைந்து, பார்க்க அழகாக இருக்கும். இப்படிப்பட்ட சாறி பிளவுஸ்களை அணிவதால், அதுவும் உடம்பான பெண்களின் முதுகு ரொம்ப அழகாக இருக்கும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்லாந்தில் அரசியல் நெருக்கடி

## பதவி துறக்க மறுக்கிறார் பிரதமர்



ரெங்கன்

தாய்லாந்து பிரதமர் யிங்லக் சினோவாத்ராவுக்கு எதிராக அந்த நாட்டு எதிர்க்கட்சியினர் ஆரம்பித்துள்ள எதிர்ப்பார்ப்பாட்டங்கள் தீவிரமடைந்துள்ள நிலையில் எந்த காரணத்தைக் கொண்டும் அவர்களின் கோரிக்கையை ஏற்று பதவி விலகப் போவதில்லையென்று சினோ வாத்ரா கடும் தொனியில் அறிவித்திருக்கிறார்.

தேசிய மன்னிப்பு சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு சினோ வாத்ரா அரசு நடவடிக்கை எடுத்ததைத் தொடர்ந்தே எதிர்த் தரப்பினரின் எதிர்ப்பு ஆரம்பமானது. இந்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்படுமானால் பதவி துறந்து வெளிநாட்டிலிருந்துவரும் முன்னாள் பிரதமரும், இப்போதைய பிரதமர் யிங்லக்கின் சகோதரருமான தாக்சின் சினோ வாத்ரா சிறைத் தண்டனை அனுபவிக்காமல் நாடு திரும்புவதற்கு வழிபிறந்துவிடும் என்று எதிர்த்தரப்பினர் கருதுகிறார்கள்.

2006 ஆம் ஆண்டு தாக்சின் சினோவாத்ரா ராணுவ புரட்சியொன்றின் மூலம் பதவியிலிருந்து அகற்றப்பட்டார். 2007 டிசெம்பரில் நடந்த பொதுத் தேர்தலில் தாக்சினின் தோழமைக் கட்சியான மக்கள் அதிகார கட்சித் தேர்தலில் வெற்றியீட்டியது.

2008 ஆம் ஆண்டு தாக்சின் மீதான ஊழல் வழக்கு நிலுவையில் இருந்த நிலையில் அவர் நாட்டை விட்டு தப்பிச் சென்றுவிட்டார். அந்த வருடம் டிசெம்பரில் மக்கள் மஞ்சள் சட்டை இயக்கத்தின் ஆர்ப்பாட்டங்களில் இறங்கி பாங்கொக் நகரம் செயலிழக்கச் செய்தார்கள். அதே சமயம் அரசமைப்பு நீதிமன்றம் மக்கள் அதிகார கட்சியை தடை செய்தது. ராணுவ ஆதரவுடன் அபிசிட் வெஜ்ஜஜிவா கூட்டமைப்பு அரசின் பிரதமரானார். மார்ச் மற்றும் மே மாதங்களில் தாக்சின் ஆதரவு செஞ்சட்டைக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ராணுவம் தலையிட்டதில் ஆர்ப்பாட்டம் முடிவுக்கு வந்தது. 90 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.

2011 ஆம் ஆண்டு தாக்சின் சினோவாத்ராவின் சகோதரி யிங்லக் சினோவாத்திராவின் தலைமையிலான பியுதாய் கட்சித் தேர்தலில் வெற்றி பெற்று பதவிக்கு வந்தது.

இப்பொழுது யிங்லக்கின் அரசுக்கு எதிராக எதிர்த் தரப்பினர் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகிறார்கள். ஆர்ப்பாட்டங்களுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினரும் ஒரு சமயம் பிரதிப் பிரதமராக இருந்தவருமான சுதெப் காபுக் சுபான் தலைமை வகிக்கின்றார்.

யிங்லக் சினோவாத்ராவின் கட்சி நாடாளுமன்றத்தின் கீழ் சபையில் பெரும்பான்மையைக் கொண்டிருக்கிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை அரசபணிமனைக்குள் பலவந்தமாக நுழைய முனைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் தண்ணீர் பாய்ச்சியடித்ததுடன் கண்ணீர் புகைக் குண்டுகளையும் பயன்படுத்தி கலைத்தனர். வன்முறைகளில் இரண்டு பேர் கொல்லப்பட்டுப் பலர் காயமடைந்தனர். யிங்லக் அரசு பதவி விலகி மக்கள் சபையிடம் அதிகாரத்தைக் கையளிக்க வேண்டும் என்று எதிர்ப்பாளர்கள் கோரி வருகிறார்கள். அதே சமயம் அரசுக்கு ஆதரவான சிவப்புச் சட்டைக்காரர்களும்ஆர்ப்பாட்டங்களில் இறங்கியிருந்தனர்.

இதற்கிடையில் பிரதமர் யிங்லக் விடுத்த அறிக்கையில் தாம் பதவி விலகப் போவதில்லையென்று அறிவித்ததுடன் ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கைக்கு இணங்க முடியாது என்றும் அறிவித்தார். மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசை பதவி விலகி அதிகாரத்தை மக்கள் கவுன்சிலிடம் கொடுக்கும்படி கோருவது அரசமைப்பின் படி செல்லாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். மக்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு பிரதமர் என்ற முறையில் நான் எதையும் செய்ய தயாராய் இருக்கிறேன். ஆனால் அது அரசமைப்பின் பிரகாரம் நடைபெற வேண்டும் என்றார்.

பிரதமர் பதவி விலகுவதற்கு இரண்டு நாள் கெடு விதித்த எதிர்த்தரப்பு தலைவர்சுதெப் வீதி குழப்பங்களை ஊக்குவித்து வருகிறார் என்று சிலர் கூறுகிறார்கள்.

1932 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 18 புரட்சிகர ஆட்சி கவிழ்ப்புக்களை அல்லது ஆட்சிகவிழ்ப்பு முயற்சிகளைக் கண்டிக்கிறது. மிகஅண்மையில் 2006 ஆம் ஆண்டு தாக்சின் பதவி கவிழ்ப்பு இடம்பெற்றது. ஆனால் இந்த முறை ஆர்ப்பாட்டத்தில்ராணுவம் தலையிடுவதற்கு தயக்கம் காட்டி வருகின்றது.

ஆயுதப் படைகள் பக்கம் சாராமல் இருப்பார்கள் என்று தெரிகிறது. நாட்டில் அமைதி நிலவுவதை அவர்கள் விரும்புகிறார்கள் என்று தெரிகிறது என்றார் பிரதமர். உடனடியாக அமைதியை ஏற்படுத்துவதுதான் எனது நோக்கம். பொலிஸார் மக்களுக்கு எதிராக வன்முறையைப் பயன்படுத்த மாட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

### பொலிஸ் தடைகள் திடீர் நிறுத்தம்

அரச அலுவலகங்களைப் பாதுகாத்து வந்த பொலிஸார் திடீரென்று கடந்த செவ்வாயன்று தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை கைவிட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் தடைகளை மீறிச் செல்வதற்கு அனுமதித்தனர்.

திடீரென பொலிஸார் தமது தடுப்பு நடவடிக்கைகளைக் கைவிட்டமைக்கான காரணம் தெரியவில்லை என்றாலும் தாய்லாந்தின் மன்னர் பூமிபால் அலெயாடெஜின் 86 ஆவது பிறந்தநாள் விழாக் கொண்டாடப்படவிருப்பது காரணமாக இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. பொதுவாக மன்னரின் பிறந்த நாள் அவருக்கு மரியாதை செய்யும் பொருட்டு அமைதியான சூழ்நிலையிலேயே கொண்டாடப்படுவது வழக்கம். கடைசியாக நடந்துள்ள சம்பவங்களின்படி போராட்டக்காரர்கள் எதிர்பாராத விதமாக அரசு அலுவலகங்களை அண்மிக்க அனுமதிக்கப்பட்டது மட்டுமன்றி பாதுகாப்புத் தரப்பின் எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் அரசுப் பணிமனைகளின் வளாகங்களுக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் பணிமனைகளின் வளவுகளுக்குள் சுமார் ஒரு மணி நேரம் அணி திரண்டதன் பின்னர் வெளியேறிச் சென்றனர்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணியத்தின் தோற்றம்

மானிட வரலாற்றின் பின்னால் ஒரு பெண் இருப்பது உண்மை. வரலாற்றோடு, வாழ்வோடு, இயற்கையோடு என்று எல்லாவற்றிலும் மிக முக்கியமாய் கலந்து இருப்பவள் பெண். அன்று தொட்டு இன்று வரை மண்ணில் பிறந்து பெரும் சாதனை படைத்தவர்கள் எண்ணற்றோராவர். ஆண்களைப் போல அறிவிலும், ஆற்றலிலும், உழைப்பிலும், உயர் பண்புகளிலும் உயர்ந்து நிற்கின்றனர் - ஒரு படி மேலேயே உயர்ந்து நிற்கின்றனர்.

**குடும்பம் என்ற குறுகிய வட்டத்தை விட்டு சமூகம் என்ற பரந்த நாட்டைப் பற்றி சிந்தித்ததின் விளைவு தான் பெண்ணியத்தின் தோற்றம்.**

குழந்தையைப் பெற்றெடுக்க மட்டுமே பயன்படுத்தப்பட்ட பெண், சமூகத்தில் எல்லாத் துறைகளிலும் ஆணுக்குச் சமமாக வாழ நினைத்ததன் விளைவுதான் பெண்ணியத்தின் தோற்றம். குடும்பம் என்ற குறுகிய வட்டத்தை விட்டு சமூகம் என்ற பரந்த நாட்டைப் பற்றி சிந்தித்ததன் விளைவுதான் பெண்ணியத்தின் தோற்றம். சமூக வாழ்வில் மதம், நம்பிக்கைகள், சடங்குகள், பழக்க வழக்கங்கள் ஆதிக்கம் பெற்று மானுடத்தின் மறு பாதியான பெண்மையை சீர்குலைத்தன. இதிலிருந்து விடுதலை பெற எடுத்த முயற்சியின் விளைவு தான் பெண்ணியத்தின் தோற்றம். தனி மனிதருக்குரிய சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் மறுக்கப்பட்டபோது அதனை நிலை நாட்டிக் கொள்வதற்காக எழுந்த போராட்டத்தின் விளைவுதான் பெண்ணியத்தின் தோற்றம்.

# பெண்களுக்குப் பொருளாதார சுதந்திரம்

ஒரு முயற்சி வெற்றி பெறும்போது நமக்கு என்ன கிடைக்கிறது?
நாம் விரும்பியதை அடைகிறோம்.
நம் சாதனை - நம்மால் முடியும் என்று நிரூபிக்கிறது.
நமக்கு நம் மீதே ஒரு பெருமை ஏற்படுகிறது.
நமக்கு மனநிறைவைத் தருகிறது.
மேலே கூறிய நான்கு விளைவுகளையும் பார்த்தோமானால் கடைசியில் கூறப்பட்ட மூன்று விளைவுகளும் நம் மனதில் ஏற்படுகின்ற உணர்வுகள் என்பது புரியவரும்.
நம்மைப் பற்றி நம் மனதில் ஏற்படும் பெருமை, நம்மால் எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை, நமக்குள் ஏற்படும் மனநிறைவு - இவைதான் வாழ்வை அர்த்தமுள்ளதாக ஆக்குகின்றன. மேலும் சாதனை செய்யத் தூண்டுகின்றன.
இப்படிப்பட்ட எண்ணங்கள் ஆணின் மனதில் அதிகம் எழுகின்றனவா அல்லது பெண்ணின் மனதில் அதிகம் எழுகின்றனவா என்று கேட்டால், அந்த வாய்ப்பு, குறிப்பாக



அற்புதன்

கிராமங்களில் வாழும் பெண்களுக்கு அதிகம் கிடைப்பதில்லை. சாதனை புரியும் வாய்ப்புகள் பொதுவாக பெண்களுக்குக் குறைவு. அதிலும் கிராமப் பெண்களுக்கு இன்னும் குறைவு. காரணம் கல்வியறிவின்மை மற்றும் நமது சமூகப் பழக்க வழக்கங்கள், கட்டுப்பாடுகள், மரபுகள்.

**வெற்றிக்கு முதல்படி: அறிவு -**
ஓர் ஆணுக்குக் கொடுக்கக்கூடிய வாய்ப்புகளை நாம் ஒரு பெண்ணுக்குக் கொடுப்பதில்லை.
ஒரு பெண் எதற்குப் படிக்க வேண்டும்? கல்யாணம் செய்து கொண்டு கணவன் வீட்டுக்குப் போகிறவள்தானே? என்று ஒரு பெண்ணைத் திருமணத்திற்காகவே வளர்க்கிறோம்.
ஓர் ஆண் திருமணம் ஆகாமல் இருக்கலாம். ஒரு பெண் திருமணம் ஆகாமல் இருந்தால் அவமானம், கெட்ட பெயர் என்றெல்லாம் நினைக்கிறோம்.
ஒரு பெண்ணின் முன்னேற்றத்தைத் தடை செய்வது கல்வி அறிவின்மைதான். கல்வி இருந்தால்தான் ஊர் உலகம் தெரியும்; கல்வி இருந்தால்தான் நல்ல வேலைக்குப் போக முடியும். நல்ல வேலைக்குப் போனால்தான் நிறைய சம்பாதிக்க முடியும்; தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். தன் குடும்பத்தைக் காப்பாற்ற முடியும்.

தொடரும்..........

# பெண்களின் முன்னேற்றம் ! வளர்ச்சியா...



**கல்வித்தகுதியை பெற்றதுமல்லாமல், ஆண்களில் உலகம் என்று முத்திரை குத்தப்பட்ட பிரிவுகளான ராணுவம், பொலிஸ், அரசியல், ஆராய்ச்சி, தொழில்நுட்பம் என்று சகல துறைகளிலும் புகுந்து இன்றையப் பெண் வெற்றிக்கொடி நட்டு வருகிறாள். சில பெண்கள் ஆட்டோ ஓட்டுவதிலிருந்து விமானம் ஓட்டுவது வரை மிக அற்புதமாய் தங்கள் செயல் பாடுகளை விரிவுசெய்து கொண்டிருக்கிறார்கள்.**

அனுஜன்

கடந்த சில ஆண்டுகளில் கற்பனை பண்ணிபார்க்க முடியாத அளவில் பழக்கவழக்கங்களிலும் சிந்தனைகளிலும், முக்கியமாய் பெண்கள் நிலையில் பெரும் மாற்றங்கள் வந்துள்ளன. இந்த மாற்றங்கள் வளர்ச்சியா, வீக்கமா? உறுதியாய் பெருமளவில் வளர்ச்சிதான்... ஆனால், ஆங்காங்கே வீக்கங்களும் தோன்றி உள்ளதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அறியாப்பருவத்தில் திருமணம் நடந்து, கல்வி அறிவு மறுக்கப்பட்டு உனக்கென்று தனியாய் எந்த விருப்பு, வெறுப்பும் இல்லாமல் வாழப்பழகு என்று காலங்காலமாய் விதிக்கப்பட்டிருந்த சட்டங்களை உடைத்து கொண்டு பெண்கள் சமுதாயம் இன்று முன்னேறி உள்ளது.
மிகப் பெரிய அளவில் கல்வித்தகுதியை பெற்றதுமல்லாமல், ஆண்களில் உலகம் என்று முத்திரை குத்தப்பட்ட பிரிவுகளான ராணுவம், பொலிஸ், அரசியல், ஆராய்ச்சி, தொழில்நுட்பம் என்று சகலதுறைகளிலும் புகுந்து இன்றையப் பெண் வெற்றிக்கொடி நாட்டி வருகிறாள். சில பெண்கள் ஆட்டோ ஓட்டுவதிலிருந்து விமானம் ஓட்டுவது வரை மிக அற்புதமாய் தங்கள் செயல்பாடுகளை விரிவுசெய்து கொண்டிருக்கிறார்கள். பெண்களிடையே பரவலாகத் தன்னம்பிக்கை, சுயமரியாதை உணர்வுகள் அதிகரித்திருப்பதைக் கண்கூடாகக் காணமுடிகிறது. ஆனால், இந்த விழிப்புணர்வே சில பெண்களிடம் எல்லை மீறி, வளர்ச்சிக்குப் பதில் வீக்கத்தைத் தரும். நான் சம்பாதிக்கிறேன், என் வாழ்க்கையை என்னால் பார்த்துக் கொள்ள முடியும், யாருடைய தயவும் எனக்குத் தேவையில்லை, என்று சில பெண்கள் பெற்றோரையும், கணவனையும் குடும்பத்தையும் தூக்கி எறியும் போது வீக்கத்துக்கு ஆளாகிறார்கள். கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்று கண்மூடித்தனமாய் அடிமைப்பட்டிருப்பது தேவையே இல்லை என்றாலும், விட்டு கொடுப்பதும், அனுசரித்துச் செல்வதும், நாளைக்கு கண்டிப்பாய் விடியும் என்று நம்பிக்கையுடன் வாழ்வதும், வாழ்க்கைக்கு அர்த்தம் சேர்க்கும் என்பதை மறந்து விட்டால் எப்படி? வசதியாய் வாழ பணம் அவசியமான ஒன்று. ஆனால், பணம் இருந்தால் சந்தோஷமாக வாழ்ந்து விடலாம் என்பது பேதைமை அல்லவா? இன்றைய சமுதாயத்தில் பலரும், ஆண்களையும் சேர்த்துதான், பணத்தை சுற்றி வாழ்க்கையை பின்னத் தொடங்கி விட்டமை மனித நேயத்தின் வீழ்ச்சி. நாம் வாழப் பணம் தேவை. கடுமையாக உழைத்து சம்பாதிப்பது மிக அவசியம். ஆனால், பந்தங்களையும், பொறுப்புகளையும், கடமையையும் விலையாக கொடுத்து வரும் முன்னேற்றம் வளர்ச்சியில்லை... மனித நேயத்தையும், மதிப்புகளையும் வேர்களாக் கொண்ட பெண்களின் முன்னேற்றம்தான் ஆரோக்கியமான வளர்ச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதைக்கத் தெரியும் நடிக்கத் தெரியாது!

எனக்கு உதைக்கத்தான் தெரியும், நடிக்கத் தெரியாது. அதனால் எதிர்காலத்தில் திரைப் படங்களில் நடிக்கும் எண்ணம் எதுவுமே இல்லை என்று மனம் திறக்கின்றார் பிரபல உதைபந்தாட்ட வீரரும், கோடிக்கணக்கான இரசிகர்களின் நாயகனுமான டேவிட் பெக்கம்.

பிரிட்டனின் உதைபந்தாட்ட அணியின் முன்னாள் அணித் தலைவர் பெக்கம். சில மாதங்களுக்கு முன்பு சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். உலகம்முழுவதும்கோடிக் கணக்கான ரசிகர்களைக் கொண்டுள்ள அவர் தனது இளமை காலம், எதிர்காலம் குறித்து மனம் திறந்தார்.

> என்னைவிட நான் மிகவும் நேசித்தது உதைபந்து. அதில் இருந்து ஓய்வு பெற்றது எனக்கு மிகுந்த மனஉளைச்சலை ஏற்படுத்தியது. மனம் ரணமாக வலித்தது.

*ஓய்வு பெற்ற உதைபந்தாட்ட வீரர்கள் சிலர் நடிகர்களாக மாறியுள்ளனர். உங்கள் திட்டம் என்ன?*

(சிரிக்கின்றார்) எனக்கு பந்தை உதைக்கத் தெரியும், நடிக்கத் தெரியாது. அதனால் எதிர் காலத்தில் திரைப்படங்களில் நடிக்கும் எண்ணம் இல்லை. அடிடாஸ் உள்ளிட்ட நிறுவனங்களின் விளம்பரப் படங்களில் ஓரளவுக்கு நடித்திருக்கிறேன். திரைப்படத்தில் எனது கதா பாத்திரத்தில் யாராவது நடிக்கலாம் என்றால் அதற்கு ஹொலிவூட் நடிகர் பிரொட் பிட் மிகவும் பொருத்தமாக இருப்பார். அவருக்கு அடுத்தபடியாக லியானார்டோ டிகார்பியோவும் (டைட்டானிக் ஹீரோ) எனது கதாபாத்திரத்தை ஏற்று நடிக்கக் கூடியவர். அவர்களுக்கும் எனக்கும் உருவ ஒற்றுமைகள் உள்ளன. நான் நடித்துப் பார்வையாளர்களை சிரமப் படுத்த நான் விரும்பவில்லை.

*உதைபந்தாட்ட அரங்கில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் உங்கள் வாழ்க்கை எப்படி இருக்கின்றது?*

என்னைவிட நான் மிகவும் நேசித்தது உதைபந்து. அதில் இருந்து ஓய்வு பெற்றது எனக்கு மிகுந்த மனஉளைச்சலை ஏற்படுத்தியது. மனம் ரணமாக வலித்தது. சுமார் 4 மாதங்கள் எதுவுமே செய்யத் தோன்றவில்லை. இப்போது மனதை தேற்றிக் கொண்டு இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பியுள்ளேன். எனது குடும்பம் கொஞ்சம் பெரியது. 4 குழந்தைகளோடு ஓடிப் பிடித்து விளையாடுவதற்கே நேரம் போதவில்லை.

*உங்கள் குடும்பம் பற்றி சில தகவல்களை ஊடகங்கள் வெளியிடுகின்றனவே... அது குறித்து?*

எனக்கும் எனது மனைவி விக்டோரியாவுக்கும் இடையே சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் அவை எங்கள் உறவை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. நாங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டுள்ளோம்.

*உதைபந்தாட்ட வாழ்க்கையில் நீங்கள் நினைத்துச் சிரிக்கும் விடயங்கள் ஏதாவது இருக்கின்றதா?*

பிரிட்டன் உதைபந்தாட்ட அணியில் இளம் வீரராக சேர்ந்தபோது மூத்த வீரர்களால் நானும் ராகிங் செய்யப்பட்டிருக்கிறேன். அதை இப்போது நினைக்கையில் சிரிப்பு வருகின்றது.

# துடுப்புக்கும் பந்துக்கும் இடையே சில வசவுகள்

நடைபெற்றுவரும் ஆஷஸ் டெஸ்ட் தொடரின் ஆட்டத்தில் இருந்து மன அழுத்தத்தால் விலகுகிறேன் என்று இங்கிலாந்தின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான ஜொனாதன் டுரோட் கூறிய தன் பின்னணியில் பல காரணங்கள் இருக்கக்கூடும். ஆனால் ஆடுகளத்தில் எதிரணி வீரர்களை வெறுப்பேற்றவும் கடுப்பேற்றவும் பயன்படுத்தப்படும் வசைகளுக்கு அதற்கு முக்கியமான பங்காக இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

'ஸ்லெட்ஜிங்' என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் உசுப்பேற்றும் சொற்கள் கிரிக்கெட்டின் பிரிக்க முடியாத அங்கமாக மாறிப் பல ஆண்டுகளாகின்றன. இந்த 'ஸ்லெட்ஜிங்' சில சமயங்களில் வரையறைகளையும் தாண்டிவிடுகின்றது.

'ஸ்லெட்ஜிங்' என்பது உண்மையில் ஒரு உளவியல் போர். எதிரியைத் தாக்கி வீழ்த்துவதற்கு முன் அவனது மன நிலையை பலவீனப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படுவது. உற்சாகக் காற்றைப் பிடுங்கிவிடும் நோக்குடன் செய்யப்படுவது. ஆத்திர மூட்டி, பதற்றத்தில் தள்ளி, எதிரியைத் தடுமாறவும் தவறிழைக்கவும் வைக்கும் நோக்கத்தில் தொடுக்கப்படும் உளவியல் போர் அது. மகாபாரத காலத்திலும் இது இருந்துள்ளது. கடலானது கரையைத் தாண்டாதது போல் நீயும் என்னைத் தாண்டிச் செல்லமாட்டாய் என்று எதிராளியைப் பார்த்து வாய்ச் சவடால் விட்டுவிட்டுப் பிறகு அம்பு தொடுக்கும் பழக்கம் வில்லாளிகளுக்கு உண்டு. கர்ணன் போர் செய்யும்போது தேர்ப்பாகனாக இருந்த சல்லியனே கர்ணனின் உற்சாகத்தைக் குன்றச்செய்யும் முயற்சியில் ஈடுபட்டதையும் வியாசர் பதிவு செய்திருக்கிறார்.



சரி கிரிக்கெட் களத்துக்கு வருவோம். இரு அணிகளுக்கிடையே ஏற்கனவே பகைமை உணர்வு இருக்கும்போது இந்த உளவியல் போர் கடுமையானதாக மாறிவிடுகிறது. இந்தியா - பாகிஸ்தான், இங்கிலாந்து - ஆஸ்திரேலியா போன்ற அணிகள் மோதும் போது அந்தப் போக்கு வரையறைகளைத் தாண்டுகின்றது. தற்போது நடைபெற்று வரும் ஆஷஸ் தொடரிலும் அதன் அசிங்கமான முகம் வெளிப்பட்டுள்ளது. இனி நடைபெறவுள்ள ஆட்டங்கள் அத்தகைய கசப்புணர்வு இல்லாமல் நடைபெற வேண்டும் என்று இரு அணித் தலைவர்களும் வெள்ளைக் கொடி பறக்கவிடும் அளவுக்கு முதல் ஆட்டத் தில் காரம் கடுமையாக இருந்தது. வெள்ளைக் கொடி தொடர்ந்து கம்பத்தில் பறக்கிறதா அல்லது காற்றில் பறக்கிறதா என்பது எதிர் வரும் ஆட்டங்களில்தான் தெரியவரும். அந்தச் சூழலில் புகழ்பெற்ற சில 'ஸ்லெட்ஜிங்'குகளைப் பார்ப்போம் (பல 'ஸ்லெட்ஜிங்குகள்' பிரசுரிக்க இயலாதவை என்பதால் கஷ்டப்பட்டுத்தான் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது).

## சரியான ஜோடி

1989 ஆம் ஆண்டு லோர்ட்ஸ் டெஸ்ட். ஹ்யூக்ஸ் போட்ட பந்தை ஸ்மித் அடித் தாட முயல்கிறார். பந்து மட்டையில் படவில்லை.

"உனக்கு துடுப்பாட்டம் வர வில்லையே?" என்று ஹ்யூக்ஸ் கிண்டலடித்தார். பின்னர் அவரது பந்தை எல்லைக்கு வெளியே விரட் டிய ஸ்மித், "எனக்கு துடுப் பாட்டம் வராது. உனக்குப் பந்துவீச்சு வராது. நானும் நீயும் சரியான ஜோடிதான்" என்று பதிலடி கொடுத்தார்.

## வெத்து வேட்டு

ரவி சாஸ்திரி பந்தைத் தட்டி விட்டு ஓட்டங்கள் எடுக்க முயல்கிறார். ஆஸி. அணியின் மாற்று வீரர் ஒருவர் பந்தைத் தடுத்துக் கையில் வைத்தபடி, "ஓடிப் பாரு, உன் மண்டையை உடைக்கிறேன்" என்கிறார். அதைக் கேட்ட ரவிசாஸ்த்திரி "உனக்கு வாய் இருக்கற அளவுக்கு திறமை இருந்தா நீ ஏன் 12ஆவது ஆளா இருக்கப் போற?" என்று அந்த வீரரின் வாயை அடைத்தார்.

> 'ஸ்லெட்ஜிங்' என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் உசுப்பேற்றும் சொற்கள் கிரிக்கெட்டின் பிரிக்க முடியாத அங்கமாக மாறிப் பல ஆண்டுகளாகின்றன. இந்த 'ஸ்லெட்ஜிங்' சில சமயங்களில் வரையறை களையும் தாண்டிவிடுகின்றது.

## சிவப்பு நிறம், வட்ட வடிவம்

தோமஸ் வீசிய பந்தை ரிச்சர்ட்ஸ் அடிக்க முயல, பந்து மட்டையில் படாமல் செல்கிறது. அடுத்தது இப்படி நடக்கிறது. ரிச்சர்ட்டைப் பார்த்த தோமஸ் "பந்து சிவப்பா, வட்டமா இருக்கும். அஞ்சு அவுன்ஸ் எடை இருக்கும்" என்று கிண்டலடிக்கின்றார். அடுத்த பந்தை ரிச்சர்ட்ஸ் மைதானத்துக்கு வெளியே அனுப்புகிறார். தோமஸைப் பார்த்து "பந்து எப்படி இருக்கும்னு உனக்குதான் தெரியுமே. போய் எடுத்துக் கோப்பா" என்றார் ரிச்சர்ட்ஸ்.

## கதவைச் சாத்தாதே

1960ஆம் ஆண்டு இங்கிலாந்து - ஆஸி. அணிகளுக்கு இடையிலான ஆட்டம். இங்கிலாந்தின் ட்ரூமன் பெவிலியனுக்கு அருகில் உள்ள கதவுக்குப் பக்கத்தில் நிற்கிறார். புதிதாக ஆட வரும் மட்டையாளர் பெவிலியனிலிருந்து வெளியே வந்து கதவைச் சாத்துகிறார். "அப்படியே இருக்கட்டும். சீக்கிரமே நீ திரும்பி வர வேண்டியிருக்குமே" என்றார் ட்ரூமன்.

## விட்டது ஆட்டத்தை

சில சமயம் துடுப்பாட்ட வீரர்களும் களத்தடுப்பாளர்களை வெறுப்பேற்றுவார்கள். ஸ்டீவ் வோ அதற்குப் பெயர் போனவர். 1999ஆம் ஆண்டு உலகக் கிண்ண ஆட்டத்தில் அவர் கொடுத்த பிடியை தென்னாபிரிக்க களத்தடுப்பாளர் விட்டு விட்டார். ஓட்டங்கள் எடுத்து முடித்ததும், "நீ பிடியை விடவில்லை, ஆட்டத்தையே விட்டு விட்டாய்" என்று பிடியை விட்டவரைப் பார்த்து வெறுப் பேற்றினார் வோ. சொன்ன படியே ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வென்றது.

உங்களை வெறுப்பேற்றுகின்றார்கள் என்றால் நீங்கள் நன்றாக ஆடுகிறீர்கள் என்று அர்த்தம் என்று இங்கிலாந்து அணியின் பயிற்சியாளர் கிரஹாம் கூச் சொல்லியிருக்கிறார். இந்தியாவின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களான சச்சின் டெண்டுல்கர், ராகுல் டிராவிட், லட்சுமணன் ஆகியோர் 'ஸ்லெட் ஜிங்'கிற்கு பதிலே பேச மாட்டார்கள். கவனத்தையும் சிதறவிட மாட்டார்கள். சச்சினையும், டிராவிடையும் 'ஸ்லெட்ஜ்' செய்யச் செய்ய அவர்கள் மனக் குவிப்பு அதிக மாகிறது என்பதால் எதிரணியினர் அவர்களை 'ஸ்லெட்ஜ்' செய்வதையே ஒரு கட்டத்தில் நிறுத்திவிட்டார்கள்.

> இந்தியாவின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களான சச்சின் டெண்டுல்கர், ராகுல் டிராவிட், லட்சுமணன் ஆகியோர் 'ஸ்லெட் ஜிங்'கிற்கு பதிலே பேச மாட்டார்கள். கவனத்தையும் சிதற விட மாட்டார்கள். சச்சி னையும், டிராவிடையும் 'ஸ்லெட்ஜ்' செய்யச் செய்ய அவர்கள் மனக் குவிப்பு அதிக மாகிறது என்பதால் எதிரணியினர் அவர்களை 'ஸ்லெட்ஜ்' செய்வதையே ஒரு கட்டத்தில் நிறுத்திவிட்டார்கள்.



## பந்து வீசத் தெரியும்

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பந்து வீச்சாளர்கள் தங்கள் வீரத்தைப் பொதுவாக வார்த்தைகளில் காட்டுவதில்லை. அதிலும் அம்புரோஸ் யாரையும் 'ஸ்லெட்ஜ்' செய்ததே இல்லை. அது ஏன் என்று ஒரு முறை அவரைக் கேட்ட போது, "எனக்குப் பந்து வீசத் தெரியுமே" என்று அமைதியாகப் பதிலளித்தார் அம்புரோஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவெறிக்கு எதிரான போராளியின் சகாப்தம்

தென்னாபிரிக்காவின் சுதந்திரப் போராட்ட வீரரும், கறுப்பின தலைவருமான நெல்சன் மண்டலோ தனது 95ஆவது வயதில் காலமானார். கடந்த சில மாதங்களாக உடல் நல குறைவு காரணமாக அவதிப் பட்டு வந்தார். அவரின் மரணம் குறித்து ஜனாதிபதி ஜேக்கப் ஜுமா வெள்ளிக்கிழமை அதி காலை முறைப்படி அறிவித்தார். தென்னாப்பிரிக்கா தனது தவப் புதல்வனையும், தென்னாப் பிரிக்க மக்கள் தங்களின் தந் தையையும் இழந்திருப்பதாக, தென்னாப்பிரிக்க ஜனாதிபதி தனது அறிவிப்பில் கூறினார். தென்னாபிரிக்காவின் 80ஆண்டு இனவெறிக் கொள்கையை எதிர்த்து நீண்டதொரு போராட் டம் நடத்தி, அதில் வெற்றி பெற்றது மட்டுமல்லாமல் அந்த நாட்டுக்கே அதிபராகி வரலாற் றில் இடம் பிடித்தவர் மண் டேலா. உலகளவில் 250 விருதுகளைப் பெற்றுள்ளார். அதில் 1993 இல் அமைதிக் கான நோபல் பரிசும் ஒன்று.

1918 ஆம் ஆண்டு ஜுலை 18 இல் தென்னாபிரிக்காவின் டிரான் ஸ்கே பகுதியில் பிறந்த மண்டே லாவின் இயற்பெயர் ரோலிஹ் லாஹ்லா. இவரது தந்தை தெம்பு மக்கள் இனத் தலைவராக இருந்தார். பாடசாலையில் மண் டேலாவுக்கு அவரது ஆசிரியர் நெல்சன் என்று பெயர் சூட்டி னார். தந்தை மரணத்துக்குப் பின்னர் மண்டேலா தம் இனத்தின் அரசரானார். போர்ட் ஹாரே பல்கலைக்கழகத்தில் படிக்கும் போதே இனவெறியை எதிர்க்க தொடங்கினார். 1944 இல் ஆபிரிக்க தேசிய காங்கி ரஸ் இளைஞர் லீக்கை உரு வாக்கினர். 1952இல் சட்டப் படிப்பை முடித்து, முதல் கறுப் பர் வழக்கறிஞர் அலுவலகம் திறந்தார். வழக்கறிஞராகப் பணியாற்றும்போது நீதித்துறை யில் காணப்பட்ட நிறவெறி யைக் கண்டு கோபமுற்றார்.

### ஆயுள் தண்டனை

ஆபிரிக்க தேசிய காங்கிரசும், கம்யூனிஸ்ட் கட்சியும் ஒருங்கி ணைந்து செயல்படத் தொடங் கின. இதனை கண்டு அஞ்சிய வெள்ளையின அரசு 1950 இல் கம்யூனிஸ்ட் கட்சியைத் தடைசெய்தது. 1956 இல் மண் டேலா உட்பட 156 அரசியல் போராட்டக்காரர்கள் தேசத்துரோக வழக்கில் கைதாகினர். 4 ஆண்டு விசாரணைக்குப் பின் னர் விடுதலை செய்யப்பட்ட னர். அப்போது தான் ஷார்ப் பிவில்லி படுகொலை நிகழ்ந் தது. அமைதியாக ஆர்ப்பாட் டம் செய்த ஆபிரிக்கர்கள் மீது துப்பாக்கியால் சுட்டதில் 69 பேர் கொல்லப்பட்டனர். இத னால் அதிர்ச்சியடைந்த மண் டேலா உம்கோன்டோவி சிஸ்வி என்ற அமைப்பை நிறுவினார். நாச வேலைகள், கொரில்லாப் போர் போன்ற பயங்கரவாத செயல்களில் அது ஈடுபட்டது. எனினும் அவர் ஆயுதம் தாங்கிய போராட்டம் தவிர்க்க இயலாது ஆனால் தென்னா பிரிக்கப் பிரச்சி னையின் இறுதித் தீர்வுக்கு வன்முறைவழிவகுக்காது என்ற கருத்தைக் கொண்டிருந்தார். அரசு அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்தது. தென்னாப்பிரிக்க தேசிய காங்கிரஸ் தடை செய்யப் பட்டது. நெருக்கடி நிலை அறிவிக் கப்பட்டது. மண்டேலா தேசத் துரோக வழக்கில் கைதானார். ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது. மண்டேலா கேப்டவுன் அருகே ரப்பன் தீவு சிறையில் அடைக் கப்பட்டார். இங்கு வெளி உலகத் தோடு எந்தவித தொடர்பும் கொள்ள முடியாது: செய்தித்தாள் கள் இல்லை. தாய் இறந்தபோ தும், மகன் கார் விபத்தில் இறந்த போதும் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள அவர் அனு மதிக்கப்படவில்லை. அரசின் அடக்குமுறைகள், உலகில் கடும் எதிர்ப்பை ஏற்படுத்தி யது. ஐ.நா சபையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. பொருளா தாரத் தடை தீர்மானம் கொண் டுவரப்பட்டது. பல நாடுகள் தூதரக உறவைத் துண்டித் தன. உள்நாட்டில் இருந்த இடை விடாத எதிர்ப்பும், வெளிநாடு களின் பொருளாதாரத் தடை யும் கடைசியில் இனவெறி அரசின் கண்களைத் திறந்தன.

### வெற்றியுடன் விடுதலை

1985 ஆம் ஆண்டு தென் னாபிரிக்க அரசு மண்டேலாவு டன் பேச்சுக்கு முன்வந்தது. 1988 ஆம் ஆண்டு அவர் வீட் டுக் காவலுக்கு மாற்றப்பட்டார். அந்த நேரத்தில் அவர் கடுமை யான காச நோயினால் பாதிக் கப்பட்டார். முதலில் அதிபர் போத்தா வோடும் பின்னர் 1989 ஆம் ஆண்டு அதிபரான டி கிளார்க்கோடும் மண்டேலா பேச்சு நடத்தினார். 1990 ஆம் ஆண்டு பேச்சுப் பற்றி அதிகார பூர்வமான அறிவிப்பு வெளி யிடப்பட்டது. இதற்கிடையில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மீதான தடை அகற்றப்பட்டது. அரசியல் கைதிகள் விடுதலை யாகினர்.

தொடர்ந்து 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி 27 ஆண்டு காலச் சிறைவாசத்திற்குப்பின் தனது 72ஆவது வயதில் மண்டேலா விடு தலையானார்.

விடுதலையான அன்று அவர் சிறைச்சாலைக்கு வெளியே வந்து ஆற்றிய உரை சர்வதேச மட்டத் தில் பெரும் வர வேற்பை அப்போது பெற்றி ருந்தது. நிற வேறுபாடு இல் லாமல் ஜனநாயகரீதியில் தேர்ந் தெடுக்கப்படும் அமைப்புதான் தென் னாப் பிரிக்காவின் எதிர் காலத்தைத் தீர்மா னிக்க வேண்டும் என்று அப் போது அறிவித்தார்.

உங்களை நாங்கள் மதிக்கின்றோம். உங்களை நாங்கள் நேசிக்கிறோம். உங்களை நாங்கள் அன்பு செய்கி றோம் என்று தன்னைச் சிறை வைத் திருந்த வெள்ளையர்களைப் பார்த்து அவர் குறிப்பிட்டார்.

### ஜனாதிபதி யாக...

பேச்சின் பயனாக 1993 ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தம் கையெ ழுத்தானது. அதன்படி வயதுவந் தோர் அனைவருக்கும் வாக்கு ரிமை என்ற ஜனநாயக நெறி முறைப்படி தேர்தல் நடத்த அரசு ஒப்புக் கொண்டது. தேர்தலில் வெற்றி பெற்று 1994 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவின் ஜனாதிபதி யாகி வரலாற்றுச் சாதனை படைத் தார். அவர் நிறவெறிக்கு எதிராக நடத்திய போராட்டம் இறுதியில் அவர் அந்த நாட்டின் தலைவனா கவே மாற்றியது.

1998ஆம் ஆண்டு முதல் தென்னாப் பிரிக்கப் பாடசாலைகளில் தமிழ், தெலுங்கு, இந்தி, குஜராத்தி, உருது போன்ற மொழிகளை கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தார்.

நெல்சன் மண்டேலாவின் பிறந்த நாளான ஜுலை 18ஆம் திகதியை சர்வதேச நெல்சன் மண்டேலா தினமாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

### இந்தியாவுடன் மண்டேலா

தென்னாபிரிக்காவின் நிறவெறிக் கொள்கையை எதிர்த்து முதலில் போராட்டம் தொடங்கியவர் மகாத்மா காந்தியடிகள் தான். இதனைப் பின் பற்றிம் மண்டேலாவும் நிறவெறிக்கு எதிராக வெகுண் டெழுந்தார்.

இதனால் மண்டேலாவுக்கு இந் திய அரசு மிக உயரிய பாரத ரத்னா விருது வழங்கி கௌரவித் தது.



# இருண்ட கண்டத்தில் விரிந்த மலரே வாழ்த்துக்கள்

இரும்புத் திரையை உடைத்தெழுந்த கதிரே!
மேகங்களிடம் முத்தங்களும்
காற்றிடம் மலர்ச் செண்டும்
அனுப்பியுள்ளோம் பெற்றுக்கொள்.

இதரை வாழைக் கன்றுகள் இரண்டை
இனிவரும் கடலலைகளிடம் கொடுத்து
விடுகின்றோம்
கொடி மரத்துக்கருகில் பாத்தி கட்டி நட்டு விடு
அடிபெருகி எங்கள் அன்புக்குக்
குலைதள்ளட்டும்.
நேற்று வரை தென்னாபிரிக்கா என்றே
உன்னை அழைத்தோம்
இன்று என் ஆபிரிக்கா என்றே
இங்கே ஒவ்வொருவரும் உச்சரித்துக்
கொள்கின்றோம்

வாஸ்கொடாமா'வுக்கு மட்டும் தான்
நீ நம்பிக்கை முனை'யாக இருக்கவில்லை
போராடும் எங்களுக்கும் அப்படித்தான்
புலப்படுகின்றாய் நெல்சன் மண்டேலா!
கறுப்புச் சிங்கமே! கையை நீட்டு
குலுக்கிக் கொள்ளுவோம்.

உன்னைக் கட்டித் தழுவத் துடிக்கின்றோம்
என்ன செய்வது நீ எட்ட இருக்கின்றாய்
அன்று நீ சிம்மாசனம் ஏறியபோது
எமக்கேன் அழைப்பனுப்பவில்லை?
ஶ்ரீலங்காவுக்கு நீ எந்த வழி உறவு?
விஜேதுங்காவை விருந்துக்கழைத்தபோது
தமிழீழம் உன் கண்களுக்கு ஏன்
தட்டுப்படவில்லை? இது விருந்து
கிட்டவில்லையென்ற விசனமல்ல போராடும்
பூமியொன்றை புறமொதுக்கிவிட்டாய் என்ற
கோபமேதுமில்லை. இனிமேலாவது
நண்பர்களை இனம் கண்டுகொள்.
நன்மை உனக்குத்தான்.

ஆபிரிக்காவின் காப்பிரி மக்களே!
சூரியனை வழிமறித்து
தொட்டுப் பேசும் வல்லமையின் வடிவே!
காற்றுக்கொதுங்கிய வெள்ளையன்
நேற்றுவரை உன் முதுகில்தான் இருந்தான்.

கறுப்பனென்று உன்னை அழைத்தபோது
வெள்ளை உதடுகள் வேதனைப்படவில்லை
மலத்தைக்கூட தன் வீட்டில் அறை கட்டிக்
குடியிருத்தியவன் உன்னை வீதியில்
உலாவவிடவில்லை படுக்கை
அறைக்குள்ளும் நாயை அழைத்தவன்,
அடுப்படிக்குள்ளே கோழியை
அனுமதித்தவன், கறுப்பனைத் தொடும்
காற்றைக்கூட வெறுத்து விரட்டினான்
அழகான உன் கரிய மேனியும்
உரமேறிய தசை நார்களும்
அவனுக்கு அச்சத்தைத் தரவில்லை

அருவருப்பாகவே இருந்தது.
நீ பேசாமல் இருக்கவில்லை
போராடினாய் வெற்றிக் கம்பத்தைத்தான்
உன்னால் தொட்டுவிட முடியவில்லை
உங்கு வேர்கொண்ட மரங்களெதுவும்
நீர் குடித்து வளரவில்லை
கறுப்பனின் குருதி குடித்தே தளிர்த்தன
உலகெங்கும் தார்பூசியே வீதி கறுப்பானது
உன் நாட்டில் மட்டும்தான்
கறுப்பனின் வியர்வை பட்டு வீதி கறுப்பானது
வெள்ளைச் சீமாட்டிகளின் விருந்துக்குப் பிறகு
வீசியெறியும் எச்சில் இலைக்காக
உன் பரம்பரை தாழ்வாரத்தில் தவமிருந்தது
வந்தவன் ஆள நீ வயலில் மாடானாய்
வெள்ளைக்காரன்
மாட்டுத் தொழுவத்தில் கறுப்பியின்
முலைதொடுவான்
கறுப்பனுக்கு மட்டும் காயடிப்பான்
நீ புயலாகிப் போராடியவன்தான்
என்ன செய்வது?
அம்பும் வில்லும் தான் உனக்கு அகப்பட்டது
அவனிடம் துப்பாக்கியல்லவா இருந்தது!
காலங்கள் கழிந்தனவே தவிர
உன் துன்பங்கள் கழிய வழிவந்
சேரவில்லை.

நீண்ட காலத்தின் பின்
நெல்சன் மண்டேலா வந்து
பிறந்த போதுதான் நெஞ்சு
நிமிர்த்தினாய் எப்படியோ
சுற்றிய இரும்புவேலிச் சுவர்கள்
இடிந்தன. இன்று ஆபிரிக்காவுக்கு
சிறகு முளைத்து விட்டது.
புதிதாகப் பிறந்த கறுப்பு தேசமே!
விடுதலைக்கு நீ கொடுத்த
விலையிலும் அதிகவிலை
நாங்கள் கொடுக்கின்றோம்
நீங்கள் போராடும் விதமே
வித்தியாசமானது
உனக்குப் பக்கத்து நாடுகள்
பால்வார்த்தன எமக்கு அண்டை
நாடொன்று நஞ்சையே தந்தது
நின்றும், நடந்தும், குனிந்தும்,
நிமிர்ந்தும் நீ வசதிக்குத் தக்கபடி
வழிமாறியுள்ளாய்
நாங்கள் பாதை மாற்றும்
பரம்பரை இல்லையே!

விடுதலையைப் பேசிப்பெறும்
எண்ணம் எமக்கில்லை
போராடிப் பெறுவதென்றே முடிவு
பிரபாகரனைப்
பார்க்காவிட்டாலும், கேட்டிருப்பாய்
தொட்டுத் தோழமையை
வளர்த்துக் கொள் கண்டங்கள்
கடந்து வாழ்ந்தாலும்
நாங்கள் உணர்வால்
ஒன்றுபட்டவர்கள்
நிறத்தால் வேறுபட்டாலும்
நீங்கள் விடுதலை பெற
வேண்டுமென்று அதிகம்
விரும்பியது நாங்கள் தான்
ஏன் தெரியுமா?
வெள்ளைக்காரன் உன்னை
மட்டுமா அடக்கினான்?
இல்லை எம்மை அடக்கவும்
எதிரிக்குத் துணைபோனான்
இங்கே கண்ணிவெடியில் சிதறும்
பவள்' கவச வண்டியை எதிரிக்கு
அனுப்பியதே
வெள்ளைத்தோல் வெறியன்தான்
இனி இது நடக்காது

நாங்கள் நம்புகின்றோம்
போராடிப் பெற்ற சுதந்திரத்தின்
பெறுமதி புரிந்தவர்கள் நீங்கள்
விடுதலையின் முகவரி
தெரிந்தவர்களே! எங்கள்
சுதந்திரத்துக்கு முத்திரை
ஒட்டுங்கள் நம்பிக்கைமுனை
நாடே! எங்களின் நம்பிக்கையை
நாசமாக்கி விடாதே:
கறுப்புச் சிங்கமே நெல்சன்
மண்டேலா ஒரு கேள்வி பதில்
வேண்டும் சில இடங்களில்
சேற்றிலேன் காலைப்
புதைத்தாய்? சமாதானத்துக்கான
நோபல் பரிசை
வேடனும் புறாவும் எப்படிப்
பங்கிட முடியும்?
குருதி படிந்த வெள்ளைக்
கொலைக்கரமும்
சிறையில் வாடிய உன் கரிய
திருக்கரமும்
குலுக்கிக்கொண்டபோது
அந்த விருதை எப்படி விளங்கிக்
கொண்டாய்?
பரிசு வாங்கிய போது
உன் பரம்பரை சிந்திய குருதியை
எப்படி மறந்து கைகளை
நீட்டினாய்?
என்றாலும் உன்மீது கோபம்
வரவில்லை
கறுப்புச் சிங்கமே! கைகளை நீட்டு
தலுக்கிக் கொள்ளுவோம்

*ஞர் புதுவை இரத்தினதுரை*

# மண்டேலாவின் முக்கிய தருணங்கள்

1918 - தென்னாபிரிக்காவின் கிழக்கு கேப்பில் பிறந்தார்
1943 - ஆபிரிக்க தேசிய காங்கிரஸில் சேர்ந்தார்
1956 - தேசத் துரோகக் குற்றச்சாட்டு அவருக்கு எதிராகப் பதியப்பட்டது. ஆனால் நான்காண்டு விசாரணைக்குப் பிறகு குற்றச்சாட்டுகள் கைவிடப்படுகின்றன
1962 - கலவரத்தைத் தூண்டியது, கடவுச்சீட்டு இல்லாமல் நாட்டைவிட்டு வெளியேறியது ஆகிய குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்டு ஐந் தாண்டு சிறைத் தண்டனை
1964 - நாசவேலை குற்றச்சாட்டில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.
1990 - சிறையிலிருந்து விடுதலை
1993 - அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.
1994 - தென்னாபிரிக்காவின் முதல் கறுப்பின அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
1999 - தென்னாபிரிக்காவின் அதிபர் பதவியிலிருந்து விலகுகிறார்.
2001 - புரொஸ்டேட் புற்று நோய் அவரைப் பீடித்தது.
2004 - பொது வாழ்விலிருந்து விலகுகிறார்.
2005 - தனது மகன் எச்.ஐ.வி. எய்ட்ஸ் நோய் தொடர்பான உடல்நலக்குறைவால் இறந்ததாக அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


றெக்சியனின் இறுதிச் சடங்கில், ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமல் பங்கேற்றிருந்தார்.

## அண்ணன் கொலைக்கு

# நீதி வேண்டும்

(02 பக்கத் தொடர்ச்சி)

*டிருக்கேக்க சொந்தக்காரப் பிள்ளை ஒன்று கோல் எடுத்து. அண்ணன் மருந்து குடிச்சு இறந்திட்டார் என்றும் பொடியை புங்குடுதீவு ஆஸ்பத்திரியில வச்சிருக்குது என்றும் சொன்னா. அதால நாங்கள் அந்த இடத்திலயே பஸ்ஸைவிட்டு இறங்கிட்டம்.*

*நான் அண்ணிக்கு கோல் எடுத்து கதைச்சன். அவவோ புங்குடுதீவு ஆஸ்பத்திரியில இல்ல, நீங்கள் யாழ்ப்பாணம் போங்கோ போங்கோ எண்டு சொன்னா. வேற விவரம் ஒன்றும் சொல்லயில்லை. நாங்கள் யாழ்ப்பாணம் போய் விசாரிச்சம் அங்க அப்படி யாரும் வரவில்லை என்று சொல்லிச்சினம்.*

*அண்ணன் மருந்து குடிச்சு இறந்திட்டார் என்று அந்தப் பிள்ளைக்கு ஈபிடிபி தோழர் ஒருத்தர்தான் சொல்லியிருக்கிறார். அண்ணன் தற்கொலை செய்தது என்ற கதையை அவைதான் பரப்பினவை. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலயும், அந்த மருந்து குடிச்ச கேஸா என்று எங்களிட்ட கேட்டவை.*

*அண்ணனுக்குச் சுகமில்லை என்று அண்ணி சொல்லேக்கையே அண்ணன் இறந்திட்டார். ஒன்றரை மணி அளவில நான் அவருக்கு இந்த போனில் இருந்து (கைப்பேசியைக் காட்டுகிறார்) எடுத்தனான். ஆனால் அவர் ஆன்ஸர் பண்ணேல்ல. அப்பவே அவரைக் கொன்று போட்டினம் போல. சம்பவம் ஒரு மணியளவில தான் நடந்தது என்று பிறகு நாங்கள் கேள்விப்பட்டம்.*

*பிறகுதான் யாழ்ப்பாணத்துக்கு பொடியைக் கொண்டு வந்தவை. ஆனால் எங்களப் பாக்க விடேல்லை. அங்க பொலிஸ்காரர் விசாரணையள் நடத்திக்கொண்டிருந்தவை.*

*அங்க பார்த்தன் நீதிபதி ஐயாவைக் காணேல்ல. அதுக்குப் பிறகுதான் ஊர்காவற்றுறையில நீதிபதி ஐயாட்டை இந்தக் கடிதத்தைக் குடுத்தனான்.*

*போன 4ஆம் திகதி அண்ணன் வீட்ட வந்திருக்கேக்க, தன்ரை மாமியும் மனைவியும் தன்னைக் கலைக்கப் பாக்கினம் என்று சொல்லிக் கவலைப்பட்டவர். அப்பதான் இந்தக் கடிதத்தையும் தந்தவர். எனக்கு ஏதும் நடந்தா நீதிபதி ஐயாட்டைக் குடு என்று சொன்னவர்.*

*அண்ணனைக் கொன்றது 26ஆம் திகதி அதுக்கு முதல் சனிக்கிழமை (23)யும் அண்ணன் வீட்டை வந்து பொயிலைக் கண்டு நட்டிட்டுத்தான் போனவர்.*

*கமலை வீட்டுக்குள்ள வச்சுக்கொண்டு மனிசியும் மாமியும் தன்னை வீட்டுக்கு வெளியிலை தள்ளிப் பூட்டிப் போட்டினம் என்று அண்ணன் கவலைப்பட்டவர். ரெண்டு மாசமா அண்ணன் வீட்டுக்கு வெளியில கிடந்த கொட்டிலிலதான் படுத்துக் கிடக்கிறவர். அந்தக் கொட்டிலுக்கதான் தன்ர ரெண்டு பெடியளையும் ரெண்டு பக்கமும் வச்சுக் கொண்டு கிடக்கிறன் என்று அம்மா போன் எடுத்தா அழுவார்.*

''அமைச்சரிட்ட போன விசயத்தையும் சொல்லன்'' என்று பக்கத்தில் அமர்ந்திருந்த உறவினர் எடுத்துக் குடுக்கிறார்.

*கமலால தன்ர வீட்டில பிரச்சினை என்றதை அண்ணன் அமைச்சரிட்ட முறையிட்டவர். ரெண்டுபேரையும் கூப்பிட்டு விசாரிச்ச அமைச்சர், குடும்பத்தையும் கூட்டிக்கொண்டு நெடுந்தீவில போய் இருக்கச் சொல்லி அண்ணனுக்குச் சொன்னவர்.*

*ஆனால் அவையள் (தானியலன் மனைவி மற்றும் மாமியைக் குறிப்பிடுகிறார்) நெடுந் தீவுக்கு வரமாட்டினம் என்று அண் ணன் சொன்னார்.*

*அதுக்குப் பிறகுதான் அண்ணன் கடிதம் கொண்டு வந்து தந்தவர். இப்ப கொஞ்ச நாளைக்கு முன்னம் ட்ராக்டர் எடுக்கிறத்துக்கெண்டு ஒரு லட்சம் ரூபாய் குடுத்தனாங்கள். அதுவும் அண்ணியின்ர கையிலதான் குடுத்தனாங்கள்.*

*அண்ணன் வீட்டில 5 நாய் நிக்கிது கள். கேற் திறந்து கிடந்ததால நான் ஒருநாள் உள்ள போனதுக்கே என்ர சட்டையைப் பிடிச்சு இழுத்துப் பிய்ச்சு, என்ர காலிலையும் கடிச்சுப் போட்டுதுகள் அதுகள். அந்தளவுக்கு கடிநாயள். அம்மா அப்பா போனாக் கூட நாயைப் பிடிச்சுக் கட்டாமல் உள்ள போக முடியாது. ஆனால் அண்ணனைச் சுட்ட நாளில அந்த நாயள் எல்லாம் கட்டிப் போட்டுக் கிடந்திருக்கு. அவதான் செய்திருப்பா என்றதுதான் எங்களுக்குச் சந்தேகம். ஏன் கொன்றவை என்று எங்களுக்கு ஒரு காரணம்தெரியவேணும். அண்ணன் தான் எங்களுக்கு எல்லாமுமாய் இருந்தவர்.*

கண்களில் இருந்து பொங்கி வழியும் கண்ணீரை அடக்க வழிதெரியாமல் றெஜீனா தனக்குத் தெரிந்தவற்றைச் சொல்லி முடிக்கிறார்.

கட்சிக்குள் இருந்த முரண்பாடுகள் பற்றியோ கமலுக்கும் தனது சகோதரனுக்கும் இடையிலான பிரச்சினைகள் பற்றியோ அவருக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை. சகோதரனின் கொலைக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதும் அவரை ஏன் கொன்றார்கள் என்ற காரணம் தெரியவேண்டும் என்பதும்தான் அந்த அப்பாவிக் குடும்பத்தின் கோரிக்கையாக இருக்கிறது.

றெக்சியனின் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்தும் கவலைப்படுகிறார்கள். நீதிமன்றம் அவர்களைத் தங்களிடம் ஒப்படைத்தால் பராமரிப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

ஆனால் தனது பிள்ளைகளை 18 வயதுவரை நீதிமன்றமே பராமரிக்க வேண்டும் என்று றெக்சியன் தனது சாவுக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதம் இரண்டு பக்கங்களைக் கொண்டதாகவும் முறைப்படியாக எழுதப்படாததாகவும் இருக்கிறது. "கோட் நீதிபதி! எனது சாவுக்குக் காரணம்" என்றே அந்தக் கடிதம் தொடங்குகிறது. தெளிந்த தமிழில் எழுதினால் அந்தக் கடிதம் பின்வருமாறு அமைந்திருக்கும்.

அனைத்துப் பெரிய மனிதர்களும் அறிவது! எனது சொந்த விருப்பத்தில் திருமணம் செய்து கொண்டேன். இப்போது எனது மாமி, அனித்தா (மனைவி) இவர்கள் என்னை வீட்டைவிட்டு வெளியே போ என்று கூறினார்கள். இரவு 7.45 மணிக்கு எனது வீட்டுக்கு கமல், ஜெகாரான் ஆகியோர் வந்தார்கள். எனது குடும்பப் பிரிவுக்குக் காரணம் கமல்தான். அத்தோடு எனது மாமியும் எனது மனைவியும்தான் எனது சாவுக்குக் காரணம் என்பதனைக் கூறிக்கொள்கிறேன். எனது உயிர் பிரிகிறது.


வேலணை கோர்ட் நீதிபதி உங்கள் தீர்ப்பு சரியானதாக அமைய வேண்டும். நான் உங்கள் சட்டத்தில் குறை கூறவில்லை. எனது சுய அறிவில் இந்த மடல் எழுதுகின்றேன். 3 பிள்ளைகளையும் கோட் பாரம் எடுக்க வேண்டும். எனது மனைவி அனித்தாவிடம் அல்லது வேறுஎவரிடமாக இருந்தாலும் பிள்ளைகளைக் கொடுக்க வேண்டாம்.

எனது குடும்பப் பிரிவுக்குக் காரணம் கமல்தான். அத்தோடு எனது மாமியும் எனது மனைவியும்தான் எனது சாவுக்குக் காரணம் என்பதனைக் கூறிக்கொள்கிறேன். எனது உயிர் பிரிகிறது.

பிள்ளைகளுக்குப் 18 வயது வரும் வரைஅவர்களைக்கோட்வளர்க்கவேண்டும். அதன் பிறகு பிள்ளைகளின் விருப்பத்துக்கு ஏற்றவாறு தீர்ப்பு வழங்கவும். இப்படி அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில்தான் றெக்சியனின் மனைவி மற்றும் கமல் ஆகியோர் கைது செய்யப்பட்டார்களா என்பதைப் பொலிஸார் உறுதிப்படுத்தவில்லை. ஆனால் அவர்கள் இந்தக் கடிதம் குறித்து றெஜீனாவிடம் விசாரணை நடத்தியிருக்கிறார்கள். அவரிடம் இருந்த றெக்சியனின் மடிக்கணினியையும் எடுத்துப்போய் சோதனை நடத்தியிருக்கிறார்கள்.

றெக்சியனின் மனைவி சொல்லிய தன்பேரில் இந்தக் கொலை நடந்ததாகப் பொலிஸார் கூறுகின்றனர். எனினும் அதையும் தாண்டி இந்தக் கொலையின் பின்னணியில் விவகா ரங்கள் இருக்கின்றன என்று பலரும் நம்புகிறார்கள். றெக்சியனின் கொலை தொடர்பில் ஈபிடிபி கட்சி நடந்துகொண்ட விதம் இந்தச் சந்தேகங்களை மேலும் வலுப்படுத்துவதாக அவர்கள் கூறுகின்றனர். றெக்சியன் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று ஆரம்பம் முதலே ஊரில் பேசப்பட்டபோதும் அது தற்கொலை மரணம் என்று ஈபிடிபி உறுப்பினர்கள் பலர் ஏனையவர்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அத்துடன் கட்சி தனது அறிக்கையில் அவர் அகாலமாக இறந்தார் என்று மட்டுமே தெரிவித்திருந்தது. அதேநேரத்தில் றெக்சியன் தற்கொலை செய்தார் என்று உடல்கூற்றுப் பரிசோதனை அறிக்கையைப் பெறுவதற்கு கட்சியின் சார்பில் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன என்றும் அறிய முடிகிறது.

இதற்காக முக்கிய தலைகள் யாழ். போதனா வைத்திய சாலை அதிகாரிகளை அணுகிய தாகவும் உறுதியாகத் தெரிகிறது. எனவே இவற்றின் பின்னணி யில் றெக்சியனின் கொலை வெறும் குடும்ப விவகாரத்தால் மட்டும் நடந்தது என்றுசொல்லிவிட முடியாது என்கிறார்கள் விவரம் அறிந்தவர்கள். இந்தக் கொலையின் பின்னணியில் இருக்கக்கூடிய உண்மையான காரணங்களை அறிவது எதிர்காலத்தில் மேலும் பல விவரங்கள் வெளிவர உதவும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். எனவே பொலிஸார் இதுவிடயத்தில் கவனம் எடுத்து முழுமையான விசாரணை நடத்த வேண்டும். எல்லா உண்மைகளையும் வெளிக் கொண்டு வரவேண்டும்.


றெக்சியனின் இறுதிக் கடிதம்


றெக்சியனின் அப்பா மற்றும் சகோதரி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமாக வாழ

# வாஸ்து சாத்திரம்



தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபல வாஸ்து ஆலோசகர்
எண்கணித நிபுணர் கலாநிதி
ஜே.என்.எஸ்.செல்வன்

அண்டவெளியில் எத்தனையோ கிரகங்கள் வலம் வந்தாலும் அங்கு மனிதர்கள் வசிப்பதற்குத் தேவையான பஞ்சபூதங்களான நிலம் நீர் காற்று ஆகாயம் நெருப்பு என்பன சரியான அளவீடுகளில் இல்லை. இந்த காஸ்மிக் எனர்ஜியால்தான் நாம் சரியாக மூச்சுவிடும் அளவும் இதயத்துடிப்பும் நடைபெறுகின்றது. இதுபோலத்தான் நாம் வாழும் வீடும் மிகச் சிறப்பான சூழலுடன் அமைய வேண்டும்.

சிலர் எதையும் பார்க்காமல் அதிக செலவில் புதிய வீடு கட்டி கோலாகலமான குடிபுகுதல் விழா எல்லாம் நடத்திக் குடியேறுவார்கள். ஆனால் அங்கு சென்ற ஒரு வாரத்திலேயே கடும் குழப்பங்கள் சண்டைகள் வீண் வதந்திகள் நெருக்கமில்லா வாழ்வு என்பன ஏற்படும். சிலவேளைகளில் மணமுறிவு வரை கூட அது செல்லும். இது ஏன்?

குடிசை வீட்டில் இருந்தபோது கிடைத்த அமைதி நிம்மதி மகிழ்ச்சி கணவன் - மனைவி அந்நியோன்னியம் பணப்புழக்கம் என்பன எல்லாம் ஏன் இல்லாமல் போனது? இதற்கெல்லாம் காரணம் இல்லாமல் போகாது. அக்கினி மூலையில் கிணறு தோண்டப்பட்டுள்ளது. இதைவிட மோசம் ஈசான்யம் என்ற வடகிழக்கு மூலையில் சமையல் அறை அமைந்திருந்தது. இதன் மூலம் பெண்கள் மாதாந்திர உபாதையாலும் அதிகம் அவதியுற்றனர். வீட்டிற்குள் செல்லும் போதே தீயில் மிதித்தது போன்ற உணர்வு அங்கு ஏற்படும்.

இத்தகையதொரு வீட்டில் இருந்த குடும்பத் தலைவர் ஒருவர் பெரும்பாலான நேரங்களை வீட்டுக்கு வெளியேதான் கழித்தேன் என்றார்.

பலருக்கு இதில் நம்பிக்கை கிடையாது. இதிகாசக்கதைகளில்படித்தபுஷபகவிமானத்தை பெரிதாக நினைத்துக் கொண்டிருந்த காலம் போய் சந்திரமண்டலத்தில் வீடு கட்டும் காலம் நெருங்கி வந்துவிட்ட நிலையில் குளோனிங் முறையில் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்கிற அளவுக்கு அறிவியல் வளர்ந்துவிட்ட நிலையில் வாஸ்து அது இது என்று பிதற்றுகிறீர்களே என்று ஒரு நண்பர் கேட்டார். அவர் சொல்வது அவரளவில் சரிதான். ஏனென்றால் இயற்கையை பிரித்து மேய்ந்து அதிலிருந்து புதிதாக ஒன்றைக் கண்டுபிடிப்பதை மட்டும் தான் அவர் அறிவியல் என்று கருதுகிறார். இயற்கையுடன் ஒன்றி அதனை வழிப்படுத்தி அதனுடன் சேர்ந்து வாழ்வதற்கு மனிதன் என்ன செய்ய வேண்டும் என்று அறிவது அவரைப் பொறுத்தவரையில் அறிவியல் அல்ல. உதாரணத்துக்கு அணுவைப் பிளக்க முடிந்த மனிதனால் அணுவை உருவாக்க முடிய வில்லை. ஆனால் அணுவைப் பிரிப்பதைஅறிவியல்என்றுஏற்றுக்கொண்ட மனி தன் அணுவை உருவாக்கும் தொழில்நுட் பத்தைக் கண்டறிய முடியாமல் திணறு கின்றான். இங்கும் அப்படித்தான் வாஸ்து என்பது இயங்கையுடன் - பஞ்சபூதங்களு டன் - இணைந்து ஒன்றித்து மனிதன் எப்படி வாழ்வது என்பதைப் பற்றி அறிவது. அவற்றை வழிப்படுத்திக்கொண்டு அதனு டன் சேர்ந்து நாம் எப்படி வழமாக வாழ்வது என்று அறிவது. எனவே அதுவும் அறிவியல் பாற்பட்டதுதான். இது பலருக்குப் புரிவதில்லை.

பஞ்சபூதங்களை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வெற்றிபெறலாம் என்பத்தில் ஐயமில்லை. எதையும் ஒரு கணக்குப்படி செய்தால் சரியான தீர்வு கிடைக்கும். எனவே தான் ஒரு வீட்டைக் கட்டுவதற்கு முன்னர் இதுபோன்றவிடயங்களைஎல்லாம்கவனத்தில் எடுக்கவேண்டும். வீட்டைக்கட்டிய பின்னர் அது சரியில்லை இது சரியில்லைஎன்றுகூறி இடித்து மாற்று வதைவிட வாஸ்து நிபுணர் ஒருவரை முதலிலேயே சந்தித்துக் கலந்துரையாடி வீட்டைக் கட்டத் தொடங்குவதே நல்லது. அப்படிச் செய்தால் வேலைக்குப் பொருட்கள் வந்து சேர்வதிலிருந்து கட்டடம் எழுப்புவது வரை இயல்பாக அனைத்துப் பணிகளும் செவ்வனே நடந்தேறும்.

இந்த உலகு வடக்கு கிழக்கு மேற்கு தெற்கு என நான்காக வகுக்கப்பட்டுள்ளது. இதனை மேலும் நான்காகப் பகுத்து எட்டுத் திசைகளை ஏற்படுத்தியிருக்கின்றோம். இந்த எட்டுத் திக்குகளும் வாஸ்துவில் மிக முக்கியமானவை.

> வாஸ்து என்பது இயங்கையுடன் - பஞ்ச பூதங்களுடன் - இணைந்து ஒன்றித்து மனிதன் எப்படி வாழ்வது என்பதைப் பற்றி அறிவது. அவற்றை வழிப்படுத்திக்கொண்டு அதனுடன் சேர்ந்து நாம் எப்படி வழமாக வாழ்வது என்று அறிவது. என்வே அதுவும் அறிவியல் பாற்பட்டதுதான். இது பலருக்குப் புரிவதில்லை.

மீண்டும் அடுத்த வாரம்


## அழைப்பிதழ் !

Nestle கெதல்ல

நெஸ்லே நிறுவனத்தின் பூரண அனுசரணையுடன் நடத்தப்படும் ஆரோக்கியமான மற்றும் சுவையான சமையல் முறைகளுடனான சந்திப்பில் இணைந்துகொள்வதற்கு அழைக்கின்றோம்

திகதி : டிசம்பர் 14ம் திகதி
நேரம் : பி.ப 01.30
இடம் : ரில்கோ மண்டபம்

## அனுமதி இலவசம்...

- ✓ ஆரோக்கியம் தொடர்பில் மருத்துவ ஆலோசனைகள்
- ✓ பிரபல்யமான சமையல் வல்லுணர்களுடனான அனுபவ பகிர்வு
- ✓ நெஸ்லே தயாரிப்புகள் அடங்கிய பெறுமதிமிக்க பரிசில்கள்
- ✓ விசேட மலிவு விலைகளில் நெஸ்லே உற்பத்திகள்

ஆசன வசதிகள் சொற்பமே என்பதை தயவுசெய்து கவனத்திற்கொள்ளவும்.

Nestomalt Maggi Nestle Milkmaid MILO Nescafé NESTUM

Nestlé. Good Food, Good Life


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியான சூழலில் ஆடம்பர இல்லங்கள்...

## தெஹிவளையில்...

## Blue Star
RESIDENCIES



2 Bed room
2 Bathroom
850 Sq.ft

3 Bed room
2 Bathroom
1050 Sq.ft
1100 Sq.ft
1150 Sq.ft

**2014இல் குடிபுகலாம்.**

# 8 | Initium Road | Dehiwala.

**COMPLETED PROJECT**




#39, Inner Fairline Road, DEHIWALA.

**தொடர்புகளுக்கு :**
**077 642 7135 / 0773 576737**

Marketing By :

**Idieal Marketing (Pvt) Ltd.**
077 6427135 | 011 5758813

Constructions By :

Idieal Engineering [Pvt] Ltd.
# 4A, Council Lane, Dehiwela.
Phone :+94 11 4327059, +94 11 2712645
Hotlines : +94 71 794 1388 / 071 794 1399
Fax :+94 11 2712645

email : info@idieal.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.idieal.com



**ஆடை அழகு**



**Cute Girl**

Herbal Ladies Beauty Parlour

Wedding Makeup, Bridal,Dressing, Facial, Hair Cutting,Mahandi,Mani cure, Pedi cure & Cake Icing

51B, KACHCHERY, NALLUR ROAD,JAFFNA.

இந்த அளவில் (6cm x 6cm) உதயன் அங்காடியில் விளம்பரம் செய்ய **Rs. 1000/-** + VAT(Rs 120/-)

தொடர்பு: 07 6603 6604



**WELLA**

Hair Dressing

LADIES & GENTS

**சலூன்**

ஆண்,பெண் இருபாலாருக்கும் சிகையலங்காரம் பேசியல் என அனைத்துத் தேவைகளையும் பெற்றிட நாடுங்கள்

T.P: 077 6584453 | 08 New market , kalvijankadu

Facial, Straighting, Bleaching, Face Massaging, Threading

**Viji Beauty Parlour**



அனைத்துவிதமான பேசியலும் செய்யப்படும்.
விசேட விலைக்கழிவுடன் 3500 ரூபாய் பேசியல் 750 ரூபாவுக்கு செய்யப்படும்.
டிசம்பர் 1- பொங்கல் வரை.
முகத்தில் உள்ள கரும்புள்ளிகளை நீக்கும் கிறீம்கள் விற்பனைக்குண்டு.

2/1, Rajendra Road, Jaffna. T.P: 077 830 1208

**சுகி சலூன்**

ஆண்,பெண் இருபாலாருக்கும் சிகையலங்காரம்,பேசியல் என அனைத்துத் தேவைகளையும் பெற்றிட நாடுங்கள்

*Suki Saloon*

கே.கே.எஸ். வீதி,
சிவன் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

T.P.: 021 790 3940





யாழ். நகரில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட சுப முகூர்த்தப் பட்டுப்புடைவைகளின் சாம்ராஜ்ஜியம்



**Rasi Collections ராசி கலக்ஷன்**

உங்கள் குடும்பத்திற்கு ஏற்ப பட்டுப்புடைவைகளை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

இல.199, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**ஏஞ்சல்ஸ் அழகு நிலையம் பயிற்சியகம்**

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

- பேசியல்
- மணப்பெண் அலங்காரம்
- திரட்டிங்
- பேர்மிங் மற்றும் பல....

ஏஞ்சல்ஸ் அழகு நிலையம்,
இல.94, கஸ்தூரியார் வீதி, (மக்கள் வங்கி அருகில்)
தொ.பே.: 077 627 7332



**ANNAI NAKHA TEX**

அன்னை நாகா ரெக்ஸ்

இல.60, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

No.60, New Market Inside,Jaffna.
T.P.: 077 589 0517

இந்த அளவில் (12cm x 2.9cm) உதயன் அங்காடியில் விளம்பரம் செய்ய **Rs. 1000/-** + VAT(Rs 120/-)

தொடர்பு: 07 6603 6604

**Ajanth saloon**

குளிரூட்டப்பட்ட(A/C)



**அஜந் சலூன்**

Call : 077 926 5470, 077 344 1343

**Sharoni BEAUTY CARE**

**BEATUIES & INSTITUTE**
**No. 687, Hospital Road,Jaffna.**
**Virgin**
077 906 7948, 077 126 9468
vinitavirgin@gmail.com
மேலதிக விபரங்களுக்கு Sharoni beauty care

BEAUTY CULTURE ADVANCE
&
DIPLOMA IN BEAUTY CULTURE WITH MEDIC
ஆர்வமுள்ள இருபாலாரும் இணைந்து கொள்ளலாம்.

**Christmas Offer Special**



**Salon Vinmin** Hair & Beauty Academy

கொழும்பில் வாடிக்கையாளர்களிடம் அபிமானம் பெற்ற Salon Vinmin தற்போது யாழ்ப்பாணத்தில் தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

SPECIAL OFFER Hair and Skin Treatment Facials etc...

**Opening Hrs**
Mon - Sat - 7.00 am - 7pm
Sun - 9am - 7pm

**Grate Offers on a Lovely Day**

| FACIAL | | |
|---|---|---|
| Mini Facial | ~~1500/-~~ | 500/- |
